Koviloor Digital Library

வைணவத் திருப்பதிகள்

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 15367
Q. 22

ஆக்கியோர்: மணிமேகலை
ஆசிரியர் குழு,
பதிப்பாசிரியர்: லேனா தமிழ்வாணன், எம்.ஏ.

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண்: 1447
4, தணிகாசலம் சாலை
தியாகராயநகர், சென்னை-600017.
போன்: 442926

Koviloor Digital Library

முதற் பதிப்பு: 1988

விலை ரூ. 15-00
பதினைந்து ரூபாய்

அச்சிட்டோர்:
ஸ்ரீலக்ஷ்மி பாரதி அச்சகம்,
8, பிள்ளையார் கோயில் தெரு, வடபழனி, சென்னை - 26.

Koviloor Digital Library

பொருளடக்கம்

பெயர்	பக்க எண்	பெயர்	பக்க எண்
திருவல்லிக்கேணி	13	திருக்குடந்தை	64
திருநீர்மலை	15	திருப்ருபேர் நகர்	66
சிங்கப்பெருமாள் கோயில்	18	திருஆதனூர்	68
மதுராந்தகம்	18	திருப்புள்ளம் பூதங்குடி	68
திருக்கடல் மல்லை	18	திருக்கண்டியூர்	69
ஸ்ரீபெரும்பூதூர்	20	திருக்கூடலூர்	70
திருமழிசை	21	திருக் கவித்தலம்	71
திருநின்றவூர்	21	திருநறையூர்	72
திருஎவ்வுள்	22	திருவிண்ணகர்	73
திருக்கடிகை	23	திருச்சேறை	74
திருஇடவெந்தை	26	திருக்கண்ணமங்கை	75
திருவேங்கடம்	27	திருவெள்ளியங்குடி	78
திருக்கோவலூர்	30	திருநந்திபுர விண்ணகரம்	77
திருவயிந்திரபுரம்	32	திருத்தலைச் சங்க நாண் மதியம்	79
திருக்கச்சி	33	திருவழுந்தூர்	80
திருஅஷ்டபுயகரம்	36	திருச்சிறு புலியூர்	81
திருத்தண்கா	37	திருக்காழிச் சீராம விண்ணகரம்	82
திருவேளுக்கை	38	திருவாலியும் திருநகரியும்	83
திருஊரகம்	39	திருக்காவளம்பாடி	8
திருநீரகம்	40	திருப்பார்த்தன் பள்ளி	86
திருக்காரகம்	40	திருவெள்ளக்குளம்	87
திருக்கார்வானம்	41	திருமணிக்கூடம்	88
திருப்பாடகம்	41	திருத்தேவனார் தொகை	89
திருநிலாத்திங்கள் துண்டம்	42	திருமணிமாடக் கோயில்	90
திருவெஃகா	43	திருஅரிமேய விண்ணகரம்	90
திருக்கள்வனூர்	46	திருத்தெற்றியம்பலம்	91
திருப்பவள வண்ணம்	47	திருவண் புருடோத்தமம்	92
திருப்பரமேச்சுர விண்ணகரம்	48	திருவைகுந்தவிண்ணகரம்	93
திருப்புட்குழி	50	திருச் செம்பொன் கோயில்	93
திருவரங்கம்	51	திருநாகை	95
திருக்கோழி	55	தில்லைதிருச்சித்திரக்கூடம்	96
திருஅன்பில்	56	ராஜமன்னார்குடி	98
திருவெள்ளறை	56	வடுவூர்	98
திருக்கரம்பனூர்	58	ஆதிரங்கம்	99
தஞ்சை மாமணிக்கோயில்	59	கோடிக்கரை	99
திருக்கண்ணங்குடி	60	தில்லை விளாகம்	99
திருக்கண்ணபுரம்	62	சிக்கல்	100
திரு இந்தளூர்	64		

Koviloor Digital Library

திரு வ்டடங்குடி 100
பெரும்புலியூர் 100
தான்தோன்றி மலை 101
குணசேகரம் 101
காட்டு மன்னார்குடி 102
நாமக்கல் 102
ஸ்ரீமுஷ்ணம் 102
சேதுக்கரை 103
தனுஷ்கோடி 103
ராமேஸ்வரம் 104
நவபாஷாணம் 105
திருக்கூடல் 105
திருமாலிருஞ்சோலை 106
திருமோகூர் 108
திருக்கோட்டியூர் 109
திருப்புல்லாணி 110
திருமெய்யம் 112
திருவில்லிபுத்தூர் 112
திருத்தண்கால் 114
திருக்குறுங்குடி 116
திருச்சிரீவர மங்கை 118
திரு வைகுண்டம் 120
திருவரகுண மங்கை 122
திருப்புளிங்குடி 122
திருத்தொலை வில்லிமங்கலம் 123
திருக்குளந்தை 125
திருக்கோளூர் 126
திருக்குருகூர் 129
திருவனந்தபுரம் 131
திருச்செங்குன்றூர் 132
திருப்புலியூர் 133
திருஆறன் விளை 134
திருவண் வண்டுர் 135
திருவல்லவாழ் 136
திருக்கடித்தானம் 138
திருமூழிக்களம் 138
திருக்காட்கரை 140
திருவித்துவக்கோடு 141
திருநாவாய் 142
திருவாட்டாறு 144
திருவண்பரிசாரம் 145
குருவாயூர் 147
வர்க்கலா 148
திருச்சிங்கவேழ் குன்றம் 149
திருஅயோத்தி 152
திரு நைமிசாரண்யம் 153
திருப்பிருதி 155
திருக்கண்டம் எனும் கடிநகர் 156
திருவத்ரியாச்ரமம் 157
திருவடமதுரை 160
திருஆயர்பாடி 163
திரு துவாரகை 164
திருப்பாற்கடல் 166
திருப் பரம பதம் 166
காசி 168
பிரயாகை 169
கயை 170
ஹரித்வார் 172
அவந்தி 173
ஆஜ்மீர் 174
குருக்ஷேத்திரம் 175
பண்டரீபுரம் 176
பத்ராசலம் 177
பூரி 178
சிம்மாசனம் 179
ஸ்ரீகூர்மம் 179
திரு நாராயணபுரம் 180
மங்கள கிரி 182
ஸ்ரீரங்க பட்டினம் 182
தொண்டனூர் 182
சிவ சமுத்திரம் 182
நரசிம்மபுரம் 183
உடுப்பி 183
மந்த்ராலயா 183
சித்பூர் 183
விஷ்ணுப் பிரயாக் 184
பாண்டுகேஸ்வர் 184

Koviloor Digital Library

வைணவத் திருப்பதிகள்

(153 திருப்பதிகளைப் பற்றிய வரலாறு)

ஆழ்வார்கள் பாடிய அமலன் திருத்தலங்கள்

ஆழ்வார்கள் பாடிய திருத்தலங்கள் நூற்றெட்டு (108). இந்த நூற்றெட்டுத் தலங்களும் பரந்தாமனைத் தொழும் பக்தர்களுக்கு மிகவும் புனிதமானவை. உண்மையான வைணவர் என்பவர் தன் வாழ்நாட்காலத்தில் இந்த நூற்றெட்டு திவ்ய தலங்களையும் தரிசிக்க வேண்டும். இந்தத் திவ்ய தலங்களைப்பற்றிக் கூடுமானவரை இந்த நூலில் விளக்கம் கூறப்பட்டுள்ளது. யாத்ரீகர்களின் வசதிக்காக முக்கியமான நகரங்களை மையமாக எடுத்துக்கொண்டு அவற்றிலிருந்து அடுத்தடுத்து உள்ள தலங்களைச் சென்று தரிசிப்பதற்கேற்ற முறையில் வரிசைப்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளன.

பாடல் பெறாத முக்கியத் தலங்களும் சேர்க்கப்பட்டுள் ளன. அவை பாடல் பெறாத தலங்கள் என்பதையும் குறிப் பிட்டுள்ளோம். ஆழ்வார்களால் பாடப் பெறாவிட்டாலும் இந்தத் தலங்கள் முக்கியமானவை ஆகும். இங்கு உறையும் தெய்வங்கள் கண்கண்ட கடவுளராகப் பல அற்புதங்களை நிகழ்த்தியவர்கள் ஆவர்.

Koviloor Digital Library

ஆழ்வார் பாடல்கள், ஸ்தலங்களைப் பற்றிய புராண வரலாறுகள், கர்ணபரம்பரைக் கதைகள், ஸ்தல விசேஷம், மூர்த்தியின் சிறப்பு, தீர்த்தங்கள் முதலிய எல்லா விஷயங்களும் கொடுக்கப்பட்டிருப்பதால் இந்நூல் தனிச்சிறப்பு வாய்ந்ததாகிறது.

சென்னை நகரம் — அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள தலங்கள்

1. திருவல்லிக்கேணி
2. திருநீர்மலை
3. சிங்கப் பெருமாள் கோவில்*
4. மதுராந்தகம்*
5. திருக்கடல் மல்லை (மாமல்லபுரம்)
6. ஸ்ரீ பெரும்பூதூர்*
7. திருமழிசை*
8. திருநின்றவூர்
9. திருஎவ்வுள் (திருவள்ளூர்)
10. திருக்கடிகை (சோளிங்கர்—சோழசிங்கபுரம்)
11. திருஇடவெந்தை (திருவடந்தை)
12. திருவேங்கடம்(திருப்பதி—திருமலை—திருச்சானூர்)

சென்னையிலிருந்து சென்று தரிசிக்கக்கூடிய தலங்கள் பன்னிரண்டு. இவற்றில் சிங்கப் பெருமாள் கோவில், மதுராந்தகம், ஸ்ரீபெரும்பூதூர், திருமழிசை ஆகிய தலங்கள் ஆழ்வார்களால் பாடப் பெறாதவை என்றாலும் மிகவும் பிரபலமானவை. சக்தி வாய்ந்த மூர்த்திகளை உடையவை.

கடலூர்—விழுப்புரம் பகுதிகளில் உள்ள தலங்கள்,

13. திருக்கோவலூர் (திருக்கோவிலூர்)
14. திருவயிந்திரபுரம்

Koviloor Digital Library

காஞ்சிபுரம்—அதன் சுற்றுப்புறங்களிலுள்ள தலங்கள்

15. திருக்கச்சி (அத்திகிரி)
16. திரு அஷ்டபுயகரம் (அஷ்டபுஜம்)
17. திருத்தண்கா (தூப்புல்)
18. திருவேளுக்கை (முகுந்த நாயகர் கோயில்)
19. திரு ஊரகம் (உலகளந்த பெருமாள் கோயில்)
20. திரு நீரகம்
21. திருக்காரகம்
22. திருக்கார்வானம்
23. திருப்பாடகம் (பாண்டவதூதப் பெருமாள் கோயில்)
24. திரு நிலாத்திங்கள் துண்டம்
25. திருவெஃகா (யதோத்காரிப் பெருமாள் கோயில்)
26. திருக்கள்வனூர்
27. திருப்பவள வண்ணம் (பவள வண்ணர் கோயில்—பச்சைவண்ணர் கோயில்)
28. திருப்பரமேச்சுர விண்ணகரம் (வைகுண்டப் பெருமாள் கோயில்)
29. திருப்புட்குழி

திருச்சி—மற்றும் அதன் சுற்றுப் புறத்தில் உள்ள தலங்கள்

30. திருவரங்கம் (பெரிய கோயில்)
31. திருக்கோழி (உறையூர்)
32. திரு அன்பில்
33. திருவெள்ளறை
34. திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்)

தஞ்சை — மற்றும் அதன் சுற்றுப் புறத்தில் உள்ள தலங்கள்

35. தஞ்சை மாமணிக்கோயில்

Koviloor Digital Library

36. திருக்கண்ணங்குடி
37. திருக்கண்ணபுரம்
38. திரு இந்தளூர் (மாயவரம்)

கும்பகோணம்—மாயவரம்—சீர்காழி—இதன் சுற்றுப்புறத்தில் உள்ள தலங்கள்

39. திருக்குடந்தை
40. திருப்பேர் நகர் (கோவிலடி)
41. திரு ஆதனூர்
42. திருப்புள்ளம் பூதங்குடி
43. திருக்கண்டியூர்
44. திருக்கூடலூர்
45. திருக்கவித்தலம்
46. திருநறையூர் (நாச்சியார் கோயில்)
47. திரு விண்ணகர் (ஒப்பிலியப்பன் கோயில்)
48. திருச்சேறை
49. திருக்கண்ணமங்கை
50. திருவெள்ளியங்குடி
51. திரு நந்திபுர விண்ணகரம் (நாதன் கோவில்)
52. திருத்தலைச் சங்க நாண் மதியம் (தலைச்சங்காடு)
53. திருவழுந்தூர் (தேரழுந்தூர்)
54. திருச்சிறு புலியூர்
55. திருக்காழிச் சீராம விண்ணகரம்
56. திரு வாலியும் திருநகரியும்

திருநாங்கூர்த் திருப்பதிகள்

57. திருக்காவளப்பாடி
58. திருப்பார்த்தன் பள்ளி

Koviloor Digital Library

59. திருவெள்ளக்குளம் (அண்ணன்கோயில்)
60. திருமணிக்கூடம் (திருநாங்கூர்)
61. திருத்தேவனார் தொகை (கீழைச்சாலை)
62. திருமணிமாடக் கோயில்
63. திரு அரிமேய விண்ணகரம்
64. திருத் தெற்றியம்பலம்
65. திருவண் புருடோத்தமம்
66. திரு வைகுந்த விண்ணகரம்
67. திருச் செம்பொன் கோயில்
68. திரு நாகை (நாகப்பட்டினம்)
69. தில்லை திருச் சித்திரக்கூடம்

பாடல் பெறாத தலங்கள்

70. ராஜமன்னார்குடி
71. வடுவூர்
72. ஆதிரங்கம்
73. கோடிக்கரை
74. தில்லை விளாகம்
75. சிக்கில்
76. திருமண்டங்குடி
77. பெரும்புலியூர்
78. தான்தோன்றி மலை
79. குணசேகரம்
80. காட்டு மன்னார்குடி
81. நாமக்கல்
82. ஸ்ரீமுஷ்ணம்
83. சேதுக்கரை
84. தனுஷ்கோடி

Koviloor Digital Library

85. ராமேஸ்வரம்

86. நவபாஷாணம்

மதுரை மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள தலங்கள்

87. திருக்கூடல் (கூடலழகர் கோயில்)

88. திருமாலிருஞ்சோலை (அழகர் கோயில்)

89. திருமோகூர்

90. திருக்கோட்டியூர்

91. திருப்புல்லாணி (தர்ப்பஸயனம்)

92. திருமெய்யம்(திருமயம்)

93. திருவில்லிபுத்தூர்

94. திருத்தண்கால்

திருநெல்வேலி—அதன் சுற்றுப்புறத்தில் உள்ள தலங்கள்

95. திருக்குறுங்குடி

96. திருச்சிரீவர மங்கை (நாங்குனேரி)

97. திருவைகுண்டம்

98. திருவரகுண மங்கை (நத்தம்)

99. திருப்புளிங்குடி

100. திருத்தொலை வில்லிமங்கலம் (இரட்டைத் திருப்பதிகள்)

101. திருக்குளந்தை (பெருங்குளம்)

102. திருக்கோளூர்

103. திருப்பேரை (தென்திருப்பேரை)

104. திருக்குருகூர் (ஆழ்வார்திருநகரி)

Koviloor Digital Library

மலைநாட்டுத் திருத்தலங்கள்

105. திருவனந்தபுரம் (அனந்தசயனம்)
106. திருச்செங்குன்றூர் (செங்கனூர்ச் சிற்றாறு)
107. திருப்புலியூர் (குட்டநாடு)
108. திரு ஆறன் விளை (ஆறம்முளா)
109. திருவண் வண்டூர் (திருவமுண்டூர்)
110. திருவல்லவாழ் (திருவல்லா)
111. திருக்கடித்தானம்
112. திருமூழிக்களம்
113. திருக்காட்கரை
114. திருவித்துவக்கோடு
115. திருநாவாய்
116. திருவட்டாறு
117. திருவண்பரிசாரம் (திருப்பதிசாரம்)

பாடல் பெறாத தலங்கள்

118. குருவாயூர்
119. வர்க்கலா

வடநாட்டுத் திருத்தலங்கள்

120. திருச்சிங்கவேழ் குன்றம் (அஹோபிலம்)
121. திரு அயோத்தி (அயோத்யா)
122. திரு நைமிசாரண்யம்
123. திருப்பிருதி (ஜோஷிமட்)
124. திருக்கண்டம் எனும் கடிநகர் (தேவப்பிரயாக்)
125. திருவதரியாச்ரமம் (பத்ரிநாத்)
126. திருவடமதுரை (மதுரா)
127. திருஆயர்பாடி (கோகுல்)

Koviloor Digital Library

128. திரு துவாரகை
129. திருப்பாற்கடல்
130. திருப் பரமபதம்

பாடல் பெறாத தலங்கள்

131. காசி (வாரணாசி)
132. பிரயாகை
133. கயை
134. ஹரித்வார்
135. அவந்தி (உஜ்ஜயினி)
136. ஆஜ்மீர்
137. குருக்ஷேத்திரம்
138. பண்டரிபுரம்
139. பத்ராசலம்
140. பூரி
141. சிம்மாசலம்
142. ஸ்ரீ கூர்மம்
143. திரு நாராயணபுரம் (மேல் கோட்டை)
144. மங்கள கிரி
145. ஸ்ரீ ரங்க பட்டினம்
146. தொண்டனூர்
147. சிவ சமுத்திரம்
148. நரசிம்மபுரம்
149. உடுபி (உடுப்பி)
150. மந்த்ராலயா
151. சித்பூர்
152. விஷ்ணுப் பிரயாகை
153. பாண்டுகேஸ்வர்

Koviloor Digital Library

திருவல்லிக்கேணி

சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதிப் பெருமாளை ஒரு முறை தரிசித்தவர் அத் தோற்றத்தை மறக்க முடியாது! என்ன கம்பீரமான உருவம்? கூரிய விழிகளும் நீண்ட மீசையுமாக உண்மையாக அந்தக் கிருஷ்ண பரமாத்மாவே நேரில் வந்து நிற்பது போல் அல்லவா கம்பீரமாக நிற்கிறார்? இத்தலம் ஏற்பட்டதைப் பற்றி அற்புதமான வரலாறு ஒன்று உண்டு.

துண்டீர மண்டலாதிபதியான சுமதி என்பவன் சிறந்த பக்தன். திருமலை வேங்கடேசப் பெருமானிடம் மிகுந்த பக்தி உடையவன். இந்த மன்னனுக்கு ஓர் ஆசை. பாரதப் போரில் பரமாத்மாவாகிய கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குச் சாரதியாக இருந்தார் அல்லவா! அந்தக் கோலத்தைக் கண் குளிரக் கண்டு தரிசிக்க வேண்டுமென்று விரும்பினான். பகவான் பக்தனுடைய எண்ணத்தை நிறைவேற்றி வைப்பதற்காக ஆத்ரேய மகரிஷியைக் கொண்டு ஒரு சிற்பம் வடிக்கச் சொன்னார். ஆத்ரேய மகரிஷி தமது ஞான திருஷ்டியால் பார்த்த சாரதியின் திருக் கோலத்தைக் கண்ணாறக் கண்டு சிற்பமாக வடித்தார். வலக் கையில் சங்கு; இடக் கையில் சாட்டை; முகத்தில் நீண்ட மீசை; பீஷ்மரின் அம்புகள் தைத்ததால் முகத்தில் ஏற்பட்ட வடுக்கள் இவற்றுடன் பகவான் காட்சியளிக்கிறார். மூலவரின் கம்பீரமும் அழகும் மறக்க முடியாதவை.

மூலவரின் வலப்பக்கம் ருக்மணியும், இடப்பக்கம் தம்பி சாத்யகியும், தெற்கில் அண்ணன் பலராமனும், வடக்கில் மகன் பிரத்யும்னனும், பிரத்யும்னனின் மகனான அநிருத்தனும் எழுந்தருளியுள்ளனர். இவ்வாறு பகவான் குடும்ப

Koviloor Digital Library

சமேதராக எழுந்தருளியிருப்பது பூலோகத்தில் இந்த ஒரு ஸ்தலத்தில் மட்டுமே என்று திண்ணமாகக் கூறலாம்.

திருவேங்கட நாதனே இங்கே பார்த்தசாரதியாக எழுந்தருளியிருப்பதாக ஐதீகம். அதனால் இத்தலத்தை இரண்டாவது திருப்பதி என்று போற்றுகின்றனர். திருப்பதியைப் போல் புரட்டாசி சனிக்கிழமைகள் இத்தலத்தில் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப் படுகின்றன. திருமலையில் நடப்பது போலவே ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மூலவருக்குத் திருமஞ்சனமும் நடைபெறுகிறது. இத்தலத்தில் ஐப்பசித் திரு மூல நாளில் நடைபெறும் கைத்தல சேவை மிகவும் விசேஷம். கடற்கரையின் அருகில் கோயில் அமைந்திருப்பதால் பக்தர்கள் பகவானைத் தரிசித்த பின் கடற்கரையில் ஒய்வெடுத்துக் கொள்ள முடிகிறது.

இங்கெழுந்தருளியிருக்கும் பெருமாளைப் பேயாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் என்னும் ஆழ்வார்களைத் தவிர, மணவாள மாமுனிகளும் இராமானுஜரும் மங்களா சாசனம் செய்துள்ளார்கள்.

"வந்து தைத்த வெண்திரைகள் செம்பவள வெண்
முத்தம்
தந்து விளக்கும் அணி விளக்காம்—எந்தை
ஒரு வல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்பன்
திருவல்லிக் கேணியான் சென்று"

—(இயற்பா—மூன்றாம் திருவந்தாதி.16)

அல்லி மலர்கள் நிறைந்த திருக்குளத்தை தல தீர்த்தமாகக் கொண்டிருப்பதால் திருவல்லிக்கேணி என்று பெயர் வந்ததாகக் கூறுவர். 'கைரவணி சரஸ்' என்ற இந்தப் புஷ்கரணியில் இந்திர தீர்த்தம், சோம தீர்த்தம், அக்னி தீர்த்தம், மீன தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் என்ற ஐந்து தீர்த்தங்கள் கலந்திருப்பதாகக் கூறுகின்றனர்.

Koviloor Digital Library

ஸ்ரீ ரங்கநாதன் இத்தலத்தில் கிழக்கு நோக்கி அரவணைப் பள்ளி கொண்ட கோலத்தில் காட்சியளிக்கிறார். தாயார் வேதவல்லி தனிக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

ஸ்ரீராமர் சீதா லக்ஷ்மண, பரத, சத்ருக்கனர்களுடனும் அனுமான் பாத சேவை புரியத் தெற்கு நோக்குகின்ற திருக் கோலத்தில் காட்சியளிக்கிறார்.

வரத ராஜப் பெருமாள் 'தேவப் பெருமாள்' என்ற திரு நாமத்துடன் கிழக்கு நோக்கிக் கருடன் மீது அமர்ந்த திருக் கோலத்தில் காட்சியளிக்கிறார்.

நரசிம்மர் 'தெள்ளிய சிங்கர்' என்ற பெயருடன் மேற்கு நோக்கி வீற்றிருக்கிறார்.

ஆகமவிதிப்படி அமைந்த ஆனந்த விமானம்; பிரணவ விமானம்; புஷ்பக விமானம்; சேஷ விமானம்; தைவிஷ விமானம் என்ற விமானங்களின் கீழ் இந்த மூலவர்கள் எழுந்தருளியுள்ளனர்.

திருநீர்மலை

பல்லாவரத்திற்கு மிக அருகிலுள்ள பாடல் பெற்ற திருத்தலம் திருநீர்மலை. சென்னை — தாம்பரம் மின்சார இரயில் மூலமாகப் பல்லாவரம் இரயில் நிலையத்தில் இறங்கிப் பேருந்து மூலமாகச் செல்லலாம். சென்னையிலிருந்து நேராகவும் பஸ்கள் செல்கின்றன. தற்சமயம் வேகமாக வளர்ந்து வரும் புறநகர்ப் பகுதிகளில் திருநீர்மலையும் ஒன்று.

''அன்றாயர் குலக்கொடியோடு(ம்) அணிமா
மலர் மங்கையொடு(ம்) அன்பளாவி அவுணர்க்கு

Koviloor Digital Library

என்றாலும் இரக்க மிலாதவனுக்கு
உறையுமிட மாவது இரும்பொழில் சூழ்
நன்றாய புனல் நறையூர் திருவாலி
குடந்தை தடம்திகழ் கோவல் நகர்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு
இடம் மாமலையாவது திருநீர் மலையே''

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற திருத் தலமிது. அவரைத் தவிர, பூதத்தாழ்வாரும் இத்தலத்தை மங்களா சாசனம் செய்துள்ளார்.

இத்தலத்தில் ஒரு சிறிய மலை இருக்கிறது. மலை அடிவாரத்தில் ஒருவரும் மலை மேலே மூவருமாக, 'நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான்' எனும் திருப்பெயர்கள் கொண்ட நான்கு திருக்கோலங்களில் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார்.

மலையடிவாரக் கோயிலில் உள்ள மூலவருக்கு 'நீர் வண்ணன்' என்றும், 'நீலமுகில் வண்ணன்' என்றும். திருநாமம். கிழக்கு நோக்கி நின்றபடி அருள்புரிகிறார். தனிக் கோயில் கொண்ட தாயாருக்கு 'அணிமா மலர் மங்கை' என்னும் திருநாமம்.

மலை மேலுள்ள கோயில்கள்

கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் (இருந்தான்) திருக்கோலத்தில் உள்ள மூலவருக்கு 'சாந்த நரசிம்மர்' எனும் திருநாமம்.

தெற்கு நோக்கி மாணிக்க சயனத்திலிருக்கும் (கிடந்தான்) பெருமானுக்கு 'அரங்கநாதன்' என்னும் திருநாமம். தனிக்கோயில் கொண்ட தாயாருக்கு 'அரங்க நாயகி' எனும் திருநாமம்; கிழக்கு நோக்கிய திருமுகம்.

Koviloor Digital Library

கிழக்குநோக்கி நின்ற திருக்கோலத்திலுள்ள (நின்றான்) பெருமாளுக்கு 'திரிவிக்ரமன்' எனும் திருநாமம்.

இவை தவிர, மலையடிவாரத்திலேயே சக்கரவர்த்தித் திருமகனான இராமனுக்குத் தனிச் சந்நிதி இருக்கிறது. அவர் கிழக்கு நோக்கி அருள் புரிகிறார்.

க்ஷீரபுஷ்கரிணி; காருண்யபுஷ்கரிணி; ஸித்தபுஷ்கரிணி மற்றும் ஸ்வர்ணபுஷ்கரிணி ஆகிய தீர்த்தங்கள் அடங்கிய மணிகர்ணிகா தடாகம் இத்தல தீர்த்தமாகும். விமானம்: தோயகிரி விமானமாகும்.

இத்தலத்தில் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்ய வந்தபோது இந்த மலையைச்சுற்றிலும் அரண்போல் நீர் சூழ்ந்திருந்ததாம். ஆழ்வார் அவர்கள் ஆறுமாத காலம் காத்திருந்து நீர் வடிந்த பிறகு தரிசனம் செய்தாராம். அதனாலேயே இத்தலத்துக்கு நீர்மலை எனும் பெயர் ஏற் பட்டதாக தல வரலாறு கூறுகிறது. ஆழ்வார் தங்கிய இடம் 'திருமங்கையாழ்வார்புரம்' எனும் பெயருடன் இன்றும் பக்தர் களால் பூஜிக்கப்படுகிறது.

ஒரு சமயம் வால்மீகி மகரிஷி இத்தலத்துக்கு வந்து மலை மீது ஏறி நரசிம்மர், அரங்கநாதர் மற்றும் திரிவிக்ர மனைத் தரிசித்துவிட்டுக் கீழே இறங்கி அடிவாரத்தில் உள்ள சரஸ்ஸில் கிழக்கு நோக்கி நின்று ஸ்ரீராமரைத் தியானித்த போது, அரங்கநாதர் ராமராகவும், லக்ஷ்மி சீதையாகவும் ஆதிசேடன் லக்ஷ்மணனாகவும், சங்கு சக்கரங்கள் பரத சத்ருக்கனர்களாகவும், கருடன் அனுமானாகவும், விஷ்வக் ஸேனர் சுக்கிரீவனாகவும் தரிசனம் தந்ததாகவும் .வால்மீகி யின் பிரார்த்தனைப் படி அற்புத நீர்வண்ண ரூபனாகக் காட்சி அளித்ததாகவும் தல புராணம் கூறுகிறது.

சிங்கப்பெருமாள் கோவில்*

சென்னையிலிருந்து செங்கல்பட்டு செல்லும் இரயில் மற்றும் பஸ் பாதையில் இத்தலம் உள்ளது. சத்திரங்கள் போன்ற சகல வசதிகள் கொண்ட பெரிய தலமிது.

தலப் பெருமாளான 'லக்ஷ்மி நரசிம்மர்' கிழக்கு நோக்கி வீற்றிருந்த திருக் கோலத்திலிருந்து அருள் புரிகிறார். தாயாருக்கு 'அஹோபில வல்லி' எனும் திருநாமம். மலையடிவாரத்திலுள்ள ஒரு குகையில் இச்சந்நிதி இருக்கிறது. நரஸிம்மர் வரப்பிரசாதியாகக் கருதப்பருகிறார்.

மதுராந்தகம்*

சென்னையிலிருந்து விழுப்புரம் செல்லும் இரயில் மற்றும் பஸ் பாதையில் உள்ளது. பெரிய ஊர். இங்கு, சகல வசதிகளுமுண்டு. தலப் பெருமாளான 'கருணாகரன்' கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்திலிருந்து அருள் புரிகிறார். தாயாருக்கு 'ஜனக வல்லி' எனும் திருநாமம்.

இத்தலத்துக்கு அருகிலுள்ள ஏரியில், வெள்ளம் நிரம்பி ஏரி உடைந்து நீர் ஊரினுள் புகுந்து விடுமோ என்று அஞ்சிய காலத்தில், இராம லக்ஷ்மணர்கள் வில் ஏந்திய வீரர்களாக ஏரியைக் காத்து நின்றதாகவும், இதனை ஆங்கிலேயர்களே நேராகப் பார்த்து ஆச்சரியப் பட்டதாகவும் தல வரலாறு கூறுகிறது. அதனால் இத்தலப் பெருமாளுக்கு 'ஏரி காத்த ராமன்' என்றும் பெயர். இங்கு தான் பாஷ்யக் காரர் சந்நியாசம் பெற்றுக் கொண்டார். சமஸ்கிருத கல்லூரி ஒன்றும் இத் தலத்தில் உள்ளது.

திருக்கடல்மல்லை (மாமல்லபுரம்)

மாமல்லபுரத்தை அறியாதவர்கள் யார்? வெளி நாட்டவர்களும் வந்து பார்த்து வியந்துசெல்லும் அற்புதமான சிற்பங்கள் நிரம்பியது இத்தலம்.

Koviloor Digital Library

''பாராயது உண்டுமிழ்ந்த பவளத்தூணைப்
படுகடலில் அமுதத்தைப் பரிவாய்கீண்ட
சீரான எம்மானைத் தொண்டர் தங்கள்
சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும் பினைப்
போரானைக் கொம்பொசித்த போரேற்றினைப்
புனர்மருதமிற நடந்த பொற்குன்றினைக்
காரானை இடர்கடிந்த கற்பகத்தைக்
கண்டது நான் கடல்மல்லைத் தலசயனத்தே.''

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலமிது. அவரைத் தவிர, பூதத்தாழ்வார், மணவாள மாமுனிகள் பிள்ளை லோகம் ஜீயர் ஆகியோரும் மங்கள சாசனம் செய்வித்துள்ளனர்.

தல மூலவரான 'ஸ்தல சயனப் பெருமாள்' கிழக்கு நோக்கி சயனித்தபடி அருள் புரிகிறார். இடக் கரத்தைத் தலைக்கு வைத்து வலக் கரத்தை 'ஞானத் தமிழ் புரிந்த நான்' என்பதை விளக்கும் வகையில் தமது திருமார்பின் மீது உபதேச முத்திரையாக வைத்து விளக்குகிறார். உற்சவ மூர்த்திக்கு 'உலகுய்ய நின்றான்' என்றும் 'ஸ்தல சயனத் துறைவார்' என்றும் திருநாமம். தனிக்கோவில் கொண்ட தாயாருக்கு 'நிலமங்கை' எனும் திருநாமம்.

இத் தலத் தீர்த்தங்களுக்குப் புண்டரீகப் புஷ்கரிணி, கருடநதி என்றும், விமானத்திற்குக் ககனாக்ருதி விமானம் அல்லது அனந்த விமானம் என்றும் திருநாமங்கள்.

புண்டரீக மகரிஷி என்பவர் க்ஷீராப்தி நாதரைப் பூஜிக்க எண்ணிப் பூக்களைப் பறித்து ஒரு கூடையில் வைத்துக் கொண்டு கிழக்கு நோக்கிச்செல்ல, வழியில் சமுத்திரம் தடையாக நின்றதைக் கண்டு, சமுத்திர நீரைக் கைகளால் இறைத்துவிட்டு பகவானை அடையலாம் என்று எண்ணி, நீரை இறைக்க ஆரம்பித்தபோது பகவான் பிராமண வேடம் போட்டுக்கொண்டு அவர் முன் தோன்றி ஆகாரம்

Koviloor Digital Library

கேட்டார். மகரிஷி ஆகாரத்தைக் கொண்டு வருவதற்குள் அந்தக் கூடையில் இருந்த பூக்களை எடுத்துத் தம்மீது சாற்றிக்கொண்டு சயனத் திருக்கோலத்தில் மிக கம்பிரமாகத் தரிசனம் தந்தபடியால் இப் பெருமாளுக்கு 'ஸ்தல சயனப் பெருமாள்' என்னும் பெயர் ஏற்பட்டதாகத் தல வரலாறு கூறுகிறது.

கோயிலில் பெருமாள் வெறும்தரையிலேயே சயனித்திருக்கிறார். அவரது திருவடியருகில் புண்டரீக மகரிஷி கை கூப்பி வணங்கியவண்ணம் காட்சி தருகிறார். கடற்கரையிலுள்ள தற்போது வழிபடப்படாத கோயிலிலும் பெருமாள் அழகாகச் சயனித்திருக்கிறார்.

இந்தக் கோயில் விஜயநகரத்து அரசனான பராங்குசன் என்பவனால் கட்டப்பட்டதாகத் கூறப்படுகிறது ஆண்டாள், ஸ்ரீராமன் ஆகியோருக்கும் இங்கு சந்நிதிகள் உண்டு.

தலை சிறந்த சிற்பங்கள் நிரம்பிய இத்தலம் பூதத்தாழ்வாரின் அவதாரஸ்தலமாகும். இங்குள்ள சிற்பங்களில் முக்கியமானவை பகீரதன் தவம், (அர்ச்சுனன் தவம்), பஞ்ச பாண்டவர் மண்டபம், கோவர்த்தன மண்டபம், பஞ்ச பாண்டவரது ரதங்கள் ஆகியவை. இவற்றினை 'அர்த்த சேது' எனக் கூறுகிறார்கள்.

திருவிட வெந்தையிலிருந்து 10 கி. மீ. தூரத்திலும், சென்னையிலிருந்து 60 கி. மீ. தூரத்திலும் இத் தலம் உள்ளது. மகாபலிபுரம் என்று கூறினால்தான் பலருக்குத் தெரியும். இத்தலத்தில் தங்கிப் பெருமாளைச் சேவிக்க சகல வசதிகளும் உண்டு.

ஸ்ரீபெரும்பூதூர்*

சென்னையிலிருந்து பூவிருந்த வல்லி மார்க்கமாகக் காஞ்சிபுரம் செல்லும் பஸ் பாதையில் இத்தலம் உள்ளது. ராமாநுஜரின் அவதார இடமான இத்தலப் பெருமாள்

Koviloor Digital Library

ஆதிகேசவப்பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்திலிருந்து அருள் புரிகிறார். தாயாருக்கு எதிராஜ வல்லி எனும் திருநாமம். தலத்நீர்த்தம் 'எம்பெருமானார் ஏரி' என்று வழங்கப் படுகிறது.

திருமழிசை*

சென்னைக்கு அருகிலுள்ள பூவிருந்தவல்லியிலிருந்து திருவள்ளூர் செல்லும் பஸ் பாதையில் இத் தலம் உள்ளது. திருமழிசை ஆழ்வார் அவதரித்த தலம். மூலவரான ஜெகநாதன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்திலிருந்து அருள் புரிகிறார். தாயாரின் திருநாமம்: திருமங்கை வல்லி.

திருநின்றவூர்

"ஏற்றினை இமயத்துளெம்மீசனை
இம்மையை மறுமைக்கு மருந்தினை
ஆற்றலை அண்டத்துப்புறத் துய்த்திடும்
ஐயனைக் கையிலாழியொன் றேந்திய
கூற்றினைக் குருமாமணிக் குன்றினை
நின்றவூர் நின்ற நித்திலத்தொத்தினை,
காற்றினைப் புனலைச் சென்று நாடிக்
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே."

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலம்.

மூலவரான பக்தவத்சலப் பெருமாள், ஸ்ரீநிவாச விமானம் என்றும் உத்பல் விமானம் என்றும் கூறப்படும் விமானம் அமைந்த பிராகாரத்தினுள் கிழக்கு நோக்கி நின்ற திருமுகக் கோலத்தில் காட்சியளிக்கிறார். தாயாருக்கு சீதாவல்லி எனும் திருநாமம். தலதீர்த்தங்கள் வருண புஷ்கரிணி மற்றும் விருத்த க்ஷீர நதி. விமானம் ஸ்ரீநிவாச (உத்பல) விமானம்:

Koviloor Digital Library

இக்கோயில் சென்னை —அரக்கோணம் இரயில் பாதையில் திருநின்றவூர் (தின்னனூர்) இரயில் நிலையத்திலிருந்து தெற்கு திக்கில் ஒன்றரை கி.மீ தொலைவில் உள்ளது. சென்னை—பூவிருந்தவல்லி—திருவள்ளூர் பஸ் மார்க்கத்தில் ஏராளமான பஸ் வசதிகள் உண்டு. சென்னையிலிருந்தே நேராகச் செல்லும் பஸ்களும் உள்ளன. இத்தலம் திருமலை —திருப்பதி பெரிய ஜியர் ஆதீனத்துக்குட்பட்டது.

திருஎவ்வுள் (திருவள்ளூர்)

"முனிவன் மூர்த்தி மூவராகி
வேதம் விரித்துரைத்த
புனிதன் பூவைவண்ணன் அண்ணல்
புண்ணியன்வி ண்ணவர் கோன்
தனியன் சேயன் தானொருவன்
ஆகிலும், தன்னடியார்க்கு
இனியன் எந்தை பெருமான்
எவ்வுள் கிடந்தானே,"

எனத் திருமங்கை யாழ்வாரால் பாடப் பெற்ற தலம் இது. திருமழிசையாழ்வாரும் இத்தலத்திற்கு மங்கள சாசனம் செய்துள்ளார்.

மூலவராகிய வீரராகவப் பெருமாள் புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கி அருள் புரிந்து வருகிறார். தனிக் கோயில் கொண்ட தாயாருக்கு கனகவல்லி, வஸுமதி எனும் பெயர்கள் உண்டு. தலதீர்த்தத்துக்கு ஹ்ருத்தாப நாசினி புஷ்கரணி என்றும், விமானத்துக்கு விஜயகோடி விமானம் என்றும் பெயர்.

பெருமாள், சாலி ஹோத்ர மகரிஷிக்கு முன் பிரசன்னமாகி "உறைதற்குரிய உள் எவ்வுள்?" என வினவியதால் இத்தலத்துக்குத் திருஎவ்வுள்ளூர் எனும் பெயர் ஏற்பட்டது. மூலவராகிய வீரராகவர் வலத் திருக் கரத்தை, சாலிஹோத்ர முனிவரின் தலை மீது வைத்தபடி, இடத் திருக் கரத்தில்

Koviloor Digital Library

ஞான முத்திரையோடு பிரம்ம தேவனுக்கு வேதோபதேசம் செய்தவாறு காட்சியளிக்கிறார்.

மதுகைடபர்களைக் கொன்று உலகத்தை உய்வித்த தலம் இது எனக் கருதப்படுகிறது. இத்தலப் புஷ்கரிணியில் ஸ்நானம் செய்வது மிகவும் புண்ணியமானதாகக் கருதப்படு கிறது. அதில் தீர்த்தமாடி வீரராகவப் பெருமாளைச் சேவித்து விஜயகோடி விமானத்தையும் சேவித்தால் எல்லா வித நோய்களும் அகன்று போவதாக ஐதீகம். ஆதலால் பெருமாளுக்கு வைத்திய வீரராகவன் எனும் திருநாமமும் உண்டு.

அஹோபில மடத்து ஜீயரின் மேற்பார்வையிலிருக்கும் இக்கோயில், சென்னை—அரக்கோணம் இரயில் பாதையில் திருவள்ளூர் இரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ளது. டவுன் பஸ் மார்க்கமாகச் சென்றடையலாம். வெளி யூர் பஸ்கள் கோயில் வாயிலிலேயே நிற்கின்றன. திருவள் ளூர் பலவித வசதிகள் நிரம்பிய பெரிய ஊராகும்.

திருக்கடிகை

(சோளிங்கர் — சோழசிங்கபுரம்)

உபாசனா தெய்வங்களில் மிகவும் சக்திவாய்ந்த தெய்வம் நரசிம்மர். இரணியனைக் கொல்வதற்காகச் சிங்கத் தலையும் மனிதவுடலும் கொண்டு தூணிலிருந்து வெளியே வந்த மூர்த்தி. இரணியனைக் கொல்வதற்காகவே அவதரித்ததால் கோபமே உருவான இந்த மூர்த்தி, பார்ப் பதற்கே பயங்கரமாக இருப்பார்.

உக்ர நரசிம்மர், சம்ஹார நரசிம்மர் என்று பல மூர்த்தங்களில் இவருடைய தோற்றங்கள் சிலைகளாக வடிக்கப்பட்டிருந்த போதிலும் பக்தர்கள் வணங்கிப் பரவசப் படுவது சாந்த சொரூபமாய் விளங்கும் லக்ஷ்மீ நரசிம்மர், யோக நரசிம்மர் முதலான மூர்த்தங்களையே!

Koviloor Digital Library

மற்ற தெய்வங்களைப் போல் அல்லாமல் நரசிம்மர் நினைத்தவுடன் பலனைக் கொடுக்கக் கூடியவர். பக்திக்கு வசப்பட்டுப் பிரத்தியட்சமாய் வரக்கூடியவர். தான் வணங்கும் காளிக்குப் பலியாக வரவேண்டும் என்று வேண்டி ஆதிசங்கரரை அழைத்துச் சென்ற கபாலீசனை, அவருடைய சிஷ்யன் மீது ஆரோகணித்து அடித்துக் கொன்றதைப் போல் பக்தர்களுக்கும் தன் அன்பர்களுக்கும் கண் கூடாகப் பலனைக் கொடுக்கக் கூடியவர்.

கண்கண்ட தெய்வமாக விளங்கும் நரசிம்மர் திருக்கடிகையில் யோக நரசிம்மராகவே எழுந்தருளியிருக்கிறார். சப்த ரிஷிகள் நரசிம்மரைத் தரிசனம் செய்ய விரும்பி இம்மலையில் தவம் செய்ய ஒரு நாழிகை (அரைமணி) நேரத்திற்குள் தரிசனம் கிடைத்ததால் அகமகிழ்ந்து கடிகாசலம் என்று இத் தலத்திற்குப் பெயர் சூட்டினார்கள். விசுவாமித்திரர் இத் தலத்திற்கு வந்து ஒரு நாழிகை நேரம் தவம் செய்தவுடனே நரசிம்மர் தோன்றி 'பிரம்மரிஷி' பட்டம் கொடுத்ததாகவும் கூறுவர். இத் தலத்தில் ஒரு நாழிகை நேரம் தங்கியிருந்தாலும் மோக்ஷம் கிடைக்கும் என்று கூறுகிறார்கள்.

"மிக்கானை, மறையாய் விரிந்த விளக்கை, என்னுள்
புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையைத்
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே!"

என்று திருமங்கையாழ்வார் மெய்ம்மறந்து பாடும் இத் தலப் பெருமாள் பக்தர்களின் சகல குறைகளையும் தீர்த்து வைப்பவராக இன்றைக்கும் விளங்குகிறார். 'அக்காரக் கனி' என்பது மூலவருக்குத் தமிழ்ப் பெயர்.

பேய் பிசாசு பிடித்தவர்கள், பைத்தியம், சித்தப்பிரமை கொண்டவர்கள், ஏவல், பில்லி சூனியம் முதலியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இத் தலத்தில் சிலநாள் தங்கியிருந்

Koviloor Digital Library

தால் சகல உபாதைகளும் நீங்கி, நன்மை பெறுவதாக நம்பிக்கையோடு வழிபடும் தெய்வம். பாதிக்கப்பட்டவர்கள் இத் தலத்தில் தங்கி விரதம் மேற்கொண்டு நாள்தோறும் தக்கான் குளத்தில் நீராடி மலை ஏறிப் பெருமாளை வழிபடு வதைக் கண்ணாரக் காணலாம். பக்தர்கள் நம்பிக்கைக்கு ஏற்ப நரசிம்மரின் குளிகம் ஒரு ரூபாய் விலைக்குக் கிடைக் கிறது. இது காரிய சித்தியளிப்பதாக பக்தர்கள் நம்புகி றார்கள்.

பெரிய மலை, சின்ன மலை என்ற இரண்டு குன்றுகளை உடையது இந்தத் திருத்தலம். பெரிய மலைமேல் யோக நரசிம்மரும், சிறிய மலைமேல் யோக ஆஞ்சநேயரும் எழுந் தருளியிருக்கிறார்கள். குறை தீர்த்து வைக்கும் குன்றப் பெருமாள்கள் இருவரையும் தரிசித்தால் மட்டுமே பலன் உண்டாகும் என்று சொல்லுகிறார்கள். அதிகாலையில் அடிவாரத்தில் உள்ள தக்கான் குளத்தில் நீராடிப் பெரிய மலை ஏறி, நரசிம்மனைத் தரிசித்து விட்டு இறங்கி வந்து, சற்று ஓய்வெடுத்துக் கொண்டு சிறிய மலை ஏறி, யோக ஆஞ்சநேயரையும் தரிசிக்கலாம். ஒரே நாளில் தரிசனத்தை முடித்துக்கொண்டு திரும்பி விடலாம்.

பெரிய மலை சற்று செங்குத்தானது. நடக்க இயலாத வர்களையும் நோயாளிகளையும் டோலிகள் மூலம் தூக்கிச் செல்ல வசதி இருக்கிறது.

அடிவாரத்தில் குளக்கரையில் கருடாரூட வரதராஜரின் சந்நிதி இருக்கிறது. இந்தக் கோயிலில் மூலவர் இல்லை. உற்சவர் மட்டுமே இருக்கிறார். இக் கோயிலை உச்சிக்கால வேளையில் மட்டும்தான் திறக்கிறார்கள். 'தொட்டாச்சாரி யார்' என்ற தன் பக்தருக்கு பகவான் காஞ்சி வரதராஜப் பெருமாளாகக் கருடசேவை தந்தருளியதாக ஸ்தலபுராணம் கூறுகிறது.

இந்த உற்சவமூர்த்திக்குப் பக்தவத்சலர் என்று பெயர். இவருடைய சந்நிதிக்குப் பின்புறம் ஆதிகேசவப் பெருமாள்

Koviloor Digital Library

ஆலயம் உள்ளது. அதில் ஆண்டாள், ஆழ்வார்கள், எறும்பியப்பா, தொட்டாச்சார்யார் முதலியவர்களுக்குத் தனிச் சந்நிதிகளும் உள்ளன. சரியான பராமரிப்பில்லை. எப்போதாவது கோயிலைத் திறந்து பூஜை செய்கிறார்கள்.

பெரிய மலைமேல் யோக நரசிம்மர் கிழக்கு நோக்கி வீற்றிருந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். தாயார் 'அமிருதவல்லி நாச்சியார்' என்ற பெயருடன் தனிக் கோயிலில் வீற்றிருக்கிறார்.

சிறிய மலைமேல் ஆஞ்சநேயர் நான்கு கைகளுடன் சங்குசக்ரதாரியாக பகவான் விஷ்ணுவைப் போல் காட்சியளிக்கிறார். இது ஒரு தனிச்சிறப்பு.

சென்னை—காட்பாடி இரயில் மார்க்கத்தில் அரக்கோணத்தை அடுத்த மூன்றாவது இரயில் நிலையம். ஆனால் இரயில் நிலையத்திலிருந்து 15 கி. மீ. தூரம்பஸ்ஸில் செல்லவேண்டுமாகையால், அது யாத்திரைக்கு ஏற்ற மார்க்கமல்ல. சென்னையிலிருந்தும், அரக்கோணத்திலிருந்தும் பஸ்கள் செல்கின்றன. கண்டவர்க்கு மோட்சம் தரும் கடிகையப்பனைத் தரிசிப்பது உண்மையிலேயே ஒரு மறக்க முடியாத அனுபவம்.

திரு இட வெந்தை (திருவடந்தை)

இடப்புறத்தில் பிராட்டியை ஏந்தியபடி பெருமாள் எழுந்தருளியுள்ளபடியால் 'திரு இட எந்தை' எனும் பெயர் ஏற்பட்டது. காலவ மகரிஷியின் முன்னூற்றறுபது பெண்களை முன்னூற்றறுபது நாள்களில் பெருமாள் மணந்து கொண்டார். வருஷம் பூராவும் பெருமாளுக்குக் கல்யாணம் நடந்து கொண்டே இருப்பதால் பெருமாள் 'நித்திய கல்யாணன்' என்று வழங்கப்பட்டுக் கல்யாணக் கோலத்திலேயே காட்சியளிக்கிறார். முன்னூற்றறுபது பெண்களையும் ஒரே பெண்ணாக்கித் தமது இடப்பக்க மடியில் வைத்துக் கொண்டு காட்சியளிக்கிறார்.

Koviloor Digital Library

"திவளும் வெண்மதிபோல் திருமுகத்தரிவை
செழுங்கடல மதனிற் பிறந்த
அவரும் நின்னகத் திருப்பதும் அறிந்தும்
ஆகிலும் ஆசைவிடாளால்
குவளையங் கண்ணி கொல்லியம் பாவை
சொல்லு நின்தாள் நயந்திருந்த
இவளை உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்?
இடவெந்தை எந்தை பிரானே!"

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற திருத்தலம் இது.

மூலவரான லக்ஷ்மி வராகப் பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகிறார். உத்சவரான நித்யகல்யாணப் பெருமாள் தாடையில் பொட்டுடன் காட்சியளிக்கிறார். தாயாருக்குக் கோமளவல்லி நாச்சியார் எனும் பெயர். மேலும் ஸ்ரீரங்கநாதன், ரங்கநாயகி, ஆண்டாள் ஆகியோருக்கும் சந்நிதிகள் உண்டு. தல தீர்த்தங்கள்: கல்யாண தீர்த்தம், வராஹதீர்த்தம். விமானம்: கல்யாண விமானமாகும்.

ஸ்ரீ மணவாள மாமுனிகளால் மங்களா சாசனம் செய்யப் பட்ட இத்திருத்தலம் சென்னை—கோவளம் வழியாக மகாபலிபுரம் செல்லும் பஸ் பாதையில் சென்னையிலிருந்து நாற்பது கி. மீ. தொலைவில் உள்ளது. பஸ் வசதியைத் தவிர தங்குவது சாப்பிடுவது போன்ற வேறு வசதிகள் இங்கு இல்லை. கோயிலின் வாசலிலேயே இறங்கிப் பெருமாளைச் சேவிக்கலாம்.

திருவேங்கடம் (திருப்பதி-திருமலை-திருச்சானூர்)

"ஊனேறு செல்வத்து உடற்பிறவியான் வேண்டேன்,
ஆனேறேழ் வென்றான் அடிமைத்திறமல்லால்
கூனேறு சங்கமிடத்தான்தன்—வேங்கடத்துக்
கோனேரி வாழும், குருகாய்ப் பிறப்பேனே"

Koviloor Digital Library

என்று குலசேகராழ்வாரால் பாடப்பெற்றது இத்தலம். இவரைத்தவிர, பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மற்றும் நம்மாழ்வார் ஆகியோராலும் மங்களசாசனம் செய்விக்கப்பட்ட தலம் இது. இத் தலம் மலையடிவாரத்திலுள்ள (கீழ்) திருப்பதி, மலைமேலுள்ள திருமலை மற்றும் அலர்மேல்மங்காபுரம் எனும் திருச்சானூர் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டது.

முதல் பிரிவான திருப்பதியில் கோவிந்தராஜப் பெருமாள் கோயில் உள்ளது. அதில் மூலவரான கோவிந்தராஜப் பெருமாள் கிழக்கு நோக்கிப் புஜங்கசயனத்தில் அருள்புரிகிறார். தாயாருக்குந் 'புண்டரீகவல்லி' எனும் திருநாமம். ஆண்டாள், உடையவர் ஆகியோருக்கும் சந்நிதிகள் உள்ளன.

இரண்டாம் பிரிவான திருமலையில் மூலவரான திருவேங்கடமுடையான், ஸ்ரீநிவாசன், வேங்கடாசலபதி, பாலாஜி, திருமலையான் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். உத்சவருக்குக் கல்யாண வெங்கடேசர் எனும் திருநாமம். இத் தலத்தில் பல சிறப்புவாய்ந்த தீர்த்தங்கள் உள்ளன. சுவாமி புஷ்கரிணி, பாபநாசம், ஆகாசகங்கை, கோனேரி தீர்த்தம், வைகுண்ட தீர்த்தம், சக்ர தீர்த்தம், ஜாபாலி தீர்த்தம், வருண தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், குமாரதாரா தீர்த்தம், தும்புரு தீர்த்தம் எனப்பல தீர்த்தங்கள் உள்ளன. தல விமானத்தின் பெயர்: ஆனந்த விமானம். வேங்கடாத்ரி, சேஷாத்ரி, வேதாசலம், கருடாத்ரி, ரிஷபாத்ரி, அஞ்சனாத்ரி, ஆனந்தாத்திரி எனும் ஏழுமலைகட்கிடையே இக்கோயில் உள்ளதால் இதனை ஏழுமலை என்றும், பகவானை 'ஏழுமலையான்' என்றும் வழங்குவர். முதன் முதலில் ஆதிவராக மூர்த்தியின் திருத்தலமாக இருந்து பின்னர் வேங்கடேசன் எழுந்தருளியதால் ஸ்வாமி புஷ்கரிணியின் வடமேற்குக் கரையிலுள்ள ஆதிவராகரைச் சேவித்த பின்னரே வேங்கடேசனை சேவிப்பது முறையாகும்.

Koviloor Digital Library

மூன்றாவது பிரிவான அலர்மேலுமங்கா புரத்தில் மூலவர் அலர்மேல்மங்கை எனும் பத்மாவதித்தாயார் ஆவார். இத் தல தீர்த்தம் பத்மஸரோவரமாகும்.

தொண்டைமான் எனும் அரசன் கட்டிய இக்கோயிலில் வேங்கடேசர் ஆனந்தமாக எழுந்தருளியிருப்பதால் இக் கோயில் விமானத்துக்கு ஆனந்த விமானம் எனும் பெயர் ஏற்பட்டது. பிரம்மதேவர், உலகத்தை உய்விக்க எண்ணி இரு விளக்குகளை ஏற்றி வைத்தாராம். அவை இன்னும் நன்கு எரிவதாகக் கூறப்படுகிறது. ஸ்ரீ மணவாள மாமுனிகள் இங்குப் பல ஆண்டுகள் தங்கியிருந்து பெருமாளுக்கு சுப்ர பாதம், ஸ்தோத்திரம், பிரபத்தி, மங்களா சாஸனம் ஆகிய வற்றை எழுதி அருளினார். அஹோபிலமடத்து முதல் ஜீயர் மலைக்குச் செல்லும் படிக்கட்டுகளைக் கட்டியதாகக் கூறப் படுகிறது.

பல ஊர்களிலிருந்தும் பஸ்வசதிகள் உண்டு. மலையடி வாரத்தில் கோவிந்தராஜன் சந்நிதியருகே பஸ்கள் நிற்கின் றன. மலைக்குச் செல்ல நிறைய பஸ் வசதிகள் உண்டு. சென்னையிலிருந்தும் வேறு பல பெரிய ஊர்களிலிருந்தும் நேரடியாகத் திருப்பதிக்கு ரேணிகுண்டா வழியாக இரயில் கள் செல்கின்றன. இரயில் நிலையத்திலிருந்து மலைக்குச் செல்ல பஸ் வசதிகள் உண்டு. இரயில் டிக்கெட்டுடன் மலை மேல் ஏறும் பஸ் டிக்கெட்டையும் சேர்த்து வாங்கிக் கொள்ள லாம். வெளியூர் பஸ்களில் ஏறினாலும் இவ்வசதியுண்டு. மலையடிவாரத்திலிருந்து திருச்சானூருக்கும் பஸ் வசதிகள் உண்டு. திருமலை திருப்பதியில் தங்கிச் செல்ல நிறைய தர்ம சத்திரங்களும், காட்டேஜ்களும் உள்ளன. மலை மேல் குறைந்த கட்டணத்தில் வசதிகளோடு கூடிய காட்டேஜ்கள் கிடைக்கின்றன.

திருமலை-திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தில் நன்கு பராமரிக்கப்படும் இத்தலத்திற்கு தினமும் லட்சோபலட்சம் மக்கள் வந்து போகின்றனர். மேலே பகவானுக்கு

Koviloor Digital Library

கல்யாணோத்சவம் செய்யும் வசதியுண்டு. மேலும் வருடந்தோறும் பிரம்மோத்சவம் பவித்ரோத்சவம் முதலான வைபவங்கள் நடைபெறுகின்றன. உற்சவங்களைக் காண பக்த கோடிகள் ஏராளமாக வந்து சிறப்பிக்கின்றனர்.

கடலூர்–விழுப்புரம் அருகிலுள்ள தலங்கள்

திருக்கோவலூர் (திருக்கோவிலூர்)

கோயில்களில் சிறந்தது திருக் கோவலூர் என்று சொல்லும்படி சொல்ல வொண்ணாச் சிறப்புகள் பெற்ற தலம் இது. மாபலியை வெல்ல வாமனர் திருவிக்கிரமனாக மூவுலகும் ஈரடியால் தாவியளந்த தலம்.

மூலவர் திருவிக்ரமப் பெருமாள் வலக் கையில் சங்கும் இடக் கையில் சக்கரமும் தாங்கித் தனது வலக் காலை உயரத் தூக்கி விண்ணையளந்தபடி கிழக்கு நோக்கி நிற்கிறார். உற்சவ மூர்த்திக்கு ஆயனர் என்றும் கோபாலன் என்றும் பெயர். தாயார் பூங்கோவல் நாச்சியார். தல தீர்த்தங்கள்: பெண்ணையாறு, கிருஷ்ண தீர்த்தம், சக்கரதீர்த்தம், விமானம்: ஸ்ரீகர விமானம். கிருஷ்ணரின் நித்திய சாந்நித்தியம் பெற்ற பஞ்ச கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரங்களில் இதுவும் ஒன்று.

"மஞ்சாடு வரை ஏழும் கடல்கள் ஏழும்
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம்
அஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின் மேலோர்
இளந்தளிரில் கண்வளர்ந்த ஈசன் தன்னை,
துஞ்சா நீர்வளம் சுரக்கும் பெண்ணைத் தென்பால்
தூய நான் மறையாளர் சோமுச் செய்யச்
செஞ்சாலி விளை வயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே."

என்று திருமங்கையாழ்வார் மெய்ம்மறந்து பாடும் இத்தலத் துறையும் பெருமாளைப் பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்

Koviloor Digital Library

வாரும் ஸ்ரீமணவாள மாமுனிகளும் மங்களா சாஸனம் செய்துள்ளனர்.

பேயார், பொய்கையார், பூதத்தார் என்னும் முதலாழ்வார்கள் மூவரும் ஒருவருமா ஒருவர் அறியாமல் தனித் தனியே பல தலங்களுக்கும் சென்று இறைவனைப் பாடிப் பணிந்து வந்தனர். பெருமாள் அவர்களை ஒன்று சேர்த்து வைக்க நினைத்தார். தற்செயலாக ஆழ்வார்கள் மூவரும் இவ்வூருக்கு வர நேரிட்டது. நல்ல இருட்டு நேரம். மழை வேறு. முதலில் வந்த ஆழ்வார் ஒரு வீட்டில் தங்க இடம் கேட்டார். ஒற்றை அறை கொண்ட அவ்வீட்டின் முன் புறம் ஒரு தாழ்வாரம் இருந்தது. மிகக் குறுகலான இடம். ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம். மூவர் வந்து விட்டால்...? மூன்று பேரும் நிற்கத்தான் வேண்டும்.

வீட்டுக்குடையவன் முதலில் வந்தவருக்கு இடம் கொடுத் தான். அவர் படுக்கப் போகும் சமயம் இரண்டாமவர் வந் தார். நாராயணா நாராயணா என்றழைத்துக் கொண்டு...! இருவரும் அமர்ந்து சற்று நேரத்திற்கெல்லாம் மூன்றாமவரும் வந்துவிட்டார். மூவரும் எழுந்து நின்றனர்.—தாராளமாக நிற்கலாம். இருட்டு வேளையில் இவர்களுக்கிடையே இட் னொருவரும் புகுந்து கொண்டு நெருக்கத் தொடங்கி விட் டார். ஆழ்வார்கள் திகைத்தனர். யார் அது? யார் அது? பெருமாள் பிராட்டியுடன் காட்சியளித்தார். ஆழ்வார்கள் மூவரும் மெய்மறந்து ஆளுக்கொரு அந்தாதி பாடி அரங் கனைப் பணிந்தனர். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒன் றாகச் சிறிது காலம் தலயாத்திரை செய்தனர். இப்படி ஆழ் வார்களை ஒன்று சேர்த்து வைத்த பெருமாள் இவரே:

ஸ்ரீ வேதாந்த தேசிகன் தேஹளீஸ்துதியை இத்தலத் திலேயே இயற்றினார். எம்பெருமானார், ஜீயர் பரம்பரைக் குட்பட்ட தலம் இது. இக் கோயிலினுள்ளேயே துர்க்கை யம்மன் சந்நிதி ஒன்று உள்ளது. இது தேவேந்திரமாகக் கரு தப் படவில்லை.

இத் தலத்திற்கு விழுப்புரத்திலிருந்து அடிக்கடி பஸ்கள் செல்கின்றன. கடலூரிலிருந்தும் புதுச்சேரியிலிருந்தும் கூட பஸ்கள் செல்கின்றன. வேலூர் மார்க்கமாகச் செல்லும் திருச்சி-சித்தூர் பஸ்களும் இத்தலத்தின் வழியாகச் செல்கின்றன. விழுப்புரம். காட் பாடி இரயில் பாதையில் உள்ள திருக்கோவிலூர் இரயில் நிலையத்தில் இறங்கியும் இரண்டு மைல் தொலைவிலுள்ள ஊரைச் சென்றடையலாம். சகல வசதிகளும் உள்ள ஊர்.

திருவயிந்திரபுரம்

"வையமேழுமுண்டு, ஆலிலை வைகிய
மாயவன், அடியவர்க்கு
மெய்யனாகிய, தெய்வநாயகனிடம்
மெய்தகு வரைச்சாரல்
மொய் கொள் மாதவி சண்பகம் முயங்கிய
முல்லையங் கொடியாடச்
செய்ய தாமரைச் செழும்பணை திகழ்தரு
திருவயிந் திரபுரமே."

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்ற இத்தலத்து மூலவராகிய தெய்வ நாயகன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள் புரிந்து வருகிறார். உத்சவருக்கு மூவராகிய ஒருவன், தேவநாதன், திவிஷந்நாதன், விபுதநாதன், தாஸஸத்தியன், அடியவர்க்கு மெய்யன் எனும் பல திருநாமங்கள். தாயாருக்கு ஹேமாம்புஜவல்லி, வைகுண்ட நாயகி எனும் திருநாமங்கள். தலதீர்த்தங்கள்: கருடநதி, சந்திர தீர்த்தம், சேஷ தீர்த்தம் அல்லது பூ தீர்த்தம் முதலியன. விமானங்கள்: சந்திர விமானம் சுத்த சத்துவி விமானம்.

ஆதிசேஷன் நிர்மாணித்த தலமாகையால் திரு அஹிந்திரபுரம் எனும் பெயர் இத்தலத்துக்கு ஏற்பட்டது. ஆதிசேஷன் சேஷ தீர்த்தமாகிய பாதாள கங்கை தீர்த்தத்தையும், கருடன் கருடநதியான விரஜா தீர்த்தத்தையும் கொண்டு வந்து பெருமாளுக்குச் சமர்ப்பித்தனர். கருட தீர்த்தம் திரு

Koviloor Digital Library

மஞ்சனத்திற்கும் சேஷ தீர்த்தம் நிவேதனத்திற்கும் உபயோகப் படுத்தப்படும் என்பது ஐதீகம்.

இத்தலத்தில் புற்றுக்குப் பால் வார்க்கும் வழக்கம் இல்லை. கோயில் பிராகாரத்தினுள் இருக்கும் சேஷ தீர்த்தத்தில்தான் பால் வார்க்கின்றனர். ஆடி, தை மாதங்களில்தான் பால் தெளித்து வணங்கும் வழக்கம் மிக விசேஷமாக இருக்கிறது. கோயிலுக்கு அருகிலேயே ஔஷதகிரி எனும் குன்றின் மேல் ஹயக்கிரீவர் சன்னிதி உள்ளது. புரட்டாசி மாதத்தில் மலை உற்சவமும், தீர்த்தவாரியும் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றன. ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் இத்தலத்திலேயே தவம்புரிந்து ஹயக்கிரீவர் அருளையும், கருடனுடைய அருளையும் பெற்றுப் பிரசித்தி பெற்றார். ஒரு போட்டியில் தன்னைப் போலவே தானே ஓர் உற்சவ விக்கிரகத்தைச் செய்து வெற்றி பெற்றார். இத்தலத்திலே நாற்பது வருட காலம் வசித்துவந்தார். அவர் வசித்துவந்த திருமாளிகையும், கட்டிய கிணறும் இன்றும் உள்ளன. அவற்றைச் சேவிப்பது அவசியம். ஸ்ரீமணவாள மாமுனிகளும் இத்தலத்தை மங்களசாசனம் செய்துள்ளார். மாட வீதியில் அவருக்கும் ஒரு சந்நிதி உள்ளது.

இத்தலம் சென்னை-திருச்சி இரயில் பாதையில், திருப்பாதிரிப் புலியூர் (கடலூர்) நியூ டவுன் இரயில் நிலையத்திலிருந்து மேற்குத் திக்கில் நான்கு கி.மீ. தொலைவில் உள்ளது. போக வர பஸ் வசதிகள் உண்டு.

காஞ்சிபுரம் மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள தலங்கள்

திருக்கச்சி-அத்திகிரி-காஞ்சிபுரம

முக்தி க்ஷேத்திரங்களில் ஒன்றாகக் கருதப்படும் காஞ்சிபுரம் பல விசேஷங்களைக் கொண்டது. சக்தி பீடங்களில் ஒன்றான காமாட்சியன்னையின் ஆலயம் இங்கு உள்ளது. பெரிய சிவத்தலமாகவும் விளங்குகிறது. விஷ்ணு

Koviloor Digital Library

வின் ஆலயங்கள் பலவும் புகழ்பெற்று விளங்குகின்றன. குமரனுக்குத் தனிக் கோட்டமும் உண்டு. தற்போது செங்கற்பட்டு மாவட்டத்தின் முக்கிய நகராக விளங்கும் இத் தலத்திற்குச் சென்னையிலிருந்து சுமார் அரைமணி நேரத் திற்கு ஒரு பேருந்து செல்கின்றது.

சென்னைக் கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து நேர் இரயில் செல்கிறது. காஞ்சிபுரம் இரயில் நிலையம் செங்கற்பட்டு—அரக்கோணம் இரயில் பாதையில் இருக் கிறது.

ஆழ்வார்களால் பாடப்பட்ட பதினைந்து தலங்கள் காஞ்சிபுரத்திலும் அதை அடுத்துமே உள்ளன என்றால் இத்தலத்தின் சிறப்பைப் புரிந்து கொள்ளலாம்.

காஞ்சி வரதராஜப் பெருமாள் புகழ்கொண்ட தெய்வம். திருவரங்கம் போல் எந்நாளும் யாத்ரிகர்கள் வந்து தரிசித்து விட்டுச் செல்லும் வரதராஜனை ஆழ்வார்கள் பலரும் பாடி யுள்ளனர். பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமங்கை யாழ்வார்களைத் தவிர, ஆளவந்தார், திருக்கச்சி நம்பி, ஸ்ரீராமானுஜர், ஸ்வாமிதேசிகன், மணவாள மாமுனிகள், ஆழ்வான் போன்றவர்களும் மங்களா சாசனம் செய்த தலம் இது. பூதத்தாழ்வார் இப் பெருமானை,

"என் நெஞ்சம் மேயான் என் சென்னியான் தாவனை
வன் நெஞ்சம் கீண்ட மணிவண்ணன்—முன்னம் சேய்
ஊழியான் ஊழி பெயர்த்தான் உலகேத்தும்
ஆழியான் அத்தி யூரான்."

என்று மெய்ம்மறந்து பாடுகிறார்.

மூலவரான வரதராஜன் மேற்கு நோக்கி நின்ற திருக் கோலத்தில் அருள்புரிகிறார். அவருக்குப் பொருளாளன், தேவாதிராஜன், தேவப்பெருமாள் என்னும் திருநாமங்களும் உண்டு. தாயாருக்கு மகாதேவி என்றும் பெருந்தேவித் தாயார் என்றும் திருநாமங்கள். பெருந்தேவித் தாயாருக்குத்

Koviloor Digital Library

தனிக்கோயில் உண்டு. தலத்தீர்த்தங்கள்: வேகவதிநதி, அனந்தசரஸ், சேஷவராஜ, பிரம்ம, பத்ம, அக்னி குசல தீர்த்தங்கள். வரதராஜன் புண்ணியகோடி விமானத்தின்கீழ் எழுந்தருளித் தன்னைத் தரிசிக்கும் பக்தர்களுக்குப் புண்ணியங்களைக் கோடி-கோடியாக அள்ளித்தருகிறார்.

வெள்ளை யானையான ஐராவதம் மலையுருவில், பெருமாளைத் தாங்கியிருப்பதால் இத்தலத்திற்கு வேதகிரி என்றும் அத்திகிரி என்றும் பெயர் ஏற்பட்டது. இத்தலத் தீர்த்தத்தில் மூழ்கிக் கிடத்தப்பட்டிருக்கும் அத்தி மரத்திலான திருவுருவத்தை அத்தி வரதர் என்றழைக்கின்றனர். நாற்பது ஆண்டுகளுக்கொரு முறைதான் அத்திவரதர் வெளியிலெடுக்கப்பட்டுத் தரிசனம் தருவார். பத்துதினங்களுக்கு உத்சவவைபவங்கள் வெகு விமரிசையாக நடக்கும். பின்னர் அத்திவாதரை மறுபடியும் குளத்தில் கிடத்தி விடுவார்கள்.

இத்தலத்தில் பிரம்மா ஒரு பெரிய யாகத்தைச் செய்து பகவானிடம் வரம் பெற்றதால் வரதராஜன் எனும் நாமம் ஏற்பட்டது. பிரம்மா யாகம் செய்த தலமாதலால் (க-பிரம்மாவினால், அஞ்ஜிதம்-பூஜிக்கப்பட்டது) காஞ்சி எனும் பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது-

சாபவசத்தால் பல்லிகளான அயோத்தி மன்னன் சகரனுடைய மகன் அசமஞ்சனும் அவன் மனைவியும் உபமன்யு முனிவரது உபதேசம் பெற்று ஸ்ரீ வரதனைத் தரிசித்து சாபவிமோசனமடைந்து சுவர்க்க பதவியடைந்தனர். எனவே உபமன்யு முனிவரின் உபதேசத்தின் மகிமையை உலகுக்குக் காட்ட அந்தப் பல்லிகளின் சரீரங்கள் தமது பிராகாரத்திலிருக்கும்படி செய்து தன்னைச் சேவித்த பின்னர், அப்பல்லிகளைத் தொடுபவர்களுக்கு சகல ரோக நிவர்த்தி ஏற்படும் என ஸ்ரீ வரதராஜப்பெருமாள் அருள் புரிந்த படியால் இத்தலத்திற்கு வருபவர்கள் பெருமாளைச் சேவித்துவிட்டு பல்லிகளைத் தொட்டுக் கும்பிடுகிற வழக்கம் ஏற்பட்டுள்ளது.

Koviloor Digital Library

இத்தலத்தில் தான் பொய்கையாழ்வார், ஸ்வாமி தேசிகன் ஆகியோர் அவதரித்தனர். உபய வேதாந்த வித்வான்களின் காலட்சேபங்களாலும், பிற அற வழிகளாலும் ஸ்ரீரங்கத்திற்கு ஈடாக வைணவத்தை வளர்த்த பேறு பெற்ற தலம் இது.

திரு அஷ்ட புயகரம் (அஷ்டபுஜம்)

"தொட்ட படையெட்டும் தோலாத வென்றியான்
அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று—குட்டத்துக்
கோள் முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்
தாள் முதலே நங்கட்குச் சார்வு.''

எனப் பேயாழ்வாரால், பாடப்பெற்ற தலம். அஷ்டபுயகரம் திருமங்கையாழ்வார், ஸ்வாமி தேசிகன், மணவாள மாமுனிகளும் மங்களா சாசனம் செய்த தலமிது.

மூலவர் எட்டுத் திருக்கரங்களுடன் அபூர்வமாகக் காட்சியளிப்பதால் தலத்துக்கு அஷ்டபுயகரம் என்ற பெயர் வந்தது. நான்கு வலக் கரங்களில் சக்கரம், கத்தி, புஷ்பம், அம்பு முதலிய ஆயுதங்களும், நான்கு இடக் கரங்களில் சங்கு, வில், கேடயம், கதை ஆகிய நான்கு ஆயுதங்களும் ஏந்தியவாறு வியத்தகு வண்ணம் காட்சியளிக்கின்றார். இரணியனைக் கொன்ற நரசிம்மரைக் கொல்லவந்த சரபம் இந்த அஷ்டபுஜப் பெருமானைக் கண்டு அஞ்சி சரணடைந்ததாகப் புராண வரலாறு கூறுகிறது.

உத்சவப் பெருமாளுக்கு நான்கு கரங்களே உண்டு. அவரது ஆயுதங்களில் கதையும் வேலும் அடங்கும்.

மூலவரான ஆதிகேசவப் பெருமாள் சக்ரதரர், கஜேந்திர வரதன். மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகிறார். தாயாருக்கு அலர்மேலு மங்கை; பத்மாசினி

Koviloor Digital Library

எனும் திருநாமங்கள் உண்டு. தீர்த்தம்: கஜேந்திர புஷ்கரிணி. விமானங்கள் : ககநாக்ருதி விமானம், சக்ராக்ருதி விமானம். கஜேந்திரன் எனும் யானை பெருமாளை அஷ்ட புஜக்குளத்திலிருந்து தாமரைப்பூ பறித்துப் பூஜித்து வந்த காலத்தில் ஒருநாள் அக்குளத்தில் பூப்பறிக்கும் போது ஒரு முதலை அதன் காலைப் பற்றிக்கொள்ள, அந்த யானை பெருமாளை எண்ணிக்கூப்பிட பகவான் தமது சுதர்சனச் சக்கரத்தால் அந்த முதலையின் சிரத்தைக் கொய்து யானையைக் காத்த தலம் இது.

திருத்தண்கா (தூப்புல்)

"பொன்னை மாமணியை அணியார்ந்ததோர்
மின்னை வேங்கடத்து உச்சியில் கண்டுபோய்
என்னை யாளுடை ஈசனை, எம்பிரான்
தன்னையாம் சென்று காண்கும் தண்காவியே!

எனத் திருமங்கை யாழ்வாரால் பாடப் பெற்ற தலம் இது.

மூலவராகிய தீபப்பிரகாசருக்கு விளக்கொளிப் பெருமாள் எனவும் திவ்யப் பிரகாசர் எனவும் திருநாமங்கள் உண்டு. மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகிறார். தாயாரின் திருநாமம், மரகதவல்லி தலத்தீர்த்தம்: சரஸ்வதி தீர்த்தம், விமானம் : ஸ்ரீகரவிமானம்.

ஒரு சமயம் பிரம்மாதி தேவர்கள் நடத்தி வந்த யாகத்தைக் கெடுக்கும் எண்ணத்தில், அரக்கர்கள் உலகம் முழுவதையும் இருள் மயமாக்கிவிட பகவான் பலகோடி சூரியப் பிரகாசத்துடன் ஜோதி மயமாகத் தோன்றி அவ்விருளைப் போக்கி, பிரமாதி தேவர்களைப் காப்பாற்றியதால் அவருக்கு தீபப்பிரகாசர், விளக்கொளிப் பெருமாள் எனும் திருநாமங்கள் ஏற்பட்டதாகத் தல புராணம் கூறுகிறது.

ஸ்ரீ ஸ்வாமி தேசிகனது அவதாரத்தலமான இங்கு அவருக்கும் சந்நிதி உண்டு. தெற்கு நோக்கியுள்ள வேதாந்த

Koviloor Digital Library

தேசிகனது சந்நிதியில், அவரது குமாரரான நயின வரதாச்சாரியரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரகம் இருக்கிறது. அருகிலேயே அவரால், பூஜிக்கப்பட்டுவந்த ஸ்ரீலக்ஷ்மிஹயக்ரிவர் விக்ரகமும் உள்ளது. திரு அஷ்ட புயகரத்திலிருந்து மேற்கே ½ கி. மி. தூரத்தில் இத்தலம் உள்ளது.

திருவேளுக்கை (முகுந்த நாயகர் கோயில்)

"சிறந்த என் சிந்தையும் செங்கண் அரவும்
நிறைந்த சீர் நீள் கட்சி யுள்ளும்—உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
தாம் கடலார் தண் துழாயார்."

எனப் பேயாழ்வாரால் பாடப் பெற்ற தலம் இது. அவரைத் தவிர திருமங்கையாழ்வாராலும் மங்கள சாசனம் செய்விக்கப்பட்ட தலம் இது.

இத்தல மூலவரான அழகிய சிங்கர், நரசிம்மர், முகுந்த நாயகன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்துடன் அருள் புரிகிறார். தாயாருக்கு வேளுக்கை வல்லி, அமிருத வல்லி எனும் திருநாமங்கள் உள்ளன. கனகசரஸ், ஹேமசரஸ் என்ற தீர்த்தங்கள் உள்ளன. விமானத்திற்குக் கனக விமானம் என்று பெயர்.

பெருமாள், தாயார், கருடன் சந்நிதிகள் கொண்ட இக்கோயிலில் நரசிம்மர் வசிக்கிறார். வேள் என்ற சொல்லுக்கு ஆசை என்பது பொருளாகையால், இத்தலத்திற்கு வேளிருக்கை எனும் பெயர் ஏற்பட்டது. நரசிம்மர் ஹஸ்திசைல குகையில் இருந்த படியே மற்றொரு நரசிம்ம வடிவம் கொண்டு மேற்றிசையில் அசுரர்களைத் துரத்தியடித்துவிட்டு அவர்கள் திரும்பி வராவண்ணம் அங்கேயே யோக நரசிம்மராக வசிப்பதாக ஐதீகம். ஒரு சில ஆண்டுகட்கு முன்பு 'ஜீரணோத்தாரணம் செய்விக்கப்பட்ட இச்சந்நிதியில் எழுந்தருளியுள்ள இப்பெருமாளைப் பற்றி ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் 'காமாட்சி காஷ்டகம்' அருளியுள்ளார்.

Koviloor Digital Library

திரு அஷ்டபுய கரத்திலிருந்து தென் மேற்கே ஒரு கி.மீ. தூரத்தில் இத்தலம் உள்ளது.

திரு ஊரகம் (உலகளந்த பெருமாள் கோயில்)

"நன்றிருந்து யோக நீதி நண்ணுவார்கள் சிந்தையுள்
சென்றிருந்து, தீவினைகள் தீர்த்த தேவ தேவனே!
குன்றிருந்த மாடநீடு பாடகத்தும் ஊரகத்தும்
நின்றிருந்த வெஃகணைக் கிடந்தது என்ன நீர்மையே?"

எனத் திருமழிசையாழ்வாரால் பாடப் பெற்ற தலம் இது. திருமங்கை யாழ்வாராலும் மங்கள சாசனம் செய்யப்பட்டது இத்தலம்.

மூவவராகிய திரிவிக்ரமன், உலகளந்த பெருமாள் மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில், அருள் பாலித்து வருகிறார். உத்ஸவருக்கு பேரகத்தான் எனும் திரு நாமம். தாயாருக்கு அமுதவல்லி நாச்சியார் என்றும் அம்ருதவல்லி என்றும் ஆரணவல்லித் தாயார் என்றும் திருநாமங்கள் உண்டு. சேஷ தீர்த்தம் என்று தலத் தீர்த்தத்திற்குப் பெயர். கோயிலின் மேலுள்ள விமானம்: ஸார ஸ்ரீகர விமானம் என்று சொல்லப்படுகிறது.

மகாபலிச் சக்கரவர்த்தி திரிவிக்ரமாவதாரத்தின் போது பகவானின் திருவடியின் கீழ் அகப்பட்டுக் கொண்டதால், பகவானின் திரிவிக்ரம கோலத்தைக் காணமுடியாமற் போகவே அவனது பிரார்த்தனைக்கிணங்கி, சத்ய விரத க்ஷேத்திரமான இங்கு அந்தத் திரு உருவத்தை அவனுக்குக் காண்பித்ததாகத் தல வரலாறு கூறுகிறது. எனவே உலகளந்த பெருமாள், ஊரகம் இரண்டுமே ஒரே திருப்பதி எனும் கருத்து ஏற்பட்டுள்ளது. உலகளந்த பெருமாளின் திரு உருவத்தை தரிசிக்க முடியாத பலிச் சக்கரவர்த்திக்காக உலகளந்த பெருமாள் சந்நிதிக்குப் பக்கத்திலேயே ஒரு சிறிய சந்நிதியில் ஆதிசேஷனாகப் பெருமாள் தரிசனம் தந்ததாகவும்

Koviloor Digital Library

தல வரலாறு கூறுகிறது. ஊரகம் தவிர, இத்தலத்திலேயே நீரகம், காரகம், கார்வானம் ஆகிய மூன்று திருப்பதிகளின் பெருமாள்கள் எழுந்தருளியுள்ளர்.

இத்தலம் பெரிய காஞ்சீபுரம் பஸ் நிலையத்திற்கு மிக அருகில் உலகளந்தார் மாடவீதியில் உள்ளது.

திருநீரகம்

"நீரகத்தாய்! நெடுவரையினுச்சி மேலாய்!
நிலாத் திங்கள் துண்டத்தாய்! நிறைந்தகச்சி
ஊரகத்தாய் எண்துறை நீர் வெஃகாயுள்ளாய்!
உள்ளு வாருள்ளத்தாய்! உலக மேத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா!
காமரு பூங்கா விரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராது என்னெஞ்சினுள்ளாய்!
பெருமான்! உன் திருவடியே பேணினேனே!"

எனத் திருமங்கை யாழ்வாரால் பாடப் பெற்ற தலம், இது.

பெரிய காஞ்சிபுரம் திரு ஊரகம் (உலகளந்த பெருமாள்) கோயிலிலேயே வடப் புறத்துப் பிராகாரத்தில் மிகச் சிறிய சந்நிதியில் உத்ஸவரான ஜகதீஸ்வரப் பெருமாள் தெற்கு நோக்கி நின்ற திருக் கோலத்திலிருக்கிறார்—தாயாரின் திருநாமம்: நிலமங்கை வல்லி.

தலதீர்த்தம்: அக்ரூர தீர்த்தம்.

விமானம்: ஜகதீஸ்வர விமானம்.

பழைய கோயிலில் மூலவர், மற்றும் தீர்த்தம் ஆகியவற்றின் இருப்பிடம் தற்போது தெரியவில்லை.

திருக்காரகம்

திருமங்கையாழ்வாரால் மங்கள சாசனம் செய்விக்கப் பட்ட இத்தலத்தின் இருப்பிடம், கோயில், தீர்த்தம்,

Koviloor Digital Library

முதலியவை பற்றி தற்போது விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை.

பெரிய காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயில் தெற்குப் பிராகாரத்திலேயே ஒரு சந்நிதியில் மூலவரான கருணாகரப் பெருமாள் வடக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். தாயாருக்கு ரமாமணி நாச்சியார் என்றும் பத்மமாணி நாச்சியம் என்றும் பெயர். தீர்த்தம்: அக்ராய தீர்த்தம். விமானம்: வாமன விமானம்.

திருக்கார்வானம்

திருமங்கையாழ்வாரால் மங்களசாசனம் செய்யப்பட்ட இத்தலம் மற்றும் தீர்த்தம் முதலியனவற்றின் இருப்பிடம் தற்போது தெரியவில்லை.

மூலவரான கார்வானப் பெருமாள் வடக்கு நோக்கிநின்ற திருக்கோலத்தில் பெரிய காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலின் தெற்குப் பிராகாரத்தில், வடக்கு நோக்கிய சந்நிதியிலிருந்து அருள் பாலித்து வருகிறார். தாயாரின் பெயர் கமலவல்லி எனும் தாமரையாள். தீர்த்தம் கௌரீ தடாகம் (தராதர தீர்த்தம்) விமானம் : புஷ்கல விமானம்.

திருப்பாடகம் (பாண்டவ தூதப் பெருமாள் கோயில்)

"நின்றது எந்தை ஊரகத்து இருந்தது எந்தை பாடகத்து
அன்று வெஃகணைக் கிடந்தது, என்னில்லாத முன்னெலாம்
அன்று நான் பிறந்திலேன், பிறந்தபின் மறந்திலேன்
நின்றதும் இருந்ததும், கிடந்ததும் என் நெஞ்சுளே"

எனத் திருமழிசையாழ்வாரால் பாடப் பெற்ற தலமிது. அவரைத் தவிர திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மற்றும் மணவாள மாமுனிகள் ஆகியவர்களும் மங்கள சாசனம் செய்துள்ளனர்.

Koviloor Digital Library

மூலவரான பாண்டவதூதர் கிழக்கு நோக்கி வீற்றிருந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். தாயார்கள் ருக்மிணி, சத்தியபாமை. தீர்த்தம்: மத்ஸயதீர்த்தம். விமானம்: பத்ர விமானம்.

வைசம்பாயனரிடமிருந்து பாரதக்கதையைக் கேட்ட ஜன மேஜய மகாராஜன், பாண்டவருக்காகக் கிருஷ்ண பரமாத்மா ஹஸ்தினாபுரத்திற்குத் தூது சென்று விஸ்வருபம் எடுத்ததையறிந்து அதை நேரில் காணும் எண்ணத்துடன் காஞ்சிபுரத்தில் அஸ்வமேத யாகம் செய்ய, அதன் முடிவில் பகவான் பாண்டவ தூதராகச் சென்ற கோலத்தில் விஸ்வ ரூபத்தைக் காண்பித்ததாகத் தலவரலாறு கூறுகிறது. இத் தலம் குமரகோட்டம் கோயிலுக்கு மேற்கில் சுண்ணாம்புக் காரத் தெருவில் உள்ளது.

திருநிலாத்திங்கள் துண்டம்

(காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்குள்)

திருமங்கையாழ்வாரால் மங்கள சாசனம் செய்யப்பட்ட இத்தலம் பெரிய காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயில் உட் பிராகாரத்தில் ஒரு சிறிய சந்நிதியாக உள்ளது.

மூலவரான நிலாத்திங்கள் துண்டத்தான், சந்திர சூடப் பெருமாள் மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சி யளிக்கிறார். தாயாருக்கு நேர்ஒருவரில்லாவல்லி என்றும் நிலாத்திங்கள்துண்டத் தாயார் என்றும் பெயர்.

சிவன் கோயில் அர்ச்சகர்கள்தாம் இந்தச் சந்நிதியில் பூஜை செய்து தீர்த்தம் கொடுக்கின்றனர். இத்தல தீர்த்த மான சந்திர புஷ்கரிணி தற்போது இல்லை. விமானத்தின் பெயர்: புருஷசுத்த விமானம் அல்லது சூர்ய விமானம் என அழைக்கப்படுகிறது.

இத்தலத்தில் ஒரு மாமரத்தின் கீழே தவம் செய்து கொண்டிருந்த பார்வதியைச் சோதிக்க எண்ணிய சிவ

Koviloor Digital Library

பெருமான் அம்மாமரத்தை எரிக்க முற்பட, பார்வதி வாமனப் பெருமானைப் பிரார்த்தித்ததின் பயனாக அப்பெருமான் சங்குசக்ர கதா பாணியாகத் தரிசனம் தந்து அமிருத கிரணகணங்களை உருவாக்கி அம் மாமரத்தைத் தழைக்கச் செய்ததால், பார்வதி தனது தவத்தைத் தொடர்ந்து மேற்கொண்டாள் என்றும், இவ்வாறு பார்வதி தேவியின் தாபத்தைத் துண்டித்த படியால், இத்தலப் பெருமாளுக்கு நிலாத் திங்கள் துண்டத்தான் எனும் திருநாமம் ஏற்பட்டது என்றும் தல புராணம் கூறுகிறது.

சிவபெருமான் பார்வதியை மேலும் சோதிக்க எண்ணி தனது சிரசிலிருந்த கங்கையை ஏவி அவளது தவத்தைக் கலைக்க முற்பட்டார். பார்வதி தேவி தனது சகோதரி என்று எண்ணிகங்கையை வணங்கியும் இலட்சியம் செய்யாது கங்கை முழு வேகத்துடன் அங்கு வர, தன்னால் பூஜிக்கப் பட்ட மணலினால் செய்யப்பட்ட லிங்கம் கரையாமலிருக்க அதனை ஆலிங்கனம் செய்து கொள்ள, சிவபெருமான் அதில் அடங்கி விட்டார் என்றும், பார்வதியின் வேண்டு கோளின் படி வாமனர் அவள் அருகிலேயே துணைக்கு நின்றதாகவும் புராண வரலாறு கூறுகிறது.

திருவெ.:கா (யதோத்காரி பெருமாள் கோயில்)

(காஞ்சிபுரம்—சொன்னவண்ணம் செய்த பெருமாள்)

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணன் நீ கிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவன் யான் செல்கின்றேன் நீயும்உன்
பைந் நாகப் பாய்சுருட்டிக் கொள்."

என்று திருமழிசையாழ்வார் வெஃகா உறையும் பெருமாளிடம் கூறிவிட்டு ஊரைவிட்டுச் செல்வதற்காகப் புறப்பட்டு விட்டார். உடனே பெருமாளும் தமது பாம்பணையைச் சுருட்டிக் கொண்டு எழுந்து பக்தன் பின்னே போய் விட்டார். பெருமாள் போய்விட்டவுடன் ஊரே பாழாகப் போய்விட்டது. நாய்களும் நரிகளும் ஊளையிட்டன. நல்ல

வர்கள் பயந்து நடுங்கியபடி சொல்லாமல் கொள்ளாமல் ஊரைவிட்டு ஓடிவிடப் புறப்பட்டார்கள். பார்த்தான் வேந்தன். தான் செய்த அபசாரத்தை உணர்ந்தான். ஓடோடிப் போய்க் கணிகண்ணரின் காலில் விழுந்தான்.

மன்னன் செய்த அபசாரம்தான் என்ன?

கணிகண்ணன் என்பவர் திருவெஃகாவில் புஜங்க சயன மூர்த்தியாக மேற்கு நோக்கிப் பள்ளி கொண்டிருந்த பெருமானுக்கு நித்ய பூஜைகள் செய்து வந்தார். இவர் திருமழிசை ஆழ்வாரிடம் மிகுந்த பக்தியுடையவர். கோயிலுக்குப் பூக்கொண்டு வந்து கொடுத்துக் கைங்கர்யம் செய்து வந்த கிழவியின் பால் இரக்கம் கொண்டு அவள் குமரியாக மாறும்படி பெம்மானைப் பிரார்த்திக்க அவனும் உடனே இளமை பெற்றுப் பேரானந்தம் அடைந்தாள்.

கிழவியாக இருந்த பூக்காரி திடீரென்று குமரியாக மாறி விட்டதைக் கண்ட அவ்வூர் வேந்தன் வியப்படைந்தான். கிழவியை அழைத்து விசாரித்தான். அது கணிகண்ணர் செய்த அற்புதம் என்பதை அறிந்தான். உடனே கணிகண்ணரை அழைத்துத் தனக்கும் வாலிபம் உண்டாகச் செய்யும் படி கூறினான்.

கணிகண்ணர் பார்த்தார். அது என்ன மந்திரமா? தந்திரமா? இறைவன் அருள் தானாகச் சுரக்க வேண்டும். மன்னன் ஆணையிட்டான் என்பதற்காகச் சுரந்து விடுமா? தம்மால் அது முடியாத காரியம் என்று கூறிவிட்டார். மன்னனுக்கு வந்தது கோபம்! "அப்படியானால் இப்போதே என் நாட்டை விட்டுப் போய்விடு. உன்னை நாடு கடத்த உத்தரவிடுகிறேன்" என்று கட்டளையிட்டு விட்டான்.

கணிகண்ணன் தமது குருநாதராகிய திருமழிசையாழ்வாரிடம் கூறிவிட்டு ஊரைவிட்டுப் புறப்பட்டார். கணி கண்ணன் போனபிறகு நமக்கு இங்கு என்ன வேலை?

Koviloor Digital Library

நாமும் போய்விட்ட பிறகு இந்தப் பெருமாளுக்குத்தான் இங்கென்ன வேலை? பெருமாளே! நீயும் உன் பாம்பணையைச் சுருட்டிக் கொண்டு புறப்படு'' என்றார் ஆழ்வார். பெருமாளும் புறப்பட்டு விட்டார். ஊரே பாழாகி விட்டது. மன்னன் தவறுணர்ந்து மன்னிப்புக் கோரினான். கணிகண்ணர் ஊருக்குத் திரும்பினார். ஆழ்வாரும் திரும்பினார். ஆழ்வார் சொன்னதற்கிணங்கப் பெருமாளும் திரும்பினார்.

தெய்வீகம் எந்த அளவு சிறந்து விளங்கியது என்பதை எடுத்துக் காட்ட இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு வேறொன்று தேவையில்லை. அப்படிப்பட்ட பெருமாளை 'புகல் எடுத்துக் கல்மாரி காத்தாய்!' என்றும் 'காமருபூங் கச்சி ஊரகத்தாய்!' என்றும், வில்லிறுத்து மெல்லியள் தோள் தோய்ந்தாய்!' என்றும், 'வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே!' என்றும், திருமங்கையாழ்வார் பாடுகிறார். திருமழிசையாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் முதலானவர்களும் இப்பெருமாளை மங்கள சாசனம் செய்துள்ளனர். மூலவர் யதோத்காரி—சொன்ன வண்ணம் செய்த பெருமாள் மேற்கு நோக்கியபடி புஜங்க சயனராகக் காட்சியளிக்கிறார். தாயாருக்குக் கோமளவல்லி நாச்சியார் என்று திருநாமம். தலதீர்த்தம்: பொய்கைப் புஷ்கரிணி. விமானம் வேதசார விமானம்.

பிரம்மா செய்து கொண்டிருந்த யாகத்தை அழிக்க எண்ணிய அசுரர்கள் வேகவதி ஆற்றைப் பிரார்த்தித்தார்கள். ஆற்றில் வெள்ளப் பெருக்கெடுத்து பிரவாகத்துடன் குமுறிக் கொந்தளித்துக் கொண்டு பாய்ந்தது. தேவர்கள் விஷ்ணுவிடம் தஞ்சம் புகுந்தனர். பகவான் ஆற்றைத் தடுக்கும் வகையில் அணைபோல் குறுக்கே படுத்து விட்டார். இதனால் பெருமாளுக்கும் யதோத்காரி என்ற பெயர் ஏற்பட்டதாகப் புராண வரலாறு கூறுகிறது.

இத் தலத்தில் மற்ற தலங்களில் உள்ளதைப் போல் அல்லாமல் பெருமாள் வலமிருந்து இடப்புறமாகச் சயனித்திருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பான அம்சம்.

Koviloor Digital Library

முதலாழ்வார்கள் மூவரில் ஒருவரான பொய்கை யாழ்வார் இத்தலத்தில் உள்ள பொய்கை என்னும் திருக் குளத்தில் ஒரு பொற்றாமரை மேல் அவதரித்தார் என்று கூறப்படுகிறது. மிகப் பிரசித்தி பெற்ற பிள்ளை லோகாச் சாரியார் இத் தலத்தில்தான் எழுந்தருளியுள்ளார். மணவாள மாமுனிகள் ஸ்ரீ பாஷ்ய காலட்சேபம் செய்ததும் இத்தலத் தில்தான்.

இவ்வாறு பல சிறப்புகளைக் கொண்ட இத்தலம் திரு அஷ்டபுயகரத்திலிருந்து சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் உள்ளது.

திருக்கள்வனூர் (காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலுக்குள்)

திருமங்கை யாழ்வாரால் மங்கள சாசனம் செய்யப்பட்ட இத் திருத்தலத்தின் மூலவராகிய ஆதிவராகப் பெருமாள் மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயாருக்கு அஞ்சிலை வல்லித்தாயார் எனும் திருநாமம். தல தீர்த்தம்: நித்ய புஷ்கரிணி. விமானம்: வாமன விமானம் ஆகும்.

இத்தலம் பெரிய காஞ்சிபுர்ம் காமாட்சி அம்மன் கோயி லுக்குள் அம்மனது கர்ப்பகிருகத்துக்கு வலப் பக்கத்தில் உள்ளது. ஒரு சமயம் சிவனுக்கும்—பார்வதிக்கும் ஏற்பட்ட விவாதம் முற்றிப் போய் சிவபெருமான் பார்வதியைச் சபித்து விட்டார். பார்வதி தேவி சிவனடி பணிந்து மன்னிப்புக்கோர சிவபெருமான் கூறியபடி வாமனரை நோக்கித்தவம் செய்து சாப விமோசனம் பெற்று, சிவனை மணந்ததால் காமாட்சி எனும் பெயர் அம்மனுக்கு ஏற்பட்டது என்பது ஐதீகம். மேலும் காமக்கோட்டத்தில் பஞ்சதீர்த்தத்தின் கரையில் பார்வதி தேவியும் — லக்ஷ்மி தாயாரும் பேசிக்கொண்டிருந் ததை உற்றுக் கேட்டதால் பார்வதிதேவி பெருமாளுக்குக்

Koviloor Digital Library

கள்வன் எனும் பெயர் சூட்டினாள் என்றும், அவள் பிரார்த்தனைக்கிணங்க பகவான் பூதத்தின் மேல் நின்றும் பிறகு அமர்ந்தும், பிறகு படுத்தும் காட்சியளித்த படியால் நின்றான், இருந்தான், கிடந்தான் எனும் சந்நிதிகள் ஏற்பட்டன எனவும் கூறப்படுகிறது.

திருமங்கை யாழ்வாரால் பாடப்பெற்ற திருநெடுந்தாண்டகத்தில் 'காரகத்தாய்; கார்வானத்துள்ளாய், கள்வர்' எனக் குறிப்பிட்டுள்ளதைத் தவிர, இத்தலத்தைப் பற்றி வேறு குறிப்பேதும் இல்லை. மேலும் தற்போது தாயாருக்கு தீர்த்தமும் காணப்படவில்லை. ஆனால் காமாட்சி அம்மன் ஆலயத் திருக்குளத்தின் வடகிழக்கு மூலையில் நின்றான், இருந்தான் கிடந்தான் என்பதற்கான திருக்கோலங்கள் ஒரு சந்நிதியில் மூன்று அடுக்குகளில் காணப்படுகின்றன. ஆகவே மங்கள சாசனம் செய்யப்பட்ட பெருமாளுக்கும் இச்சந்நிதிக்கும் சம்பந்தம் இருக்கிறதா? இல்லையா? எனும் ஐயப்பாடு உள்ளது.

திருப்பவளவண்ணம் (பவள வண்ணர் கோயில்)

"வங்கத்தால் மாமணி வந் துந்து முந்நீர்
மல்லையாய்! மதின்கச்சி யூராய் பேராய்!
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப் பாவை இடப்பால் கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையினுச்சியாய்! பவளவண்ணா!
எங்குற்றாய்! எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இவ்வனமே உழிதரு கேனே,"

எனத் திருமங்கையாழ்வாரால், பாடப் பெற்ற தலமிது. இத் தல மூலவராகிய பவளவண்ணன் மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். தனிக்கோயில் கொண்ட தாயாருக்குப் பவளவல்லி எனும் திருநாமம். தலத் தீர்த்தம் : சக்ரதீர்த்தம். விமானம் : பிரவாள விமானமாகும்.

Koviloor Digital Library

காஞ்சிபுரம் இரயில் நிலையத்திலிருந்து மேற்கில் இரண்டு பர்லாங் தூரத்தில் பச்சை வண்ணர் மற்றும் பவள வண்ணர் ஆகிய இருவரின் சந்நிதிகள் எதிரெதிரே உள்ளன. பச்சை வண்ணரின் சந்நிதி மங்கள சாசனம் செய்யப்படவில்லை யாயினும் இரண்டையும் ஒரே திருப்பதியாகக் கொண்டு சேவித்து வருகின்றனர். இந்தக் கோயில்களுள் கங்கை கொண்டான் மண்டபத்திலிருந்து கிழக்காகச் செல்லும் செங்கழுனீர் நீரோடைத் தெருவின் இடையில் (சென்னைக் குச் செல்லும் சாலை) பெரியகம்மாளத்தெரு எனப்படும் ஜவஹர்லால் வீதியில் உள்ள பச்சை வண்ணர் கோயிலும் இதற்கு நேரெதிர் கிழக்கிலுள்ள காலாண்டர் தெரு முடிவில் பவளவண்ணர் கோயிலும் உள்ளன. பச்சை வண்ணர் ஆதி சேஷன் மீது வீற்றிருந்த திருக்கோலத்தில் பரமபத நாத னாகக் காட்சியளிக்கிறார்.

மேற்குறிப்பிட்ட பாசுரத்தில் 'பனிவரை யினுச்சி யாய் பவள வண்ணா!' என, பகவானின் திரு மேனியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதே தவிர, தலவிவரம் ஏதுமில்லையாததால் இதுதான் உண்மையில் மங்கள சாசனம் செய்யப்பட்ட திருப் பதியா எனும் ஐயப்பாடு இருந்தாலும் வெகுகாலமாகவே இத் தலத்தில்தான் பெரியோர்கள் வந்து பகவானைச் சேவிக்கி றார்கள்.

திருப்பரமேச்சுர விண்ணகரம்
(வைகுண்டப் பெருமாள் கோயில் காஞ்சிபுரம்)

"கார்மன்னு நீள்விசும்பும் கடலும்
சுடரும் நிலனும் மலையும் தன் உந்தித்
தார் மன்னு தாமரைக் கண்ணனிடம்
தடமா மதிள் சூழ்ந்து அழகாய கச்சி
தேர் மன்னு தென்னவனை முனையில் செருவில்
திறல் வாட்டிய திண் சிலையோன்
பார்மன்னு பல்லவர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகர மதுவே.,,

இதுவும் திருமங்கை யாழ்வார் பாசுரமே.

Koviloor Digital Library

இத்தல மூலவரான பரமபதநாதன், வைகுந்த நாதன் மேற்கு நோக்கி வீற்றிருந்த திருக்கோலத்தில் அருள் புரிகிறார். தனிக்கோயில் கொண்ட தாயாருக்கு வைகுந்த வல்லி எனும் திருநாமம்.

இத்தலத் தீர்த்தம் : அயிரம தீர்த்தம்.

விமானம் : முகுந்த விமானம்.

புத்திர சந்ததி இல்லாது கவலை கொண்ட விதர்ப்ப தேசத்து ராஜனான விரோசனன் காஞ்சிபுரத்துக் கைலாச நாதரைப் பூஜித்து அவரது அருளால், பெருமாளின் துவார பாலகர்களை தமது புத்திரர்களாக அடையப் பெற்றான். பல்லவன், வில்லவன் என்ற அவ்விரு மைந்தர்கள் விஷ்ணு பக்தர்களாகி அசுவமேத யாகம் செய்து ஸ்ரீமந்நாராயணரை ஸ்ரீ வைகுண்ட நாதரின் திருக்கோலத்தில் தரிசித்து மகிழ்ந் தார்கள். அதே கோலத்தில், பெருமாள் இத்தலத்தில் பக்த கோடிகளுக்கு தரிசனம் தருவதாக ஐதீகம். அதனால் தான் இக்கோயிலுக்கு ஸ்ரீ வைகுந்தப் பெருமாள் கோயில் எனும் பெயரேற்பட்டது

இக்கோயில் விமானம் மூன்று அடுக்குகளாக அமைக்கப் பட்டுள்ளது. பெருமாள் வீற்றிருந்த நிலையில், கீழ் அடுக்கி லும், ஸ்ரீ தேவி, பூ தேவியுடன் ரங்கநாதராகச் சயனித்த நிலையில் நடு அடுக்கிலும், நின்ற திருக்கோலத்தில், மேல் அடுக்கிலும், காட்சியளிக்கிறார்.

இவர்கட்குத் தனிப்பூஜைகள் செய்வதில்லை,

காஞ்சிபுரம் ரயிலடியிலிருந்து இரண்டு பர்லாங்கு தொலைவில் பஸ் நிலையத்திற்குப் பின்புறமுள்ள கிழக்கு இராஜ வீதியில் வலப்புறம் செல்லும் சாலையில், இக்கோயில் உள்ளது.

Koviloor Digital Library

திருப்புட்குழி

இராவணனால் சிறையெடுக்கப்பட்ட சீதையைத் தேடிக் கொண்டு வந்த இராமபிரான் ஜடாயுவைச் சந்தித்த தலம் இது. இராவணனை எதிர்த்துப் போர் புரிந்து உயிர் துறந்த ஜடாயுவுக்குத் தர்ப்பணம் செய்து மோட்சமளிக்க வேண்டி ஸ்ரீ ராமன் ஜடாயு தீர்த்தத்தை உண்டாக்கியதால், இத் தலத்துக்குத் திருப்புட்குழி எனும் பெயர் ஏற்பட்டதாகத் தல வரலாறு கூறுகிறது.

கோயிலுக்கு எதிரிலேயே ஜடாயுவுக்குச் சந்நிதி உள்ளது. மூலவரின் தொடையின்மீது ஜடாயு அமர்ந்திருப்பதைக் காணப் பெறாத தேவிகளாக ஸ்ரீதேவியும் பூதேவியும் இடம் வலமாக இத்தலத்தில் மாறி மாறி அமர்ந்துள்ளனர்

தலமூலவரான விஜயராகவப் பெருமாள் கிழக்குநோக்கி விற்றிருந்த திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். தனிக் கோயில் கொண்ட தாயாருக்கு மரகதவல்லி எனும் திருநாமம். இத்தல தீர்த்தம்: ஜடாயு தீர்த்தம். விமானம்: விஜய கோடி விமானம் அல்லது வீர கோடி விமானமாகும்.

"அலங்கெழு தடக்கை ஆயன் வாயாம்பற்கு
அழியுமால் என் உள்ளம்!' என்னும்,
புலங்கெழு பொருநீரப் புட்குழி பாடும்
போதுமோ நீர் மலைக்கு என்னும்
குலங்கெழு கொல்லிக் கோமளவல்லிக்
கொடியிடை நெடுமழைக் கண்ணி
இலங்கெழில் தோளிக்கு என் நினைந் திருந்தாய்?
இடவெந்தை எந்தை பிரானே!

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்று மங்களா சாசனம் செய்யப்பட்ட திருத்தலம் இது.

இத்தலத்தில் பிள்ளைப் பேறில்லாத பெண்கள் சிறிது பயிற்றைத் தல மடப்பள்ளியில், கொடுத்து வாங்கி நனைத்து

Koviloor Digital Library

மடியில் கட்டிக்கொண்டு உறங்குவார்கள். எழுந்து பார்க்கும் போது பயிர்கள் முளை விட்டிருந்தால் புத்திர பாக்கியம் கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் வருகிறார்கள். தலத் தாயாரின் மகிமையால் வறுத்த பயிர் முளைப்பதால் அவருக்கு மரகதவல்லி எனும் திருநாமம் ஏற்பட்டதாகத் தல வரலாறு கூறுகிறது.

இத் தலத்திலுள்ள குதிரை வாகனம் உண்மைக் குதிரையைப் போல அசையும் உறுப்புக்கள் கொண்டிருப்பது ஒரு விசேஷமான அம்சமாகும்.

இராமானுஜருடைய குருவான யாதவப் பிரகாசர் தமது சிஷ்யர்களுக்கு இங்குதான் வேதாந்தபூர்வ பாஷ்யங்களைக் கற்பித்தார். ஸ்ரீ ராமானுஜரும் ஸ்ரீ மணவாள மாமுனிகளும் பலமுறை இத்தலத்தை மங்களா சாசனம் செய்துள்ளார்கள்.

சென்னை—வேலூர் சாலையில், காஞ்சிபுரத்திலிருந்து 10 கி. மீ. மேற்கே பாலுச்செட்டிச் சத்திரத்திற்கு மிக அருகில் இக்கோயில் உள்ளது. காஞ்சிபுரத்திலிருந்து நிறைய பஸ் வசதிகள் உண்டு. ஆனால் இத்தலத்தில் தங்கி பெருமாளைச் சேவிக்கப் போதிய வசதிகள் இல்லை.

திருச்சி மற்றும் அதன் சுற்றுப்புறத் தலங்கள்

ஸ்ரீரங்கம் (பெரியகோயில்)

"பச்சை மாமலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!"

என்று தொண்டரப்பொடியாழ்வார் பாடிய திருத்தலம் இது, மேலும் மதுரகவியாழ்வாரைத் தவிர, மற்ற ஆழ்வார்கள் நம்மாழ்வார், குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார். திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கை

Koviloor Digital Library

யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் எல்லோரும் அரங்கத்து அண்ணலை மங்கள சாசனம் செய்துள்ளனர்.

இத்தல மூலவரான ஸ்ரீரங்கநாதர், பெரிய பெருமாள், நம்பெருமாள், அழகிய மணவாளர் என்னும் பல பெயர்கள் உடையவர். ஆதிசேஷன் மீது ஒருக்களித்துப் படுத்தபடி தெற்கு நோக்கி அருள்பாலித்து வருகிறார். உத்சவராகிய நம்பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இவரை ஸ்ரீராமானுஜருக்கு முற்பட்ட ஆசாரியர்களான எம்பார்பட்டர் பிள்ளை, லோகாசாரியர் முதலியவர்களும் மங்களா சாசனம் செய்துள்ளனர். தாயாருக்கு ஸ்ரீரங்க நாயகி என்று திருநாமம். இத்தலத் தீர்த்தங்கள்; சந்திர புஷ்கரிணி, காவேரி, கொள்ளிடம்,வேதச்ருங்கம் ஆகியவை. தல விருட்சம் புன்னை மரமாகும். விமானம்: பிரணவாக்ருதி விமானம்.

பூலோக வைகுண்டம் எனக் கருதப்படும் இத்தலத்தி லுள்ள கோயில் மிகவும் பிரமாண்டமானதாகவும் மிகவும் அழகிய சிலைகளை உடையதாகவும் காணப்படுகிறது. ஏழு பிராகாரங்கள் கொண்ட இக்கோயிலின் தெற்கு வாசலில் ஆசியாவிலேயே மிகவும் உயர்ந்த ராஜகோபுரம் சமீபத்தில் கட்டி முடிக்கப்பட்டுக் குடமுழுக்குச் செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ அஹோபில மடத்து ஜீயரான ஸ்ரீ அழகியசிங்கரது பெரு முயற்சியால் ஏராளமான பொருட்செலவில் கட்டப்பட்டு நீண்டு நெடிதுயர்ந்து நிற்கும் இக்கோபுரத்தைக் காணக் கண் கோடி வேண்டும்.

வடக்குப் பக்க பரமபத வாசலில் வ்ரஜாநதி இருப்பதாக ஐதிகம். கம்ப இராமாயண அரங்கேற்றம் இங்குதான் நடைபெற்றது. அப்போது சிரக்கம்பம் செய்து ஆமோதித்த மேட்டு அழகிய சிங்கர் என வழங்கப்படும் ஸ்ரீநரசிம்ம மூர்த்திக்குத் தனிச் சந்நிதி உள்ளது. சிவபெருமானது பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கியதாகக் கூறப்படும்

Koviloor Digital Library

சக்கரத்தாழ்வாருக்கும் தனிச் சந்நிதி உண்டு. மேலும் ஸ்ரீ தன்வந்திரி பகவானுக்கும் தனிச் சந்நிதி உண்டு. இம் மாதிரி வேறு தலங்களில் பார்க்க இயலாத அற்புதங்கள் பல இத்தலத்தில் உள்ளன. பெரிய கருடாழ்வாரது சந்நிதி பிரமிப்பூட்டும் வகையில் அமைந்துள்ளது. அதற்கு இரு பக்கங்களிலும் சுக்கிரீவனுக்கும் அங்கதனுக்கும் சந்நிதிகள் இருக்கின்றன. இதுவும் வேறு எங்கும் காணப்படாத ஒன்றாகும். இவற்றைத் தவிர, கருட மண்டபம், ஸ்ரீதேசிக னுக்கான சந்நிதி ஆகியவற்றையும் கட்டாயம் சேவிக்க வேண்டும். ஸ்ரீரங்கநாதரை தரிசித்துவிட்டு வெளியே வரும் போது மூலவரான ஸ்ரீரங்கநாதரின் கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ள தங்க விமானத்தின் தென்பக்கத்திலுள்ள பரவாசுதேவரின் தங்க விக்ரகத்தை சேவிக்க வேண்டியது அவசியம்.

இத்தலத்தில் வைகுண்ட ஏகாதசியன்று மிகவும் விமரிசையான பூஜைகள் நடைபெறுகின்றன. அன்று மட்டும் கோடானுகோடி பக்தர்கள் இத்தலத்துக்கு வந்து பகவானைச் சேவிப்பார்கள். அன்று மட்டும் பகவான் சந்நிதியிலிருந்து தாயார் சந்நிதிக்குப் போகும் திருக்கதவு திறந்திருக்கும்.

பட்டர், வடக்குத் திருவீதிப் பிள்ளை — பிள்ளை லோகாசார்யார், பெரியநம்பி போன்ற பக்தகோடிகள் இத் தலத்தில்தான் அவதரித்தார்கள். திருமங்கையாழ்வாரின் திருமதிற் கைங்கரியமும், தொண்டரடிப் பொடியாழ்வாரின் நந்தவனக் கைங்கர்யமும் இத்தலத்தில்தான் நடை பெற்றன. ஸ்ரீதேசிகன் இப் பகவானின் பாதுகைகளைப் பற்றித்தான் 'பாதுகாஸ ஹஸ்திரம்' என்னும் சிறப்பு மிக்க காவியத்தை இயற்றிப் பெரிய பெருமாளால் 'கவிதார்க்கிக சிம்ஹம்' என்றும், தாயாரால் 'சர்வதந்திரஸ்வதந்திரர்' என்றும் விருதுகள் வழங்கப்பட்டார். ஸ்ரீமந் நாதமுனிக

Koviloor Digital Library

ளால் இசையமைக்கப்பட்டு திவ்யப் பிரபந்தத்தை இராக தாளங்களுடன் பாடும் அரையவர் சேவை என்னும் முறை இங்குதான் நடந்து வருகிறது. நம்பெருமாளின் விருப்பத் திற்கிணங்கி ஸ்ரீ மணவாள மாமுனிகள் இந்தச் சன்னிதியில் திருவாய்மொழி காலட்சேபம் செய்தார். நம் பெருமாள் பகவத் விஷய சாற்றுமுறையன்று குழந்தையாக வந்து நின்று 'ஸ்ரீ சைலேச தயாபாத்ர' தனியனை அருளிச் செய்து மணவாள மாமுனிகளுக்கு அன்பளிப்பாக வழங்கியது ஒரு தனிச் சிறப்பாகும்.

இவ்வாறு பல சிறப்பு அம்சங்கள் பொருந்திய இத் திருத்தலம் திருச்சிக்கு அருகில் காவிரி கொள்ளிட நதிகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. இரயில் மூலமாகச் சென்றால் திருச்சி—விழுப்புரம் கார்டு லைனில் திருச்சிக்கு முன்னா லேயே இறங்கிக் கொள்ள வேண்டும். இரயில் நிலையத்தி லிருந்து ஒரு கி. மீ. தொலைவில் இக்கோயில் உள்ளது. திருச்சி ஜங்ஷனிலிருந்து ஏராளமான பஸ்கள் கோயிலின் வாசலிலேயே போய் நிற்கின்றன. இத் தலத்தில் சகல வசதி களும் உள்ளன.

இத் தலத்திலுள்ள மூலவர் சிலை பிரம்மதேவரால் பூஜிக்கப்பட்டு வந்து அவரால் சூரிய வம்சத்தைச் சேர்ந்த இக்ஷ்வாகு மன்னருக்கு அளிக்கப்பட்டுப் பரம்பரையாக அவர் களால் பூஜிக்கப்பட்டு வந்ததென்றும், இராமன் விபீஷணன் மேலுள்ள அளவு கடந்த அன்பால் அவனுக்கு அளித்த தாகவும், விபீஷணன் இலங்கைக்கு எடுத்துச் செல்லும் வழியில் இங்கு வைக்க பெருமாள் இங்கேயே நிலைகொண்டு விட்டதாகவும் கூறப்படுகிறது. சிலையை எடுக்க முடியாமல் விபிஷணன் வருந்த புகவான் தான் இலங்கையை நோக்கிய படியே சயனித்திருப்பதாகவும் விபீஷணன் இலங்கையி லிருந்து செலுத்தும் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்வ தாகவும் வரமளித்தார். வைகுண்ட ஏகாதசியன்று விபீஷணன் தன் பரிவாரங்களோடு வந்து பெருமாளை வணங்கிச் செல்வதாகக் கூறுகின்றனர்.

Koviloor Digital Library

திருக்கோழி (உறையூர்)

"கோழியும் கூடலும் கோயில் கொண்ட
கோவலரே ஒப்பர்"

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற அழகிய மணவாளப் பெருமாள் வீற்றிருக்கின்ற இத்திருத்தலம் திருச்சி நகரத்தின் ஒரு பகுதியாகும். திருச்சி ஜங்ஷனிலிருந்து மூன்று கி. மீ. தொலைவில் (மெயின் கார்டு கேட் வழியாகச் செல்லும் பாதையில்) உறையூர் எனும் இடத்தில் உள்ளது. அவ்விடத்துக்கு நாச்சியார் கோயில் எனும் பெயரும் உண்டு

சோழநாட்டு இளவரசியான கமலவல்லி நாச்சியார் ஸ்ரீரங்கநாதன் மீது மையல் கொண்டு, அவரையே நினைந்து விரதம் பூண்டிருக்க அழகிய மணவாளராக வந்து அவருக்கு அனுக்ரகித்த தலமாகும் இது. ஆகவேதான் ஸ்ரீரங்கநாத உத்ஸவர் பங்குனி உத்திரத்துக்கு முதல்நாளிலே ஸ்ரீரங்கத்தி லிருந்து இத்திருத்தலத்துக்கு வந்து நாச்சியாரை மணந்து கொள்ளும் திருக் கல்யாண உத்சவம் பல வருடங்களாக நடைபெற்று வருகின்றது.

இத்தலத்திலே சக்கரம் தரித்து வீற்றிருக்கும் அழகிய மணவாளப் பெருமாள் கமலவல்லி நாச்சியாருடன் வடக்கு முகமாக திருக்கல்யாண கோலத்திலே காட்சியளிக்கிறார்.இத் தலத்திலே பிறந்து பிரசித்தி பெற்ற திருப்பாணாழ்வாருக்கும் ஒரு தனிச் சந்நிதி இக் கோயிலில் உள்ளது.

கல்யாண தீர்த்தம், சூரிய புஷ்கரிணி மற்றும் குட முருட்டி நதி ஆகியவை இத் திருத்தலத்தின் தீர்த்தங்களா கும். விமானத்தின் பெயர்: கல்யாண விமானம். திருமங்கை யாழ்வார், குலசேகராழ்வார் ஆகியோர் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

KOVILOOR LIBRARY, KOVILOOR
A. No. 15367
Q 22

Koviloor Digital Library

திரு அன்பில்

திருமழிசை யாழ்வாரால் போற்றித் துதிக்கப் பட்ட வடிவழகிய நம்பி என்னும் பெருமாள் வாழும் திருத்தலமாகிய இது, திருச்சி விழுப்புரம் ரயில் மார்க்கத்தில் லால் குடி எனும் ஊருக்கு 7½ கி.மீ· தொலைவில் உள்ளது. கல்லணை மார்க்கமாகத் திருச்சியிலிருந்து கும்பகோணம் செல்லும் பஸ் மார்க்கத்தில் நடராஜபுரம் எனும் ஊருக்கு மிக அருகில் உள்ளது. இத்தலத்தில் தங்கி வழிபட வசதிகள் இல்லை. திருச்சியில் தங்கி இத் தலத்திற்குச் சென்று வழிபட்டுத் திரும்பலாம்.

இக்கோயிலில் பல விசேஷமான கல்வெட்டுகள் உள்ளன. மண்டுக புஷ்கரிணி என்பது தீர்த்தம். கொள்ளிடம் அருகிலேயே ஓடுகிறது. விமானம்: தாரக விமானம். மூலவர் புஜங்கசயனராகக் கிழக்கு நோக்கிச் சயனித்திருக்கும் காட்சி பேரின்பத்தை அளிக்கவல்லதாகும். தாயாரின் பெயர் அழகியவல்லி நாச்சியார்.

திரு வெள்ளறை

திருவரங்கத்தைப்போல் மிகவும் சிறப்பு வாய்ந்த கோயில் இது. ஆயினும் அதிகப் பிரபலமாகாதிருக்கிறது.

"திங்கள் தோய் சென்னிமாடம் சென்றணை
திருவெள்ளறை நின்றானே!"

எனத் திருமங்கை யாழ்வாராலும்,

"கன்னியரும் மகிழக் கண்டவர் கண்குளிரக்
கற்றவர் தெற்றிவரப் பெற்ற எனக்கருளி
மன்னுகுறுங்குடியாய்! வெள்ளறையாய்!"

எனப் பெரியாழ்வாராலும் பாடப் பெற்ற பெருமாள் எழுந்தருளியிருக்கும் இத்தலம் திருச்சியிலிருந்து துறையூர் போகும் பஸ் மார்க்கத்தில் 20 கி.மீ: தூரத்தில் உள்ளது. அல்லது ஸ்ரீ ரங்கத்திலிருந்து உத்தமர் கோயில் மார்க்கமாகச்

Koviloor Digital Library

செல்லும் பஸ்களின் மூலமாகவும் செல்லலாம். இங்கு தங்குமிடங்கள் போன்ற வசதிகள் இல்லையாதலால் திருச்சியிலிருந்து சென்று தரிசித்துவிட்டுத் திரும்புவது நன்று.

இக் கோயிலில் மூலவரான புண்டரீகாக்ஷப் பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக் கோலத்துடன் பக்த கோடிகளுக்கு அருள்பாலித்து வருகிறார். நாச்சியாருக்குத் தனிச் சந்நிதி உண்டு. தாயாரின் பெயர் செண்பக வல்லித் தாயார். உத்சவத்தாயாருக்குப் பங்கஜவல்லி என்பது திருநாமம். இந்தத் தலத்தில் சகல ஆதிபத்தியமும் பங்கஜ வல்லித் தாயாரினுடையதே.

பெரிய மதில்களுடன் கூடிய மிகவும் விசாலமான இக் கோயிலுக்குள்ளேயே திவ்ய தீர்த்தம், கந்தக்ஷீர புஷ்கரிணி தீர்த்தம், சக்ர தீர்த்தம், புஷ்கல தீர்த்தம், பத்ம தீர்த்தம், வராக தீர்த்தம், மணிகர்ணிகா தீர்த்தம் எனும் ஏழு புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. இக் கோயிலின் விமானத்துக்கு விமலாக்ருதி விமானம் என்று பெயர். மிகப் பெரிய இக்கோயிலுக்கு இரு வாயில்கள் உண்டு. தைமாதம் தொடங்கி ஆனி மாதம் முடியும்வரை உத்தராயண வாயிலையும், ஆடி மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரை தக்ஷிணாயன வாயிலையும் உபயோகிக்க வேண்டும் என்பது நியதி. இவற்றைத் தவிர, 'நாழி கேட்டான் வாசல்' எனும் வாசலுமுண்டு. ஒரு முறை பெருமாளிடம் இரவில் தாயார் நேரம்கேட்டதைக் குறிப்பதற்காக அப்பெயர் ஏற்பட்டது என்பர்.

மூலஸ்தானத்தில் ஆதிசேஷன், சூரியன், சந்திரன் ஆகியோருடன் ஸ்ரீ தேவி, பூ தேவியும் மனித உருவத்தில் பெருமாளின் அருகில் எழுந்தருளியுள்ளனர். பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், ஸ்ரீ ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமணவாள மாமுனிகள் ஆகியோர் மங்கள சாசனம் செய்துள்ளனர். இது உய்யக் கொண்டாரின் அவதாரத் தலமாகும்.

Koviloor Digital Library

செல்லும் பஸ்களின் மூலமாகவும் செல்லலாம். இங்கு தங்குமிடங்கள் போன்ற வசதிகள் இல்லையாதலால் திருச்சியிலிருந்து சென்று தரிசித்துவிட்டுத் திரும்புவது நன்று.

இக் கோயிலில் மூலவரான புண்டரீகாக்ஷப் பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக் கோலத்துடன் பக்த கோடிகளுக்கு அருள்பாலித்து வருகிறார். நாச்சியாருக்குத் தனிச் சந்நிதி உண்டு. தாயாரின் பெயர் செண்பக வல்லித் தாயார். உத்சவத்தாயாருக்குப் பங்கஜவல்லி என்பது திருநாமம். இந்தத் தலத்தில் சகல ஆதிபத்தியமும் பங்கஜ வல்லித் தாயாரினுடையதே.

பெரிய மதில்களுடன் கூடிய மிகவும் விசாலமான இக் கோயிலுக்குள்ளேயே திவ்ய தீர்த்தம், கந்தக்ஷீர புஷ்கரிணி தீர்த்தம், சக்ர தீர்த்தம், புஷ்கல தீர்த்தம், பத்ம தீர்த்தம், வராக தீர்த்தம், மணிகர்ணிகா தீர்த்தம் எனும் ஏழு புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. இக் கோயிலின் விமானத்துக்கு விமலாக்ருதி விமானம் என்று பெயர். மிகப் பெரிய இக் கோயிலுக்கு இரு வாயில்கள் உண்டு. தைமாதம் தொடங்கி ஆனி மாதம் முடியும்வரை உத்தராயண வாயிலையும், ஆடி மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரை தக்ஷிணாயன வாயிலையும் உபயோகிக்க வேண்டும் என்பது நியதி. இவற்றைத் தவிர, 'நாழி கேட்டான் வாசல்' எனும் வாசலுமுண்டு. ஒரு முறை பெருமாளிடம் இரவில் தாயார் நேரம்கேட்டதைக் குறிப்பதற்காக அப்பெயர் ஏற்பட்டது என்பர்.

மூலஸ்தானத்தில் ஆதிசேஷன், சூரியன், சந்திரன் ஆகியோருடன் ஸ்ரீ தேவி, பூ தேவியும் மனித உருவத்தில் பெருமாளின் அருகில் எழுந்தருளியுள்ளனர். பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், ஸ்ரீ ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமணவாள மாமுனிகள் ஆகியோர் மங்கள சாசனம் செய்துள்ளனர். இது உய்யக் கொண்டாரின் அவதாரத் தலமாகும்.

Koviloor Digital Library

திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்)

முன்னொரு சமயம் பிரம்ம தேவருக்கும் தம்மைப் போல் ஐந்து முகங்கள் இருப்பதைக் கண்டு கோபம் கொண்ட சிவ பெருமான் பிரம்மாவின் ஐந்தாவது தலையைக் கிள்ளிவிட் டார். அவ்வாறு சிவன் செய்ததால் அவரைப் பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அவரால் கிள்ளப்பட்ட பிரம் மனின் கபாலம் அவருடைய கையிலேயே ஒட்டிக்கொண்டது. பிரம்ம ஹத்தி தோஷத்தினைப் போக்கிக்கொள்ள சிவ பெரு மான் தனது கையில் ஒட்டிக் கொண்டிருந்த கபாலத்தையே திருவோடாக ஏந்திக் கொண்டு பிட்சாடன மூர்த்தியாக அலைந்து திரிந்தார். கடைசியில் நாராயணரது அனுக் கிர கத்தால் மஹாலக்ஷ்மி சிவனுக்குப் பிட்சையிட அவருடைய கைகளில் ஒட்டிக் கொண்டிருந்த கபாலம் விடுபட்டது. அவ ரைப் பிடித்திருந்த பிரம்ம ஹத்தி தோஷமும் விலகியது. அவ் வாறு சிவனுக்கு அனுக்கிரகம் செய்த இடமே இப் புண்ணியத் தலம் எனத் தல புராணம் கூறுகிறது.

திருச்சி மற்றும் ஸ்ரீரங்கத்திலிருந்து திருவெள்ளறை செல்லும் பஸ் பாதையில் இத்தலம் உள்ளது. இரயிலில் சென் றால் திருச்சி-விழுப்புரம் கார்டு லைனில் இத்தலம் உள்ளது. சிறிய ஊரேயானாலும் இத்தலத்தில் தங்கி வழிபட வசதிகள் உள்ளன. பல திருமணக் கூடங்களும் உள்ளன.

பகவான் கிழக்கு நோக்கிப் புஜங்கசயனராகக் காட்சி யளிக்கிறார். மூலவருக்குப் புருஷோத்தமன் என்று பெயர். தாயார் பூர்வா தேவி அல்லது பூர்ணவல்லி. சிவபெருமான் பிட்சாடன மூர்த்தியாகப் பார்வதி சமேதராக வீற்றிருப்ப தால் இத் தலத்துக்குப் பிட்சாண்டார் கோயில் எனும் பெயரும் உண்டு. சிவன், பார்வதியைத் தவிர, பிரம்மா, சரஸ்வதி முதலான பல தெய்வங்களுக்கும் சந்நிதிகள் உள்ளன. இத்தலத்திலுள்ளது கதம்ப தீர்த்தமாகும். விமானத்தின் பெயர் : உத்யோக விமானம். தலத்தின்

Koviloor Digital Library

விருட்சம் கதலி (வாழை). இவ்வாறு பல்வேறு விசேடங்கள் பொருந்திய இத்தலப் பெருமாளைத் திருமங்கை யாழ்வார்,

''பேரானை, குறுங்குடிஎம் பெருமானை, திருத்தண்கால்
ஊரானை, கரம்பனூர் உத்தமனை''

என்று உள்ளம் உருகப் பாடுகிறார்.

தஞ்சை மற்றும் அதன் சுற்றுப்புறத் தலங்கள்

திருத்தஞ்சை மாமணிக் கோயில்

தஞ்சாவூர் என்றவுடன் இராஜராஜ சோழனையும் பெரிய கோயிலையும்தான் நினைக்கிறோம். தஞ்சை என்ற பெயருக்கே காரணமான தஞ்சகன் என்ற யானையைப் பிளந்த நரசிம்மரையும், தஞ்சை நாயகியையும் மறப்பதும் முடியாததுதான்.

''வம்புலாம் சோலை மாமதில் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள்! உய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்''

எனத் திருமங்கை யாழ்வார் பாடும் திருக்கோயில். பூதத்தாழ்வார், நம்மாழ்வார் முதலானவர்களாலும் மங்கள சாசனம் செய்யப்பட்ட மூன்று கோயில்கள் சேர்ந்து ஒரே தலமாக உள்ளன. மூன்றும் அருகருகே அமைந்துள்ளன. தஞ்சை இரயில் நிலையத்திலிருந்து 4 கி. மீ. தொலைவில் வெண்ணாற்றங்கரையிலே கும்பகோணம்-தஞ்சை பஸ் பாதையில் இத்தலம் உள்ளது. இத்தலத்தைச் சுற்றிலும் வெற்றிடமாக இருப்பதால் தஞ்சையிலோ அல்லது குடந்தையிலோ தங்கியிருந்தே பெருமாளைச் சேவிக்கலாம். மூன்று சந்நிதிகளுக்கும் ஒரே அர்ச்சகர் வெண்ணாற்றங் கரையில் வசிக்கிறார். இரவு வேளையைத்தவிர இதர நேரங்களில் அவரைக் கொண்டு பெருமாளுக்குச்சேவை செய்யலாம்.

தஞ்சை மாமணிக் கோயில் :- மூலவராகிய நீலமேகப் பெருமாள் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். தாயார் செங்கமல வல்லி, இக்கோயிலுக்கு அமிர்த தீர்த்தம், கன்னிகாபுஷ் கரிணி மற்றும் வெண்ணாறு ஆகியவை தீர்த்தங்களாகும். ஸௌந்தரிய விமானம் இக்கோயிலின் விமானமாகும்.

மணிக்குன்றம் :- திவ்வியப் பிரபந்தத்தைச் சேவிக்கக் கூடாத காலங்களில் தேசிகப் பிரபந்தத்தைச் சேவிக்கலாம் என நயினாராச்சாரியர் நியமித்த திவ்வியத்தலமாகும் இது. மூலவராகிய மணிக்குன்றப்பெருமாள் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். தாயார் அம்புஜவல்லி. ஸ்ரீ ராம தீர்த்தமும், மணிக்கூட விமானமும் கொண்ட திருத்தலம்.

தஞ்சையாளிநகர் :- தஞ்சகன் வேண்டுதலுக்கிணங்கித் தஞ்சக யானையைத் தமது நகங்களால் குத்திக் கிழிக்கும் நரசிம்ம உருவத்தோடு இத்தலத்தில் வீற்றிருப்பதால் இதற்குத் தஞ்சாபுரி அல்லது தஞ்சை எனும் பெயர் ஏற்பட்டது என்பர்.விக்கிரகங்கள் அனைத்தும் தஞ்சையைக் காக்கும் தோரணையில் தஞ்சையை நோக்கி அமைக்கப் பட்டுள்ளன. இக்கோயிலின் மூலவர் நரசிம்மர் கிழக்கு நோக்கி அமர்ந்து அருள் புரிகிறார். தாயாருக்குத் தஞ்சை நாயகி எனும் பெயர். இத்தலத்தின் தீர்த்தங்கள் சூர்யபுஷ்கரிணி, ஸ்ரீ ராம தீர்த்தம். விமானம் வேதசுந்தர விமானமாகும்.

மூன்று கோயில்களுக்கும் உற்சவ மூர்த்தி ஸ்ரீ மந் நாராயணரே ஆவார்.

திருக்கண்ணங்குடி

இக்கோயிலின் மூலவராகிய லோகநாதன் சியாமள மேனியுடன் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறார். உத்சவரின் திருநாமம் தாமோதர நாராயண னாகும். தாயார் லோகநாயகி. உத்சவத் தாயாருக்கு அரவிந்தவல்லி என்பது பெயர். இராவண புஷ்கரிணி,

Koviloor Digital Library

உத்பல விமானம், மகிழ (வகுள) மரம் ஆகியவை இத்தலத்தின் தீர்த்தம், விமானம் மற்றும் விருட்சங்களாகும்.

"வங்கமா முந்நீர் வரிநிறப் பெரிய
வாளரவினணை மேவிச்
சங்கமார் அங்கைத்தடமலருந்திச்
சாமமா மேனி என் தலைவன்
அங்கமாறு ஐந்து வேள்வி நால்வேதம்
அருங்கலை பயின்று எரிமூன்றும்
செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர்
திருக்கண்ணங்குடியுள் நின்றானே"

எனத் திருமங்கையாழ்வாரால் மங்கள சாசனம் செய்யப்பட்டது இத்திருத்தலம்.

'காயாமகிழ், உறங்காப்புளி, தோலாவழக்கு, ஊறாக் கிணறு, திருக்கண்ணங்குடி' எனும் பழமொழியில் கூறப்பட்ட ஊறாக் கிணறும் உறங்காப்புளியும் தற்போது காணப்படவில்லை. காய்ந்து பட்டுப்போகாத மகிழ விருட்சம் மட்டும் சந்நிதியின் பின்புறம் உள்ளது.

வசிஷ்ட மகரிஷி வெண்ணெய் மயமான கிருஷ்ண விக்ரகம் ஒன்றைச் செய்து, தனது தவ பலத்தால் நீர்த்துப் போகாதவாறு இறுகச் செய்து பூஜித்து வந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் இடையர் வேடம் பூண்டு அந்த விக்ரகத்தை உண்டுவிட அவரை மகரிஷி துரத்திப் பிடிக்க முயலும்போது மகரிஷியின் பக்திப்பாசக் கயிற்றால் கட்டுண்டு இத்தலத்தில் எழுந்தருளியிருப்பதாகத் தல புராணம் கூறுகிறது.

இத்தலத்தின் மூலவர் மற்றும் உத்சவர்களாகிய தாயார்கள் ஒரே சாடையிலிருப்பது அபூர்வமான விஷயம்.

தஞ்சை-கீவளூர் இரயில் பாதையில் கீவளூர் இரயில் நிலையத்திலிருந்து இரண்டு மைல் தொலைவிலும், நாகப்பட்டினத்திலிருந்து பஸ் மார்க்கமாகச் சிக்கலுக்கும் மற்றும்

Koviloor Digital Library

கிவளூருக்கும் இடையேயுள்ள ஆழியூரில் இறங்கி ஒரு கி. மீ. தூரம் நடந்தும் இத்தலத்தை அடையலாம். தங்கிச் சேவிக்குமளவுக்கு வசதியில்லை.

திருக்கண்ணபுரம்

"பாராளும் படர்செல்வம், பரதநம்பிக்கேயருளி
ஆராவன் பிளையவ னோடு, அருங்கானமடைந்தவனே!
சீராளும் வரைமார்பா, திருக்கண்ணபுரத் தரசே!
தாராளும் நீண்முடி, என்தாசர தீ! தாலேலோ'',

எனக் குலசேகராழ்வாரால் பாடல் பெற்ற திருக்கண்ணபுரத்தில் பெருமாளான செளரிராஜன் என்னும் நீலமேகப் பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் பக்தர் களுக்கு அருள்புரிந்து வருகிறார். உத்சவமூர்த்திக்கு செளரிராஜப் பெருமாள் எனும் திருநாமம். தாயாராகிய கண்ணபுர நாயகிக்குத் தனிக்கோயில். அவருக்கு ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள், பத்மினி எனும் பெயர்களும் உண்டு. இத்தலத் தீர்த்தத்தின் பெயர்: நித்ய புஷ்கரிணி. விமானத் தின் பெயர்: உத்பலாவதக விமானமாகும். இத்தலத்தைக் குலசேகராழ்வாரைத் தவிர, பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் மற்றும் நம்மாழ்வாரும் மங்கள சாசனம் செய்துள்ளனர். திருமங்கையாழ்வார் இத்தலத் தில்தான் திருமந்திர உபதேசம் பெற்றார்.

ரங்கபட்டர் எனும் பக்தர் சோழ மன்னனுக்குப் பெருமாளின் சிரத்தில் கேசம் வளர்வதாகக் கூறியதை நிருபித்துக் காட்டப் பெருமாளது திருமுடியில் திருக் குழற் கற்றை வளர்ந்திருந்ததால் அவருக்குச் செளரிராஜன் எனும் திருநாமம் ஏற்பட்டது. மேலும் இத்தலப் பெருமாள் செய்த லிலைகள் எண்ணிலடங்கா. விபீஷண ஆழ்வாருக்கு அமாவாசையன்று அழகிய நடைபயின்று காண்பித்தாராம். விகடாக்ஷன் எனும் அரக்கனைத் தனது சக்கராயுதத்தால் வீழ்த்தியதால் இத்தலத்தில் சக்கரத்தைப் பிரயோகிக்கும்

Koviloor Digital Library

நிலையில் பெருமாள் காட்சியளிக்கிறார். பெருமாளின் மகா பக்தரான முனையதரையர் என்பவரது பத்தினி பெருமா ளுக்கு நிவேதனம் செய்ய எண்ணிப் பொங்கல் சமைத்துப் படைக்க முற்பட்டபோது அர்த்தசாமமாகி விட்டபடியால் கோயிலின் உள்ளே போகமுடியாமற் போகவே மானசீக மாக அவருக்கு நிவேதனம் செய்ய, அதனைப் பகவான் ஏற்றுக்கொண்டதாகவும் மறுநாள் திறக்கப்பட்ட கோயிலின் சந்நிதானத்திலிருந்து வெண்பொங்கல் வாசனை வந்தது என்றும் அதுமுதல் அர்த்தசாமத்தில் பொங்கல் நிவேதனம் செய்து வருவதால் 'முனியோதரம் பொங்கல்' எனும் பெயர் ஏற்பட்டது. மேலும் இன்றும் பெருமாளுக்கு வெண்ணெய் உருக்கிப் பொங்கல் நிவேதனம் செய்கிறார்கள். இந்தத் தலத்தில் எல்லா அட்சரங்களிலும் பெருமாள் சாந்நித்யம் செய்கிறபடியால் இதற்கு 'ஸ்ரீ மதஷ்டாட்சர மகாமந்திர சித்தி தலம்' எனும் பெயர் ஏற்பட்டது.

மேலும் இத்தலத்தில் பெருமாளுக்கு அருகே உபய நாச்சியாருக்கு அப்பால் இடப்புறம் ஆண்டாள் கிரீடத் துடனும், வலப்புறம் பத்மாவதி தாயார் செம்படவ அரச குமாரியின் வடிவத்தில், கல்யாணக் கோலத்திலும் காட்சி யளிக்கின்றனர். உத்சவப் பெருமாளும் கல்யாணக் கோலத் துடன் காட்சியளிக்கிறார்.

இத்தலம் நன்னிலம் இரயில் நிலையத்திலிருந்து ஏழு கி.மீ. தொலைவில் உள்ளது. மாயவரத்திலிருந்து சென்னா வுல்லூர் வழியாகத் திருப்புகலூர் எனும் ஊரில் இறங்கி ஒரு மைல் தூரம் சென்று இத்தலத்தை அடையலாம். அல்லது நாகப்பட்டினத்திலிருந்து நன்னிலம் மார்க்கத்தில் செல்லும் பஸ்ஸில் ஏறித் திருப்புகலூரில் இறங்கியும் இத் தலம் செல்லலாம். குடவாசலிலிருந்தும் பஸ்ஸில் இத் தலத்தையடையலாம். வசதிகள் குறைவாக உள்ளதால் இத்தலத்தில் தங்கியிருந்து பெருமாளை சேவிப்பது கடினம்.

Koviloor Digital Library

திருஇந்தளூர் (மாயவரம்)

"நும்மைத் தொழுதோம்
நுந்தம் பணி செய்திருக்கும் நும்மடியோம்
இம்மைக்கு இன்பம் பெற்றோம்
எந்தாய்! இந்தளூரீரே!
எம்மைக் கடிதாக்கருமம் அருளி
ஆவா! என்றிரங்கி
நம்மை ஒருகால் காட்டி நடந்தால்
நாங்கள் உய்யோமே!''

எனத் திருமங்கையாழ்வாரால் மங்கள சாசனம் செய்யப் பட்ட இத்தலத்தின் மூலவருக்குப் பரிமள ரங்கநாதன், மருவினிய மைத்தன், சுகந்தவன நாதன் எனும் திருநாமங் கள். கிழக்கு நோக்கி விரசயனத்தில் இருக்கிறார். தாயாருக்குப் பரிமளரங்க நாயகி, சந்திரசாப விமோசனவல்லி, புண்டரீக வல்லி எனும் பெயர்கள். இத்தலத்தில் இந்து புஷ்கரிணி எனும் தீர்த்தமும் வேதசக்ர விமானமும் உள்ளன.

நான்கு கரங்களுடன் சயனித்திருக்கும் பெருமாளின் தலைமாட்டில் காவிரியும் கால் மாட்டில் கங்கையும் அமர்ந் துள்ளனர். ஐப்பசி மாதம் காவிரியும், சமுத்திரமும் சங்க மிக்கும் இடத்தில் கடைமுக ஸ்நானம், முடவன் முழுக்கு ஸ்நானம் நடக்கும் சமயத்தில் இத்தலம் விழாக் கோலம் பூண்டிருக்கும். இந்தியா முழுவதிலிருந்தும் யாத்திரிகர்கள் வந்து இந்த விழாத் திருக்கோலத்தில் கலந்து கொண்டு உவகையடைகின்றனர்.

இத்தலம் மாயவரத்திலே உள்ளது. சென்று வர பஸ் வசதிகள் உண்டு.

கும்பகோணம்—மாயவரம்—சீர்காழி—மற்றும் இவற்றின் சுற்றுப்புறத் தலங்கள்

திருக் குடந்தை (பாஸ்கர க்ஷேத்திரம்)

கோயில்கள் நிறைந்த ஊர் கும்பகோணம். பல சிவன் கோயில்கள் உயர்ந்த கோபுரங்களுடன் கம்பீரமாகக் காணப்

Koviloor Digital Library

படுகின்றன. சாரங்கபாணி கோயில், சக்ரபாணி கோயில், ஸ்ரீ ராமர் கோயில் ஆகிய விஷ்ணு ஸ்தலங்கள் உண்டு. துர்க்கை கோயில் முதலான வேறு பல ஆலயங்களும் உள்ளன.

"ஆராவமுதே! அடியேன் உடலம் நின்பால் அன்பாலே
நீரா யலைந்து கரைய, உருக்கு கின்ற நெடுமாலே!
சீரார் செந்நெல் கவரி வீசும், செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்! கண்டேன்
எம்மானே!"

என நம்மாழ்வாரால் பாடித் துதிக்கப் பெற்ற எம்பெருமான் இத்திருத்தலத்தில் சாரங்கபாணி எனவும் ஆராவமுதன் எனவும் அபர்யாப்தாம்ருதன் எனவும் பல பெயர்களுடன் ஆதிசேஷ சயனத்தில் கிழக்கு நோக்கிப் படுத்தபடி அருள் புரிகிறார். நம்மாழ்வாரைத் தவிர, பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோராலும் மங்கள சாசனம் செய்யப்பட்ட திருத்தலமாகும் இது. ஒரு சமயம் திருமழிசையாழ்வார், எம்பெருமான் சயனத் திருக்கோலத்திலிருப்பதைக் கண்டு 'நடந்த கால்கள்' எனத் தொடங்கும் பாட்டில் 'கிடந்தவாறு எழுந்திருந்து பேசு' எனக் கோர, அவ்வாறே பெருமாள் எழுந்திருக்க முயலும் நிலையிருப்பதால் 'உத்தா நசாயீ' என்று அழைக்கப் படுகிறார். 'வாழி கேசனே' என்று ஆழ்வாரும் மங்கள சாசனம் செய்தருளினார்.

தாயாருக்குப் படிதாண்டாப் பத்தினி எனவும் கோமளவல்லி எனவும் திருநாமங்கள். ஹேமரிஷியின் புத்திரியாகத் தோன்றி, பெருமாளை நோக்கித் தவம் புரிந்து மணந்து கொண்டதாகத் தலபுராணம் கூறுகிறது.

இக்கோயிலின் அழகிய சித்திரைத் தேர் உலகப் பிரசித்தி பெற்றது. பெருமாளின் சந்நிதி கருங்கல்லிலான சக்கரங்களுடன் கூடிய தேரின் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தலத்திற்கு ஹேம புஷ்கரிணி, காவிரி நதி, அரச

Koviloor Digital Library

லாறு ஆகியவை தீர்த்தங்களாகும். விமானத்தின் பெயர்: வைதிக விமானமாகும்.

மூலஸ்தானத்தில் பெருமாளை நதிதேவதைகள் வணங்குகின்றன. 'ஆராவமுதே' எனத் தொடங்கும் திருவாய் மொழிகளை இவ்விடத்தில்தான் ஸ்ரீமந் நாத முனிகள் கேட்டு நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைத் தொகுக்க ஆரம்பித்தார். அதனால் பெருமாளுக்கு ஆரா வமுதாழ்வான் எனும் பெயரும் ஏற்பட்டது.

இக்கோயில் கும்பகோணத்தில் இரயில் நிலையத்தி லிருந்து இரண்டு கி. மீ. தொலைவில் உள்ளது. பஸ்கள் அனைத்தும் கோயிலின் அருகிலேயே நிற்கின்றன. பெரிய ஊராகையால் இத்தலத்தில் சகல வசதிகளும் உள்ளன.

இவ்வூரிலேயே ராமஸ்வாமி கோயில் உள்ளது. அதில் இராமர் பட்டாபிஷேகக் காட்சியில் தனது தம்பிகளுடனும் சீதாதேவியுடனும் காணப்படுகின்றனர். ஆஞ்சநேய ஸ்வாமி இராமாயணப் பாராயணப் புத்தகத்துடன் வீணாகானம் செய்ய ஸ்ரீராமர் வீற்றிருக்கும் காட்சி கண்கொள்ளாத தாகும். இத் தலத்திலேயே சிருஷ்டிக்கு வேண்டிய அமிர்த கும்பம் (குடம்) தங்கியமையால் திருக்குடந்தை எனும் பெயர் ஏற்பட்டது.

இதன் அருகிலேயே சக்கரபாணி கோயிலும் உள்ளது மூலவர் அஷ்டபுஜங்களுடன் காட்சியளிக்கிறார். இவருக்குச் சாரங்கபாணி தமையனார் எனக் கருதப்படுகிறது. இரு தெய்வங்களுக்கும் வருடந்தோறும் பலவித உத்சவ வைபவங்கள் வெகு விமரிசையாக நடைபெறுகின்றன.

திருப்ருபேர் நகர் (கோவிலடி)

கும்பகோணத்திலிருந்து திருக்காட்டுப் பள்ளி வழியாகக் கல்லணை செல்லும் பஸ் பாதையில் அமைந்தது இத் திருத்தலம். அன்பிலில் இருந்து சென்றால் கொள்ளிடத்

Koviloor Digital Library

றைக் கடந்து மூன்று மைல் தூரம் செல்ல வேண்டும். தஞ்சை, திருக்காட்டுப் பள்ளி, தோஹீர் பஸ் பாதையிலும் இத்தலத்துக்குச் செல்லலாம். ரயிலில் செல்வதானால் லால்குடி அல்லது பூதலூர் ஸ்டேஷன்களிலிருந்து ஆறு மைல் தூரம் செல்ல வேண்டும். திருச்சியிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ளது. 'கோயிலடி' என்னும் பெயரைச் சொன்னால்தான் அனைவருக்கும் தெரியும். பஸ் கோயிலின் அருகிலேயே நிற்கும். கோயில் காவிரிக் கரையில் ஒரு மேட்டின் மேல் அழகுற நிலைபெற்றுள்ளது. இவ்வூரில் எவ்வித வசதியும் இல்லாததால் திருச்சியிலோ அல்லது திருக்காட்டுப் பள்ளியிலோ தங்கியிருந்தே பெருமாளைத் தரிசிக்க வேண்டும்.

"நில்லா அல்லல் நீள்வயல்சூழ் திருப்பேர் மேல்
நல்லார் பலர்வாழ் குரு கூர்ச் சடகோபன்
சொல்லார் தமிழ் ஆயிரத்துள், இவை பத்தும்
வல்லார்தொண்டர் ஆள்வது, சூழ்பொன் விசும்பே."

எனப் பாடியுள்ள நம்மாழ்வார் இத்தலத்தையே கடைசியாகப் பாடுவதால் இவ்விடத்தில்தான் அவருக்கு மோட்சம் கிடைத்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோராலும் பாடப்பெற்ற திருத்தலமாகும் இது.

புஜங்க சயனத்தில் மேற்கு நோக்கிப் படுத்திருக்கும் மூலவர் (பெருமாள்) அப்பக் குடத்தான் என்றும் அப்பாலா ரங்கநாதன் என்றும் வழங்கப்படுகிறார். தன் அருகில் அமர்ந்து வணங்கும் உபமன்யு முனிவருக்குத் தமது வலத் திருக்கரத்தில் அப்பக்குடத்தை அணைத்தபடி ஆசி வழங்குவதால் இத்திருநாமம் ஏற்பட்டுள்ளது. எனவேதான் பெருமாளுக்கு ஒவ்வோர் இரவிலும் 'அரவணையாக' அட்பம் நைவேத்தியம் செய்விக்கப்படுகிறது. தாயாரின் பெயர் இந்திராதேவி மற்றும் கமலவல்லி. கோயிலிலுள்ள இந்திர தீர்த்தம் மற்றும் கொள்ளிடம் ஆகியவை இத்தலத்

Koviloor Digital Library

தின் தீர்த்தங்களாகும். விமானத்தின் பெயர் : இந்திர விமானமாகும்.

திரு ஆதனூர்

திருமங்கையாழ்வாரால் மங்களசாசனம் செய்யப்பட்ட இத்திருப்பதியில் உறையும் ஆதனூர் ஆண்டாளுக்கும் ஐயனாகிய பெருமாள் கிழக்கு நோக்கி, புஜங்கசயனத்தில் தலையின் கீழ் மரக்காலும் இடக்கையில் ஓலை எழுத்தாணியுடனும் காணப்படுகிறார். தாயாரின் பெயர் ரங்கநாயகி. பெருமாளுடைய பாதாரவிந்தங்களில் திருமங்கையாழ்வாரும் காமதேனுவும் துதித்து நிற்கின்றனர். இத்தலத் தீர்த்தத்தின் பெயர் : சூர்யபுஷ்கரிணி. விமானம் : பிரணவ விமானம்.

ஸ்ரீ அஹோபில மடத்து நிர்வாகத்துக்குட்பட்ட இக்கோயில் சுவாமி மலையிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது. இத்தலத்தில் தங்கியிருக்க எவ்வித வசதிகளுமில்லையாதலால் சுவாமி மலையிலிருந்தோ அல்லது கும்பகோணத்திலிருந்தோ வந்து பெருமாளைச் சேவிக்கலாம்.

திருப்புள்ளம் பூதங்குடி

"நறிய மலர்மேல் சுரும் பார்க்க
எழிலார் மஞ்ஞை நடமாடப்
பொறிகொள் சிறைவண்டு இசைபாடும்
புள்ளம் பூதங் குடிதானே."

எனத்திருமங்கையாழ்வாரால் சிறப்பிக்கப் பெற்ற இத் திருத்தலம் சுவாமி மலையிலிருந்து மூன்றுமைல் தொலைவில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து திருவைகாவூர் செல்லும் டவுன் பஸ்ஸின் மூலம் இத்தலத்தை அடையலாம். ஸ்ரீ அஹோபில மடத்தின் நிர்வாகத்துக்குட்பட்ட இத்தலத்தில் பல வசதிகள் உள்ளன.

Koviloor Digital Library

ஸ்ரீ ராமபிரான் சடாயுவுக்குச் சிரார்த்தங்களைச் செய்து மோட்சத்துக்கு வழியுண்டாக்கிய பின் சீதாதேவியைத் தேடிச் செல்லும் சமயத்தில் இளைப்பாறிய இடம் எனத்தல புராணம் கூறுகிறது. ஆதலால் கிழக்கு நோக்கி புஜங்க சயனத்திலிருக்கும் வல்வில் ராமனாகிய மூலவருக்கருகில் சீதை காணப்படவில்லை. பூமாதேவியே காணப்படுகிறாள். நாச்சியாருக்குத் தனிக் கோயில் உண்டு. தாயாரின் பெயர் ஹேமாம்புஜவல்லி. சதுர்புஜங்களுடன் உத்சவராகிய ராமபிரான் காட்சியளிக்கிறார். இத்தலத்தில் ஜடாயு தீர்த்தம், க்ருத்ர தீர்த்தம் எனும் தீர்த்தங்களும் சோபன விமானமும் உள்ளன.

திருக் கண்டியூர் (திருமூர்த்தி க்ஷேத்திரம்)

சிவபெருமான் பிரம்மனின் ஒரு சிரத்தைக் கிள்ளியதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் இத்தலத்தில் பெருமாளின் அனுக்கிரகத்தால் நீங்கப் பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது. இதே ஐதீகம் திருக்கரம்பனூரிலும் விளங்குகிறது. ஆதலால் இக்கோயிலின் மூலவர் ஹரசாப விமோசனப் பெருமாள் என்று வழங்கப்படுகிறார். அவர் கிழக்கு நோக்கி நின்றபடி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

இத்தலத்தில் திருமூர்த்திகளான விஷ்ணு, சிவன், பிரம்மா ஆகியோருக்குத் தனித்தனி கோயில்கள் ஒரு பர்லாங்கு தூரத்திற்குள் உள்ளதால் திருமூர்த்தி க்ஷேத்திரம் என்ற பெயர்பெற்று விளங்குகின்றது. பெருமாள் கோயிலின் சந்நிதியின் முன்புறத்தில் சக்கரத்தாழ்வாரும் பின்புறம் ஸ்ரீ நரசிம்மரும் வீற்றிருக்கின்றனர். நரசிம்மர் சுவரின் ஓரமாக இருப்பதால் பின்புறம் சென்று அவரை சேவிக்க இயலாது. பிரம்மாவின் கோயில் மூடப்பட்டு பிரம்மா மற்றும் சரஸ்வதி ஆகிய தெய்வங்களின் சிலைகள் சிவன் கோயிலினுள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

பெருமாள் கோயிலின் உத்சவருக்குக் கமலநாதன் என பெயர் விளங்குகிறது. தாயார் கமலவல்லி என வழங்கப்படு கிறார். கபால மோக்ஷ புஷ்கரிணி, பத்ம தீர்த்தம். கபால தீர்த்தம், குடமுருட்டி நதி, ஆகியவை இத் தலத்தின் தீர்த்தங்களாகும். விமானத்தின் பெயர்: கமலாக்ருதி விமானம்.

சிவபெருமானுக்கு, பிரம்மசிரகண்டீஸ்வரர் எனும் பெயர். இத்தலத்திற்கு மிக அருகிலேயே கல்யாணபுரம் எனும் ஊரில் கல்யாண வேங்கடேஸ்வரர் கோயில் உள்ளது. அங்குப் பல உத்சவங்கள் விசேஷமாக நடைபெறுகின்றன.

திருமங்கையாழ்வாரால் மங்கள சாசனம் செய்யப்பட்ட இத்திருத்தலம் தஞ்சையிலிருந்து திருவையாறு மார்க்கத்தில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. போதிய வசதிகள் இல்லா மையால் தஞ்சையிலிருந்தோ திருவையாற்றிலிருந்தோ வந்து இத்தலத்திலுள்ள பெருமாளைச் சேவிக்கலாம்.

திருக்கூடலூர் (சங்கம க்ஷேத்திரம்)

"பெருகு காதல், அடியே னுள்ளம்
உருகப் புகுந்த ஒருவ ரூர்போல்
அருகு கைதை மலரக் கெண்டை
குருகென் றஞ்சும், கூட லூரே."

என்று திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்ற இத் திருத்தலத் தில் தேவர்கள் நந்தக முனிவரோடு கூடி வந்து பெருமா ளைத் துதித்தமையால் இத்தலத்துக்குக் கூடலூர் எனும் பெயர் ஏற்பட்டது. மேலும் காவிரித்தாய் தான் இழந்த ஒளியை மீண்டும் இத்தலத்தில் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இக்கோயிலின் மூலவரான வையங்காத்த பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிந்து வருகிறார். இவருக்கு ஜகத் ரக்ஷகன் எனவும் உய்யவந்தார் எனவும் திருநாமங்கள் உண்டு. உத்சவர் செங்கோல் தாங்கி அதே பெயர்களுடன் வழங்கப்படுகிறார். தாயாருக்கு பத்மாஸனி, புஷ்பவல்லி எனும் பெயர்கள். சக்ரதீர்த்தம்,

Koviloor Digital Library

காவிரிநதி ஆகியவை இத் தலத்தின் தீர்த்தங்கள். விமானத்தின் பெயர்: சுத்த சத்துவ விமானம்.

திருவையாறிலிருந்து கும்பகோணம் பஸ் பாதையில் 10 கி.மீ. தூரத்தில் தஞ்சாவூர் கணபதி அக்ரஹாரம் பஸ் பாதையில் இத்தலம் அமைந்துள்ளது. ஐயம்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளது. எவ்வித வசதியும் இங்கு இல்லாமையால் திருவையாறிலிருந்தோ அல்லது ஐயம்பேட்டையிலிருந்தோ வந்துதான் பெருமாளைச் சேவிக்க முடியும். கோயிலில் முழுநேர அர்ச்சகர் கிடையாது. மற்ற இடங்களிலிருந்து தான் குறிப்பிட்ட சமயங்களில் அர்ச்சகர் வருவார்.

காவேரி வெள்ளத்தினால் மூழ்கிப்போய் மண்மேடாகிப் போய்விட்ட இத்தலத்தில் பெருமாள் ராணி மங்கம்மாளின் கனவில் தோன்றி ஆணையிட்டதன் பேரில் அவ்வரசியால் புதுப்பிக்கப்பட்ட கோயில்தான் தற்போது உள்ளது.

திருக்கவித்தலம்
(கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரம்)

ஒரு சமயம் கஜேந்திரன் நதியில் நீராடிக் கொண்டிருந்தபோது அவன் காலை முதலை ஒன்று தனது வாயில் பற்றிக் கொள்ள கஜேந்திரன் 'ஆதி மூலமே' என்று பெருமாளைத் துணைக்கு அழைத்த போது பெருமாள் தன் சக்ராயுதத்தால் அம்முதலையை விழ்த்தி அபயமளித்த இடம் இது எனத் தலபுராணம் கூறுகிறது. ஆற்றங்கரையிலிருக்கும் கண்ணனாகிய பெருமாள் குடியிருக்கும் இக்கோயிலின் மூலவருக்குக் கஜேந்திர வரதன் எனும் பெயர். கிழக்கு நோக்கி புஜங்க சயனத்தில் அருள் புரிகிறார். தாயாருக்கு ரமாமணி வல்லி எனவும் பொற்றாமரையாள் எனவும் திருநாமங்கள். கஜேந்திர புஷ்கரிணி, கபில தீர்த்தம் ஆகியவை இத்தலத்தின் தீர்த்தங்கள். ககநாக்ருதி என்பது விமானத்தின் பெயர்.

Koviloor Digital Library

திருமழிசையாழ்வாரால் மங்கள சாசனம் செய்யப்பட்ட இத்திருத்தலம் பாபநாசம் இரயில் நிலையத்திலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம்—திருவையாறு பஸ் பாதையிலும் உள்ளது. சத்திரங்கள் கடைகள் போன்ற வசதிகள் இவ்விடத்தில் உண்டு.

திரு நறையூர்—(நாச்சியார் கோயில்)

"கொம்பும் அரவமும் வல்லியும் வென்ற நுண் ணேரிடை
வம்புண் குழலோர், வாச லடைத்து இகழாத முன்
செம்பொன் கமுகினம், தான் கனியும் செழுஞ்சோலைசூழ்
நம்பன் நறையூர் நாம் தொழுதும், எழு நெஞ்சமே!"

எனத் திருமங்கையாழ்வாரால் போற்றப் பட்ட இத்திருத் தலத்தில் உறையும் திருநறையூர் நம்பி என வழங்கப்படும் பெருமாள் தாயாராகிய வஞ்சுள வல்லியுடன் திருமணத்திருக் கோலத்தில் கிழக்கு நோக்கி நின்றபடி அருள் புரிந்து வரு கிறார். எம்பெருமானுக்கு ஸ்ரீநிவாசன், வாசுதேவன் எனும் பெயர்களும் உண்டு. இத்தலத்தில் மேதாவி ரிஷியின் சுவீ காரப் புத்திரியான வஞ்சுள வல்லியை வாசுதேவன், சங்கர் ஷணன், பிருத்யும்னன், அநிருத்தன், புருசோத்தமன் எனும் ஐந்து உருவங்களில் பெருமாள் மணந்து கொள்கிறார். இவ் வூரில் தாயாராகிய நம்பிக்கை நாச்சியாருக்கே முதலிட மாகும்.

மணிமுக்தா புஷ்கரிணி, சங்கர்ஷண தீர்த்தம், பிருத் யும்ன தீர்த்தம், அநிருத்த தீர்த்தம், சாம்ப தீர்த்தம், எனும் ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. ஸ்ரீநிவாச விமானம், ஹேம விமானம் எனும் இரு விமானங்களும் உள்ளன.

இத்தலத்தில் விசேஷமான அம்சம் பெருமாளுடைய கல் கருட வாகன சேவையாகும். வீதி உத்சவத்தில் முன்னால் தாயார் அன்ன வாகனத்திலும் பின்னால் கல்லா லான கருடவாகனத்தில் பெருமாளும் பவனி வருவர். கல்லா

Koviloor Digital Library

லானகருட வாகனத்தை முதலில் சந்நிதியில் நான்கு பேரும் கடைசியில் கோயிலின் வாயிலில் அறுபத்தி நான்கு பேரும் சுமக்கச் செய்யும் வகையில் வாகனம் சிறுகச் சிறுகக் கனத்துக்கொண்டே வருமாம். இக்கோயிலில் மார்கழி மாதத்தில் பிரமோத்சவம் மிகவும் விமரிசையாக நடைபெறும்.

கும்பகோணத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் பஸ் பாதையில் இத்தலம் அமைந்துள்ளது. உப்பிலியப்பன் கோயிலிலிருந்தும் டவுன் பஸ் மார்க்கமாகச் செல்லலாம்.

திரு விண்ணகர்—(உப்பிலியப்பன் கோயில்)

(மார்க்கண்டேய க்ஷேத்திரம்)

"நல்குரவும் செவ்வும், நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும், விடமும் அமுதமுமாய்ப்
பல்வகையும் பரந்த பெருமான், என்னையாள் வானைச்
செல்வமல்கு குடித், திரு விண்ணகர்க் கண்டேனே,"

என நம்மாழ்வாரும்,

"பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறை வார்க்குக் கோயில் போல்—வண்டு
வளங்கிளரும் நீள் சோலை வபூண்ங் கடிகை
இளங்குமரன் தன்விண் ணகர்"

எனப்பேயாழ்வாரும் புகழ்ந்து பாடிய இத்திருத்தலம், கும்பகோணத்திலிருந்து ஆறரைக் கி. மீ. தூரத்தில் உள்ளது. திருநாகேஸ்வரம் இரயில் நிலையத்திலிருந்து ஒன்றரைக் கி. மீ. தூரத்தில் உள்ளது. ஆனால் கும்பகோணத்திலிருந்து பஸ்ஸில் செல்வது நல்லது.

இக்கோயிலின் மூலவரான உப்பிலியப்பன் திருவேங்கடத்திலுறையும் வேங்கடாசலபதியைப் போன்ற அதே நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். கிழக்கு முகமாக நிற்கும் எம்பிரானது வலக்கை வைரங்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

திருப்பதிக்குச் செல்ல வசதி இல்லாதவர்கள் இத்தலத்துக்கு வந்து தங்களது பிரார்த்தனைகளைச் செலுத்துவர். திருமலை வேங்கடேசனுக்குத் தமையனாக இப்பெருமாள் கருதப் படுவதால் இந்த ஏற்பாடு.

இத்தலத்தின் தாயார் பூமிதேவியான பூமி நாச்சியார் பெருமாளுக்கு வலப்புறம் மண்டியிட்டு வணங்கும் கல்யாணத் திருக்கோலத்தில் காணப்படுகிறார். அவருக்கென்று தனிச் சந்நிதி இல்லை. இத்தலத்தின் தீர்த்தங்கள்: அஹோராத்ர புஷ்கரிணி, ஆர்த்தி புஷ்கரிணி. விமானத்தின் பெயர்: சுத்தானந்த விமானம்.

மிருகண்டு மகரிஷியின் தர்மபத்தினி உப்பில்லாத நிவேதனத்தைப் பெருமாளுக்குப் படைத்து பூஜித்ததால் இவருக்கு உப்பிலியப்பன் எனும் பெயர் ஏற்பட்டது. எனவே இக்கோயிலின் நிவேதனங்களில் உப்பு சேர்க்கப் படுவதில்லை. இத்தலத்தில் உப்பையோ அல்லது உப்பு சேர்க்கப் பட்ட உணவையோ எடுத்துச் சென்றால் நரக பதவி யடைவர் என்பது ஐதிகம்.

நம்மாழ்வார் மற்றும் பேயாழ்வாரைத் தவிர, திருமங்கை யாழ்வாரும் இத்தலத்திற்கு மங்கள சாசனம் செய்துள்ளார். தேவஸ்தானத்துக்குத் தக்க கட்டணம் செலுத்தித் திருக்கல் யாண உத்சவம், கருடசேவை மற்றும் மூலவர் திரு மஞ்சனம் முதலான பிரார்த்தனைகளைச் செய்யலாம். மாதந்தோறும் சிரவண தீபம் எடுத்துக் குறி கூறுகின்றனர். பிரமோத்சவம் பங்குனி மாதத்திலும், கல்யாண உத்சவம் ஐப்பசி மாதத் திலும் விமரிசையாக நடைபெறுகின்றன.

திருச்சேறை (பஞ்சஸார க்ஷேத்திரம்)

"உண்ணாது வெங்கூற்றம்;
ஓவாது பாவங்கள் சேரா; மேலை
விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும்
மென்தளிர்போ லடியி னானைப்

Koviloor Digital Library

பண்ணார வண்டியம்பும் பைம் பொழில் சூழ்
தன்சேறை யம்மான் தன்னைக்
கண்ணாரக் கண்டுருகிக் கையாரத்
தொழுவாரைக் கருதுங் காலே''

எனத் திருமங்கையாழ்வாரால் போற்றப்பட்ட திருத்தலமாகிய இதில் பெருமாள் காவேரியம்மனுக்குப் பிரத்தியட்சமானார் எனக் கூறப்படுகிறது. பிரமன் பிரளய காலத்தில் இத்தலத்திலிருந்து மண்ணை எடுத்துப் பெரிய குடம் செய்து அதில் வேதங்களை வைத்துக் காப்பாற்றியதாகத் தல புராணம் கூறுகிறது.

கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காணப்படும் மூலவருக்குச் சாரநாதன் எனும் திருநாமம்; தாயார் சாரநாச்சியார். குளக்கரையில் காவேரியம்மனுக்கும், ராஜகோபால ஸ்வாமிக்கும் தனித்தனி சந்நிதிகள் உள்ளன. தலதீர்த்தமாகிய சாரபுஷ்கரிணியில் நீராடிப் பெருமாளையும் தாயாரையும் சேவித்தால் நினைத்த காரியங்கள் கைகூடும். புஷ்கரிணியில் மேற்குக் கரையில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. தைப் பூசத்தன்று தேர்த்திருவிழா மிகவும் விசேடமாக நடைபெறும். அப்போது தேரில் பெருமாள் ஸ்ரீ தேவி, பூ தேவி மஹாலக்ஷ்மி, ஸார நாயகி மற்றும் நீலாதேவி ஆகிய ஐந்து தேவிகளுடன் காட்சியளிப்பது விசேடமாகும்.

வசதிகள் படைத்த இத்தலம் குடவாசல் எனும் ஊருக்கு மிக அருகில் அமைந்துள்ளது. கும்பகோணத்துக்குத் தென் கிழக்கில் 10கி.மீ. தொலைவிலும் நாச்சியார் கோயிலிலிருந்து நான்கரை கி.மீ. தொலைவிலும் உள்ளது.

திருக்கண்ணமங்கை (கிருஷ்ண மங்கள க்ஷேத்திரம்)

''பெரும்புறக் கடலை அடலேற்றினைப்
பெண்ணை ஆணை எண்ணில் முனிவர்க்கருள்
தரும்தவத்தை, முத்தின் திரள் கோவையைப்
பத்தராவியை நித்திலத் தொத்தினை

Koviloor Digital Library

அரும்பினை அலரை அடியேன் மனத்தாசையை
அமுதம் பொதியின் சுவைக்
கரும்பினைக் கனியைச் சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே.!"

எனத்திருமங்கையாழ்வாரல் , துதிக்கப்பெற்ற கண்ணமங்கைப்பெருமாள் உறையும் இத்திருத்தலம் திருவாரூர் இரயில் நிலையத்திலிருந்து ஆறரை கி. மீ. தொலைவில் கும்பகோணம்—திருவாரூர் பஸ் பாதையில் அமைந்துள்ளது. திருச்சேறையிலிருந்து 24 கி. மீ. தொலைவில் உள்ளது.

தலமூலவராகிய பக்தவத்சலப் பெருமாள் எனும் பத்தராவிப் பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் மிகப் பெரிய உருவத்துடன் காட்சியளிக்கிறார். தாயார் : அபிஷேகவல்லி. தீர்த்தம் : தர்சன புஷ்கரிணி. விமானம் : உத்பல விமானம்.

மிகவும் அழகான சிற்ப வேலைப்பாடுகளடங்கிய இக்கோயிலில் வைகுண்டநாதனுடைய சிலையும் கருடாழ்வார் மீது ஆரோகணித்தவாறு வீற்றிருக்கும் ஸ்ரீமந் நாராயணனது சிலையும் பிரசித்தி பெற்றவை. இக்கோயிலுக்கு வேண்டிய முக்கிய ஏழு அம்சங்களாகிய விமானம், மண்டபம், அரண்யம், சரஸ்ஸு, க்ஷேத்திரம், ஆறு, நகரம் ஆகிய அனைத்தும் அமுத மயமாகையால் இத்தலத்துக்கு ஸப்தாம்ருதம் எனும் பெயரும் உண்டு.

எவ்வித மந்திரமும் ஜபிக்காமல் இத்தலத்தில் ஓர் இரவு தங்கியிருந்தால் கூட மோட்ச பதவி கிடைக்கும் எனவும், லக்ஷ்மியின் மூன்று திருநாமங்களோடு கூடிய மந்திரத்தை ஜபிப்பதால் காரியசித்தி ஏற்படும் எனவும் தலபுராணம் கூறுகிறது.

ஸ்ரீ லக்ஷ்மி இத்தலத்தில் தவம்புரிந்ததால் இதற்கு லக்ஷ்மி வனம் எனும் பெயரும் உண்டு. இத்தலத்தை, சிவபெருமான் நான்கு உருவங்களிலிருந்து நான்கு திசைகளையும் காத்து

Koviloor Digital Library

வருகிறார் என்பது ஐதீகம். தாயார் சந்நிதியில் தேன் கூடு போன்ற ஓர் அமைப்பிற்கு அனுதினமும் பூஜை நடப்பது மிகவும் விசேடமான ஒன்று. இத்தலத்தில் ஆனி மாதத் திருவோணத்தன்று அவதரித்த திருக்கண்ண மங்கையாண்டான், நாத முனிகளின் சீடராகி, துளசி புஷ்பாதி சமர்ப்பணத்தொண்டு செய்தார்.

எல்லாவித வசதிகளும் படைத்த தலமாகையால் இங்கே தங்கிப் பெருமாளைச் சேவித்து மகிழ்வுறலாம்.

திரு வெள்ளியங்குடி

"பண்டு முன் ஏனமாகி, அன்றொருகால்
பாரிடந்து எயிற்றினில் கொண்டு
தெண்திரை வருடப் பாற்கடல் துயின்ற
திருவெள்ளியங்குடியானை"

எனத் திருமங்கையாழ்வாரால் மங்கள சாசனம் செய்யப்பட்ட இத்திருத்தலத்தின் மூலவராகிய கோலவல்வில்லிராமன் புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கி அருள் புரிகிறார். உத்சவருக்கு சிருங்கார சுந்தரன் எனும் திருநாமம். தாயார் மரகத வல்லியாவாள்.

இக்கோயிலில் சுக்ர தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், இந்திர தீர்த்தம்; மற்றும் பராசர தீர்த்தம் எனும் தீர்த்தங்கள் உள்ளன. தல விருக்ஷம்: வாழை. விமானம்: புஷ்கலா வர்த்தக விமானம்.

கும்பகோணத்திலிருந்து இத்தலத்துக்கு டவுன் பஸ்கள் உள்ளன. அணைக்கரை செல்லும் பஸ்ஸில் செங்கானூரில் இறங்கினால் ஒரு கி.மீ. தூரம் நடக்க வேண்டும். ஆடுதுறை செல்லும் பஸ்ஸில் முட்டக்குடியில் இறங்கினால் ஒன்றரை கி.மீ. தூரம் நடக்க வேண்டும்.

இத்தலத்திலுள்ள கருடாழ்வார் தமது கரங்களில் சங்கு, சக்கரங்களுடன் காட்சியளிப்பது மிகவும் விசேடமான

Koviloor Digital Library

தோன்றாகும். பஸ் வசதி மற்றும் இதர வசதிக் குறைவால் இத்தலம் அதிக கவனிப்பின்றி இருக்கின்றது.

திருநந்திபுர விண்ணகரம்
(நாதன் கோயில் - தட்சிண ஜகந்நாதம)

இத்தலத்தில் மூலவராகிய ஜகந்தாதன், மேற்கு நோக்கி வீற்றிருக்கும் திருக்கோலத்தில் அருள்பாலித்து வருகிறார். தாயாருக்கு செண்பகவல்லி எனும் திருநாமம். இத்தலத்தின் புண்ணிய தீர்த்தம்: நந்தி தீர்த்த புஷ்கரிணியாகும்.

இப் பகவானுக்கு நாதநாதன், நந்திநாதன் எனும் பெயர்களும் உண்டு. நந்திக்கு இவ்விடத்தில் தவம் இருந்து சாபவிமோசனம் அளித்ததால் பெருமாளுக்கு இத்திருநாமம் ஏற்பட்டது. மூலவரின் சந்நிதியின் இடதுபக்கச் சுவற்றில் நந்தியின் சிலை அமைந்திருக்கிறது. மேலும் நந்திவர்மன் எனும் அரசன் இக்கோயிலைக் கட்டியதாகவும் கூறப்படுகிறது.

"நறை செய் பொழில் மழை தவழும் நந்திபுர விண்ணகரம்
 நண்ணி யுறையும்
உறை கொள் புகராழிசுரி சங்கமவை அங்கையுடை
 யானை, ஒளிசேர்
கறைவளரும் வேல்வல்ல கலியன் ஒலி மாலைஇவை
 ஐந்துமைந்தும்
முறையில்இவை பயிலவல அடியவர்கள் கொடு வினைகள்
 முழுதகலுமே."

என்று திருமங்கையாழ்வார் மங்கள சாசனம் செய்துள்ளார்.

சிபிச்சக்கரவர்த்தி புறாவின் உயிரைக் காப்பாற்றத் தனது உயிரையே அர்ப்பணிக்க தராசுத் தட்டில் ஏறிய விந்தையைக் காணவே கிழக்குப் பக்கம் நோக்கி அமர்ந்திருந்த பெருமாள் மேற்கு நோக்கித் திரும்பினார் என்பது

Koviloor Digital Library

ஐதீகம். இக்கோயில் அர்ச்சகர்கள் மாலைப் பொழுது வரைதான் இருப்பார்களாகையால் பெருமாளை மாலைப் பொழுதுக்குள் சேவித்து விட வேண்டும்.

கும்ப கோணத்திலிருந்து புறப்படும் பஸ்ஸில் கொருக்கை எனும் ஊரில் இறங்கி ஒரு வாய்க்காலைக் கடந்து இரண்டு கி. மீ. தூரம் நடந்து இத்தலத்தை அடைய வேண்டும்.

திருத்தலைச்சங்க நாண்மதியம் (தலைச்சங்காடு)

"கண்ணார் கண்ணபுரம், கடிகை கடிகமழும்
தண்ணார் தாமரை சூழ், தலைச்சங்க மேல்திசையுள்
விண்ணோர் நாண்மதியை, விரிகின்ற வெஞ்சுடரைக்
கண்ணாரக் கண்டுகொண்டு, களிக்கின்றது இங்கு
என்று கொலோ.'

எனத்திருமங்கையாழ்வாரால் மங்கள சாசனம் செய்யப் பட்ட இத்திருத்தலத்தில் மூலப்பெருமாளுக்கு நாண்மதியப் பெருமாள், வெண்சுடர்ப்பெருமாள் எனும் திருநாமங்கள். கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். உத்சவருக்கு வியோமஜோதிப்பிரான், வெஞ்சுடர் பிரான், மற்றும் லோகநாதன் எனும் திருநாமங்கள். தாயாருக்குத் தலைச்சங்க நாச்சியார் எனவும் உத்சவருக்கு செங்கமல வல்லித்தாயார் எனவும் திருநாமங்கள். இத் தலத் தீர்த்தத் துக்குச் சந்திரபுஷ்கரிணி, என்றும் விமானத்துக்குச் சந்திர விமானம் என்றும் பெயர்கள்.

இத்தலத்தில் உள்ள ஆண்டாள் நாச்சியாரின் விக்கிரகம் சிறியதாக இருந்தாலும் அழகுடன் காட்சியளிக்கிறது. ஸ்ரீ சுந்தர ராமானுஜ தாசரின் முயற்சியால் புதுப்பிக்கப்பட்டு, தாயார் சந்நிதியும் கட்டப்பட்ட இத்திருத்தலம் தலைச் சங்காடு எனும் பெயரால்தான் வழங்கப்படுகிறது. மாயவரம் —தரங்கம்பாடி இரயில் பாதையில் ஆக்கூரில் இறங்கி பஸ் மூலமாகத் தலைச்சங்காட்டில் இறங்க வேண்டும். பஸ் நிலை

Koviloor Digital Library

யத்திலிருந்து மன்சாலை வழியாகச் சென்றால் மிக அருகில் கோயில் உள்ளது. மாயவரத்திலிருந்து ஆக்கூர் போய், அங்கிருந்து சீர்காழி செல்லும் பஸ்ஸில் மூன்று கி. மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம். சீர்காழியிலிருந்தும் ஆக்கூருக்குச் செல்லும் பஸ்கள் உண்டு. இத்தலத்தில் தங்கிப் பெருமாளை வழிபடப் போதிய வசதிகள் இல்லை.

திருவழுந்தூர் (தேரழுந்தூர்)

இத்தலத்திலிருந்து அருள் புரிந்து வருகிற மூலவரின் பெயர் தேவாதிராஜன். இடப்புறம் கருடனும் வலப்புறம் பிரகலாதனும் இருக்க, தனது இடக் கரத்தால் கதையை ஊன்றிய படி கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் பெருமாள் காட்சியளிக்கிறார். பெருமாளின் இடப்புறத்தில் காவிரி மண்டியிட்டுக் கும்பிட்ட வண்ணமிருக்கிறாள். உத்சவ மூர்த்தியான ஆமருவியப்பன் உபய நாச்சியாருடனும் தனது அருகில் பசுங்கன்றுடனும் அழகுடன் காட்சியளிக்கிறார். இக்கோயில் தாயாரின் பெயர் செங்கமலவல்லி. இத்தலத்தின் தீர்த்தங்கள்: தர்சன புஷ்கரிணியும் காவேரியும் ஆகும். விமானம்: கருட விமானமாகும்.

"செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன்
திருவடியி னிணைவருட முனிவ ரேத்த
வங்கமலி தடங்கடலுள் அனந்தனென்னும்
வரியரவி னணைத்துயின்ற மாயோன் காண்மின்
எங்குமலி நிறைபுகழ்நால் வேதம், ஐந்து
வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை
அங்கமலத் தயனனையார் பயிலும் செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே."

எனத்திருமங்கை யாழ்வாரால் பாடப்பட்டுள்ளது.

இக்கோயிலுக்குத் தென்மேற்கேயுள்ள கம்பன் மேட்டில் கம்பநாட்டாழ்வார் அவதரித்ததாகக் கூறப்படுகிறது. வருடந்தோறும் கம்பன் விழா நடைபெறும் இத்தலத்திலேயே

Koviloor Digital Library

வேறொரு கோயிலும் காணப்படுகிறது. அது தான் பூர்வீகக் கோயிலென்றும் மணவாள மாமுனிகள் மங்களசாசனம் செய்தது என்றும் கூறப்படுகிறது. இக்கோயிலின் உட்புறத்தே கம்பருக்கும் அவர் மனைவிக்கும் சிலைகள் உள்ளன.

அஹோபில மட நிர்வாகத்தில் இயங்கும் இக்கோயில் கும்பகோணத்திலிருந்து மாயவரம் செல்லும் மார்க்கத்தில் உள்ளது. மாயவரத்திலிருந்து டவுன் பஸ் வசதிகள் உண்டு.

திருச்சிறுபுலியூர்

இத்தலத்தின் மூலவருக்கு அருள் மாக்கடல், சலசயனப் பெருமாள் என்றும், உத்சவருக்கு கிருபா சமுத்ரப் பெருமாள் என்றும் பெயர்கள். தாயாருக்குத் திருமாமகள் நாச்சியார் என்றும் உத்சவருக்குத் தயாநாயகி என்றும் திருநாமங்கள். தலதீர்த்தத்தின் பெயர்: மானஸ புஷ்கரிணி, அனந்த ஸரஸ். மற்றும் விமானத்தின் பெயர் : நந்தவர்த்தன விமானம் என்றும் சொல்லப்படுகிறது.

''கள்ளம் மனம் விள்ளும்வகை கருதிக்கழல் தொழுவீர்
வெள்ளம் முது பாவைத்திரை விரியக்கரை யெங்கும்
தெள்ளும் மணி திகழும்சிறு புலியூர்ச்சல சயனத்து
உள்ளும் என துள்ளத்துளும் உறைவாரையுள் ளீரே.''

என்று திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

வியாக்ரபாத மாமுனிவர் சிவபெருமானின் அருளினால் புலிக்கால்கள், கைகள் மற்றும் கண்களைப் பெற்று, அவரது விருப்பத்துக்கேற்ப இத்தலத்தில் பெருமாளைப் பூசித்து வைகுந்த பதவியடைந்தார் என்றும், அதனால் இத்தலத்துக்குச் சிறு புலியூர் எனும் பெயரேற்பட்டது என்றும் கூறப்படுகிறது. எனவேதான் அவரது பிம்பத்தைப் பெருமாளின் திருவடிகளில் வைத்துப் பூசிக்கப்படுகிறது.

ஆதிசேஷனுக்குக் கருடனிடமிருந்து இத்தலத்தில்தான் பெருமாள் அபயமளித்ததாகவும் கூறப்படுகிறது. பெருமாள்

Koviloor Digital Library

தெற்கு நோக்கிப் புஜங்க சயனத்திலிருக்கிறார். அவர் மிகச் சிறிய திருவுருவத்திலிருப்பதைக் கண்டு திருமங்கையாழ்வார் கவலைப்பட, அதற்குப் பெருமாள் தனது பெரிய உருவத்தைத் திருக்கண்ண மங்கையில் காணுமாறு அருள் மொழி கூறியதாகக் கூறப்படுகிறது.

மாயவரத்திலிருந்து பஸ் மார்க்கத்தில் உள்ள கொல்லு மாங்குடி என்னும் ஊரிலிருந்து மூன்று கி.மீ. தூரத்தில் இத் தலம் உள்ளது. மாயவரம்—அறந்தாங்கி இரயில் பாதையில் கொல்லுமாங்குடி இரயில் நிலையம் உள்ளது. இத் தலத்தில் தங்கிப் பெருமாளைச் சேவிக்கப் போதிய வசதிகள் இல்லை.

திருக்காழிச் சீராம விண்ணகரம்

"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
பிரமனைத்தன் உந்தியிலே தோற்று வித்துக்
கறைதங்கு வேல்தடங்கண் திருவை மார்பில்
கலந்தவன்தாள் அணைகிற்பீர் கழுநீர் கூடித்
துறைதங்கு கமலத்துத் துயின்று கைதைத்
தோடாரும் பொதிசோற்றுச் சுண்ணம் நண்ணிச்
சிறைவண்டு களிபாடும் வயல்சூழ் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே."

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற இத்தல மூலவரான திரிவிக்ரமன், தாடாளன், உலகளந்த திருவுருவத்துடன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். உத்சவருக்குத் திரிவிக்ரம நாராயணர் என்று பெயர். தாயாருக்கு லோகநாயகி என்றும் உத்சவருக்கு மட்டவிழ் குழலி என்றும் பெயர்கள். தலத்தீர்த்தங்கள்: சங்கபுஷ்கரிணியும் சக்கர தீர்த்தமும் ஆகும். விமானம்: புஷ்கலாவர்த்தவிமானம் ஆகும்.

மணவாள மாமுனிகள் மங்களசாசனம் செய்த இத்தலத்தில் பிரமா தன்னுடைய ஆயுளைப் பற்றிக் கர்வம்கொண்டிருந்ததையறிந்து ரோமசமுனிவர் பிரமாவின் ஆயுள் தன்

Koviloor Digital Library

ரோமத்துக்குச் சமம் எனக் கூறி, கர்வபங்கம் செய்ததாகக் கூறப்படுகிறது. இத் தலத்தில் பெருமாள் இடக் காலைத் தூக்கி விண்ணையளக்கும் காட்சி கண்கொள்ளாததாகும். இத் தலத்தில்தான் திருமங்கையாழ்வார் திருஞான சம்பந்தரை வாதில் வென்று அவரால் 'கடியுண்ட நெடுவாளை' எனும் பாடலால் புகழ்பெற்று அவருடைய வெற்றி வேலைப் பரிசாகப் பெற்றதுடன் நாலு கவிப்பெருமாள் எனும் பட்டத்தையும் பெற்றார்.

சீர்காழி இரயில் நிலையத்திலிருந்து அரை கி.மீ. தொலைவில் உள்ள இக்கோயிலின் வாயிலிலேயே பல ஊர் பஸ்களும் நிற்கின்றன. சகல வசதிகளும் கொண்ட பெரிய ஊராகையால் இங்குத் தங்கியே பெருமாளைச் சேவிக்கலாம்.

திருவாலியும் திருநகரியும்

திருவாலி ஓர் அற்புதமான ஸ்தலம். திருமங்கையாழ்வாரின் தேவியான குமுதவல்லி நாச்சியார் வளர்ந்த தலமாகிய இது, சீர்காழி இரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே 10 கி.மீ. தொலைவில் சீர்காழி-வெண்காடு பஸ் பாதையில் உள்ளது. திருநாங்கூரிலிருந்து கீழைச் சாலை வழியாக வந்தால் 5கி.மீ.தூரம்தான். கீழைச்சாலையிலிருந்து ஒருகி.மீ. தூரத்தில் உள்ளது. இங்குப் போதிய வசதிகள் இல்லாததால் சீர்காழியிலிருந்தோ திருநாங்கூரிலிருந்தோ வந்துதான் பகவானைப் பூஜிக்கவேண்டும்.

"சங்கு தங்கு தடங் கடன்மல்லை
யுள் கிடந்தாய்! அருள்புரிந்து
இங்கு என்னுள் புகுந்தாய்!
இனிப்போயினால் அறையோ!
கொங்கு செண்பக மல்லிகை மலர்புல்கி
இன்னின வண்டுபோய் இளந்
தெங்கின் தாதளையும் திருவாலி யம்மானே!"

Koviloor Digital Library

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது. குலசேகராழ்வாரும் இத்தலத்திறைவனைப் பாடியுள்ளார். இங்கு எழுந்தருளியுள்ள பெருமாள் வயலாளி மணவாளன், லக்ஷ்மி நரசிம்மராக மேற்கு நோக்கி வீற்றிருந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். உத்சவப் பெயர் திருவாலி நகராளன். தாயாருக்கு அமிருதகடவல்லி என்று பெயர். இத் தலத் தீர்த்தம்: இலாக்ஷணி புஷ்கரிணி. விமானம்: அஷ்டாக்ஷர விமானம்.

திவ்யப்பிரபந்தத்தில் பாடப்பெற்றுள்ள பெருமாளாகிய வயலாளி மணவாளர் திருநகரியில் தான் குடிகொண்டிருப்பதால் திருவாலியும், திருநகரியும் ஒரே க்ஷேத்ரமாகக்கருதப்படுகிறது. திருநகரி, திருவாலியிலிருந்து நெப்பத்தூர் வழியாகக் கரடுமுரடான பாதையில் சென்றால் நான்கரை கி. மீ. தொலைவில் உள்ளது. சீர்காழியிலிருந்து பூம்புகார் செல்லும் பஸ் இந்நகரில் நிற்கிறது. திருநாங்கூரிலிருந்தும் பஸ்கள் உண்டு. பெரிய ஊராக இருந்தாலும் தங்கி வழிபடுவதற்கான வசதிகள் இத்தலத்தில் இல்லை.

இத்தலத்தின் மூலவரான வயலாளி மணவாளராகிய வேதராஜன் மேற்கு நோக்கி வீற்றிருந்த கோலத்தில் அருள் புரிகிறார். உத்சவருக்குக் கல்யாண ரங்கநாதன் என்பது பெயர்; தாயார் அமிருதவல்லி.

திருமங்கை யாழ்வார் அவதரித்த தலமாகிய இங்கு அவர் பூஜித்து வந்த ஐந்து நரசிம்மர்களில் இருவர் உள்ளனர். வேடருபத்தில் ஆழ்வாருக்கும் இத்தலத்தில் தனிச் சந்நிதி உண்டு. ஆழ்வார் வாழ்ந்த காலத்தில் அவர் வைத்துப் பூஜித்து வந்த சிந்தனைக்கினியான் எனும் சிறிய உத்சவ மூர்த்தி அவருக்கு அருகிலேயே வீற்றிருக்கிறார்.

திருமங்கையாழ்வார் தெய்வப்பணிக்காக வழிப்பறி செய்து வந்த காலத்தில் ரெங்கநாதப் பெருமாள் தாயாருடன் புதிய இளந்தம்பதியாக ஆழ்வாருக்குக் காட்சியளித்து திருமந்திர

Koviloor Digital Library

உபதேசம் செய்து தடுத்தாட் கொண்ட இடமான வேதராஜ புரம், திருநகரிக்கு மிக அருகில் உள்ளது. இவ்வைபவத்தை வேடுபறி உத்சவம் என மிகவும் விமரிசையாகக் கொண்டாடு கிறார்கள். ரெங்கநாதர் கல்யாணத் திருக்கோலத்தில் இருப்ப தால் அவருக்குக் கல்யாண ரெங்கநாதர் எனும் பெயர் ஏற் பட்டது. ஸ்ரீ மணவாள மாமுனிகள் மங்களசாசனம் செய்த இடம் இது.

திருநாங்கூர்த் திருப்பதிகள்

திருக்காவளம்பாடி

கீழைச் சாலையிலிருந்து வரும் அர்ச்சகர்களுடன் தான் பெருமாளின் சேவைக்குச் செல்ல வேண்டும். வைத்தீஸ் வரன் கோயில் இரயில் நிலையத்திலிருந்து 8 கி. மீ. தூரத்தி லும், சீர்காழி இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 11 கி. மீ. தொலைவிலும் இத்தலம் உள்ளது. சீர்காழியிலிருந்தும் திரு வெண்காட்டிலிருந்தும் பஸ்கள் உள்ளன. திருநகரியிலிருந்தும் வண்டியில் செல்லும் வழிகள் உள்ளன. இந்தத் தலத்தில் வசதி இல்லையாதலால் சீர்காழியிலிருந்து வந்து பெருமாளை சேவித்துச் செல்வதுதான் உகந்தது. தை அமாவாசைக்கு மறுநாள் திருநாங்கூரில் நடைபெறும் கருட சேவையில் இத்தலப் பெருமாளும் எழுந்தருளி மக்களுக்கு அருள் புரிகிறார்.

‘‘தாவளந்து உலக முற்றும்
தடமலர்ப் பொய்கை புக்கு
நாவளம் நவின்றங் கேத்த
நாகத்தின் நடுக்கம் தீர்த்தாய்
மாவளம் பெருகி மன்னு
மறையவர் வாழும் நாங்கைக்
காவளம் பாடி மேய
கண்ணனே! களைகண் நீயே.’’

எனத்திருமங்கை யாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது.

Koviloor Digital Library

மூலவர் கோபால கிருஷ்ணன், ருக்மணி சத்யபாமையுடன் கிழக்குமுகமாக நின்ற திருக்கோலம். தாயாரின் திருநாமங்கள் மடவரல் மங்கை, செங்கமல நாச்சியார். தலத்தீர்த்தம்: தடமலர்ப்பொய்கை. விமானம் : சுவயம்பு விமானம்.

திருப்பார்த்தன் பள்ளி

தாமரையாள் கேள்வன் எனும் திருநாமங் கொண்ட மூலவப் பெருமாள் மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். உற்சவரின் திருநாமம் பார்த்தசாரதி. தாயாருக்குத் தாமரை நாயகி எனும் திருநாமம். இத்தலத் தீர்த்தம் : சங்க சரஸாகிய கங்கா தீர்த்தமாகும். விமானம் : நாராயண விமானம். மூலவர் உற்சவர் இருவருடனும் ஸ்ரீ தேவி, பூ தேவி, நீளா தேவி எனும் மூன்று தேவிகள் காட்சி யளிக்கிறார்கள்.

''கவள யானைக் கொம்பொசித்த
கண்ணனென்றும் காமருசீர்க்
குவளை மேக மன்னமேனி
கொண்டகோன்என் னானையென்றும்
தவளமாட நீடு நாங்கைத்
தாமரையாள் கேள்வனென்றும்
பவளவாயாள் என் மடந்தை
பார்த்தன்பள்ளி பாடுவாளே.''

எனத்திருமங்கை யாழ்வாரால் பாடப் பெற்ற தலம் இது.

சரமசுலோகார்த்தம் விளங்கிய தலமாகிய இதில் பார்த்தனுக்கும் தனிச்சந்நிதி உண்டு. அர்ச்சகர் கோயிலின் பக்கத்திலேயே குடியிருப்பதால் எச்சமயத்திலும் பெருமாளைச் சேவிக்கலாம்.

இக்கோயிலிலேயே சங்கு, சக்கரம், கதையுடன் வில்லும் ம்பும் சார்த்தப் பெற்ற கோலவில்லிஇராமன் எனும் உத்சவ

Koviloor Digital Library

மூர்த்தியும் அழகுடன் காட்சியளிக்கிறார். இவருக்கான மூலவரது கோயில் அருகில் ஒரு தோப்பில் தனிக்கோயிலாக உள்ளதாம்.

ஒரு வசதியும் இல்லாத சிறிய ஊராகிய இத்தலம் திரு வெண் காட்டிலிருந்து கரடு முரடான பாதையில் 3 கி. மீ. தொலைவில் உள்ளது. சீர்காழியிலிருந்து 10 கி. மீ. தூரம் தான். ஆனால் நடுவில் சிறிய காவிரி ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும்.

திரு வெள்ளக்குளம் (அண்ணன் கோயில்)

குமுதவல்லி நாச்சியாரின் அவதாரத் தலம் இது. குமுத வல்லி நாச்சியார் குமுத புஷ்பத்துடன் பிராமணர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு வளர்ந்து திருமங்கையாழ்வாருக்குத் திருமணம் செய்விக்கப்பட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. குமுதவல்லி நாச்சியாருக்குத் தனிச்சந்நிதி இக் கோயிலில் உண்டு.

மூலவராகிய பெருமாளுக்குச் சீநிவாசன், கண்ணன், நாராயணன், அண்ணன் பெருமாள் எனும் திருநாமங்கள். கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம். தாயாருக்கு அலர் மேல் மங்கை என்றும் உற்சவருக்குப் பத்மாவதி, பூவார் திருமகள் என்றும் திருநாமங்கள். இத்தலத் தீர்த்தம் திருவெள்ளக் குளம். விமானம் : தத்வதோதக விமானம்.

"கண்ணார் கடல்போல், திருமேனி கரியாய்!
நண்ணார்முனை வென்றி கொள் வார்மன்னு நாங்கூர்
திண்ணார் மதிள்சூழ், திருவெள்ளக் குளத்துள்
அண்ணா! அடியே னிடரைக் களையாயே!"

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்ற திருத்தலம் இது.

சூரியவம்சத்து அரசனான துந்துமாரனின் புத்திரன் சுவேதன் தனக்கு ஒன்பதாவது வயதில் ஆயுள்முடிகிறது

Koviloor Digital Library

என்பதைத் தெரிந்துகொண்டு இத்தலத்திலுள்ள சுவேத புஷ்கரிணியில் நீராடி, மருத்தாசிரமத்தில் மருத்தரின் உபதேசம் பெற்று, தடாகத்தின் தென் புறத்தேயுள்ள வில்வமரத்தடியில் வடக்குமுகமாக அமர்ந்து பெருமாளை எண்ணி மிருத்யுஞ்ஜய மந்திரத்தை உச்சரித்ததால் பகவான் காட்சியளித்து மார்க்கண்டேயனைப் போல் என்றும் சிரஞ்சீவியாக இருக்கும் வரத்தைக் கொடுத்ததாகத் தலபுராணம் கூறுகிறது. திருநாங்கூர்த் திருப்பதிகள் பதினொன்றில் ஒன்றான இதனைத் தென் திருப்பதி என்று வழங்குவர். திருவேங்கடத்தானுக்குச் செய்ய வேண்டிய பிரார்த்தனைகளை இங்கேயே செய்வர். திருக்கல்யாணங்களையும் நடத்தி வைக்கின்றனர்.

சீர்காழி இரயில் நிலையத்திலிருந்து தென் கிழக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ள இத்தலத்தில் ஒருவித வசதியும் கிடையாதாகையால் இங்கே தங்கிப் பெருமாளைச் சேவிக்க இயலாது.

திருமணிக்கூடம் (திருநாங்கூர்)

மூலவராகிய மணிக்கூட நாயகருக்கு வரதராஜப் பெருமாள் எனும் திருநாமம்; தாயார் திருமாமகள் நாச்சியாராகிய ஸ்ரீதேவி, பூதேவி. தலத்தின் தீர்த்தம்: சந்திர புஷ்கரிணி. விமானம்: கனகவிமானம். இதில் திருக்கோட்டியூர் நம்பிக்கும் சந்நிதி உண்டு.

"குன்றமும் வானும் மண்ணும்
குளிர்புனல் திங்களோடு
நின்ற வெஞ் சுடரும் அல்லா
நிலைகளும் ஆய எந்தை
மன்றமும் வயலும் காவும்
மாடமும் மணங்கொண்டு எங்கும்
தென்றல்வந் துலவும் நாங்கூர்த்
திருமணிக் கூடத்தானே."

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற திருத்தலம் இது.

Koviloor Digital Library

சீர்காழியிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள திருநாங்கூருக்குக் கிழக்கே அரைமைல் தொலைவில் உள்ள இத்தலத்தில் போதிய வசதிகள் இல்லை. அர்ச்சகர் திருநாங்கூரிலிருந்துதான் வரவேண்டும்.

திருத்தேவனார் தொகை (கீழைச்சாலை)

மூலவராகிய தெய்வநாயகன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். உற்சவர் மாதவப் பெருமாள். தாயாருக்குக் கடல்மகள் நாச்சியார் என்றும், உத்சவருக்கு மாதவ நாயகி என்றும் திருநாமங்கள். தலத் தீர்த்தங்கள் : சோபன புஷ்கரிணி, தேவ சபை புஷ்கரிணி. விமானம் : சோபன விமானம்

இத்தலத்தில் தேவர்கள் கூடிப் பெருமாளுடன் பேசிய தாகத் தல வரலாறு கூறுகிறது. திருநாங்கூர்த் திருப்பதி கள் பதினொன்றில் இதுவும் ஒன்று.

'போதலர்ந்த பொழிற்சோலைப், புறமெங்கும் பொருதிரைகள்
தாதுதிர வந்தலைக்கும் தடமண்ணித் தென்கரைமேல்
மாதவன்தா னுறையுமிடம் வயல்நாங்கை வரிவண்டு
தேதெனவென் றிசைபாடும் திருத்தேவ னார் தொகையே!''

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற திருத்தலமிது.

திருநாங்கூரிலிருந்து 4 கி. மீ. தொலைவில் வண்டிப் பாதை மார்க்கமாகவும், சீர்காழி, திருவெண்காடு பஸ் மார்க்கத்தில் திருவாலியில் இறங்கி 1 கி. மீ. தூரம் வண்டி மூலமாகவும் வந்து இத்தலத்தையடையலாம். சீர்காழி இரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே ஆறரை கி. மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. வசதிகள் குறைவான இத்தலத்தில் திருவெள்ளக்குளம், திருக்காவலம்பாடி அர்ச்சு கர்கள் வந்து பகவானுக்குச் சேவை புரிய வேண்டுமாகை யால் அவர்கள் வரும் சமயத்தில் இக்கோவிலுக்குச் செல்வது நல்லது.

Koviloor Digital Library

திருமணிமாடக் கோயில் (திருநாங்கூர்)

"நந்தா விளக்கே! அளத்தற்கு அரியாய்!
நரநா ரணனே! கருமா முகில்போல்
எந்தாய்! எமக்கே அருளாய் என நின்று
இமையோர் பரவு மிடம்எத் திசையும்
கந்தாரம் அந்தேன் இசைபாட மாடே
களிவண்டு மிழற்ற நிழல் துதைந்து
மந்தாரம் நின்று மணமல்கு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கு என் மனமே!"

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது.

மூலவராகிய நந்தாவிளக்குப் பெருமாள் கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் திருக்கோலம். உத்சவர்கள் நாராயணன் மற்றும் அளத்தற்கரியான். தாயார் புண்டரீகவல்லி. தல தீர்த்தங்கள் இந்திர புஷ்கரிணி மற்றும் ருத்திர புஷ்கரிணி. விமானம் : பிரணவவிமானம்.

இத்தலம் திருநாங்கூரிலேயே உள்ளது.

திரு அரிமேய விண்ணகரம் (திருநாங்கூர்)

"திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழத்
தீவினைகள் போயகல அடியவர்கட்கு என்றும்
அருள்நடந்துஇவ் வேழுலகத் தவர்பணிய, வானோர்
அமர்ந்தேத்த இருந்த இடம் பெரும்புகழ்வே தியர்வாழ்
தரும்இடங்கள் மலர்கள்மிகு கைதைகள்செங் கழுநீர்
தாமரைகள் தடங்கள்தொறும் இடங்கள்தொறும் திகழ
அருவிடங்கள் பொழில் தழுவி எழில் திகழும் நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே!"

எனத் திருமங்கையாழ்வாரால் போற்றப்பட்ட திருத்தலம் இது.

Koviloor Digital Library

தைலக் காப்புத் திருமேனியான மூலவருக்குக் குடமாடு கூத்தர் என்பது திருநாமம் - ஆகையால் குடமாடு கூத்தர் கோயில் என்று சொன்னால்தான் பலருக்குத் தெரியும். மூலவர் கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். சதுர் புஜங்களுடன் காணப்படும் உத்சவருக்குக் கோபாலன் எனும் திருநாமம். தாயார் அமிருதகடவல்லி. தலதீர்த்தம்: கோடி தீர்த்தம் மற்றும் அமிருத தீர்த்தம் ஆகும். விமானம்: உச்சஸ்ருங்க விமானமாகும்.

இக்கோயிலும் திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது. சீர்காழியிலிருந்து ஐந்து மைல் தூரம் பஸ் வசதி உண்டு.

திருத்தெற்றியம்பலம் (திருநாங்கூர்)

''சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரிய மேரு
திருக்குளம்பில் கணகணப்பத் திருவா காரம்
குலுங்கநில மடந்தைதனை இடந்து புல்கிக்
கோட்டிடைவைத் தருளியஎங் கோமான் கண்டீர்
இலங்கியநான் மறையனைத்தும் அங்கம் ஆறும்
ஏழிசையும் கேள்விகளும் எண்திக் கெங்கும்
சிலம்பியநற் பெருஞ்செல்வம் திகழும் நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்துஎன் செங்கண் மாலே!''

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற இந்தத் தலமும் திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது.

மூலவருக்குச் செங்கண்மால், ரங்கநாதன், ஸ்ரீலக்ஷ்மி ரங்கர் எனும் திருநாமங்கள். நான்கு கரங்களுடன் காட்சியளிக்கும் பெருமாள் கிழக்கு நோக்கிப் புஜங்க சயனத்தில் பக்தர்களுக்கு அருள்புரிந்து வருகிறார். பள்ளிகொண்ட பெருமாள் எனும் பெயரில்தான் பெருமாள் பிரசித்தி பெற்று விளங்குகிறார். தாயாரின் திருநாமம் செங்கமலவல்லி. தல தீர்த்தம்: சூர்ய புஷ்கரிணி, விமானம்: வேத விமானமாகும்.

Koviloor Digital Library

திருவண்புருடோத்தமம் (திருநாங்கூர்)

"கம்ப மாகட லடைத்து இலங் கைக்குமன்
கதிர்முடி யவைபத்தும்
அம்பி னாலறுத்து அரசுஅவன் தம்பிக்கு
அளித்தவ னுறைகோயில்
செம்ப லாநிரை செண்பகம் மாதவி
சூதகம் வாழைகள்சூழ்
வம்பு லாம்கமு கோங்கிய நாங்கூர்
வண்புரு டோத்தமமே!"

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது. ஸ்ரீமணவாள மாமுனிகள், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் ஆகியோராலும் மங்கள சாசனம் செய்யப்பட்ட தலம். இதுவும் திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது.

மூலவராகிய புருஷோத்தமன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். தாயார் புருஷோத்தம நாயகி. தல தீர்த்தம்: திருப்பாற்கடல் தீர்த்தமாகும். விமானம்: சஞ்சீவி விக்ரம விமானமாகும்.

சீர்காழி ஸ்டேஷனுக்குக் கிழக்கே எட்டு கி. மீ. தொலைவிலுள்ள திருநாங்கூருக்குள்ளேயே ஒரே தெருவில் மேற்குறிப்பிட்ட திருமணிமாடக் கோயில், திரு அரிமேய விண்ணகரம், திருத்தெற்றியம்பலம் மற்றும் திருவண் புருடோத்தமம் ஆகிய கோயில்கள் உள்ளன. திருநாங்கூர் கருடசேவை உத்சவம் சமயத்தில் பக்தர்கள் இவ்விடத்தில் தான் பிரசாதம் வழங்குகிறார்கள்.

சீர்காழியிலிருந்து இங்கு வர பஸ் வசதிகள் நிரம்ப உண்டு. தங்குவதற்கு ராமானுஜ கூடமும் உண்டு. ஆனால் உணவு வசதிகளைக் கோயில்களில்தான் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

திரு வைகுந்த விண்ணகரம்

(திருநாங்கூர்)

"சலங்கொண்ட இரணியனது அகல்மார்வம் கீண்டு
  தடங்கடலைக் கடைந்துஅமுதம் கொண்டுகந்த காளை
நலங்கொண்ட கருமுகில்போல் திருமேனி அம்மான்
  நாள்தோறும் மகிழ்ந்துஇனிது மருவியுறை கோயில்
சலங்கொண்டு மலர்சொரியும் மல்லிகைஒண் செருத்தி
  சண்பகங்கள் மணநாறும் வண்பொழிலி னூடே
வலங்கொண்டு கயலோடி விளையாடு நாங்கூர்
  வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே!"

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற இத்தலமும் திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது.

மூலவராகிய வைகுந்தநாதன், தாமரைக் கண்ணுடைய பிரான் உபய நாச்சியார்களுடன் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறார். உத்சவர்களும் அதே கோலத்திலேயே காட்சியளிக்கின்றனர். தாயாரின் திருநாமம் வைகுந்தவல்லி. தல தீர்த்தம்: லக்ஷ்மி புஷ்கரிணி, உதங்க புஷ்கரிணி மற்றும் விரஜா தீர்த்தம் ஆகும். விமானம்: அனந்த சத்யவர்த்தக விமானமாகும்.

திருச்செம்பொன் கோயில்

(திருநாங்கூர்)

"பேரணிந்து உலகத் தவர்தொழு தேத்தும்
  பேரரு ளாளன்எம் பிரானை
வாரணி முலையாள் மலர்மக ளோடு
  மண்மக ளும்உடன் நிற்பச்
சீரணி மாட நாங்கைநன் னடுவுள்
  செம்பொன்செய் கோயிலி னுள்ளே
காரணி மேகம் நின்றதொப் பானைக்
  கண்டுகொண்டு உய்ந்தொழிந் தேனே."

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற இத் திருத்தலமும் திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது.

Koviloor Digital Library

மூலவராகிய பேரருளாளன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். உத்சவருக்கு ஹேமரங்கர் என்றும் செம்பொன்னரங்கர் என்றும் திருநாமங்கள். தாயார் அல்லிமாமலர் நாச்சியார். தலத் தீர்த்தங்கள்: ஹேமபுஷ்கரிணி, கனகதீர்த்தம்: விமானம்: கனக விமானம்.

இராமபிரான் இராவணனைச் சம்ஹாரம் செய்த பின்னர் த்ருட நேத்ரடர் எனும் ரிஷியின் அறிவுரைக்கேற்ப அவரது ஆசிரமத்திலேயே தங்கித் தங்கத்தாலான பசு ஒன்றினைச் செய்து ஒரு பிராமணருக்குத் தானம் செய்தார் என்றும், அப்பிராமணர் அதைக் கொண்டு இக்கோயிலைக் கட்டின படியால் இக் கோயிலுக்கு இப்பெயர் ஏற்பட்டது என்றும் கூறப்படுகிறது.

மேலும் காஞ்சிபுரத்தைச் சார்ந்த காச்யபர் எனும் பிராமணனின் தலைமகனான முகுந்தன் தங்களது குடும்ப வறுமையைப் போக்க இத் தலத்துக்கு வந்து பெருமாளின் அஷ்டாக்ஷரத்தை முப்பத்திரண்டாயிரம் தடவை மூன்று நாள்களில் ஜபித்து பகவானின் அருளினால் தனம் பெற்றான் என்றும் புராண வரலாறு கூறுகிறது.

சிவபெருமான், பிரம்மாவின் சிரத்தைக் கிள்ளியதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்க ஏகாதசி ருத்திர அஸ்வமேத யாகத்தைச் செய்து முடிக்கும் சமயத்தில் பகவான் பிரமாதி தேவர்களுடன் தரிசனம் தந்தபோது ருத்திரனின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீமந் நாராயணர் பதினொரு ரூபத்துடன் சிவனுடன் என்றென்றும் வாசம் செய்து பக்தர்களுக்கு அருள் புரிவதாக வரலாறு கூறுகிறது. இதனால் திரு நாங்கூர்த் திருப்பதிகளான பதினொரு தலங் களிலிருந்தும் பதினொரு பெருமாள்களும் திருமணிக் கூடத்தி லிருந்து தொடங்கிப் பதினொரு கருட வாகனங்களில் எழுந்தருளும் பதினொரு கருடசேவை உத்சவம் திருநாங் கூரில் வருடந்தோறும் தைமாதம் அமாவாசை கழிந்த மறு நாள் இரவு நடைபெற்று வருகிறது. ருத்திரன் பூஜிப்பதற்காக

Koviloor Digital Library

இந்த பதினொரு திருநாங்கூர்த் திவ்யதேசங்கள் ஏற்பட்டதாக ஐதீகம்.

திருநகரியிலிருந்து திருமங்கையாழ்வார் தமது மனைவியான குமுதவல்லியுடன் தான் பூஜித்து வந்த பெருமாள் மற்றும் அவரின் உபயநாச்சியாருடனும் திருநாங்கூர்ப் பதினொரு திருப்பதிகள் வழியாக வயல் வழியில் இறங்கிப் பயிரை மிதித்துக் கொண்டு ஒவ்வொரு தலத்திலும் மங்களசாசனம் செய்து திருவந்திக் காப்பு ஆகி தை அமாவாசை மறுநாள் நாராயணப் பெருமாள் கோயில் வாசலில் பதினொரு பெருமாள்களும் கருட வாகனத்தில் எழுந்தருளியிருக்க ஒவ்வொருவருக்கும் ஆழ்வார் மாலை மரியாதைகள் செய்யக் கருடோத்சவம் தொடங்கும்.

இக் கண்கொள்ளாக் காட்சியைக் காண பக்த கோடிகள் எண் திசைகளிலிருந்து திரண்டு வருவார்கள். இவ்வாறு வயல்களில் இறங்கிப் பயிர்களை ஆழ்வார் மிதிப்பதால் பயிர்கள் செழிப்புடன் வளர்வதாக ஐதீகம்.

திருநாகை (நாகப்பட்டினம்)

"அன்னமும் கேழலும் மீனு மாய
ஆதியை, நாகை அழகியாரைக்
கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன்
காமரு சீர்க்கலி கன்றிகுன்றா
இன்னிசை யால்சொன்ன செஞ்சொல் மாலை
ஏழு மிரண்டும்ஓ ரொன்றும் வல்லார்
மன்னவ ராய்உல காண்டு, மீண்டும்
வானவ ராய்மகிழ் வெய்துவரே.''

எனத் திருமங்கையாழ்வாரால் போற்றிப் புகழப்பெற்ற திருநாகைத் திருத்தலத்தில் உறைகின்ற நீலமேகப் பெருமாள் கிழக்கு நோக்கி கதையுடன் நின்றவாறு பக்தர்களுக்கு அருள் புரிந்து வருகின்றார். உத்சவருக்கு சௌந்தர்யராஜன் எனும் பெயர். தாயாரின் பெயர் சௌந்தர்யவல்லி. உற்சவத்

Koviloor Digital Library

தாயார் கஜலக்ஷ்மி. இத்தலத்தில் சாரபுஷ்கரிணியும் சௌந்தர்ய விமானமும் உள்ளன.

இக் கோயிலில் பல்வேறு சந்நிதிகள் உள்ளன. அவற்றில் வீற்றிருக்கும் பெருமாளாக கோவிந்தராஜனும், சயனத்திருக் கோலத்தில் அரங்கநாதனும் மிகவும் விசேஷமானவர்கள். அரங்க நாதன் சந்நிதியில் இரண்யவதம் செய்த நிலையிலும், பிரகலாதனுக்கு அபயமளிக்கும் நிலையிலும் உள்ள அஷ்டபுஜ நரசிம்மரின் வெண்கலச்சிலை மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இத்தலத்தில் பெருமாள் துருவனுக்குக் காட்சியளித்ததாக ஐதீகம்.

பஸ்நிலையத்திலிருந்து மிக அருகிலும் நாகப்பட்டினம் இரயில் நிலையத்திலிருந்து 1½ கி.மீ. தூரத்திலும் இத்தலம் உள்ளது. சகல வசதிகளும் கொண்ட இத்தலத்தில் நன்கு நிர்வகிக்கப்படும் இக்கோயில் மிகவும் பெரியதாகவும் அழகாகவும் காட்சியளிக்கிறது.

தில்லை திருச்சித்திரக் கூடம்

"அன்று சராசரங்களை வைகுந்தத் தேற்றி
அடலரவப் பகையேறி அசுரர் தம்மை
வென்றுஇலங்கு மணிநெடுந்தோள் நான்கும் தோன்ற
விண்முழுதும் எதிர்வரத்தன் தாமம் மேவிச்
சென்றுஇனிது வீற்றிருந்த அம்மான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
என்றும்நின்றான் அவனிவனென் றேத்தி நாளும்
இறைஞ்சுமினோ, எப்பொழுதும் தொண்டீர்! நீரே."

எனக் குலசேகராழ்வாரால் பாடப்பட்ட தலம் இது. திருமங்கையாழ்வாராலும் பாடப்பட்ட தலமாகும்.

மூலவராகிய கோவிந்தராஜன் கிழக்கு நோக்கி போக சயனத்தில் அருள் புரிகிறார். உத்சவருக்குத் தேவாதி

Koviloor Digital Library

தேவன் மற்றும் பார்த்தசாரதி எனும் திருநாமங்கள். இன்னொரு உற்சவருக்குச் சித்திரக் கூடத்துள்ளான் எனும் பெயர். அவர் உபய நாச்சியாருடன் காணப்படுகிறார். தாயார் புண்டரீகவல்லி. தலத்தீர்த்தம்: புண்டரீக புஷ்கரிணி. விமானம்: சாத்விக விமானம்.

இக்கோயிலில் நடராஜப் பெருமானுடன் சேர்ந்து தில்லை மூவாயிரவர் வந்து பெருமாளைச் சேவித்ததாகவும், நடராஜரது நடனத்தைக் கண்டு களித்ததாகவும் அதனால் நடராஜப் பெருமான் பெருமாளின் இரசனைக்காக எப்போதும் திருத்தாண்டவம் ஆடிவருவதாகவும் ஐதீகம்.

பரத முனிவர் நாட்டிய சாஸ்திரத்தை உருவாக்கிய தலமிது. இத்தல சிற்பசாலையில் உலகில் உள்ள எல்லாவித நடன முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

கோயிலினுள்ளே உள்ள புஷ்கரிணியில் பக்தர்கள் போடும் பொரி கடலைகளை மீன்கள் தரையில் வந்து உண்ணும் காட்சி வியக்கத்தக்கதாகும்.

தில்லை அம்மனும், நடராஜப் பெருமானும் தாண்டவம் ஆடியதால் தில்லை நகர் எனும் பெயர் பெற்ற இத்தலம், சிதம்பரம் இரயில் நிலையத்திலிருந்து ஒன்றரை கி.மீ. தொலைவிலுள்ளது. பஸ்கள் கோயில் வாசலிலேயே நிற்கும்.

வசதிகள் படைத்த பெரிய ஊராகிய இதில் தங்கியே பெருமாளைச் சேவிக்கலாம். அருகிலேயே ஸ்ரீமந்நாத முனிகளின் அவதாரத் தலமாகிய காட்டு மன்னார் கோயிலும் உள்ளது.

Koviloor Digital Library

பாடல் பெறாத தலங்கள்

ராஜமன்னார்குடி

தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடி எனும் ஊரே ராஜமன்னார்குடி எனும் தலமாகும். இங்குள்ள கோயிலின் மூலவரான வாசுதேவர் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகிறார். உற்சவ மூர்த்தியான ராஜகோபாலன் ருக்மணி சத்யபாமையுடன் காட்சியளிக்கிறார். இத்தலத் தாயாரின் பெயர் செண்பகலட்சுமி. தனிக்கோயில் கொண்ட உற்சவருக்குச் செங்கமலத் தாயார் எனும் திருநாமம். இத்தல தீர்த்தங்கள்: பாம்பணி நதி, ஹரித்ரா நதி, கிருஷ்ண தீர்த்தம், கோப்ரளய தீர்த்தம். தல விருட்சம்: சண்பக மரம். விமானம்: சுயம்பு விமானம்.

கோப்ரளய மகரிஷியின் ஆவலுக்கிணங்க தமது கிருஷ்ண லீலைகளைப் பகவான் இங்கு திரும்பச் செய்து காண்பித்ததால் இதற்குத் தட்சிண துவாரகை எனும் பெயரும் உண்டு. பங்குனி மாதங்களில் 18 நாள்கள் பிரம்மோத்சவமும், ஆனி மாதங்களில் பத்து நாள்கள் தெப்போத்சவமும் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டு வருகின்றன. இத்தலத்துக்குச் செம்பகாரண்ய சேத்திரம் எனும் பெயரும் உண்டு.

வடுவூர்

தஞ்சையிலிருந்து மன்னார்குடி வழியாக இங்கு செல்லலாம். மூலவரான சக்கரவர்த்தி, சீதை, இலட்சுமணர், அனுமார் ஆகியோருடன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தலத் தீர்த்தம்: புது ஆறு.

மன்னார்குடி ராஜகோபாலனை வழிபட்டு விட்டு இத்தலத்திலுள்ள மிகவும் அழகு வாய்ந்த மூர்த்தியை வழிபடுவது வழக்கம். இத்தலத்துக்கு தக்ஷிண அயோத்தி எனும் திருநாமமும் உண்டு. இப்பெருமாளை, 'கேட்டவர்க்கு கேட்டதையருளும் வள்ளல்' எனப் போற்றுவர்.

Koviloor Digital Library

ஆதிரங்கம்

தஞ்சையிலிருந்து திருத்துறைப்பூண்டி வழியாக வேதாரண்யம் செல்லும் பஸ்ஸில் இத்தலத்தையடைய லாம். மூலவரான ரெங்கநாதர் கிழக்கு நோக்கிப் புஜங்க சயனத்தில் அருள் புரிகிறார். தாயாருக்கு ரெங்கநாயகி எனும் திருநாமம்.

இத்தலத்திலுள்ள மிகவும் அழகு பொருந்திய மூர்த்தி யைத் திருவரங்கம் செல்ல முடியாத பக்தர்கள் தரிசித்துத் தங்களது பிரார்த்தனைகளைச் செலுத்துகிறார்கள்.

கோடிக்கரை

திருத்துறைப் பூண்டியிலிருந்து வேதாரண்யம் வழியாக இரயில் மூலமாகவும் பஸ் மூலமாகவும் இத்தலத்தை அடைய லாம். சேதுக்கரையில் கடலாட இயலாதவர்கள் ஆடி மற்றும் தை அமாவாசைகளிலும் அர்த்தோதய மஹோதயப் புண்ணிய காலங்களிலும் இங்கு வந்து கடலாடிச் செல்வர்.

தில்லை விளாகம்

திருத்துறைப்பூண்டியிலிருந்து பட்டுக்கோட்டைக்குச் செல்லும் பஸ்கள் மூலமாக இத்தலத்தை அடையலாம். இராமர், சீதை, லட்சுமணர், அனுமார் சமேதராகக் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். உற்சவ விக்கிரகங்கள் மட்டுமே உள்ளன. மூலவர் விக்கிரகங் கள் தற்போது காணப்படவில்லை. வரப்ரசாதியான இப் பெருமாளின் கால், முழங்கால், கையின் பக்கங்களில் மனிதர் களுக்குத் தெரிவது போல் நரம்புகள் தெரிவது மிகவும் அதிசயம்.

சிக்கில்

திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் பஸ்மூலமாக இத்தலத்தை அடையலாம். மூலவரான கோலவாமனர்

Koviloor Digital Library

கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயாருக்குக் கோமளவல்லி எனும் திருநாமம். சிக்கல் சிங்காரவேலன் கோயில் பிராகாரத்திலுள்ள சந்நிதியிலுள்ள இப் பெருமாளைத் திருக்கண்ணங்குடி செல்பவர்கள் வழி படுவது வழிக்கம்.

திருமண்டங்குடி

தஞ்சையிலிருந்து திருவையாறு வழியாகக் கும்பகோணம் செல்லும் பஸ் மூலமாக இத்தலத்தை அடையலாம். மூலவ ரான ஸ்ரீ ரங்கநாதர் கிழக்கு நோக்கிச் சயனத் திருக்கோலத் தில் எழுந்தருளியிருக்கிறார். தாயார் ஸ்ரீ ரெங்க நாயகி. இத்தலத் தீர்த்தம் : குடமுருட்டி நதியாகும். இது தொண்ட ரடிப் பொடியாழ்வாரின் அவதாரத் தலமாகும்.

பெரும்புலியூர்

திருச்சியிலிருந்து திருவையாறு மார்க்கமாகக் கும்ப கோணம் செல்லும் பஸ் மூலமாக இத்தலத்தை அடையலாம். இத்தலப் பெருமாளான சுந்தரராஜன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். தாயாருக்குச் சுந்தரவல்லி நாச்சியார் எனும் திருநாமம். தலத்தீர்த்தம் : காவிரி நதியாகும்.

இங்கு வேதம் ஓதிக்கொண்டிருந்த பிராமணர்கள் அவ் வழியாகத் திருமழிசையாழ்வார் வருவதைக் கண்டு அவர் வேதத்தைக் கேட்க அருகதையற்றவர் என நிறுத்திவிட்டுப் பின்னர் தாங்கள் நிறுத்திய இடத்திலிருந்து ஓதத் தொடங்கியபோது மறந்து போய்த் திண்டாடினர். திருமழிசையாழ்வார் ஒரு தெய்வாம்சம் பொருந்திய ஞானி என்பதை உணர்ந்து அவர் காலடியில் அவர்கள் விழ, ஆழ்வார் ஒரு நெல்லைக் கிள்ளி அவர்கள் விட்ட இடத்தை அடையாளமாகச் சுட்டிக்காட்ட அவர்களுக்கு ஞாபகம் வந்து மறுபடியும் விட்ட இடத்திலிருந்து ஓதத் தொடங் கினர்.

Koviloor Digital Library

தான்தோன்றி மலை

திருச்சியிலிருந்து கரூர் வழியாக ஈரோடு செல்லும் இரயில் பாதையில் கரூருக்கு அருகில் இத்தலம் உள்ளது பஸ் வசதிகள் உண்டு. பெரிய ஊரான இத்தலத்தில் தங்கிப் பெருமாளை வழிபட வசதிகள் உண்டு. மூலவரான பிரசன்ன வெங்கடேசர் குகையில் கிழக்கே நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். தாயாருக்கு பத்மாவதி எனும் திருநாமம். தீர்த்தம்: அமராவதி நதியாகும். இத்தலத்தில் பெருமாள் தானே தோன்றியபடியால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டதாக வரலாறு கூறுகிறது. திருப்பதி செல்ல இயலாதவர்கள் தங்களது பிரார்த்தனையை இங்கேயே செலுத்துகின்றனர்.

குணசேகரம்

திருச்சியிலிருந்து முசிறி வழியாக நாமக்கல் செல்லும் பஸ் பாதையில் இத்தலம் உள்ளது. திருச்சியிலிருந்து முக்கொம்பு சென்றால் அங்கிருந்து ஒரு கி. மீ. தூரம் நடந்தே போய்விடலாம்.

தல மூலவரான ஸ்ரீ அலர்மேல் மங்கா சமேதரான ஸ்ரீநிவாசன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். (கடிகாசலம்) சோளிங்கரைப் போல் இத்தலத்திலும் பேய் பிடித்தவர்கள், மனநோய் உள்ளவர்கள், பில்லி சூனியம் இவற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கே ஒரு மண்டலம் தங்கினால் பெருமாளின் அருளினால் பூரண குணம் ஏற்படுகிறது. திருப்பதி செல்ல வசதியில்லாதவர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளை இத்தலப்பெருமாளுக்கே செலுத்துகின்றனர். மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தி.

Koviloor Digital Library

காட்டுமன்னார்குடி

சிதம்பரத்துக்கு அருகில் உள்ள ஸ்தலம். சென்னையிலிருந்து சென்றால் வடலூர்—சேத்தியா தோப்பு மார்க்கமாக இத்தலத்துக்குச் செல்லலாம். சிதம்பரத்திலிருந்து நிறைய பஸ் வசதிகள் உண்டு.

நாதமுனிகளின் அவதாரத் தலமான இங்குக் கோயில் கொண்டுள்ள பெருமாளான வீரநாராயணர் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயாரின் திருநாமம் மஹாலக்ஷ்மி. தல தீர்த்தம்: காவேரி நதி. இங்குச் சுமாரான வசதிகளுண்டு.

நாமக்கல்

திருச்சியிலிருந்து கரூர் வழியாக சேலம் செல்லும் பாதையில் இத்தலம் உள்ளது. பெரிய ஊராகையால் சகல வசதிகளும் உண்டு.

தல நாயகரான ஸ்ரீநரசிம்மர் குகையில் தோன்றி மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார். மலையின் நடுவில் ரெங்கநாதர் பள்ளிகொண்டிருக்கிறார். தலத் தாயார் நாமகிரித் தாயார் ஆவார். தலத்திர்த்தம்: கல்யாணி புஷ்கரிணி.

இத்தலத்தின் முக்கியமான அம்சம் ஸ்ரீநரசிம்மரின் சந்நிதானத்துக்கு எதிரே நெடிதுயர்ந்து காணப்படும் ஆஞ்சனேயராவார். அவர் இன்னும் வளர்ந்துகொண்டிருக்கிறார் என்றும் அவருக்கு மேலே கூரைபோட்டால் நிற்பதில்லை எனவும் கூறப்படுகிறது. ஆஞ்சநேயர் வளர்ந்து கொண்டிருக்கிறார் என்பதற்கு அடையாளமாக வருடங்கள் குறிப்பிட்டு அருகில் சுவற்றில் பல கோடுகள் போடப் பட்டுள்ளன.

ஸ்ரீ முஷ்ணம்

இத்தலத்துக்குச் சிதம்பரத்திலிருந்தும் விருத்தாசலத்திலிருந்தும் ஏராளமான பஸ்கள் செல்கின்றன.

Koviloor Digital Library

தல நாயகரான பூவராகப்பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். உற்சவருக்கு அச்வத்த நாராயணர். யக்ஞ வராஹர் எனும் திருநாமங்கள். தலத்தாயார் அம்புஜவல்லி என வழங்கப்படுகிறார். தலத் தீர்த்தம் : நித்ய புஷ்கரிணி. விமானம் : சச்சிதானந்தம், வேத விமானமாகும்.

சுயமாகத் தோன்றிய தலங்களில் ஒன்றான இங்குதான் பகவான் ஸ்வேத வராஹ அவதாரம் தரித்து இரண்யா க்ஷனை சம்ஹரித்து பூமிதேவியைக் காப்பாற்றியதாகத் தல புராணம் கூறுகிறது. தலத்துக்குப் பூவராக சேத்திரம் என்று பெயர். சப்த கன்னியர் தாயாருக்குத் தோழிகளாகை யால் அவர்களுக்கும் வழிபாடுகளுண்டு.

சேதுக்கரை

ஆதிசேது என வழங்கப்படும் இத்தலம் இராமநாதபுரத் திலிருந்து 12 கி. மீ. தொலைவில் உள்ளது. தல நாயகரான ஸ்ரீநிவாசப் பெருமாள் நின்ற திருக்கோலத்திலிருந்து அருள்புரிகிறார். தாயாரின் திருநாமம் அலர்மேல் மங்கை யாகும். தலத்தீர்த்தம்: ஹிரண்யநதி மற்றும் அகஸ்தியர் தீர்த்தம்.

இங்குதான் அகத்தியர் கடல்நீரைப் பருகி வற்ற வைத்த தாகக் கூறப்படுகிறது. அவருக்கு வெண்சலவைக் கல்லிலான மிகவும் புராதனமான சிலை ஒன்று உள்ளது. ஹனுமானுக்கும் சந்நிதி உள்ளது. இங்குதான் ஸ்ரீராமர் அணை கட்டிய தாகவும் சமுத்திரத்தில் சுவர் தெரிவதாகவும் அலைமோதுவ தாகவும் கூறப்படுகிறது. இத் தலத்தில் குளிப்பது மிகவும் விசேடம் எனக் கூறப்படுகிறது.

தனுஷ்கோடி

இராமேஸ்வரத்திற்கு அருகிலிருந்த இத்தலம் கடல் கொள்ளப்பட்டு மூழ்கிப் போய்விட்டதால் தற்போது

Koviloor Digital Library

இல்லை. இத்தலப் பெருமாள் ஸ்ரீராமர். நின்ற திருக்கோலம் கொண்டுள்ளார். தாயார்: சீதை. தல தீர்த்தம்: மூன்று சமுத்திரங்களின் சங்கமம்.

இங்குதான் விபீஷணன் இராமனிடம் சரணாகதி அடைந்ததாகக் கூறப்படுகிறது. இராவண வதத்துக்குப் பிறகு விபீஷணனின் வேண்டுகோளுக்கிணங்க இராமர் தான் கட்டிய சேதுவைத் தனது அம்பால் இடித்து அழித்து விட்ட தால் தலத்துக்கு இப்பெயர் ஏற்பட்டது என வரலாறு கூறு கிறது. இத்தல விக்கிரகங்கள் இராமேசுவரம் கோயிலின் பிராகாரத்தில் உள்ளன.

இராமேஸ்வரம்

இராமேஸ்வரம் செல்வதற்கு இரயில் வசதிகளும் பஸ் வசதிகளும் ஏராளம். பெரிய ஊரானபடியால் சகல வசதி களும் உண்டு. தலப் பெருமாளின் திருநாமம் சேது மாதவன், இராமநாதன். நின்ற திருக்கோலத்திலிருந்து அருள் புரிகிறார். தாயாரின் திருநாமம் மகாலக்ஷ்மி. தல தீர்த்தங் கள்: அக்னி தீர்த்தம், சேதுமாதவ தீர்த்தம் மற்றும் சமுத்திரம்.

இராமேஸ்வரக் கோயிலில் இரண்டாவது மூன்றாவது பிராகாரத்தில் இச்சந்நிதி உள்ளது. விஷ்ணு பக்தனான புண்ணிய நிதி எனும் பாண்டியன் ஒரு யாகம் செய்ய, பகவான் மகிழ்ந்து, லக்ஷ்மியை எட்டு வயதுக் கன்னியாகப் பாண்டியனிடம் அனுப்பினார். லக்ஷ்மி தான் அனாதை என்று கூறிப் பாண்டியனிடம் அடைக்கலம் புகுந்தாள்.

ஒரு சமயம் அவள் பூப்பறித்துக்கொண்டிருக்கும் போது பகவான் சிவ பக்தன் வேடம் பூண்டு அவள் கையைப் பிடிக்க, பாண்டியன் அவரைப் பிடித்து மண்டபத்தில் ஓர் அறையில் அடைத்து வைத்தான். அன்றிரவு கனவில் சிவ பக்தன் யார், அந்தக் கன்னி யார் என்பதைப் பகவான்

Koviloor Digital Library

தெரிவிக்கவே, பாண்டியன் உடனே எழுந்து சென்று பார்த்துப்பெருமாளின் திவ்ய தரிசனம் கண்டு மன்னிப்புக் கோரினான். பின்னர், இருவருக்கும் திருமணத்தை வெகு விமரிசையாக நடத்தி வைத்ததாகத் தலவரலாறு கூறுகிறது.

நவபாஷாணம்

இத்தலத்திற்கு இராமநாதபுரத்திலிருந்து பஸ் மூலமாகச் செல்ல வேண்டும்.

ஸ்ரீ ராமர் பூஜித்ததாகக் கூறப்படும் நவக்கிரகங்களுக்காக நவபாஷாணங்கள் சமுத்திரத்தில் முழங்கால் ஆழத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. அதனாலேயே இப்பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. நவக்கிரகங்களை காலை வேளையில் தான் வழிபட முடியும். பின்னர் அவை சமுத்திரத்தில் மூழ்கிவிடும். தலதீர்த்தம்: சக்ர தீர்த்தம் மற்றும் சமுத்திரம்.

மதுரை மற்றும் அதன் சுற்றுவட்டாரத் தலங்கள்

திருக்கூடல் (கூடலழகர் கோயில்)

மதுரையில் ரயில் நிலையம் பஸ் நிலையங்களுக்குச் சமீபத்திலேயே மீனாட்சியம்மன் ஆலயத்திற்குப் போகும் வழியில் உள்ளது இத்தலம். அழகர் கோயிலைப் போல் பிரசித்தி பெறாவிடினும் சிறப்பு வாய்ந்த தலம்.

"அழைப்பன் திருவேங் கடத்தானைக் காண
இழைப்பன் திருக்கூடல் கூட—மழைப்பேர்
அருவி மணிவரன்றி வந்திழிய யானை
வெருவி யரவொடுங்கும் வெற்பு."

என்று திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது இத்தலம். திருமங்கையாழ்வாராலும் மங்களசாசனம் செய்யப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

மூலவரான கூடலழகர் கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் திருக்கோலத்தில் அருள் புரிகிறார். கம்பீரமான உருவம். பெரிய திருமேனி. தாயாருக்கு மதுரவல்லி நாச்சியார், வகுளவல்லி, மரகதவல்லி எனும் திருநாமங்கள். தனிக் கோயில் உண்டு.

தலத் தீர்த்தங்கள்: ஹேம புஷ்கரிணி, சக்ரதீர்த்தம். கிருதமாலா நதி மற்றும் வைகை நதி.

விமானம்: அஷ்டாங்க விமானம்.

உலகமெங்கும் கடும் மழையால் பாதிக்கப்பட்டிருக்கும் போது தமது பக்தர்களைக் காப்பாற்றப் பெருமாள் நான்கு மேகங்களைக் கொண்டு இத்தலத்தின் மேல் மாடங்கள் போல் இருக்கச் செய்து மழையிலிருந்து காத்தாராம். மேகங்கள் கூடியதால் இதற்குத் திருமலைக் கூடல் என்று பெயர் ஏற்பட்டது. வைணவ ஆலயங்களிலேயே இத்தலத்தில் மட்டும்தான் நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளன. இக்கோயிலின் மேல்தளத்திலுள்ள அஷ்டாங்க விமானத்தில் ஒரு தட்டில் பள்ளிகொண்ட பெருமாளும், சூரிய நாராயணரும், அழகிய வண்ணம் பூசப்பட்ட திருமேனிக ளுடன் அழகுறக் காட்சியளிக்கின்றனர்.

பெரியாழ்வார் பல்லாண்டு பாடியது இத்தலப் பெருமாளையே என்பது தனிச்சிறப்பு.

திருமாலிருஞ்சோலை (அழகர் கோயில்)

"அலம்பா வெருட்டாக் கொன்று, திரியும் அரக்கரைக்
குலம்பாழ் படுத்துக் குலவிளக் காய்நின்ற கோன்மலை
சிலம்பார்க்க வந்து, தெய்வ மகளிர்க ளோடும்சீர்ச்
சிலம்பாறு பாயு ம்தென்திரு மாலிருஞ் சோலையே."

எனப் பெரியாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது. ஆண்டாள், திருமங்கையாழ்வார். பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ் வார், ஸ்ரீராமானுஜர், மணவாளமாமுனிகள் ஆகியவரானும் மங்கள சாசனம் செய்யப்பட்ட தலம் இது.

Koviloor Digital Library

மூலவராகிய அழகருக்குக் கள்ளழகர், மாலாலங்காரர்' மாலிருஞ்சோலை நம்பி எனும் பெயர்கள். கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகிறார். தனிக் கோயில் கொண்ட தாயாருக்குச் சுந்தரவல்லி மற்றும் ஸ்ரீ தேவி எனும் திருநாமங்கள். தலத்திர்த்தம்: நூபுரகங்கை எனும் சிலம்பாறு. தலவிருட்சங்கள் ரிஷபகிரி மற்றும் சந்தன மரம். விமானம்: சோமசுந்தர விமானம். மூலவர் மற்றும் உற்சவர் இரு வருக்குமே பஞ்சாயுதங்கள். உற்சவர் . முழுவதுமே தங்கத் தால் செய்யப்பட்டவர் எனக் கூறப்படுகிறது.

இக்கோயிலின் வடபுறமுள்ள பெரிய கதவு வழியாகத் தான் உள்ளே செல்ல முடியும். பதினெட்டாம்படி கோபுர வாசலை கறுப்பு தேவதை காப்பதாகக் கூறப்படுகிறது. அதனைத் தற்போது திறப்பதில்லை. சுற்றிலும் மலை களுடன் காணப்படும் இத்தலத்தில் கோயில் ரிஷபாத்ரி எனும் மலையடிவாரத்தில் உள்ளது. சுற்றிலுமுள்ள மலைகள் பசுக் கூட்டத்தைப் போலவும் கோயிலுக்கு அருகிலுள்ளது. ரிஷபத்தைப் போல்வும் உள்ளதால் அப்பெயர் ஏற்பட்டது. வனங்கள் நிறைந்த பிரதேசமாகையால் வன்கிரி என்ற பெயர் உண்டு.

பெருமாள் வாமன அவதாரத்தில் உலகையளந்த போது பிரம்ம தேவர் தமது கமண்டல நீரை அவரது திருப்பாதத் தில் விட்டு வணங்கிய போது, பகவானது தண்டையில் பட்டுத் தெரித்த நீர் இம் மலைமேல் நதியாக மாறியதால் அதற்குச் சிலம்பாறு எனும் பெயர் ஏற்பட்டதாகக் கூறு கின்றனர். தலதிர்த்தமான சிலம்பாறு உள்ள இடம் மலை மேல் இரண்டரை மைல் தூரத்தில் இருக்கிறதென்றாலும் நல்ல தார் போட்ட ரோடு போடப்பட்டதால் வாகனங் களிலேயே அவ்விடத்துக்குச் செல்லலாம். அங்கே சேத்திர பாலகரின் சந்நிதி உள்ளது. அங்குதான் கோயியின் சாவியை இரவில் ஒப்படைத்துச் செல்ல வேண்டும்.

மதுரை நகரிலிருந்து 20 கி. மீ. தொலைவிலுள்ள அழகர் கோயில் எனும் இத்தலத்திற்கு மதுரையிலிருந்து

Koviloor Digital Library

ஏராளமான பஸ்கள் செல்கின்றன. ஆனால் மலையில் தங்கிப்பெருமாளைச் சேவிக்குமளவுக்கு வசதிகள் இல்லை.

மலைமேல் சிலம்பாறுக்குச் செல்லும் வழியில் முருகனது ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழமுதிர் சோலை என்ற தலமும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

திருமோகூர்

''தாள தாமரைத் தடமணி வயல் திருமோகூர்
நாளும் மேவி நன்கமர்ந்து நின்று அசுரரைத் தகர்க்கும்
தோளும் நான்குடைச், சுரிகுழற் கமலக்கண் கனிவாய்
காள மேகத்தை யன்றிமற் றொன்றிலம் கதியே.''

என நம்மாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது. திருமங்கை ஆழ்வாரும் மங்கள சாசனம் செய்துள்ளார்.

மூலவரான காளமேகப் பெருமாள், வலக்கையில் வரத ஹஸ்தத்துடனும், இடக்கையில் கதாயுதத்துடனும் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். உற்சவர் திரு மோகூர் ஆப்தன் பஞ்சாயுதங்களுடன் காட்சியளிக்கிறார். தனிக்கோயில் கொண்டிருக்கும் தாயாருக்கு மோகூர் வல்லி, மோகனவல்லி, மேகவல்லி எனும் திருநாமங்கள். தலதீர்த்தம் : க்ஷீராப்தி புஷ்கரிணி. விமானம்: கேதகி விமானமாகும். மேலும் இத்தலத்தில் பள்ளிகொண்ட பெருமாளுக்குத் தனிச் சந்நிதி உண்டு. ஆதிசேஷன் தங்கக் கவசங்களுடன் பிரகாசமாகக் காட்சியளிக்கிறார்.

மதுரையிலிருந்து 10 கி. மீ. தொலைவில் உள்ளது இத்தலம். மதுரை — மேலூர் பஸ்களில் சென்று ஒத்தக் கடை என்னும் ஊரில் இறங்கித் திருவாதவூர் செல்லும் பஸ்ஸில் ஒன்றரை கி. மீ. தூரம் சென்று இறங்க வேண்டும். மதுரையிலிருந்து டவுன் பஸ்கள் நேராக இத்தலத்திற்கே செல்கின்றன. இத்தலத்தில் தங்கிப் பெருமாளைச் சேவிக்கு மளவுக்கு வசதிகள் இல்லை.

Koviloor Digital Library

திருக்கோட்டியூர் (கோஷ்டி க்ஷேத்திரம்)

தேவர்கள் அனைவரும் மற்ற எவருக்கும் தெரியாது பெருமாளைச் சேவிக்க கோஷ்டியாக இத்தலத்திற்கு வந்ததால் கோஷ்டிபுரம் எனும் பெயர் ஏற்பட்டு அது மருவி தற்போது கோட்டியூராக வழங்கப்படுகிறது.

மூலவரான உரகமெல்லணையான் கிழக்கு நோக்கி புஜங்க சயனத்திலும், உற்சவரான சௌம்ய நாராயணன் நின்ற கோலத்திலும் அருள்புரிகிறார்கள். தனிக்கோயில் கொண்டுள்ள தாயாருக்குத் திருமா மகள் நாச்சியார் எனும் திருநாமம். தலத்தீர்த்தம்: தேவ புஷ்கரிணி எனும் திருப்பாற் கடல். விமானம் : அஷ்டாங்க விமானம்.

"எங்கள் எம்மிறை எம்பிரான் இமையோர்க்கு
நாயகன் ஏத்தடியவர்
தங்கள் தம்மனத்துப் பிரியாது, அருள்புரிவான்
பொங்குதண் ணருவி புதம்செய்யப்
பொன்களே சிதறும் இலங்கொளி
செங்கமலம் மலரும் திருக்கோட்டி யூரானே."

நான்கு மாடிகளாகக் கட்டப்பட்டுள்ள இக் கோயிலில் முதல் மாடியில் கதம்ப மகரிஷியின் கோரிக்கைக்கிணங்க சயனத் திருக்கோலத்திலுள்ள மூலவர் குடிகொண்டிருக்கிறார். சயனத்திலிருந்தவாறே தமது வலக்கையால் ஆதிசேஷனுக்குப் பெருமாள் அபயமளிக்கும் காட்சி பரவசமூட்டும் வகையிலுள்ளது. மேலும் பெருமாளின் நின்ற, இருந்த, கிடந்த, நடந்த, திருக்கோலங்களைத் தக்ஷிணேச்வர நரசிம்மன், உத்தரேஸ்வர நரசிம்மன், க்ஷீராப்தி நாதன், ஸ்தித நாராயணன் சந்நிதிகளில் காணலாம். தரைமட்டத்தின் கீழ் உள்ள சந்நிதியில் பெருமாளின் கூத்தாடிய திருக்கோலம் நடன கிருஷ்ணன் உருவில் வடிவாக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மூன்றாவது மாடிகளில் நின்ற திருக்கோலமும் இருந்த திருக்கோலமும் உள்ளன. நான்காவது மாடியி

Koviloor Digital Library

லிருந்துதான் திருக்கோட்டியூர் நம்பிகளிடம் திருமந்திர இரகசியத்தை உபதேசமாகப் பெற்று எம்பெருமானார்; குருவின் ஆணையை மீறி, உலக ஜனங்கள் முக்தி பெறும் பொருட்டு அதனைப் பகிரங்கப்படுத்தினாராம். எம்பெருமானார் திருவுருவம் கோபுரத்தின் உச்சியில் ஊரைப் பார்த்த மாதிரி இருப்பதன் ஐதீகம் இதுதான். நான்காவது மாடியிலேயே திருக்கோட்டியூர் நம்பி, உடையவர் சிலைகளும் யும் பக்கத்திலுள்ள பிராகாரத்தில் இரு நரசிம்ம சிலைகளும் உள்ளன. அஷ்டாங்க விமானம் மயனாலும் விஸ்வகர்மா வினாலும் கட்டப்பட்டது.

மிக முக்கியமான திருப்பதி என வழங்கப்படும் இந்தக் கோஷ்டி க்ஷேத்திரம் திருப்பத்தூரிலிருந்து 11 கி. மீ. தொலைவில் பஸ் பாதையிலுள்ளது. காரைக்குடியிலிருந்தும் மதுரையிலிருந்தும் திருப்பத்தூர் வந்து இத்தலத்தை அடைய லாம். இத்தலத்தில் ஒரு சத்திரம் இருக்கிறது.

திருப்புல்லாணி தர்ப்பசயனம்
இராமநாதபுரம்

புல்லர் எனும் மகரிஷி பகவானின் அஷ்டாக்ஷர மந்திரத்தை உச்சரித்து அச்வத்த மரத்தடியில் தவம் புரிந்த போது பகவான் பிரத்தியட்சமானபடியால் இத்தலத்திற்குப் புல்லாரண்யம் எனும் பெயர் ஏற்பட்டதாகத் தல தாலாறு கூறுகிறது.

தர்ப்பசயனத்தில் இருக்கும் ராமனுக்கு லட்சுமணன் ஆதிசேஷனாக நின்று கைங்கர்யம் செய்கிறார். இராமர் சேதுவைக் கட்டியபோது இங்குத் தவம்புரிந்து வந்த கண்வ மகரிஷிக்கு ஒரு வில்லைக் கொடுத்தபடியால் அவருக்கு தெய்வச் சிலையான் எனும் பெயர் ஏற்பட்டதாகக் கூறப் படுகிறது.

Koviloor Digital Library

"இலங்கு முத்தும் பவளக் கொழுந்தும், எழில்தாமரை
புலங்கள் முற்றும் பொழில்சூழ்ந்து, அழகாய புல்லாணி
மேல்
கலங்க லில்லாப் புகழான், கலிய னொலிமாலை
வலங்கொள் தொண்டர்க்கு இடமாவது, பாடில் வைகுந்
தமே,"

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது.

மூலவரான தெய்வச் சிலையார் எனும் கல்யாண ஜெகந்நாதன் நின்ற திருக்கோலத்திலும், சக்கரவர்த்தித் திருமகன் கிழக்கு நோக்கி தர்ப்பசயனக் கோலத்திலும் அருள்புரிகிறார்கள். இத்தலத்தில் கல்யாணவல்லி, பத்மாசினி என இரு தாயார்கள் இருக்கிறார்கள். தலவிருக்ஷம் அச்வத்த மரமாகும். தலத் தீர்த்தங்கள் : ஹேம தீர்த்தம், சக்ர தீர்த்தம் மற்றும் ரத்னாகரத் தீர்த்தமாகும். விமானம் : கல்யாண விமானம்.

புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் இத்தலத்தில் தங்கி, தேவிபட்டினத்தில் நவக்கிரக சாந்தி மற்றும் சர்ப்ப சாந்தி செய்து பின்னர் தர்ப்பசயனரை வழிபட்டுப் பால்பாயசம் செய்து உண்டு சிலகாலம் தங்கினால் புத்திரப்பேறு உண்டாகும் எனப் புராண வரலாறு கூறுகிறது.

இங்கிருந்து 2½ கி.மீ. தொலைவில் ஆதிசேது எனும் சமுத்திர ஸ்நான கட்டம் உள்ளது. இதில் குளிப்பது மிகவும் விசேடம். முதலில் சேதுக்கரைக்குச் சென்று ஆதி சேதுவில் இறங்கிக் கடல் நீராடிவிட்டு பஸ்ஸில் திருப்புல்லாணிக்கோயிலையடைந்து பெருமாளைச் சேவிப்பது மிகவும் விசேடம்.

மானாமதுரை வழியாக இராமநாதபுரம் வந்து அங்கிருந்து திருப்புல்லாணிக்கு பஸ்ஸில் செல்லலாம். இராமநாதபுரத்துக்குச் செல்ல பல ஊர்களிலிருந்து பஸ்வசதிகள் உண்டு.

Koviloor Digital Library

திருமெய்யம் (திருமயம்)

''மையார் கடலும், மணிவரையும் மாமுகிலும்
கொய்யார் குவளையும் காயாவும் போன்றுஇருண்ட
மெய்யானை மெய்ய மலையானைச் சங்கேந்தும்
கையானைக் கைதொழாக் கையல்ல, கண்டாமே',!

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது.

மூலவரான சத்தியகிரிநாதன் எனும் சத்திய மூர்த்தி கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். உற்சவரின் திருநாமம் மெய்யன்பனாகும். தாயாருக்கு உய்ய வந்த நாச்சியார் எனும் திருநாமம். தல விருக்ஷம் பலாமரம். தலதீர்த்தங்கள்: கதம்ப புஷ்கரிணி, சத்திய தீர்த்தம். விமானம் : சத்தியகிரி விமானம்.

ஸ்ரீ ரங்கநாதனைவிடப் பெரிய திருமேனியுடன் பெருமாள் சயனித்திருக்கும் சந்நிதியும் இக்கோயிலில் உண்டு. அவற்றில் பிரம்மா முதலான தேவர்கள் காணப்படுகிறார்கள். மேலும் பல சந்நிதிகள் இக்கோயிலில் உள்ளன.

பெருமாளைத் திருட்டுத்தனமாக அசுரர்கள் தாக்க வந்தபோது ஆதிசேஷன் விஷக்காற்றை விட்டுக் கொன்றதாகவும் அன்றிலிருந்து அவரது பாதுகாப்பில் இத்தலம் இருப்பதாகவும் புராண வரலாறு கூறுகிறது.

அழகிய வேலைப்பாடுகளுள்ள குடைவரைக் கோயில் கொண்ட இத்தலம் புதுக்கோட்டைக்கும் காரைக்குடிக்கும் இடையே உள்ளது. திருச்சியிலிருந்து பஸ்வசதிகள் உண்டு. இத்தலத்தில் தங்கி வழிபட வசதிகள் இல்லை.

ஸ்ரீவில்லிபுத்தூர்

வில்லி, புத்தன் எனும் இருவேடுவ அரசர்களினால் உருவாக்கப்பட்டதால் இத்தலத்துக்கு வில்லிபுத்தூர் எனும் பெயர் ஏற்பட்டது.

Koviloor Digital Library

"மென்னடை அன்னம் பரந்து விளையாடும்
 வில்லிபுத் தூர்உறை வான் தன்
பொன்னடி காண்பதோர் ஆசையி னால் என்
 பொருகயற் கண்ணிணை துஞ்சா
இன்னடி சிலோடு பாலமு தூட்டி
 எடுத்த என் கோலக் கிளியை
உன்னோடு தோழமை கொள்ளுவன் குயிலே!
 உலகளந் தான்வரக் கூவாய்!''

என ஆண்டாளால் பாடப்பெற்ற தலமிது. மேலும் பெரியாழ்வாராலும் மங்களசாசனம் செய்யப்பட்ட தலம்.

மூலவர் வடபத்ரசாயியான ரங்கமன்னார், கிழக்கு நோக்கி புஜங்க சயனத்தில் அருள் புரிகிறார். பெருமாளைப் பாடி அவரை மணந்த ஆண்டாளே இக்கோயிலின் தாயார். அவருக்குச் கோதை நாச்சியார் என்றும் பெயருண்டு. தல தீர்த்தம் : திருமுக்குளம். விமானம் : ஸம்சன விமானமாகும். இத்தலம் பெரியாழ்வாரும், ஆண்டாளும் அவதரித்த இடமாகும். பெரியாழ்வார் பெருமாளுக்கு அணிவிப்பதற்காகத் தொடுத்த மாலையை அவருக்குத் தெரியாமல் ஆண்டாள் அணிந்து அழகு பார்த்துவிட்டுத் திருப்பி வைத்துவிடும் நேரத்தில், அச்சமயம் அதனைப் பார்த்துவிட்ட பெரியாழ்வார் அவளைக் கண்டித்து விட்டு வேறொரு மாலை புனைந்து பெருமாளுக்குச் சூட்ட, அன்றிரவு பெருமாள் ஆழ்வாரின் கனவில் தோன்றி, ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையே வேண்டும் என்று கூற, அன்று முதல் கோதை நாச்சியாருக்குச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி எனும் பெயர் உண்டாயிற்று.

பின்னர், பெருமாளின் ஆணைப்படி ஆண்டாளை அரங்கநாதர் இத்தலத்தில் மணந்துகொண்டதாகத் தல வரலாறு கூறுகிறது. மூலவரான ரெங்க மன்னாருக்கு வலப்புறம் ஆண்டாளும் இடப்புறம் கருடாழ்வாரும் உள்ளனர். பெருமாளுடன் கருடாழ்வார் நிற்பது ஒரு சிறப்பான

Koviloor Digital Library

அம்சமாகும். வடபத்ரசாயியாக இருந்தாலும் ஆதிசேஷனும் மூலவருடன் காணப்படுகிறார். மேலும் பெருமாளின் நாபிக் கமலத்திலிருந்து பிரம்மாவும், ஸ்ரீ தேவி மற்றும் வேடுவ அரசர்களான வில்லி, புத்தன் ஆகியோரும் காணப்படுகிறார்கள். இத்தலத்தில் பெரியாழ்வாருக்கும் ஒரு சந்நிதி உண்டு. ஆண்டாளைப்பெரியாழ்வார் கண்டெடுத்த நந்தவனத்தில் துளசிச் செடியருகில் ஆண்டாள் சந்நிதியும் இருக்கிறது. இத் தலத்தில் ஸ்ரீரங்கம் போல் அரையர் சேவையும் நடக்கிறது.

விருதுநகர்—தென்காசி இரயில் பாதையில் ஸ்ரீவில்லிபுத்தூர் எனும் இரயில் நிலையத்திலிருந்து 4கி. மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. பல இடங்களிலிருந்தும் ஏராளமான பேருந்துகள் வந்து செல்கின்றன. பெரிய ஊராகையால் தங்கவும் சாப்பிடவும் வசதிகள் உண்டு. மலை மீது ஸ்ரீநிவாசருக்கு ஒரு கோயில் உள்ளது.

திருத்தண் கால்

"பொங்கார்மெல் விளங்கொங்கை பொன்னே பூப்ப
பொருகயல் கண் நீரரும்பப் போந்து நின்று
செங்கால மடப்புறவம் பெடைக்குப் பேசும்
சிறு குரலுக்கு உடலுருகிச் சிந்தித்து ஆங்கே
தண்காலும் தண் குடந்தை நகரும் பாடித்
தண்கோவ லூர்பாடி யாடக் கேட்டு
நங்காய்!நங் குடிக்குஇதுவோ நன்மை? என்ன
நறையூரும் பாடுவாள் நவில்நின் றாளே,"

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலமிது. பூதத்தாழ்வாராலும் மங்கள சாசனம் செய்யப்பட்டுள்ளது.

மூலவரான நின்ற நாராயணன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்திலும் உற்சவரான திருத்தண் காலப்பனும் நின்ற திருக்கோலத்திலும் அருள்புரிகின்றனர். தனிக்கோயில் தாயாரான செங்கமலத் தாயாருக்கு அன்ன நாயகி, அனந்த

Koviloor Digital Library

நாயகி அமிருத நாயகி, ஜாம்பவதி என்று பல திருநாமங்களும் உண்டு.

குன்றின்மேலுள்ள கோயிலிலுள்ள நின்ற நாராயணன் சந்நிதியில் வலப்புறம் அன்ன நாயகி எனும் ஸ்ரீதேவியும் அமிருத நாயகி எனும் பூதேவியும் அனந்த நாயகி எனும் நீளாதேவியும் ஜாம்பவதியும் எழுந்தருளியிருக்கின்றனர். அச்சிற்பங்கள் யாவும் சுதை வேலைப்பாட்டால் செய்யப்பட்டு வண்ணம் பூசப்பட்டவையாகையால் திருமஞ்சன சேவை கிடையாது. கீழிருக்கும் கிடந்த பெருமாளது திருமேனியும் அவ்வாறே யுள்ளது. ஆனால் செங்கமலத் தாயாருக்கு எண்ணெய்க் காப்புத் திருமஞ்சனம் செய்யப்படுகிறது. கருடன் சர்ப்பத்துடனும் அமிருத கலசத்துடனும் எழுந்தருளியிருக்கிறார். முருகக் கடவுள் இங்கு தங்கியிருந்ததால் திருத்தங்கல் எனும் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்வர்.

இத்தலத்தில்தான் கிருஷ்ணபரமாத்மாவின் பேரனான அநிருத்தன் உஷையை மணந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. ஏகாதசி உபவாசம் இருந்து துவாதசியில் எண்ணெய் முழுக்கு எடுத்து வந்த சந்திரகேது எனும் மன்னன் புலியாகப் பிறந்து இத் தலத்தில் வந்து பூர்வஜன்ம ஞாபகம் பெற்று, பகவானைத் தரிசித்து மோட்சமடைந்தான். ஸ்ரீதேவி இத் தலத்தில் தங்கிப் பகவானை நோக்கித் தவம் புரிந்து அவருக்கு மிகவும் பிரியமானவளானதால் இத் தலத்துக்குத் திருத்தங்கல், ஸ்ரீபுரம் எனும் பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம், எனக் கூறப்படுகிறது.

விருதுநகர்—தென்காசி இரயில் பாதையில் இத்தலம் உள்ளது. திருவில்லிப்புத்தூர், விருதுநகர் ஆகிய இடங்களிலிருந்து நிறைய பஸ்வசதிகள் உண்டு. சாப்பாட்டு வசதிகளும், சத்திரங்களும் இத்தலத்தில் உள்ளதால் தங்கி, பகவானை வழிபடலாம்.

Koviloor Digital Library

திருநெல்வேலியும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள தலங்களும்

திருக்குறுங்குடி (வாமன க்ஷேத்திரம்)

இங்கு எழுந்தருளியுள்ள பெருமாள் வாமனமூர்த்தி என்று கருதப்படுகிறார். அதனாலேயே தல மூலவருக்கு நின்ற நம்பி என்று பெயர். குறுங்குடி நம்பி, இருந்த நம்பி, வடுகநம்பி, மலைமேல் நம்பி என்றெல்லாம் பல பெயர்களையும் சூட்டி அன்பாக அழைக்கின்றனர். நின்ற நம்பி கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் அருள்புரிகிறார். தாயாருக்கு இரு தனிக் கோயில்கள் உண்டு. அவரது திருநாமம் குறுங்குடிவல்லி நாச்சியார் ஆகும். இத்தலந் தீர்த்தங்கள்: திருப்பாற்கடல், பஞ்சதுறை மற்றுப் சிந்துநதி. விமானம்: பஞ்சகேதக விமானம்.

திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது இத்தலம். இவரைத் தவிர, பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், மற்றும் நம்மாழ்வார் ஆகியோராலும் மங்களசாசனம் செய்யப்பட்ட தலம் இது. 'திருமங்கையாழ்வார் பரமபத்தி தலம் இது. ஆகையால் ஊருக்குக் கிழக்கே ஆற்றின் அருகில் வயல்வெளிகளில் திருமங்கையாழ்வார் திருவரசு எனும் சிறிய தொரு கோயிலுள்ளது.

நின்றநம்பி, கிடந்தநம்பி ஆகிய பெருமாள்களின் சந்நிதிகளுக்கு நடுவே சிவனுக்கும் பைரவருக்கும் சந்நிதிகள் இருக்கின்றன. தல மடப்பள்ளி பிரசாதங்களே சிவபெருமானுக்கும் நிவேதனம் செய்யப்படுகின்றன. இருந்த நம்பிக்கு வைகுந்தநாதன் எனும் பெயரும் உண்டு. தனிக்கோயில் நாச்சியார்களின் உற்சவர்கள் பெருமாளிடன் இருப்பதால் தாயார் சந்நிதிகளில் தனியாக அர்ச்சனை செய்வதில்லை. சிவபெருமானைப் பிடித்திருந்த பிரம்மஹத்தி தோஷத்தின் காரணமாக அவரது கையில் ஒட்டியிருந்த கபாலத்தில் திருக்குறுங்குடிவல்லி பிட்சையிட அந்தப் பாவம் நீங்கிய

Koviloor Digital Library

தாகவும், பின் பகவானது உபதேசத்தின் பேரில் சிவன் சுதர்சன மந்திரத்தை உச்சரித்துச் சுத்தமடைந்ததாகவும் தலவரலாறு கூறுகிறது. இக்கோயிலில் மணவாள முனிகளுக்கும் சந்நிதி உள்ளது.

இக்கோயிலிலிருந்து மூன்று பர்லாங் தொலைவில் திருப்பாற்கடல் என்னும் ஓடையின் கரையில் திருப்பாற்கடல் நம்பியின் சந்நிதி உள்ளது. மேலும் இக் கோயிலிலிருந்து 9 கி.மீ. தொலைவில் ஒரு குன்றின் மேல் நம்பியின் சந்நிதி உள்ளது.

உடையவரைக் கொல்ல விரோதிகள் திட்டமிட்டபோ வடுக நம்பிப் பெருமாள் அவரை ஊரிலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் திருப்பாற்கடல் ஆற்றின் நடுவிலுள்ள திருப்பரிவட்டப் பாறை எனும் பாறையின்மீது கிடத்திக் காப்பாற்றினாராம். அப்பாறைமேல் உடையவருக்கு ஒரு சந்நிதி உள்ளது. உடையவர் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க பெருமான் சீடராக இருந்து அவரிடம் மந்திர உபதேசம் பெற்றதால் அவருக்கு வைஷ்ணவ நம்பி எனும் பெயர் ஏற்பட்டது.

வராக புராணத்தில் 'நம்பாடுவான்' எனும் பக்தனைக் கொன்று தின்ன வந்த பிரம்ம இராட்சசனுக்குத் தன் புண்ணியத்தில் ஒரு பாகத்தைக் கொடுத்து இத் தலத்தை இரட்சித்ததாகவும் கூறப்படுகிறது. யமபட்டணம் இத் தலத்திலிருந்து கூப்பிடும் தூரத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த ஐதிகத்தை இன்னும் கைசிக ஏகாதசியன்று இரவு நாடகமாக நடத்தி வருகிறார்கள். இந்தச் சந்நிதி திருக்குறுங்குடி ஜீயர் நிர்வாகத்திற்குட்பட்டது.

தன்னைக் கொல்ல வந்த இராட்சசனைப் பார்த்து ஒரு பிராமணர் அது பாவம் எனக்கூற, அதற்கு அவன் அது தனது குலத்தொழில் எனக்கூறி விவாதிக்க, இருவருக்கும் வாக்குவாதம் முற்றியதாகவும், அப்போது பகவான் வேடனாக வந்து, அவர்களுக்கு உபதேசமளித்து இருவரை

Koviloor Digital Library

யும் திருப்பாற்கடலில் குளித்துவிட்டு வரச்சொல்ல, அவர்கள் குளித்துவிட்டு வந்து அகஸ்திய மாமுனிவரை வணங்கித் துவேஷம் நீங்கிச் சுவர்க்க பதவி அடைந்ததாகத் தல புராணம் கூறுகிறது. வாமன அவதாரத்தில் உலகையளந்த போது அவரது திருவடிச் சதங்கையிலிருந்து சிந்திய நீரே சிந்து நதியாக ஓடுவதாகவும் தல வரலாறு கூறுகிறது.

ராமானுஜக் கூடங்களும் மடங்களும், தண்ணீர்ப் பந்தல் களும் ஓட்டல்களும் இருந்தாலும் இத்தலத்தில் அவ்வளவு வசதிகள் இல்லை. திருநெல்வேலியிலிருந்து நாங்குனேரிக்கு வந்து பஸ் மாறி எட்டுமைல் தொலைவிலுள்ள இத்தலத்தை யடையலாம். நாங்குநேரியிலிருந்து களக்காடு போயும் பஸ் மார்க்கமாக இத்தலத்தையடையலாம்.

திருச்சிரீவர மங்கை (நான்குனேரி வானமாமலை)

இத்தல மூலவரான தோதாத்ரிநாதன் (வானமாமலை) கிழக்கு நோக்கி விற்றிருக்கும் கோலத்தில் அருள்புரிகிறார். இருபுறமும் உபய நாச்சியார்கள் உள்ளனர். தவிர, சிரீவர மங்கைத் தாயாரும் அருகில் உள்ளார். நாச்சியாருக்கென இரு தனிக்கோயில்கள் உள்ளன. உற்சவமூர்த்தியின் பெயர் தெய்வநாயகன். தலத் தீர்த்தங்கள்: இந்திர தீர்த்தம், சேற்றுத் தாமரை தீர்த்தம். விமானம்: நந்தவர்த்தன விமானம்.

திருநெல்வேலியிலிருந்து திருக்குறுங்குடி செல்லும் வழியில் நாங்குனேரியில் இறங்கித் திருச்சிரீவரமங்கை நகர் என வழங்கப்படும் இத்தலத்தைத் தரிசிக்கலாம். ராமானுஜக் கூடங்கள், சத்திரங்கள், ஹோட்டல்கள் போன்ற வசதிகள் உண்டு.

தானாகத் தோன்றிய தலம் இந்தத் த்லம் எனக் கூறப்படுகிறது. இங்கு பெருமாளுக்குத் தினமும் தைல அபிஷேகம் செய்கிறார்கள். இந்த எண்ணெயைச் சுமார்

Koviloor Digital Library

இருபத்தைந்தடி நீளமும் பதினைந்தடி அகலமுமுள்ள கிணற்றில் ஊற்றுகிறார்கள். அதிலிருக்கும் எண்ணெயை நம்பிக்கையுடன் உண்டால் சர்வ ரோகமும் நீங்கும் என நம்பப்படுகிறது.

"அருளப் புட்கொடி சக்க ரப்படை
வான நாட! எம் கார்முகில் வண்ணா!
பொருளல் லாத எனனைப் பொருளாக்கி
அடிமை கொண்டாய்!
தெருள்கொள் நான்மறை வல்லவர் பலர் வாழ்
சிரீவர மங்கல நகர்க்கு
அருள்செய்து அங்கிருந்தாய்!
அறியேன் ஒரு கைம் மாறே!"

என நம்மாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது.

மதுகைடபர்கள் பகவானால் அழிக்கப்பட்ட போது பூமாதேவி தமது இயல்பான தாய்மையை இழந்து வருத்தப் பட்டு, பகவானை நோக்கித் தவம் செய்ய, பகவான் இவ் விடத்தில் பிரத்தியக்ஷமானாராம். பூமாதேவியின் விருப்பத் துக்கிணங்க வைகுந்தத்தில் வீற்றிருப்பதைப் போல் ஸ்ரீதேவி பூதேவி ஆகிய இரு தேவியர்களுடன் இத்தலத்தில் எழுந் தருளியதால் பூமி புண்ணியமடைந்ததாகவும், தேவ கன்னிகைகளான ஊர்வசி, திலோத்தமை, ஆகியோர் பகவானை நோக்கி இத்தலத்தில் தவமிருநது அவரது அருள் பெற்று அவருக்கு இருபக்கத்திலும் நின்று வெண்சாமரம் வீசும் பாக்கியத்தை அடைந்ததாகவும் தல வரலாறு கூறு கிறது. இத்தலத்தில் அவர்களிருவரும் பெருமாளுக்கு இன்றும் வெண்சாமரம் வீசிக்கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது.

சிந்து தேசத்தரசன் குசாஸன மகரிஷியின் கோபத்துக் காளாகிச் சபிக்கப்பட்டு நாய் உருவையடைந்து இத் தலத்தி லுள்ள சேற்றுத் தாமரைக் குளத்தில் குளித்ததால் உண்மை உருவை அடைந்ததாகவும் தல வரலாறு கூறுகிறது. இங்

Koviloor Digital Library

குள்ள சடாரியில் ஸ்ரீ சடகோபனின் திருவுருவம் பொறிக்கப் பட்டிருப்பது மிகவும் விசேடமானதாகும்.

ஸ்ரீமணவாள மாமுனிகளால் ஸ்தாபிக்கப் பெற்ற அஷ்ட திக் கஜங்களில் ஒருவரான வான மாமலை ஜீயர் இங்குதான் எழுந்தருளியுள்ளார். இங்குள்ள சடாரியே இவருடைய சந்நிதி யாகக் கருதப்படுகிறது. வானமாமலை மடத்தின் தலைமை இடமான இத்தலத்தில் ஸ்ரீ ஜீயர் ஸ்மாமி ஐப்பசி மூலத்தன்று மணவாள மாமுனிகளின் தங்க மோதிரத்தையணிந்து கொண்டு ஸ்ரீ.பாத தீர்த்தம் சாதிக்கிறார்.

திருவைகுன்டம் (ஸ்ரீவைகுண்டம்)

திருவைகுண்டம், திருவரகுணமங்கை, திருப்புளியங் குடி, திருத்தொலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி), திருக்குளந்தை, திருக்கோளூர், திருப்பேரை, திருக்குரு கூர் இந்த எட்டுத் திருத்தலங்களில் உள்ள ஒன்பது திவ்ய தேசங்களும் ஆழ்வார் நவ திருப்பதிகள் என்று போற்றப்படு கின்றன.

திருவைகுண்டத்தல மூலவரான ஸ்ரீ வைகுண்டநாதன் எனும் கள்ளபிரான் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தி லிருந்து அருள் புரிகிறார். தாயார்களுக்கு வைகுந்தவல்லி என்றும் பூதேவி என்றும் பெயர்கள். இருவரும் தனித்தனிக் கோயில்களில் எழுந்தருளியுள்ளனர். தலத்தீர்த்தங்கள்: பிருகு தீர்த்தம், தாமிரபரணி நதி. விமானம்: சந்திர விமானம். ஆதிசேஷன் குடைபிடிக்க பகவான் நின்றிருப்பது மிகவும் சிறப்பான அம்சம்.

"எங்கள்கண் முகப்பே உலகர்க ளெல்லாம்
இணையடி தொழுதெழுந் திறைஞ்சித்
தங்களன் பாரத் தமதுசொல் வலத்தால்
தலைத் தலைச் சிறந்துபூ சிப்ப

Koviloor Digital Library

திங்கள் சேர் மாடத் திருப்புளிங் குடியாய்!
திருவைகுந் தத்துள்ளாய்! தேவா!
இங்கண்மா ஞாலத் திதனுளும் ஒரு நாள்
இருந்திடாய், வீற்றிடங் கொண்டே!''

என நம்மாழ்வாரால் பாடப்பெற்ற இத்தலம், ஆழ்வார் நவ திருப்பதிகளில் ஒன்றாகும்.

தான் திருடிய பொருள்களில் பாதியை வைகுண்ட நாதனுக்குக் காணிக்கையாக்கி வாழ்ந்து வந்த காலதூஷகன் எனும் கள்வன் ஒரு சமயம் அரண்மனையில் திருடும் போது கையும் களவுமாக மாட்டிக் கொண்டான். தண்டனைக்குத் தப்ப அவன் பகவானைப் பிரார்த்திக்க, அவரும் கள்வனது வேடம் பூண்டு வந்து அரசனுக்குத் தத்துவங்களை உப தேசித்ததால், அரசன் கால தூஷகனை யோகி என்றே நினைத்துவிட்டான். பின்னர், பகவான் அவர்கள் முன்னே பிரத்தியட்சமாகி அவ்விருவருக்கும் நட்பை உண்டாக்கினார் என்றும், அதனால் பெருமானுக்கு கள்ளர் பிரான் எனும் திரு நாமம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஒரு சமயம் சோமகன் எனும் அசுரன் பிரம்ம தேவனுடைய சிருஷ்டி ஞானத்தைக் கவர்ந்து சென்றுவிட நான் முகனும் இத்தலத்தில் வந்து பெருமானை நோக்கித் தவம் புரிந்து அவரது அருளால் தமது ஞானத்தைத் திரும்பப் பெற்ற தாகத் தல வரலாறு கூறுகிறது.

இத்தலத்தை ஸ்ரீ மணவாள மாமுனிகளும் மங்கள சாசனம் செய்துள்ளார். திருநெல்வேலி-திருச் செந்தூர் ரயில் பாதை மற்றும் பஸ் பாதையில் இத்தலம் இருக்கிறது. இரயில் நிலையத்திலிருந்து கோயில் ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது. பஸ் கோயில் வாசலிலேயே நிற்கிறது. சாப்பாடு வசதிகள் இருந்தாலும் தங்குவதற்கான வசதிகள் இங்கு இல்லை.

Koviloor Digital Library

திருவரகுணமங்கை (நத்தம்)

"புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கை
யிருந்துவை குந்தத்துள் நின்று
தெளித்தஎன் சிந்தை யகங்கழி யாதே
என்னையாள் வாய்!எனக் கருளி
நளிந்த சீருலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள்கூத் தாடிநின்றார்ப்பப்
பளிங்குநீர் முகிலின் பவளம்போல் கனிவாய்
சிவப்பநீ காணவா ராயே!"

என நம்மாழ்வாரால் பாடப் பெற்ற தலம். மாமுனிகளால் மங்களா சாசனம் செய்யப்பட்ட திருத்தலமுமாகும்.

மூலவரான விஜயாசனப் பெருமாள் ஆதிசேஷன் குடை பிடிக்கக் கிழக்கு நோக்கி வீற்றிருந்த திருக்கோலம். தாயார் வரகுணவல்லித் தாயார் மற்றும் உபய நாச்சியார். தல தீர்த்தங்கள்: அக்னி தீர்த்தம், தேவ புஷ்கரிணி. விமானம்: விஜயகோடி விமானம்.

வேதவித்து எனும் பிராமணன் பகவானை நோக்கித் தவமிருந்ததன் பயனாக அவர் அவன் முன்னே தரிசனம் தர, அவனது விருப்பப்படி விஜயாசனர் எனும் திருநாமம் அவருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

சுற்றிலும் வீடுகளே இல்லாத தனியிடத்தில் நிற்கும் இக்கோயில் திருவைகுண்டத்திலிருந்து திருநெல்வேலி நோக்கிச் செல்லும் பாதையில் 4 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. நத்தம் என்றால்தான் பலருக்குத் தெரியும் பகவானைத் தரிசிக்க முன்கூட்டியே ஏற்பாடுகள் செய்து கொண்டு செல்வது நல்லது.

திருப்புளிங்குடி

மூலவரான காய்சினவேந்தன் கிழக்கு நோக்கிப் புஜங்க சயனத்தில் அருள்புரிகிறார். தாயார் மலர்மகள் நாச்சியார்,

Koviloor Digital Library

ஸ்ரீமகள் நாச்சியார்; பெரிய திருவுருவங்கள். புளிங்குடிவல்லி எனும் உற்சவத் தாயாரும் உண்டு. தல தீர்த்தம்: வருண தீர்த்தம். விமானம்: வேதஸார விமானம்.

பெருமாளின் பாதங்களை வெளிப் பிராகாரத்திலிருந்து ஜன்னல் வழியாகப் பார்க்கலாம். சந்நிதியிலிருந்து ஒரு பாதத்தைத்தான் பார்க்க முடியும். அவரது திருவயிற்றி லிருந்து கிளம்பிச் செல்லும் தாமரைக்கொடி அவற்றிலுள்ள பிரம்மாவின் தாமரை மலருடன் சேருகிறது. தேவேந்திர னுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் இத்தலத்தில்தான் நீங்கி விமோசனமடைந்தாகத் தலபுராணம் கூறுகிறது. யக்ஞசர்மா எனும் பிராமணர் வசிஷ்டப் புத்திரர்களின் சாபத் தினால் ராட்சசனாகி அலைந்து பகவான் திருவடிகள் தன்மேல் பட இத்தலத்தில் சாபவிமோசனமடைந்ததாகவும் தலபுராணம் கூறுகிறது.

"பண்டைநா ளரலே நின்திரு வருளும்
பங்கயத் தாள்திரு வருளும்
கொண்டுநின் கோயில் சீய்த்துப் பல் படிகால்
குடிகுடி வழி வந்துஆட் செய்யும்
தொண்டரோர்க் கருளிச் சோதிவாய் திறந்து உஸ
தாமரைக் கண்களாய் நோக்காய்
தெண்திரைப் பொருநல் தண்பனை சூழ்ந்த
திளப்புளிங்குடிக் கிடந் தானே!"

என்று நம்மாழ்வாரால் பாடப்பெற்றது, ஆழ்வார் நவ திருப்பதிகளில் ஒன்றான இத்தலம். திருவரகுணமங்கை யிலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. திரு வைகுண்டத்திலிருந்து இத்தலத்திற்கு வரலாம்.

திருத்தொலைவில்லிமங்கலம் (இரட்டைத் திருப்பதிகள்)

"நோக்கும் பக்கமெல் லாம்க ரும் பொடு
செந்நெ லோங்குசெந் தாமரை
வாய்க்கும் தண் பொரு நல்வ டகரை
வண்தொ லைவில்லி மங்கலம்

Koviloor Digital Library

"சேர்ந்து மேக்குயர்ந்திலவைக் கர் மறு
சேர்ப்பி வக்ஷ்வாக் காவிறாடும்
வாட்கொடைக் காவலும் காமிலவர்வ:
காமமே, இவள் அன்னைமீர்!"

என நம்மாழ்வாரால் பாடப்பெற்ற இத்தலத்தில் இரு கோயில்கள் உள்ளன. ஆழ்வார் நவ திருப்பதியில் இவ்விரு கோயில்களும் சேர்ந்தவை. இரு கோயில்களும் இருந்தாலும் இரண்டுமே ஒரே திவ்ய தேசமாகக் கருதப் படுகிறது. ஆனால் திருப்பதிகளைக் கணக்கிடும் போது இரண்டாகவே கணக்கிடப் படுகிறது. இத்தலத்தை மணவாள மாமுனிகளும் மங்களா சாசனம் செய்துள்ளார்.

திருக்குளந்தையிலிருந்து ஒரு கி.மீ. தொலைவிலுள்ள மங்கலக்குறிச்சி எனும் ஊரையடைந்து அவ்வூர் வாய்க்கால் கரைமேலே உள்ள கரடுமுரடான பாதை வழியாக மூன்று கி.மீ. நடந்து வாய்க்காலைக் கடந்தால் இத்தலத்தை அடையலாம். ஆழ்வார் திருநகரியிலிருந்து 3 கி. மீ. கிழக்கே வந்து தாமிரபரணியைக் கடந்தாலும் இத்தலத்தை அடையலாம்.

முதல் கோயில் தாமிரபரணி நதிக்கரையிலுள்ளது. மூலவராகிய ஸ்ரீநிவாசன் என்னும் தேவப்பிரான் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் உபய நாச்சியார்களுடன் அருள்புரிந்து வருகிறார்.

இரண்டாவது கோயில் வாய்க்கால் கரையிலேயே உள்ளது. மூலவரான அரவிந்தலோசனன் எனும் செந்தாமரைக் கண்ணன் கிழக்கு நோக்கி வீற்றிருந்த கோலத்தில் அருள்புரிகிறார். தாயாருக்குக் கருந்தடங்கண்ணி நாச்சியார் எனும் திருநாமம். தலதீர்த்தம்: வருண தீர்த்தம், தாமிர பரணியாறு. விமானம்: குமுத விமானம்.

ஆத்திரேய சுப்பிரபர் எனும் முனிவர் இத்தலத்தில் யாகசாலை ஒன்றை நிர்மாணிக்க எண்ணி, இவ்விடத்தை

Koviloor Digital Library

ஆராய்ந்தபோது பிரகாசத்துடன் காணப்பட்ட துலாக்கோல் எனப்படும் தொலையும் வில்லும் காணப்பட்டது. அதைக் கண்டு பிரமிப்படைந்து அவற்றை எடுக்க முற்பட்டபோது, தொலை பெண்ணாகவும், வில் ஆணாகவும் மாறின. அவர்கள் குபேர சாபத்தினால் அவ்வுருக்களை யடைந்து பின்னர் இத்தலத்தில் சாப விமோசனமடைந் தனர். தொலையும் வில்லும் சாபவிமோசனமடைந்தபடியால் இத்தலத்துக்கு தொலைவில் மங்கலம் எனும் பெயர் ஏற்பட்ட தாக தலபுராணம் கூறுகிறது.

இரண்டு கோயில்கள் இருப்பதால் இரட்டைத் திருப் பதிகள் என அழைக்கப்படும் இத்தலத்தில்-தான் அஸ்வினி தேவர்கள் மற்ற தேவர்களுக்கு ஈடாக அவிர்ப்பாகத்தைப் பெறும் பேற்றை பகவானது கிருபையால் அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

சுற்றிலும் வெகு தூரத்துக்கு வீடுகளோ மனித நடமாட் டமோ இல்லாது இருக்கும் இத்தலத்துக்குச் செல்லவேண்டு மானால் அர்ச்சகரிடம் முன்கூட்டியே சொல்லி அவரையும் அழைத்துக் கொண்டு செல்வது நல்லது.

திருக் குளந்தை (பெருங்குளம்)

இத்தல மூலவரான ஸ்ரீநிவாசன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். உற்சவருக்கு மாயக் கூத்தன் எனும் திருநாமம். தாயார் அலமேலு மங்கை, குளந்தை வல்லி எனும் உபய நாச்சியார்கள். தலத்தீர்த்தம்: பெருங்குளம். விமானம்: ஆனந்த நிலய விமானம். கருடனும் உற்சவராகப் பெருமாளுடன் இருக்கிறார்.

வேதசாரன் எனும் பிராமணருக்குப் பிறந்த கமலாவதி எனும் கன்னிகை, பெருமாளையே தனது கணவனாக வரித்துத் தவம் மேற்கொண்டதன் பயனாக மகாவிஷ்ணு அவளை மணம்புரிந்து கொண்டார். பாலிகை தவம் செய்த

Koviloor Digital Library

வனம் என்பதால் இவ்விடத்துக்குப் பாலிகை வனம் எனும் பெயர் ஏற்பட்டதாகத் தல புராணம் கூறுகிறது.

மேலும் இத்தலத்தில் உலகத்தை ஆட்டிப்படைத்த அச்மசாரன் எனும் அரக்கனை மாயாயுத்தத்தில் அவனது கால்களைப் பற்றி இழுத்துத் தரைமீது அடித்து அவன் மேல் நாட்டியமாடி வதம் செய்ததால் பெருமானுக்கு மாயக் கூத்தன் எனும் பெயர் ஏற்பட்டதாகவும் தலபுராணம் கூறுகிறது.

"கூடச் சென்றேன்இனி யென்கொ டுக்கேன்?
கோல்வளை நெஞ்சத் தொடக்க மெல்லாம்
பீடற் றொழிய இழந்து, வைகல்
பல்வளை யார் முன் பரிச ழிந்தேன்
மாடக் கொடிமதிள் தென்கு ளத்தை
வண்குட பால்நின்ற மாயக் கூத்தன்
ஆடற் பறவை யுயர்த்த வெல்போர்
ஆழி வலவனை ஆதரித்தே.'!

என நம்மாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது. ஆழ்வார் நவதிருப்பதிகளில் இதுவும் ஒன்றாகும்.

திருவைகுண்டத்திலிருந்து வடகிழக்கில் ஏழு மைல் தொலைவிலும் திருப்புளிங்குடியிலிருந்து ஆறுமைல் தொலைவிலும் பஸ்மார்க்கமாக இத்தலத்தையடையலாம். ஒரு வசதியும் இல்லாத இத்தலத்தில் அர்ச்சகர் சிலசமயம் தொலைவில்லி மங்கலத்துக்குச் சென்று விடுவதால் அவர் இருக்கும் சமயமாகப்பார்த்துப் பெருமாளைச் சேவிக்கச் செல்ல வேண்டும்.

திருக்கோளூர்

"உண்ணும் சோறு பருகு நீர்,
தின்னும் வெற் றிலையுமெல்லாம்
கண்ணன் எம்பெருமான், என்றென்றே
கண்கள் நீர்மல்கி

Koviloor Digital Library

மண்ணினுள் அவன்சீர், வளம் மிக்
கவனூர் வினவித்
திண்ணம் என்இள மான்புகு
மூர்திருக் கோளூரே.''

என நம்மாழ்வாரால் பாடப் பெற்ற இத்தலமும் ஆழ்வார் நவ திருப்பதிகளுள் ஒன்றாகும்.

மூலவரான வைத்தமாநிதிப் பெருமாள் எனும் நிக்ஷேப வித்தன் கிழக்கு நோக்கிப் புஜங்க சயனத்தில் அருள்புரிகிறார். குமுதவல்லி, கோளூர்வல்லி எனும் இருதனிக் கோயில் நாச்சியார்கள் தாயார்களாவர். இத்தலத்தீர்த்தம் : குபேர தீர்த்தம், தாமிரபரணியாறு. விமானம் : ஸ்ரீகர விமானம்.

தர்மம் இத்தலத்துக்கு வந்து பகவானைத் தரிசித்துக் கொண்டிருக்கும் போது அதர்மம் அதனுடன் போரிட்டுத் தோற்று ஓடியதால் இத்தலத்துக்கு அதர்ம பிசுனம் எனும் பெயரேற்பட்டதாகத் தலவரலாறு கூறுகிறது. மேலும் பார்வதிதேவி இட்ட சாபத்தால் குபேரனை விட்டுப்பிரிந்த நவநிதிகள் இத்தலத்துக்கு வந்து பெருமானை நோக்கித் தவம்புரிந்து அவரை நாதனாக அடைந்ததால் பகவான் நிக்ஷேபவித்தன் (வைத்தமாநிதி) எனும் திருநாமம் பெற்று நவநிதிகளையும் காத்து வருவதாகவும், இத்தலத்தில் குபேரன் பெருமாளின் அருளினால் சாபவிமோசனம் அடைந்ததாகவும் தலவரலாறு கூறுகிறது.

மதுரகவியாழ்வார் அவதரித்த இத்தலம் தென்திருப் பேரையிலிருந்து ஆழ்வார் திருநகரி செல்லும் வழியில் சுமார் 4 கி. மீ. தொலைவில் தெற்கே செல்லும் கிளைப் பாதையில் உள்ளது. இத்தலத்தில் எவ்வித வசதியும் இல்லை.

''வெள்ளைச் சுரிசங்கொ டாழி யேந்தித்
தாமரைக் கண்ணன் என்னெஞ்சி னூடே
புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீர்
என்சொல்லிச் சொல்லுகேன்? அன்னைமீர்காள்!

Koviloor Digital Library

வெள்ளச் சுகமவன் வீற்றி ருந்த
வேத வொலியும் விழா வொலியும்
பிள்ளைக் குழாவிளை யாட்டொலி யும்அறாத
திருப்பே ரையில் சேர்வன் நானே!''

என நம்மாழ்வாரால் பாடப் பெற்றது இத்தலம்.

தலமூலவரான மகர நெடுங் குழைக்காதன் எனும் நிகரில் முகில் வண்ணன் கிழக்கு நோக்கி வீற்றிருந்த திருக்கோலத்தில் அருள்புரிகிறார். குழைக்காது வல்லி நாச்சியார் மற்றும் திருப்பேரை நாச்சியார் என இரு தனிக் கோயில் நாச்சியார்களும் உள்ளனர். தலத்திர்த்தங்கள்: சுக்ர புஷ்கரிணி, சங்கு தீர்த்தம். விமானம்: பத்ர விமானம்.

துர்வாச மகரிஷியின் சாபத்தினால் பூமாதேவி தான் லக்ஷ்மியைப் போல் ஆக அவரிடமே உபதேசம் பெற்று அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபித்து தவம் செய்து, ஸ்ரீபேரை அதாவது லக்ஷ்மியின் உடலை அடைந்து பங்குனி பௌர்ணமியில் தாமிரபரணியில் தர்ப்பணம் செய்கையில் அதில் கண்டெடுத்த மகர வடிவமுள்ள இரு குண்டலங்களைப் பகவான் தரிக்க அளித்ததாகவும், அதனால் பகவானுக்கு மகரநெடுங் குழைக்காதன் எனும் திருநாமமும் ஸ்ரீதேவி ஸ்ரீபேரை நாமத்தைத் தரித்ததினால் இத்தலத்துக்கு ஸ்ரீபேரை எனும் திருநாமமும். ஏற்பட்டதாகவும் தலவரலாறு கூறுகிறது.

குருவை அவமானம் செய்ததால் அவரால் சபிக்கப்பட்ட வருணன் இத் தலத்துக்கு வந்து பங்குனி பௌர்ணமி அன்று பகவானுக்குத் திருமஞ்சனம் செய்ததால் சாப விமோசனம் அடைந்தான் என்று கூறப்படுகிறது. மேலும் விதர்ப்ப தேச மன்னன் தனது நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்க இப் பெருமானை வழிபட்டு அவரது அருளால் அந்நாட்டில் மழை பொழிந்ததாகவும் தல வரலாறு கூறுகிறது.

கைங்கரியங்கள் அனைத்தும் ஒழுங்காக நடைபெறும் இப்பெரும் கோயில் இருக்கும் இடம் தென் திருப்பேரை

Koviloor Digital Library

என்றும் வழங்கப்படுகிறது. திருவைகுண்டத்திலிருந்து வட கிழக்கில் ஏழு மைல் தொலைவிலும், திருப்புளிங்குடியி லிருந்து ஆறு மைல் தொலைவிலும் இத்தலம் உள்ளது. பஸ் வசதிகள் இருந்தாலும் இத்தலத்தில் தங்கிப் பெருமாளைச் சேவிக்க வசதி இல்லை. ஆழ்வார் நவ திருப்பதிகளில் ஒன் றாக இது கருதப்படுகிறது.

திருக்குருகூர் (ஆழ்வார்திருநகரி)

"ஒன்றும் தேவும் உலகும்
உயிரும் மற்றும் யாதுமில்லா
அன்று நான்முகன் தன்னோடு
தேவருலகோடு உயிர் படைத்தான்
குன்றம் போல்மணிமாடம்
நீடு, தருக்குரு கூரதனுள்
நின்ற ஆதிப்பி ரான்நிற்க,
மற்றுரைத் தெய்வம் நாடுதிரே?"

என நம்மாழ்வாரால் பாடப்பெற்ற இத்தலமும் ஆழ்வார் நவ திருப்பதிகளில் ஒன்றாகும். மணவாள மாமுனிகளால் மங்கள சாசனம் செய்யப்பட்டது இத்தலம்.

மூலவரான ஆதிநாதன், ஆதிப்பிரான், பொலிந்து நின்ற பிரான் கிழக்கு நோக்கி நின்ற திருக் கோலத்தில் அருள் புரி கிறார். ஆதிநாதவல்லி என்றும், குருகூர் வல்லி என்றும் இரு தனிக் கோயில் நாச்சியார்கள் உள்ளனர். இத்தலத் தீர்த் தங்கள்: பிரம்ம தீர்த்தம், தாமிரபரணி நதி. தல விருக்ஷம் புளியமரம். தலவிமானம், கோவிந்த விமானம் ஆகும்.

தேவேந்திரன் தன் மாதா பிதாக்களை உதாசினப் படுத்தியமையால் தனக்கேற்பட்ட சாபத்தை இத்தலப் பெரு மாளான ஆதிநாதனை வழிபட்டுப் போக்கிக்கொண்டதாகத் தலபுராணம் கூறுகிறது. இத்தலத்தில் ஆதிசேஷனான லக்ஷ் மணன் புளியமரமாக எழுந்தருளியிருப்பதால் அவ்விருக்ஷம் திருப்புளி ஆழ்வார் என்றே போற்றப் படுகின்றது. அதனடியில்

Koviloor Digital Library

பெருமாள் பிரம்மசரியத்தைக் கடைப்பிடித்து யோகத்தில் ஆழ்ந்திருப்பதாகவும், ஸ்ரீ லக்ஷ்மி பிராட்டி அவரை அடைய வேண்டியதால் தமது பிரம்மசரிய விரதத்துக்குப் பங்கம் ஏற்படாது தாயாரை மகிழ மாலையாக ஆக்கி மார்பில் சூட்டிக் கொண்டதாகவும் தல புராணம் கூறுகிறது.

ஸ்ரீவராகப் பெருமாள், ஞானப்பிரான் எனும் திருநாமத்துடன் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கிறார். திருவரங்கம் போல் மாதந்தோறும் ஆழ்வார்களின் நக்ஷத்திர தினங்களில் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. வைகாசி விசாகத்தில் கருடசேவை இத்தலத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அன்று நவதிருப்பதி பெருமாள் சந்நிதிகளிலும் மதுரகவியாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரின் மங்கள சாசனம் விமரிசையாகச் செய்யப்படும். அன்று நம்மாழ்வார் ஹம்ச வாகனத்தில் எழுந்தருள்வது கண்கொள்ளாக் காட்சியாகும். நம்மாழ்வார் அவதாரத் தலமான இங்கு அவரது வரலாற்றை (திருப்பதி சாரம் எனும் தலத்திற்குக் கீழே) வண்ண ஓவியங்களாக வரைந்துள்ளனர். அவருக்குத் தனிச் சந்நிதி உண்டு. தாமாகத் தோன்றிய பெரிய திருமேனியுடைய மூலவரின் பாதங்கள் பூமிக்குள் இருப்பதாக ஐதீகம். ஸ்ரீரங்கம் போல இங்கும் அரையர் சேவை நடைபெறுகிறது. திருமஞ்சனத்தின் போது பிரபந்தங்களையும் புருஷ சூக்தத்தையும் தாளம் போட்டுக் கொண்டே பாடுவார்கள்.

திரு வைகுண்டத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் இத் தலம் உள்ளது. பஸ் வசதிகள் உண்டு. திருநெல்வேலி— திருச்செந்தூர் இரயில் பாதையில் ஆழ்வார் திருநகரியில் இறங்கி 1½ கி.மீ. தூரம் சென்று தலத்தையடையலாம். அஹோபில மடம் மற்றும் பல சத்திரங்கள் இங்கு உள்ளதால் இங்கேயே தங்கி ஆழ்வார்களின் நவதிருப்பதிகளையும் சேவிக்கலாம்.

Koviloor Digital Library

மலை நாட்டுத் திருப்பதிகள்

திருவனந்தபுரம் (அநந்தசயனம்)

''கெடும்இட ராயவெல்லாம், கேசவா வென்ன நாளும்
கொடுவினை செய்யும்கூற்றின் தமர்களும் குறுகசில்லார்
விடமுடை யரவில்பள்ளி விரும்பினான் சுரும்பலற்றும்
தடமுடை வயல் அனந்த புரநகர்ப் புகுதும் இன்றே.''

என நம்மாழ்வாரால் பாடப்பட்ட தலம் இது.

மூலவரான அநந்தபத்மநாபன் அநந்தன் மீது புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கி அருள் புரிகிறார். தாயாருக்கு ஸ்ரீ ஹரி லக்ஷ்மி எனும் திருநாமம். தலத்தீர்த்தங்கள்: மத்ஸிய தீர்த்தம், பத்மதீர்த்தம், வராக தீர்த்தம், விமானம்: ஹேம கூட விமானம் ஆகும்.

திவாகரயோகி எனும் முற்றும் துறந்த முனிவர் பெருமாளைத் தரிசித்து முக்திப் பயனடையும் பொருட்டு கடும் தவம் செய்து கொண்டிருக்கையில் பகவான் இளம் பாலகனாகத் தோன்றி, அந்த யோகி பூஜை செய்யும்போது ஒரு *சாளக்ராமத்தை வாயில் போட்டுக் கொண்டு ஓடினார். அவரை யோகி துரத்திக்கொண்டு வருகையில், ஒரு மரப் பொந்தில் புகுந்து கொண்டபோது அம்மரம் அப்படியே அடிபெயர்ந்து விழுந்த நிலையில் யோகிக்கு பகவான் மூன்று துவாரத்தின் வழியாக திருமுகம், திருநாபி, திருப்பாதங்களை தரிசனம் தந்ததாகவும் ஐதீகம். அதன்படியே பெரிய திருமேனி படைத்த மூலவரை சிரசு, உடல், திருவடிகளை மூன்று வாசல்கள் வழியாக பக்த கோடிகள் தரிசித்து வருகி

*இயற்கையாக உருவான சிவன் அல்லது விஷ்ணுவின் உருவம் அமைந்த சிறு கல்.

Koviloor Digital Library

நாச்சியார். தென் புறம் லக்ஷ்மி வராஹர் மற்றும் ஸ்ரீநிவாசர் கோயில்கள் உள்ளன. பிராகாரத்திலேயே தென் புறத்தில் முதலில் அனுமார், அடுத்தது நரசிம்மர், அதற்குப் பின் னால் கிருஷ்ணர் ஆகியோரது சந்நிதிகள் உள்ளன. எந்தக் காலத்திலும் அனுமார் மீது சாத்தப்படும் வெண்ணெய் உருகிவடிவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேவர்களாலும் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்திருத் தலம், சேர மன்னர் தலைநகரான திருவனந்தபுரத்தி லேயே உள்ளது. திருவனந்தபுரம் இரயில் நிலையத்தி லிருந்து கால் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இக்கோயில் உள்ளது. பெரிய நகரமானதால் சகல வசதிகளும் கொண்ட திருத்தலமாகும் இது.

திருச்செங்குன்றூர் (திருச் செங்குன்றூர்ச் சிற்றாறு

“திருச் செங்குன் றூரில் திருச்சிற்றா றதனுள்
கண்ட அத் திருவடி என்றும்
திருச்செய்ய கமலக் கண்ணும் செவ் வாயும்
செவ்வடி யும்செய்ய கையும்
திருச் செய்ய கமல வுந்தியும் செய்ய
கமல மார்பும் செய்ய வுடையும்
திருச்செய்ய முடியும் ஆரமும் படையும்
திகழஎன் சிந்தையு ளானே”

என நம்மாழ்வாரால் பாடப் பெற்ற தலம் இது.

மூலவரான இமையவரப்பன் மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். தாயாருக்குச் செங்க மல வல்லி என்னும் திருநாமம். தலத்தீர்த்தங்கள்: சங்க தீர்த்தம், திருச்சிற்றாறு.

பாரதப்போரில் துரோணரைக் கொல்வதற்காக அசுவத் தாமன் இறந்தான் எனத் தருமர் பொய் சொல்லியதைக் குறித்து வருந்தியபடியால் இத்தலத்துக்கு வந்து பெரு

Koviloor Digital Library

மாளைப் பிரதிஷ்டை செய்து பூஜித்து மனநிம்மதியடைந்த தாகத் தலவரலாறு கூறுகிறது.

சூரன், பத்மன் எனும் இரு அரக்கர்கள் சிவபெருமானிடம் அரும்பெரும் வரங்களைப் பெற்று இருவரும் ஒருவராகிச் சூரபத்மன் எனும் பெயருடன் உலகத்தை இம்சை செய்ததால், சிவமைந்தனான முருகப் பெருமான் அவனை இத்தலத்தில்தான் சம்ஹரித்து சேவலாகவும், மயிலாகவும் ஆக்கிக் கொண்டதாகவும் தல வரலாறு கூறுகிறது.

திருவனந்தபுரம் — கொல்லம் — எர்ணாகுளம் இரயில் பாதையில் கொல்லத்திற்கப்புறம் செங்கன்னூர் இரயில் நிலையத்தில் இறங்க வேண்டும். சகலவசதிகளும் கொண்ட பெரிய இவ்வூருக்கு வெளியூர் பஸ்கள் நிறைய வருகின்றன.

திருப்புலியூர் (குட்டநாடு)

"கருமா ணிக்க மலை மேல் மண்ணித்
தடம்தாமரைக் காடுகள் போல்
திருமார்பு வாய்கண்கை உந்தி காலுடை
யாடைகள் செய்ய பிரான்
திருமால் எம்மான் செழுநீர் வயல்
குட்டநாட்டுத் திருப்புலியூர்
அருமாயன் பேரன்றிப் பேச்சிலள்
அன்னை மீர்இதற் கென் செய்கேனோ!"

என நம்மாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது. திருமங்கையாழ்வாரும் மங்கள சாசனம் செய்துள்ளார்.

மூலவரான மாயப்பிரான் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயாரின் திருநாமம் பொற்கொடி நாச்சியார். தலத் தீர்த்தங்கள்: ப்ரஜ்ஞாஸரஸ் மற்றும் பூஞ்சுனை தீர்த்தம். விமானம். புருஷோத்தம விமானமாகும்.

Koviloor Digital Library

இத்தலம் பீமசேனனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தாகக் கூறப்படுகிறது. சிபிச்சக்கரவர்த்தியின் மைந்தரான விருஷாதர்பியின் காலத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ஆயினும் அங்கு வந்த சப்தரிஷிகளுக்கு அவன் தானம் செய்ய விரும்பினான். சப்த ரிஷிகள் தானம் பெறுவது மகாப் பாவம் என்று கூறி மறுத்தார்கள். எவ்வாறேனும் ரிஷிக ளுக்குத் தானம் கொடுத்தால், மழையுண்டாகும் என்று கருதிய அவன் பொன் கலந்த பழங்களைக் கொடுக்க முயன்றான். ஞானதிருஷ்டியால் அதனை உணர்ந்து கொண்ட ரிஷிகள் அவற்றையும் ஏற்க மறுத்தனர். அதனால் கோபமுற்ற அரசன் ஹோமம் செய்து கிருத்யை எனும் மாரக ஸ்திரீயைத் தோற்றுவித்து அவர்களைக் கொல்வதற்காக ஏவினான். பகவான் இந்திரனை அனுப்பி கிருத்யையைக் கொன்று சப்தரிஷிகளை சுவர்க்கலோகத் திற்கு அழைத்துச் சென்றதால், அவர்கள் பகவான்தான் அனைத்துத் தெய்வங்களிலும் தலைசிறந்தவர் எனப் புகழ்ந்தனர். பகவான் இத்தலத்தில் மாயப்பிரானாகத் தரிசனம் தந்ததாகத் தலவரலாறு கூறுகிறது.

செங்கனூரிலிருந்து மேற்கே மூன்றரை கி.மீ. தொலைவி லுள்ள இத்தலத்தில் அவ்வளவு வசதிகள் இல்லை. பஸ் வசதியும் குறைவாகையால் வண்டியில் செல்வது நல்லது.

திருஆறன்விளை (ஆரம்முளா)

"இன்பம் பயக்க, எழில் மலர்
மாதரும் தானும்இவ் வேழுலகை
இன்பம் பயக்க இனிதுடன்
வீற்றிருந்து ஆள்கின்ற எங்கள்பிரான்
அன்புற் றமர்ந்துறை கின்ற
அணி பொழில் சூழ்திரு வாறன் விளை
அன்புற் றமர்ந்து வலஞ் செய்து
கை தொழும் நாள்களு மாகுங் கொ லோ!"

என நம்மாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது.

Koviloor Digital Library

மூலவரான திருக்குறளப்பன் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் அருள் புரிகிறார். தாயாரின் பெயர் பத்மாஸன நாச்சியார். தலத்தீர்த்தம்: வேதவியாசசரஸ் மற்றும் பம்பா தீர்த்தம்.

பாரதப் போரில் தேர்க்கால் இறங்கியதால் சற்று அவகாசம் கேட்டுக் கர்ணன் தேர்க்காலைத் தூக்க முற்பட்ட போது அவனை அர்ச்சுனன் கொன்றுவிட்டுப் பின்னர் மனம் வருந்தி இத்தலம் வந்து பெருமாளைப் பூஜித்து மனச்சாந்தியடைந்த தாகவும் அவனால் பிரதிஷ்டை செய்யப் பட்டது இத்தலம் எனவும் தலபுராணம் கூறுகிறது. ஒரு பெரிய மேட்டின் மேலுள்ள இக்கோயிலின் மதிலைத் தொட்டவாறு பம்பாநதி ஓடுகிறது. மது கைடபர்கள் பிரம்ம தேவரிடமிருந்து வேதங்களை அபகரித்தபோது இத்தலத் தில்தான் பிரம்மா டகவானைக் குறித்துத் தவம் புரிந்து ஞானம் பெற்றதாகவும் கூறப்படுகிறது. சபரிமலை ஐயப்பனது ஆபரணங்களை இக்கோயிலில்தான் பத்திரமாக வைத் திருந்து மகர ஜோதிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்கி றார்கள்.

வசதிகள் குறைந்த இத்தலம் செங்கனூரிலிருந்து கிழக்கே ஆறு மைல் தூரத்திலுள்ளது. தேவஸ்தான சத்திரம் ஒன்று இருக்கிறது.

திருவண்வண்டூர் — (திருவமுண்டூர்)

“வைகல் பூங் கழிவாய், வந்து மேயும் குருகினங்காள்!
செய்துகொள் செந்நெ லுயர்திரு வண்வண் டூருறையும்
கை கொள் சக்கரத்து என்கனி வாய்ப்பெரு மானைக்கண்டு
கைகள்கூப்பிச் சொல்லீர்விளை யாட்டியேன் காதன்மையே.”

என நம்மாழ்வாரால் பாடப் பெற்ற தலம் இது.

Koviloor Digital Library

மூலவரான பாம்பணையப்பன் எனும் கமலநாதன் மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயாருக்குக் கமலவல்லி நாச்சியார் எனும் திருநாமம். தலத் தீர்த்தம்: பாபநாச தீர்த்தம் மற்றும் பம்பா தீர்த்தம். விமானம் : வேதாலய விமானமாகும்.

நகுலனால் இக்கோயில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகத் தலவரலாறு கூறுகிறது. பிரம்மாவினால், சபிக்கப்பட்ட நாரத முனிவர் இத்தலம் வந்து தத்துவஞானம் உபதேசிக்கும் தொழிலைத் தனக்கு அளிக்கும் வரமாகப் பெற்று அவரைப் பூஜிக்கும் முறைகளை விவரித்து இருபத்தையாயிரம் கிரந்தங்களடங்கிய நாரதிய புராணத்தை இயற்றியதாகவும் தல புராணம் கூறுகிறது.

இத்தலத்தில் தங்கிப் பெருமாளைச் சேவிக்கும் வசதிகள் ஒன்றுமில்லை. செங்கனூரிலிருந்து வடக்கே 6½ கி. மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. அருகிலுள்ள சற்றுப்பெரிய ஊரான திருவல்லாவில் தங்கியும் இங்குவந்து பெருமாளைச் சேவிக்கலாம்.

கொல்லம்—எர்ணாகுளம் இரயில் பாதையில் திருவல்லா இரயில் நிலையத்திலிருந்து 6 கி. மீ. தூரத்தில் இக்கோயில் உள்ளது. பஸ் வசதி உண்டு. திருவல்லாவில் சத்திரம் இருப்பதால் அங்கேயே தங்கிப் பெருமாளைச் சேவிக்கலாம்.

திருவல்லவாழ்—(திருவல்லா)

"உருவினார் பிறவி சேர் ஊன் பொதி
நரம்பு தோல் குரம்பை யுள்புக்கு
அருவி நோய் செய்து நின்று ஐவர்தாம்
வாழ்வதற்கு அஞ்சி னாயேல்

Koviloor Digital Library

திருவினார் வேதம் நான்கு ஐந்து தீ
வேள்வியோடு அங்க மாறும்
மருவினார் வல்ல வாழ் சொல்லுமா
வில்லையாய் மருவு நெஞ்சே''

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்றது இத்தலம். நம்மாழ்வாராலும் மங்கள சாசனம் செய்யப்பட்டுள்ளது.

மூலவரான கோலப்பிரான், திருவாழ் மார்பன், ஸ்ரீ வல்லபன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகிறார். தாயாருக்குச் செல்வத்திருக்கொழுந்து நாச்சியார், வாத்சல்ய தேவி எனும் திருநாமங்கள். தலத்தீர்த்தம்: கண்டாகர்ண தீர்ந்தம் மற்றும் பம்பாநதி. விமானம்: சதுரங்க கோல விமானம் ஆகும்.

இத்தலத்தில், சங்கர மங்கலத்தம்மை எனும் பதிவிரதை ஏகாதசி விரதத்தை இடைவிடாது மேற்கொண்டு துவாதசியன்று ஒரு பிரம்மசாரிக்குப் பாரணை செய்வித்து வந்ததற்கு இடையூறு விளைவித்த தோலகாசுரன் எனும் அரக்கனைப் பகவான் பிரம்மசாரி வேடந்தரித்து வந்து, கொன்று விட்டு சங்கர மங்கலத்தம்மை இடத்திற்கு விருந்து சாப்பிட பாரணைக்கு வந்த போது தனது திருவாழ் மார்பை மறைக்க, அப்பதிவிரதையின் பிரார்த்தனைக்கேற்ப தனது திருவாழ் மார்பைக் காட்டியபடி தரிசனம் தந்து வருவதாகத் தல புராணம் கூறுகிறது.

மேலும் கண்டகர்ணன் எனும் சிவ பக்தனுக்கு சிவபெருமானே அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்து அதன் பெருமையை உணர்த்தியதால் அவன் எப்போதும் அந்த மந்திரத்தை உச்சரித்து வந்ததாகவும் வேறு ஒலிகள் கேட்கா வண்ணம் தன் செவிகளில் இரு பொன் மணிகளை அணிந்து அதனை ஒலிக்கச் செய்தவாறு இத்தலத்தில் தவமிருந்து மோட்ச மடைந்ததாகவும் தல வரலாறு கூறுகிறது.

Koviloor Digital Library

திருவல்லாவிலிருந்து கோட்டயம் செல்லும் மார்க்கத்தில் ஐந்து மைல் தூரம் பஸ்ஸில் சென்று செங்கணாச்சேரி எனும் ஊரில் இறங்கி, அங்கிருந்து கிழக்கு பக்கம் செல்லும் சாலையில் இரண்டு மைல் சென்று இத்தலத்தை அடையலாம். இங்கு ஒரு வசதியும் இல்லாததால் திருவல்லாவிலிருந்து கொண்டோ, அல்லது செங்கணாச் சேரியில் இருந்து கொண்டோ இங்கு வந்து பெருமாளை வழிபட்டுச் செல்வதே சிறந்தது.

திருக்கடித்தானம்

"எல்லியும் காலையும் தன்னை நினைந்தெழ
நல்ல அருள்கள் நமக்கேதந் தருள் செய்வான்
அல்லியந் தண்ணந் துழாய்முடி அப்பனூர்
செல்வர்கள் வாழும் திருக்கடித் தானமே"

என நம்மாழ்வாரால் பாடப்பெற்றது இத்தலம்.

மூலவரான அற்புத நாராயணன் எனும் அமிருத நாராயணன் கிழக்கி நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகிறார். தாயாருக்குக் கற்பகவல்லி எனும் திருநாமம். தலத் தீர்த்தம்: பூமி தீர்த்தம். விமானம்: புண்யகோடி விமானம்.

இந்தச் சந்நிதியை சகர்தேவன் பிரதிஷ்டை செய்து பெருமானின் அருளைப் பெற்றதாகவும், சூரிய வம்சத்து அரசனான ருக்மாங்கதன் என்பவன் இங்கிருந்து ஆட்சி புரிந்து ஏகாதசி விரதம் இருந்து அதன் பலனைத் தேவர்களுக்குக் கொடுத்து அவர்களுக்குத் தேவ லோக பதவி கிடைக்கச் செய்ததாகவும் தல வரலாறு கூறுகிறது. இங்கு நரசிம்மர், கிருஷ்ணர் ஆகியோருக்கும் சந்நிதிகள் உள்ளன.

திருமூழிக்களம்

"எங்கானலகங்கழிவாய் இரை தேர்ந்திங் கினிதமரும்
செங்கால் மட நாராய்! திரு மூழிக் களத் துறையும்

Koviloor Digital Library

கொங்கார் பூந்துழாய் முடிஎங் குடக்கூத்தர்க்கு என் தூதாய்
நுங்கால்கள் என்தலைமேல் கெழுமீரோ நமரோடே''

என நம்மாழ்வாரால் பாடப் பெற்றது இத்தலம். திருமங்கை யாழ்வாரும் மங்கள சாசனம் செய்துள்ளார்.

மூலவரான திருமூழிக்களத்தான், அப்பன், ஸ்ரீஸித்தி நாதப் பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகிறார். தாயாருக்கு மதுரவேணி நாச்சியார் எனும் திருநாமம். தலதீர்த்தங்கள்: பெருங்குளம், சங்க தீர்த்தம், மற்றும் சிற்றாறு. விமானம் : சௌந்தர்ய விமானம்.

வனவாசத்திலிருந்த இராமபிரானைச் சித்திரக் கூடத்திற்கு வந்து அயோத்திக்குத் திரும்ப அழைத்துச் செல்ல முற்பட்ட பரதனைச் சந்தேகித்துக் கொல்ல முயன்ற லட்சுமணன், உண்மையை அறிந்து நொந்து இத்தல பெருமாளைப் பிரார்த்தித்ததன் பயனாகப் பரதனே வந்து லக்ஷ்மணனைக் கட்டித் தழுவிக் கொள்ள, இருவரும் பெருமாளைத் துதித்ததாகவும், எனவே இன்சொல் விளைந்த தலமாகையால், இதற்குத் திருமூழிக்களம் எனும் பெயர் ஏற்பட்டதாகவும், இத்தல கோபுரம்—மண்டபம், பிராகாரங்களை லட்சுமணனே நிர்மாணித்ததாகவும் தலபுராணம் கூறுகிறது.

வேறுசிலர், இப்பெருமாளை லட்சுமணன் என்றே கூறுகிறார்கள். ஹாரித மஹரிஷி என்பவர் பகவானை நோக்கிப் பல வருஷங்கள் தவம் இருந்ததன் பலனாகப் பெருமாளின் தரிசனம் கிடைத்தபோது, அவர் ஐந்து காலங்களிலும் செய்ய வேண்டிய பூஜை அனுஷ்டானங்கள் முதலியனவற்றையும் வர்ணாசிரம தர்மங்களையும் யோகத்தையும் கொண்ட ஸ்ரீ ஸூக்தியை அல்லது திருமொழியை இயற்றியதால் இத்தலத்திற்குத் திருமொழிக்களம் என்ற பெயரும்

Koviloor Digital Library

பகவானுக்கு திருமொழிக்களத்தான் என்ற திருநாமமும் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர்.

ஆல்வாய் டவுனிலிருந்து இத்தலத்திற்கு பஸ்வசதி உண்டு. பஸ் நிலையத்திலிருந்து சற்றுத் தூரத்திலுள்ள பாரதப்புழை ஆற்றங்கரையில் கோயில் உள்ளது. எர்ணாகுளத்திலிருந்தும் பஸ் வசதியுண்டு. அங்கமாலி இரயில் நிலையத்திலிருந்தும் பஸ் மூலமாக இங்குவரலாம். ஆயினும் தலத்தில் வசதிகள் இல்லை.

திருக்காட்கரை

"உருகுமால் நெஞ்சம், உயிரின் பரமன்றிப்
பெருகுமால் வேட்கையும் என் செய்கேன் தொண்டனேன்
தெருவெல்லாம் காவி கமழ்திருக் காட்கரை
மருவிய மாயன் தன் மாயம் நினை தொறே.''

என, நம்மாழ்வாரால் பாடப் பெற்றது இத்தலம்.

மூலவரான காட்கரையப்பன் தெற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயாரின் திருநாமங்கள் பெருஞ் செல்வ நாயகி. வாத்ஸல்ய தேவி. தலத் தீர்த்தம் : கபில தீர்த்தம். விமானம்: புஷ்கல விமானம்.

இந்த பகவான் வாமன அவதாரம் என மலையாளிகள் கருதி ஓணம் பண்டிகையன்று பெரிய உத்சவ வைபவங்களை நடத்தி வருகின்றனர். இத்தலத்தில், தனிகன் ஒருவன் தனது தோட்டத்தில் வாழை மரங்கள் குலை தள்ளாதிருப்பதைக் கண்டு மனம் நொந்து ஒரு முனிவரது அறிவுரைக் கேற்பப் பொன்னால் செய்யப்பட்ட வாழைக்குலை ஒன்றை இக்கோயிலின் கர்ப்பக் கிருகத்தில் பகவானுக்குச் சமர்ப்பித்தான். அன்று முதல் அவனது தோட்டத்தில் வாழை மரங்கள் நன்கு செழிப்பாக வளர்ந்து தேனிலும் இனிமையானதும் உடலுக்கு வாட்டத்தைக் கொடுக்கக் கூடியதுமான

Koviloor Digital Library

புதியவகை வாழைக்குலை இட்டதாகவும், அவையே நேந்திரம் வாழையாகப் பிற்காலத்தில் பிரசித்தி பெற்றதாக வும் ஐதீகம். ஒரு சமயம் பொன் வாழைக்குலை காணாமற் போனது என அறிந்த அரசன் ஒரு யோகியைத் துன் புறுத்தினான். அந்த யோகி அந்தப்பொன் வாழைக் குலை கோயிலின் கர்ப்பக் கிரகத்திலேயே இருப்பதையறிந்து அதன் உண்மையை உணர்த்திவிட்டு அரசனைச் சபித்து விட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அச்சாபம் நீங்க மக்கள் மூங்கில் கூரை நிர்மாணித்து வெளிச்சத்துக்கு கோரைக் கொள்ளியை உபயோகப்படுத்தியதால் சாப விமோசனம் ஏற்பட்டது என்றும், பிரம்ம இராட்சசனாகத் திரிந்த அந்த யோகியின் ஆத்மா சாந்தியடைய அவருக்கு ஒரு சிறு கோயில் கட்டப்பட்டதாகவும் தலபுராணம் கூறுகிறது.

திருச்சூர்—ஆல்வாய் இரயில் பாதையில், இரிஞாலக் குடா எனும் ஸ்டேஷனிலிருந்தும் அங்கமாலி எனும் ஸ்டேஷ னிலிருந்தும் வடகிழக்கே 14 கி. மீ. தூரத்தில் இத்தலம் இருக்கிறது. ஆல்வாய் போகும் திசையில் 7 கி. மீ. சென்று அங்கிருந்து ஒருகிளைப் பாதையில் வேறு ஒரு பஸ்ஸில் செல்ல வேண்டும். இத்தலத்தில் வசதிகள் எதுவுல்லை.

திருவித்துவக் கோடு — திருவிஞ்சிக்கோடு— திருவிச்சிக்கோடு

"தரு துயரம் தட்டாயேல்! உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவு மலர்ப் பொழில்சூழ் வித்துவக்கோட்
டம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே யழும்குழ்வி அதுவேபோன்
றிருந்தேனே!

எனக் குலசேகராழ்வாரால் பாடப் பெற்றது இத்தலம்.

Koviloor Digital Library

மூலவராகிய உய்யவந்த பெருமான் எனும் அபயவரதன் தெற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயாருக்கு வித்துவக்கோட்டுவல்லி, பத்மபாணி நாச்சியார் எனும் திருநாமங்கள். தலத்தீர்த்தம்: சக்ர தீர்த்தம். விமானம்: தத்வகாஞ்சன விமானம்.

கோயிலுக்குள் நுழைந்ததுமே சிவபெருமானுக்குத்தான் முதலில் சந்நிதி இருக்கிறது. அதன் பின்னால் பெருமாளுக்குச் சந்நிதி இருக்கிறது. அம்பரிஷனது பிரார்த்தனைப்படி வியூக அவதாரத்தில் தரிசனம் தந்தபடியால் இங்கு பெருமாள் நான்கு வடிவங்களில் எழுந்தருளியிருக்கிறார். நடுவிலிருப்பவரைத் தருமரும், மேற்கிலிருப்பவரை அர்ச்சுனனும், இடப்புறத்திலிருப்பவரை வீமனும், வலப்புறத்திலிருப்பவரை நகுல சகாதேவர்களும் பூஜித்தனர் எனத் தல வரலாறு கூறுகிறது. இவ்வாறு பஞ்சபாண்டவர்கள் ஐவரும் ஒருமித்துப் பெருமாளை வழிபட்ட தலம் இது ஒன்றுதான். இங்குதான் அம்பரிஷனுக்கு முக்தி ஏற்பட்டது எனத் தல வரலாறு கூறுகிறது.

ஒரு வசதியுமே இல்லாத இத்தலம் ஷோரனூர்-கள்ளிக் கோட்டை இரயில் பாதையில், பட்டாம்பி இரயில் நிலையத்திலிருந்து 3 கி. மீ. தொலைவில் இருக்கிறது. பட்டாம்பி இரயில் நிலையத்திலிருந்து இறங்கினால் பாரதப்புழை ஆற்றைக் கடக்க வேண்டும். அல்லது ஷோரனூரிலிருந்து குருவாயூர் செல்லும் பஸ்ஸில் ஏறி, 16 கி. மீ. தொலைவில் இறங்கி, ஒரு குறுகிய சாலையில் ஒரு கி.மீ. தூரம் நடந்து இத்தலத்தையடையலாம்.

திருநாவாய்

"அறுக்கும் விறையாயின ஆகுத்து அவனை
நிறுத்தும் மனத்தொன்றிய சிந்தையினார்க்கு
வெறித்தண் மலர்ச்சோலைகள் சூழ்திருநாவாய்
குறுக்கும்வகையுண்டு கொலோ? கொடியேற்கே?''

என நம்மாழ்வாரால் பாடப்பெற்றது, இத்தலம். திருமங்கையாழ்வாராலும் மங்கள சாசனம் செய்யப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

மூலவரான நாவாய் முகுந்தன், நாராயணன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயாருக்கு மலர்மங்கை நாச்சியார், சிறுதேவி எனும் திருநாமங்கள். மலைநாட்டிலேயே இக்கோயிலில்தான் லக்ஷ்மிக்குத் தனிச் சந்நிதி இருக்கிறது. தலத்தீர்த்தம், செங்கமலஸரஸ், விமானம் வேத விமானமாகும்.

இத்தலத்தில் நவயோகிகள் ஒன்று சேர்ந்து யாகம் செய்ததால் திருநவயோகி எனும் பெயர் நாளடைவில் திரு நாவாய் என மாறுபட்டதாகக் கூறப்படுகிறது. பாரதப் புழையாற்றை ஒட்டியிருக்கும் இத்தலத்தில் சிவனுக்கும் பிரம்மாவுக்கும் கோயில்கள் உள்ளன. காசிக்குச் சமமாக இத்தலத்தில் சிரார்த்த காரியங்களைச் செய்கின்றனர்.

மகாலக்ஷ்மியும், கஜேந்திரனும் தாமரைப் பூக்களைப் பறித்து பகவானைப் பூஜித்து வருகையில் ஒரு சமயம் பூ கிடைக்காமல் போய், கஜேந்திரன் வருத்தத்துடன் பகவா னிடம் முறையிட்டான். எனவே பகவான் லக்ஷ்மியைப் பூப்பறிக்க வேண்டாம் எனக் கூறித் தன்னுடன் இருக்கச் செய்து தம்மிருவருக்கும் சேர்த்து கஜேந்திரனைப் பூஜை செய்யும்படியாகக் கட்டளையிட்டதாகத் தல வரலாறு கூறுகிறது.

வசதிகள் குறைவாகவுள்ள இச்சிறிய ஊர் சென்னை—கள்ளிக்கோட்டை இரயில் பாதையில் உள்ளது. இரயில் நிலையத்திலிருந்து 1½கி. மீ. தூரத்தில் இத்தலம் இருக்கிறது. பஸ் மார்க்கத்தில் செல்வதானால் ஷோரனூரிலிருந்து குட்டி புரம் சென்று அங்கிருந்து பஸ் மாறி, கோயிலுக்கே சென்று விடலாம்.

திருவனந்தபுரம் கோயிலைப் போலவே கட்டப்பட்டுள்ள இத்தலத்திலும் பெருமாளை மூன்று வாயில்கள் வழியாகச் சேவிக்க வேண்டும். மூலவரது திருமுகத்தில் மாலை வேளையில் சூரிய வெளிச்சம் படும்படி கோயிலை அமைத் திருக்கிறார்கள். பெரிய பிராகாரங்கள் கொண்ட இக்கோயி லில் கிருஷ்ணருக்கும் தனி சந்நிதி உண்டு.

Koviloor Digital Library

திருவாட்டாறு

"குரைகழல்கள் குறுகினம்நம்
கோவிந்தன் குடிகொண்டான்
திரைகுழுவு கடல்புடைசூழ்
தென்னாட்டுத் திலகமன்ன
வரைகுழுவு மணிமாட
வாட்டாற்றான் மலரடி மேல்,
விரைகுழுவும் நறுந்துளவம்
மெய்ந்நின்று கமழுமே!"

என நம்மாழ்வாரால் பாடப்பெற்றது இத்தலம்.

மூலவரான ஆதிகேசவப் பெருமாள் மேற்கு நோக்கிப் புஜங்க சயனத்தில் அருள்புரிகிறார். தாயாரின் திருநாமம் மரகதவல்லி. தலத்தீர்த்தங்கள்: கடல்வரப்த் தீர்த்தம், வாட்டாறு, இராமதீர்த்தம், விமானம்: அஷ்டாங்க விமானம். அஷ்டாக்ஷர விமானமாகும்.

கேசி எனும் அசுரனது இம்சையைப் பொறுக்க முடியாத தேவர்கள் பகவானிடம் முறையிட அவரும் - கேசியுடன் போர் செய்து அவனைச் சாய்த்து மேலே படுத்துக் கொண்டார். இதனைபறிந்த கேசியின் தர்ம பத்தினியான ஆஸுரி கங்கையைப் பிரார்த்தித்துத் தனது கணவனைக் காப்பாற்றுமாறு இறைஞ்சினாள். எனவே கங்கை தாமிர பரணியுடன் சேர்ந்து வெள்ளப் பெருக்கால் பகவானைத் தள்ளி கேசியைக் காப்பாற்ற எண்ணி, இருநதிகளும் வெள்ளப் பெருக்குடன் வர, பகவானது எண்ணப்படி அவரிருந்த இடத்தில் பூமி சற்று உயர்ந்து மலைபோல் மேடாகியது. பகவானது திருவுள்ளத்தையறிந்து அந்நதிகள் பகவானுக்கு மாலை அணிவிப்பதைப் போல் அவ்விடத்தைச் சூழ்ந்து சென்றபடியால் இத்தலத்துக்கு திருவாட்டாறு எனும் பெயர் ஏற்பட்டது.

Koviloor Digital Library

நதிகள் பிரியுமிடத்திற்கு தோதைப்பிரணி என்றும் மூலாத்து முகம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. அவற்றை அனுக்கிரகிக்க இத்தலத்தில் தீர்த்தவாரி எனும் உற்சவம் நடைபெறுகிறது. ஆதிகேஸியைக் கொன்றதால் பகவானுக்கு ஆதிகேசர் எனும் திருநாமம் ஏற்பட்டதாகத் தல வரலாறு கூறுகிறது.

சுமாரான வசதிகள் கொண்ட இத்தலம் திருவனந்தபுரத்திலிருந்து நாகர் கோயில் செல்லும் பஸ் மார்க்கத்தில் தொடு வெட்டி எனும் இடத்தில் இறங்கி பஸ் மாறிச் சென்றால் 10 கி.மீ தொலைவில் உள்ளது. திருவனந்தபுரம்-கன்னியாகுமரி இரயில் பாதையில் இரயில் நிலையம் உள்ளது.

திருவண் பரிசாரம்—(திருப்பதி சாரம்)

"வருவார் செல்வம், வண்பரி சாரத்து இருந்த என்
திருவாழ் மார்வற்கு என்திறம் சொல்லார் செய்வது என்
உருவார் சக்கரம் சங்கு சுமந்து இங்கு உம்மோடு
ஒரு பா டுழல்வான் ஓரடி யானும் உளனென்றே!"

என, நம்மாழ்வாரால் பாடப் பெற்றது இத்தலம்.

மூலவரான திருக் குறளப்பன், திருவாழ்மார்பன் கிழக்கு நோக்கி வீற்றிருந்த கோலத்தில் அருள் புரிகிறார். தாயாருக்குக் கமலவல்லி நாச்சியார் எனும் திருநாமம். தலத்தீர்த்தம் லக்ஷ்மி தீர்த்தம். விமானம்: இந்திர கல்யாண விமானம்.

இரணியனைக் கொன்ற பகவான் உக்ர ரூபத்திலிருந்ததைக் கண்டு அஞ்சிய லக்ஷ்மி தேவி தவம் செய்யச் செல்ல பிரகலாதனின் பிரார்த்தனைக்கிணங்கி பகவான் சாந்தமடைந்து லக்ஷ்மியைத் தேடி இங்கு வந்து அவளைத் தமது திரு மார்பில், ஏற்றுக் கொண்டதால், அவருக்குத் திருவாழ் மார்பன் எனும் திருநாமம் ஏற்பட்டது என்றும், இப்பதியில் திருவாகிய லக்ஷ்மி சஞ்சரித்ததால் 'திருப்பதி சாரம்' எனும் பெயர் இத்தலத்துக்கு ஏற்பட்டதாகவும் தல வரலாறு கூறுகிறது.

Koviloor Digital Library

அனுமானின் பிரார்த்தனைக்கிணங்கி அகத்தியர் இங்கு இராமாயணம் இயற்றியதாகக் கூறப்படுகிறது. குலசேகர மகாராஜன் ஒரு மண்டபத்தையும் கட்டி கோபுரங்களையும் நிர்மாணித்து பிரம்மோத்சவம் நடத்தியதாகவும் வரலாறு கூறுகிறது.

நம்மாழ்வாரின் தாயாரான உடைய நங்கை இத்தலத்தில் தான் அவதரித்தார். விஷ்ணு பக்தையான அவள் காரி எனும் விஷ்ணு பக்தரை மணந்து இத்தலத்தில் நாற்பத்தோரு நாள்கள் பத்தியம் இருந்து ஆவணி மாதம் சுக்லபக்ஷம் ஏகாதசி திரு வாமன ஜயந்தி நாளன்று ஊஞ்சலுத்சவம் நடத்தியதால் கர்ப்பவதியாகி வைகாசி விசாகத்தன்று நம்மாழ்வாரை ஈன்றெடுத்தாள்.

அவரை அவள் குருகூரில் ஆதிநாதன் சந்நிதியில் விட அந்தக் குழந்தை தவழ்ந்து அருகிலிருந்த புளியமரப் பொந்துக்குச் சென்று பத்மாசன யோகத்தில் அமர்ந்ததாகவும், மதுரகவியின் பிரார்த்தனைக்கேற்ப திருவாய்மொழியை அருளியதாகவும் தல புராணம் கூறுகிறது.

அவரிருந்த திருமாளிகை வாயு மூலையில் உள்ளது. நம்மாழ்வார் குழந்தையாகத் தவழ்ந்தது போன்றதொரு விக்கிரகமும் அங்கு உள்ளது.

நாகூர் கோயிலிலிருந்து வடக்கே 4 கி. மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. சுமாரான வசதிகள் உண்டு.

மேற்காணும் மலைநாட்டுத் திருப்பதிகளில் பூஜைகளை போத்திகளே மேற்கொள்கின்றனர். ஆழ்வார்களாலிடப்பட்ட பெயர்களல்லாது வேறு பெயர்களில்தான் பெருமாள் இத்தலங்களில் வழங்கப்படுகிறார்.

தாயார் சந்நிதிகள் பெரும்பாலும் கிடையாது: பெருமாள் அருகிலேயே சிறிய விக்கிரகங்கள் உள்ளன.

Koviloor Digital Library

தினமும் அபிஷேகம், சீவேலி எனும் பிராகார ஊர்வலம் நடைபெறும். பிரசாதமாக சந்தனம், துளசி, புஷ்பம் கொடுக்கப் படுகிறது. திருவல்லாவாழில் விபூதி கொடுக்கி றார்கள். மலையாளப் பிராமணர்களான போத்திகள் ஈரத் துணியுடன் மிகவும் சுத்தமாக பூஜையை மேற்கொள் கிறார்கள்.

மகாராஜாவாக இருந்தாலும் கூட இடையில் வேஷ்டியும் மேலே உலர்ந்த துண்டும் அணிந்துதான் செல்ல வேண்டும். கர்ப்பக் கிருகத்தின் முன்பாக உள்ள மேடை வரைதான் செல்லலாம். கையில் ஒரு பொருளும் உள்ளே எடுத்துச்செல்ல முடியாது.

பாடல் பெறாத தலங்கள்

குருவாயூர்

திருவனந்தபுரத்திலிருந்து கொச்சி வழியாக ஷோரனூர் செல்லும் இரயில் பாதையில் இத்தலம் உள்ளது. நான்ாவித திக்குகளிலிருந்தும் நிறைய பஸ் வசதிகள் உண்டு. மலையாளிகளுக்கும் தமிழர்களுக்கும் பெரிய க்ஷேத்திர மாகக் கருதப்படும் இத்தலத்தில் சகல வசதிகளும் உண்டு.

குருவாயூரப்பனான பகவான், பட்டாத்ரிக்கு நாராயணீ யத்தை அருளியதால் அவருக்கு் கியாதி விலகியதாகவும், நாராயணீயத்தை விவரிக்கும் போது அந்தந்தக் காட்சியை நேரில் பகவான் காட்டியதாகவும் தலவரலாறு கூறுகிறது. தமது பக்தர்களுக்கு எல்லா வித அனுகூலங்களையும் அளிக்கக் கூடிய வரப்பிரசாதி இப்பெருமாள்.

Koviloor Digital Library

வர்க்கலா

திருவனந்த புரத்திலிருந்து கொல்லம் செல்லும் மார்க்கத்தில் இத்தலம் உள்ளது. தலமூலவரான ஜனார்த்தனப் பெருமாள் கிழக்கு நோக்கி நின்றபடி அருள்புரிகிறார். ஜலத்தை ஆசமனம் செய்வது போல் வலதுகை குழியாக வைத்திருப்பது எங்கும் காணற்கரிய காட்சியாகும். தலத் தீர்த்தம் ஆஞ்சனேய புஷ்கரிணி மற்றும் சமுத்திர ஸ்நானமாகும். விமானம் கிருஷ்ண விமானமாகும்.

பகவானின் திருக்கை ஆசமனம் செய்யும் நிலையிலுள்ளது. அது உயர்ந்து கொண்டே வருகிறது என்றும், அது திருவாய்வரை வந்து விட்டால், கலியுகம் முடிந்து உலகம் அழிந்து போகும் என்றும் ஐதீகம். இத்தலத்துக்கு தக்ஷின ஜனார்த்தனம் எனும் பெயரும் உண்டு.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 15367
Q. 22

Koviloor Digital Library

வடநாட்டுத் திருப்பதிகள்

திருச்சிங்கவேள் குன்றம் (அஹோபிலம்)

அஹோபிலமடத்தைப்பற்றி அறியாதவர்கள் குறைவு. கத்தோலிக்கர்களுக்குப் போப்பாண்டவர் எப்படியோ வைணவர்களுக்கு அப்படிப்பட்ட மதத்தலைவர் அஹோபில மடம் ஜீயர். இங்கே நரசிம்மர் பிரத்யட்ச தெய்வமாக விளங்குவதாக நம்பப்படுகிறது. நரசிம்மரின் அருள் இல்லாமல் அஹோபிலத்திற்குச் செல்வது எளிதல்ல என்று கூறுகிறார்கள். மிகுந்த பக்திசிரத்தையுடன் விரதநியமங்களை அனுசரித்தபடியே தரிசிக்கச் செல்ல வேண்டும். அஹோபில நரசிம்மரின் அருளால் சாதிக்க முடியாத காரியமே இல்லை என்றும் கூறுகிறார்கள்.

"அங்கண் ஞாலம்அஞ்ச அங்கோர் ஆளரியாய் அவுணன்
பொங்க ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்
பைங்கணானைக் கொம்புகொண்டு மத்திமையால அடிக்கீழ்ச்
செங்க ணாளி இட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றமே!''

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்ற தலமிது.

இங்கு அஹோபில லக்ஷ்மி நரசிம்மர், வராஹ நரசிம்மர், மாலோல நரசிம்மர், யோகாநந்த நரசிம்மர், பாவந நரசிம்மர், காரர்ச நரசிம்மர், சக்ரவட நரசிம்மர், பார்கவ நரசிம்மர், ஜ்வாலா நரசிம்மர் எனும் ஒன்பது நரசிம்மர்களின் கோயில்கள் இருப்பதால் நவ நரசிம்ம க்ஷேத்திரம் எனும் பெயர் இத்தலத்துக்கு ஏற்பட்டுள்ளது.

அஹோபில மடத்துத் தலைமைத்தலமான கீழ் அஹோபிலத்திலுள்ள கோயிலின் மூலவர் பிரகலாத வரதன். லக்ஷ்மி நரசிம்மர் கிழக்கு நோக்கி வீற்றிருந்த திருக்கோலத்தில் அருள் புரிகிறார். மாலோல நரசிம்மரைத் தவிர எட்டு நரசிம்மர்களின் உற்சவர்கள் இங்கு உள்ளனர். தாயாருக்கு

Koviloor Digital Library

அமிருதவல்லி. செஞ்சுலக்ஷ்மி எனும் திருநாமங்கள். தலத் தீர்த்தங்கள்: இந்திர, நிருசிம்ஹ, பாபநாச, கஜ, பார்கவ தீர்த்தங்களாகும். தலவிமானம்: குகை விமானம்.

கீழ் அஹோபிலத்திலிருந்து தார்சாலை வழியாக 10கி.மீ. மலையேறிச் சென்றால் மேல் அஹோபிலத்தை அடைய லாம். ஒரு சில சமயங்களில் பஸ் வசதிகளும் உண்டு. குடை வரைக் கோயிலான இதன் மூலவர் அஹோபில நரசிம்மர். தாயாரின் திருநாமம் லக்ஷ்மி. இத்தலத்தீர்த்தம்: பவநாசினி. விமானம் : குகை விமானம்.

ஒரு சமயம் கருடாழ்வார் பகவானை நோக்கி நரசிம்மா வதாரத்தை மீண்டும் காண வேண்டும் என விரும்பித் தவம் செய்தபடியால் பெருமாள் இந்த மலையில் நரசிம்மராக அவதரித்து இரண்ய சம்ஹாரத்தை செய்து பிரகலாதனைக் காப்பாற்றியதைக் காண்பித்து ஒன்பதுவித திருக்கோலங் களில் எழுந்தருளியதாகவும் அதனால் இம்மலைக்கு கருடாத்ரி, கருடாசலம், கருடசைலம், எனும் பெயர்கள் ஏற்பட்டதாகவும், பகவானுக்கு இத்தலத்தின் மீது பிரியமேற் பட்டு இங்கேயே தங்கிவிட்டபடியால் லக்ஷ்மி தேவி வேட்டுவப் பெண்ணாக அவதரித்து, பகவானை மணந்து கொண்டதாகவும் தலவரலாறு கூறுகிறது. வேடுவக் குலத்தில் பகவான் மணமுடித்துக் கொண்டதால் இன்றும் மாசி மாதம் மறவர் கூத்தும், ஆர்ப்பாட்டங்களும் சீர்வரிசை களும் பிரமோத்சவ வைபவத்தின் போது விமரிசையாக நடை பெறுகின்றன.

பவநாசினி நீர் விழ்ச்சியையொட்டி மலைமீது ஏறினால் வராக நரசிம்மரது கோயிலையடையலாம். அங்கிருந்து செங்குத்தான மலைமேல் ஒரு சிறிய சந்நிதியில் மாலோல நரசிம்மர் குடி கொண்டிருக்கிறார். அங்கிருந்து 5 கி. மீ. தொலைவில் பகவான் நரசிம்மராக வெளிப்பட்ட தாகக் கூறப்படும் தூண் உள்ளது. அங்கிருந்து சற்று தூரத் தில் ஜ்வாலா நரசிம்மரது சந்நிதி உள்ளது. காட்டு மிருகங் கள் நடமாட்டமுள்ள பிரதேசங்களாகையால் இத்தலங்

Koviloor Digital Library

களுக்கு தகுந்த துணையுடன் சென்று மத்தியானத்துக்குள் தரிசனம் முடித்துக்கொண்டு திரும்பிவிடவேண்டும்.

இராமர் சீதையைப் பிரிந்து தேடிக்கொண்டு வரும் வழியில் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரை ஐந்து சுலோகங்களால் துதித்ததன் பயனாக சீதை கிடைத்ததாக ஐதீகம். ஆதலால் இங்கு மூலவராக லக்ஷ்மி நரசிம்மரும் உற்சவர் சக்ரவர்த்தித் திருமகனாகவும் விளங்குகிறார்கள். இவர் ஒரு சுவயம்பு மூர்த்தி எனக் கூறப்படுகிறது.

இந்த மலையில் பகவானைத் தரிசித்துவிட்டு வந்த ஆதி சங்கரரை ஒரு கபாலிகன் பலி கொடுக்க முற்பட பகவான் பிரத்தியக்ஷமாகி அவனைக் கொன்றதாகத் தலவரலாறு கூறுகிறது.

இத்தலத்தில்தான் தனது பக்தர் ஒருவருக்கு பகவான் காட்சியளித்து ப்ரேஷ மந்திரத்தை உபதேசித்து ஸ்ரீ ராமானுஜ சந்நிதியிலிருந்து காஷாய உடைகளையும் த்ருண் யத்தையும் கொடுத்து ஸ்ரீ சடகோப ஜீயர் எனும் நாமமிட்டு வைணவப் பெருமைகளை உலகுக்கு உணர்த்துமாறு கூறிய தாகத் தல வரலாறு கூறுகிறது. இவ்வாறு தோற்றுவிக்கப் பட்ட அஹோபில மடத்து முதலாவது ஜீயர் தான் சுவிகரிக் கும் உற்சவர் யார் எனத்திகைக்க, பெருமாளே ஸ்ரீ பெரிய பிராட்டியுடன் மாலோல நரசிம்மராக அவர் கையில் வரப் பெற்றதாகக் கூறப்படுகிறது. அன்றுமுதல் இம்மடத்து ஜீயர்கள் தாங்கள் செல்லுமிடமெல்லாம் மாலோலநரசிம்மரை எடுத்துச் சென்று தவறாமல் நித்ய பூஜைகளை முறைப்படி செய்துவருகிறார்கள்.

மேல் அஹோபில நரசிம்மர் சந்நிதியின் நடுவில் ஒரு குகை, சிமெண்டு போடப்பட்டு மூடப்பட்டிருப்பதைக் காண லாம். அஹோபில மடத்து ஜீயர்களில் ஒருவரான ஆறாவது பட்டம் அழகிய சிங்கர் ஸ்ரீ ஷஷ்ட பராங்குச யதீந்திர மஹா தேசிகர் இந்தக் குகையில் பிரவேசித்துத் தியானத்திலிருப்ப

Koviloor Digital Library

தாகவும் இன்றும் சிரஞ்சீவியாக இருப்பதாகவும் பெரியவர்கள் கூறுகிறார்கள்.

இங்கு கட்டப்பட்டுள்ள அஹோபில மடம் மிகப்பெரியதாகையால் எவ்வளவு யாத்ரிகர்கள் வந்தாலும் வசதியாகத் தங்கலாம். அனைத்து நரசிம்மர்களையும் வழிபட இரண்டு நாள்களாவது தங்கவேண்டியது அவசியமாகிறது.

கீழ் அஹோபிலத்தில் ராஜகோபுரத்துக்கு எதிரில் எண்பதடி உயரமான தூண் ஒன்று காணப்படுகிறது. பூமிக்குக் கீழே முப்பதடி ஆழத்துக்கு அது புதைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இதற்கு ஜய ஸ்தம்பம் என்று பெயரிட்டு இருக்கிறார்கள்.

ஆந்திர மாநிலத்து கடப்பா எனும் இரயில் நிலையத்தில் இறங்கி 4 கி. மீ. தொலைவிலுள்ள பஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து சுமார் 90 கி.மீ. தூரத்திலுள்ள அல்லகட்டடா எனும் இடத்தில் இறங்க வேண்டும். அங்கிருந்து வேறு ஒரு பஸ்ஸில் ஏறினால் சுமார் ஒருமணி நேரத்தில் அஹோபில மடத்தையடையலாம். சகல வசதிகளும் இங்கிருப்பதால் இங்கேயே ஓரிரு நாள்கள் தங்கிப் பெருமாள்களை வழிபடலாம். இருந்தாலும் காட்டு மிருகங்கள் அதிகமாக நடமாடும் வனப் பிரதேசமாகையால் தக்க துணையுடன் செல்வதுடன் (கும்பலாகச் செல்வது அவசியம்) வழிபாடுகளைப் பகல் பொழுதுக்குள் முடித்துக் கொண்டு திரும்பிவிட வேண்டும்.

திருவயோத்தி (அயோத்யா)

"கவள யானை பாய்புரவி தேரோடு அரக்க ரெல்லாம்
துவள வென்ற வென்றி யாளன் தன்தமர் கொல்லாமே
தவள மாடம் நீடயோத்திக் காவலன் தன்சிறுவன்
குவளை வண்ணன் காண ஆடீர் குழமணி தூரமே!"

Koviloor Digital Library

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது. பெரியாழ்வார், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், நம்மாழ்வார் ஆகியோராலும் மங்கள சாசனம் செய்யப்பட்ட தலமுமாகும். ஆனால் ஆழ்வார்கள் பாடிய கோயிலும் மூர்த்திகளும் தற்போது இல்லை.

மூலவரான ஸ்ரீராமன், ரகுநாயகன் வடக்கு நோக்கி வீற்றிருக்கும் திருக்கோலம். தாயார் சீதாப்பிராட்டி. தல தீர்த்தங்கள்: சரயுநதி மற்றும் பரமபத ஸ்தீய புஷ்கரிணி. விமானம்: புஷ்கல விமானமாகும்.

பிரம்மாவின் முதல் பிள்ளையான ஸ்வாயம்பு மனுவுக்கு வைகுண்டம் மத்தியிலிருந்து எடுக்கப்பட்ட பாகத்தை பூமியில் சரயு நதிக்கரையில் ஸ்தாபித்ததால் அம்புயத்தோன் அயோத்தி மன்னருக்கு அளித்த கோயில் எனக் கூறப்படும் அம்மாஜி மந்திர் எனும் தென்னிந்திய பாணியில் கட்டப்பட்ட கோயிலில் தென்னிந்திய அர்ச்சகர்கள் பூஜை செய்கின்றனர். ஸ்ரீரங்கநாதர் சந்நிதியிலேயே ஸ்ரீராமரும் எழுந்தருளியிருக்கிறார். இங்கேயே அர்ச்சகர்களின் அனுமதியுடன் தங்கலாம்.

முக்தி ஸ்தலங்கள் ஏழினுள் ஒன்றான இத்தலம், காசி—(வாரணாசி) லக்னோ ரயில் பாதையில் பைசாபாத் எனும் ஸ்டேஷனிலிருந்து 4 கி. மீ. தொலைவில் உள்ளது. பிர்லா மந்திர் மற்றும் பல சத்திரங்கள் இங்கு உள்ளன. சாப்பிட வசதியும் உண்டு.

திருநைமிசாரண்யம்

"வாள்நிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள்
மாதரார் வனமுலைப் பயனே
பேணினேன் அதனைப் பிழையெனக் கருதிப்
பேதையேன் பிறவிநோ யறுப்பான்

Koviloor Digital Library

ஏணிலேன் இருந்தேன் எண்ணினேன் எண்ணி
இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன் வந்துஉன் திருவடி அடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்!''

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற தலம் இது.

மூலவரான ஸ்ரீஹரி எனும் தேவராஜன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயாருக்கு ஸ்ரீஹரி லக்ஷ்மி என்றும் புண்டரிகவல்லிஎன்றும் திருநாமங்கள். தலத் தீர்த்தங்கள்: சக்ரதீர்த்தம், கோமுகி நதி, நேமி, திவ்ய விச்ராந்த தீர்த்தங்களாகும். விமானம்: ஸ்ரீஹரி விமானம். தல விருக்ஷம் தபோவனமாகும். ஆழ்வாரால் பாடப்பெற்ற ஆலயமும் மூர்த்திகளும் தற்போது காணப்படவில்லை. ஆரண்ய ஸ்வரூபி எனும் வனத்தையே பகவான் என வணங்குகிறார்கள். கோமுகியில் குளித்து விட்டு சக்ர தீர்த்தத்தில் குளிக்க வேண்டும். சக்ரதீர்த்தக் கரையில் சக்கரத்தாழ்வார், விநாயகர், இராமர், சீதை, லக்ஷ்மணன் ஆகியோரது ஆலயங்கள் உள்ளன.

கோமுகி நதிக்குச் செல்லும் வழியில் வியாசகப்பி எனும் இடத்தில் வேதவியாசருக்கு ஆலயம் உள்ளது. இங்குதான் இதிகாச புராணங்களை இயற்றியதாகக் கூறப்படுகிறது. இன்னோர் இடத்தில் புராண மந்திர் எனும் பழைய கோயிலில் சுகருக்கு ஆலயம் இருக்கிறது. இங்கு கிளி மூக்குடன் சுகரது வெங்கலச் சிலை பெரியதாக வைக்கப் பட்டுள்ளது. இக்கோயிலுக்கு சற்று தூரத்தில் இராம லட்சுமணர்களைத் தம் இரு தோள்களிலும் சுமந்தவாறு பிரமாண்டமான உருவத்துடன் ஸ்ரீ அனுமான் எழுந்தருளி யிருக்கிறார். அனுமான் கட்டீ என்ற பெயரால் ஆலயம் வழங்கப் படுகிறது.

கல்கத்தா-டேராடூன் இரயில் பாதையில் பாலமால் எனும் ஜங்ஷனில் இறங்கி, சீதாப்பூர் எனும் நகருக்குச்

Koviloor Digital Library

செல்லும் இரயிலில் ஏறி நைமிசாரண்யா இரயில் நிலையத் திலிறங்கி 3 கி. மீ. தூரம் வண்டி பிடித்துச் சென்றால் இங்கு வந்து சேரலாம். அஹோபில மடம், ராமானுஜ மடம் ஆகிய வற்றில் தங்கி பகவானை வழிபடலாம்.

திருப்பிருதி (ஜோஷிமடம்-நந்தப் பிரயாகை)

ரிஷிகேஷிலிருந்து பத்ரிநாத் செல்லும் வழியிலுள்ள ஜோஷிமட்தான் திருப்பிருதி எனப் பெரும்பான்மையின ரால் வழங்கப்படுகிறது. சமுத்திர மட்டத்திலிருந்து 6150 அடி உயரத்திலுள்ள இத்தலம் ஹரித்துவாரிலிருந்து இருநூற்றி நாற்பது கி.மீ. தூரத்தில் உள்ளது.

இங்குதான் ஆதிசங்கரர் ஒரு முசுக்கட்டை மரத்தடியில் தவம் புரிந்து திவ்ய ஞானம் பெற்று சங்கரபாஷ்யத்தை இயற்றினாராம். அவரால் கட்டப்பட்ட நரசிம்மர் ஆலயமும் வாசுதேவர் ஆலயமும் இங்குள்ளன. வாசுதேவர் நின்ற திருக்கோலத்தில் அருள்புரிந்து வருகிறார். இக்கோயி லுக்கு ஒரு கிலோ மீட்டர் தூரம் கீழே படியிறங்கிச் செல்ல வேண்டும். இதனைத்தான் ஆழ்வார் பாடிய தலமாகப் பெரும்பான்மையினர் கருதுகின்றனர்.

''வாலி மாலவந் தொருவன துடல்கெட
வரிசிலை வளைவித்துஅன்று
ஏலம் நாறுதண் தடம்பொழி லிடம்பெற
இருந்தநல் இமயத்துள்
ஆலி மாமுகி லதிர்தர அருவரை
அகடுற முகடேறிப்
பீலி மாமயிரு நடஞ்செயும் தடஞ்சுனைப்
பிருதிசென் றடைநெஞ்சே!''

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்றது இத்தலம்.

Koviloor Digital Library

ஆழ்வாரால் பாடப் பெற்ற திருப்பிருதி எனும் திருப்பதி எது என்பதில் ஐயப்பாடுகள் உள்ளன. நந்தப் பிரயாகை தான் திருப்பிருதி என்றும், ஜோஷிமடம்தான் திருப்பிருதி என்றும், இரண்டுமில்லை, இமயமலையின் உட்புறத்தில் எங்கோ இருக்கிறது என்றும் அபிப்பிராய பேதங்கள் உள்ளன.

மூலவரான பரமபுருஷன் கிழக்கு நோக்கி புஜங்க சயனத்தில் அருள்புரிகிறார். தாயாருக்கு பரிமளவல்லி நாச்சியார் எனும் திருநாமம். தலத்தீர்த்தங்கள்: இந்திர தீர்த்தம், கோவர்த்தன தீர்த்தம், மானஸசரஸ். விமானம்: கோவர்த்தன விமானமாகும்.

திருக் கண்டமென்னும் கடிநகர் (தேவப்ரயாகை)

மூலவரான நீலமேகப்பெருமாள் எனும் புருஷோத்தமன், கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்திலிருந்து அருள் புரிகிறார். தாயாரின் திருநாமம் புண்டரிகவல்லி. தலத் தீர்த்தங்கள்: மங்கள தீர்த்தம் மற்றும் கங்கைநதி. விமானம்: மங்கள விமானம் ஆகும்.

"தங்கையை மூக்கும் தமையனைத் தலையும்
தடிந்தஎம் தாசரதி போய்
எங்கும் தன்புக ழாவிருந்து அரசாண்ட
எம்புரு டோத்தம னிருக்கை
கங்கைகங்கை என்ற வாசகத் தாலே
கடுவினை களைந்திட கிற்கும்
கங்கையின் கரைமேல் கைதொழ நின்ற
கண்ட மென் னுங்கடி நகரே."

எனப் பெரியாழ்வாரால் பாடப் பெற்றது இத்தலம்.

அலக்நந்தா, பாகீரதி ஆகியவை சங்கமமாகி ஆதிகங்கையாக உருவெடுக்கும் மிக ரம்மியமான புண்ணியத்தலமாகும்

Koviloor Digital Library

இதில் குளிக்கும்போது மிகவும் கவனம் வேண்டும். ஆழ்வார் பாடிய பெருமாளை ரகுராத்ஜி என இங்கு வழங்குகிறார்கள். பிரம்மதேவர், தசதரன், ராமன் முதலியோர் தவம் புரிந்த தாகக் கூறப்படும் இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள மூர்த்தியை ஆதிசங்கரர்தான் ஸ்தாபித்ததாகக் கூறப்படு கிறது. கோயிலுக்குப் பின்னால் அழகிய சிறிய அனுமான் எழுந்தருளியிருக்கிறார். மேலும் மஹாதேவர், கால பைரவர், பத்ரிநாத் ஆகியோரது சந்நிதிகள் உள்ளன.

ஹரித்துவாரிலிருந்து பத்ரிநாத் செல்லும் பாதையில் எண்பது கி. மீ. தூரத்தில் சமுத்திர மட்டத்திலிருந்து 1700 அடி உயரத்தில் இத்தலம் உள்ளது. ரிஷிகேஷிலிருந்தும் போகலாம்.

திருவதரியாச்ரமம் (பத்ரிநாத்)

வைணவர்களுக்கு மிகவும் புனிதமான ஸ்தலம். கடல் மட்டத்துக்கு மேல் 10,400 அடி உயரத்தில் உள்ளது. கடும் குளிரில் நீண்ட மலைப்பாதையில் யாத்திரை செய்ய வேண் டும். பத்ரி நாராயணன் தரிசனம் செய்தவர்களுக்கு அது வாழ் நாள் உள்ளவரை மறக்க முடியாத அனுபவமாகும்.

"ஏனமுனாகி இருநில மிடந்துஅன்று
இணையடி இமையவர் வணங்கத்
தானவ னாகம் தரணியில் புரளத்
தடஞ்சிலை குனித்த என் தலைவன்
தேனமர் சோலைக் கற்பகம் பயந்த
தெய்வநல் நறுமலர் கொணர்ந்து
வானவர் வணங்கும் கங்கையின் கரைமேல்
வதரியாச் சிரமத்துள் ளானே."

எனத் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்றது இத்தலம். பெரியாழ்வாராலும் இத்தலம் மங்களசாசனம் செய்யப் பட்டுள்ளது.

Koviloor Digital Library

மூலவரான பத்ரி நாராயணன் கிழக்கு நோக்கி வீற்றிருந்த திருக்கோலத்திலிருந்து அருள் புரிகிறார். தாயாருக்கு அரவிந்தவல்லி எனும் திருநாமம். தென்புறம் பிராகாரத்தில் தனிச்சந்நிதியிலுள்ள இந்தத் தாயாரை வட இந்தியர்கள் மஹாலக்ஷ்மி என்றே வழங்குகின்றனர். தலத்தீர்த்தம் : தப்த குண்டம். தலவிருக்ஷம் பத்ரி (இலந்தை) மரம். விமானம் தப்த காஞ்சன விமானம்.

மஹாலக்ஷ்மிக்கு மிகவும் பிரியமான இருப்பிடமான பத்ரீ (இலந்தை) மரத்தின் கீழேதான் ஸ்ரீபத்ரி நாராயணர் வீற்றிருப்பதாக ஐதிகம். பத்ரி மரத்தின்கீழ் அவர் ஜடாபரிதனாய் மேல் வலக்கையில் சக்ரமும் இடக்கையில் சங்கும், கீழ்வலது இடது கைகளை யோகமுத்திரையாகக் கொண்டும் பத்மாசனத்தில் தவக் கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். பெருமாள் மட்டும் சாளக்கிராமச் சிலையிலான மூலமூர்த்தி; மற்றவர்களெல்லாம் உற்சவர்களே. பகவானது வலப்புறத்தில் குபேரனும், கருடனும், அமர்ந்திருக்கின்றனர். இடப்புறத்தில் தேவரிஷியான நாரதர், உத்தவர், நாராயணர், நரர் முதலானவர்கள் உள்ளனர். பிராகாரத்திலேயே ஆசிசங்கரருக்கு தனிச்சந்நிதி உள்ளது.

இக்கோயிலின் பின்புறம் லக்ஷ்மி நரசிம்ம மந்திர் எனும் தனிக்கோயிலில் ஸ்ரீஸ்வாமி தேசிகன், ஸ்ரீராமானுஜர் ஆகியோருக்குச் சந்நிதிகள் உள்ளன.

பத்ரிநாராயணனது ஆலயத்துக்கு எதிரே கங்கையின் கரையில் வெந்நீர் ஊற்றுள்ள தப்தகுண்டமும், நரநாராயண பர்வதங்களும், வலப்புறம் நீலகண்ட பர்வதமும் உள்ளன. தப்தகுண்டத்திலிருந்து சில படிகளுக்கு மேலே சிம்மத் துவாரத்தில் கருடாழ்வார் சந்நிதி உள்ளது. உரிய கட்டணத்தை முன்னதாகச் செலுத்தினால் விசேஷ அபிஷேகங்கள். திருமஞ்சனம், அர்ச்சனை, கற்பூரஆரத்தி முதலியவற்றைச் செய்யலாம். வரிசையில் நின்று வழிபட்டாலும் திரும்பத் திரும்ப வரிசையில் சேர்ந்து பகவானை எத்தனை

Koviloor Digital Library

முறை வேண்டுமானாலும் வழிபடலாம். அபிஷேகங்களையும் அர்ச்சனைகளையும் கர்ப்பக் கிருகத்தில் பகவானுக்கு மிக அருகிலிருந்தே மனத் திருப்தியுடன் கண்குளிரக் கண்டு களிக்கலாம். பெருமாளுக்குத் திருமஞ்சனம், சாத்துப்படி, நைவேத்யம் முதலானவை திரை போடாமல் பக்தகோடிகளுக்கெதிராகவே நடைபெறுவது விசேஷமான அம்சம். இரவில் பிரதம அர்ச்சகர் பெருமாளின் ஆடைகளையும் மாலைகளையும்-வடநாட்டு பிராமணர்கள் சாந்தி பஞ்சகம் எனும் மந்திரங்களை உச்சரிக்க - களையும் காட்சிக்கு கீத கோவிந்தம் எனப் பெயர். இதனையும் கட்டணம் செலுத்தி அருகிலமர்ந்து தரிசிக்கலாம். மற்றவர் தூரத்திலிருந்து தரிசிக்கலாம்.

கடல் மட்டத்திலிருந்து 23,210 அடி உயரத்திலும் ஹரித்துவாரிலிருந்து 320 கி. மீ. மைல் தூரத்திலும் உள்ள இக்கோயில் நாற்புறமும் பனிமலைகளால் சூழப்பட்டு இயற்கை எழிலுடன் காட்சியளிக்கிறது. எப்பொழுதும் கடுங்குளிர் நிறைந்த பிரதேசமாகையால் கம்பளி உடைகள் அவசியமாக எடுத்துச் செல்ல வேண்டும். இவ்வூரில் வசுதாரா எனும் பனிமலை நீர்வீழ்ச்சியின் திவலைகள் உடல்மேல் பட்டால் புனிதமாவர் என்பது ஐதீகம். திருவஷ்டாக்ஷர மந்திரத்தின் அவதார ஸ்தலமான இதற்கு விசாலபுரி எனும் திருநாமம் உண்டு. பனி பெய்யும் பிரதேசமாகையால் தீபாவளியன்று இக்கோயில் மூடப்பட்டு ஆறுமாத காலம் கழித்துச் சித்ரா பௌர்ணமியன்று திறக்கப்படும். மேமாதத்திலிருந்து செப்டம்பர் பிற்பகுதி வரையில் தான் இந்த யாத்திரையை மேற்கொள்ள முடியும். இங்கு பல தர்மசாலைகளும் தேவஸ்தானங்களும் சகல வசதிகளையும் அளிக்கின்றன.

டெல்லியிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் ஹரித்வார் செல்ல இரயில் வசதிகள் உண்டு. அங்கிருந்து சுமார் 300 கி, மீ. தூரம் இமயமலை மேல் பிரயாணம் செய்து

Koviloor Digital Library

இத்தலத்தையடைய வேண்டும். ஹர்த்வாரில் பிரம்ம குண் டத்தில் குளித்து விட்டு அங்கிருந்து ரிஷிகேஷுக்குச் சென்று லக்ஷ்மண் ஜூலாவுக்குச் சென்று அங்குள்ள சிறு சிறு ஆசிர மங்கள், மந்திர்களைத் தரிசித்து மனத்தைச் சுத்தப் படுத்திக் கொண்டு பிறகு பஸ்ஸில் பயணத்தைத் தொடரலாம். இப் பாதையில் முதலில் தேவப்ரயாகை அதாவது கண்டமென் னும் கடிநகர் வருகிறது அங்கிருந்து ஸ்ரீ நகர் எனும் ராணுவ தளத்தின் வழியாக ருத்ரப்பிரயாகை எனும் தலத்தையடை யலாம். அங்கிருந்து கௌஸார் எனும் விமான தளத்தின் வழி யாக கர்ணப்பிரயாகையையடையலாம். இதனைத்தான் திருப்பிரிதி எனச் சிலர் கூறுகிறார்கள்.

இங்கிருந்து 10 கி.மீ தொலைவில் தான் இராவணன் சிவனைக் குறித்துத் தவம் செய்து கைலாய மலையைத் தூக்கியதாகக் கூறப்படுகிறது. அங்கிருந்து சமோலி, பீபல் கோடி எனும் இடங்களைக் கடந்து, ஜோஷிமட்டை அடை யலாம். ஜோஷிமட்டிலிருந்து பத்ரிநாத்துக்கு ஒரு வழிப் பாதைதான் உண்டு. நாரதர் அஷ்டா க்ஷர மந்திரத்தினால் நாராயணனை பூஜை புரிந்த இந்தப் புண்ணியத் தலத்தில் தான் அலக்நந்தாவும் தேவி கங்காவும் சங்கமம் ஆகின்றன. அங்கிருந்து சற்று தூரத்திலுள்ள பாண்டுகேஸ்வர் எனும் ஊரில்தான் பத்ரிநாத் கோயிலின் உற்சவ மூர்த்திகள் பனி மூடிய ஆறுமாத காலத்தில் வாசுதேவர் கோயிலில் எழுந்த ருளச்செய்து பூஜிக்கப்படுகின்றன. இது தான் பாண்டு தவம் புரிந்த இடம் என்றும் பஞ்ச பாண்டவர்கள் பிறந்த இடம் என்றும் கூறப்படுகிறது. இங்கிருந்து சற்று தூரத்தில்தான் பீமனும் அனுமானும் சண்டையிட்ட அனுமான் சட்டி எனும் இடமிருக்கிறது. அங்கிருந்து 24 கி. மீ. தூரத்தில் பத்திரிநாத் உள்ளது.

வடமதுரை—(மதுரா)

ஸ்ரீ கிருஷ்ணன் அவதார ஸ்தலம் என்று சொன்னாலே போதும்! இத்தலத்தின் மகிமைகளை விளக்க வேறு வார்த் தைகள் வேண்டா. ‘‘மன்னுவட மதுரை மைந்தனை மாயனை’’ என்றல்லவா ஆண்டாள் பாடுகிறாள்? மேலும்,

Koviloor Digital Library

"மற்றிருந் தீர்கட்கு அறியலாகா
மாதவ னென்பதோர் அன்புதன்னை
உற்றிருந் தேனுக்கு உரைப்பதெல்லாம்
ஊமைய ரோடு செவிடர்வார்த்தை
பெற்றிருந் தானை யொழியவேபோய்ப்
பேர்த்தொரு தாயில் வளர்ந்தநம்பி
மற்பொருந் தாமற் கள மடைந்த
மதுரைப் புறத்துஎன்னை உய்த்திடுமின்,"

என ஆண்டாளால் பாடப் பெற்றது இத்தலம். பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர்களாலும் மங்களசாசனம் செய்யப் பட்ட தலம் இது.

மூலவரான கோவர்த்த நேசன், பாலகிருஷ்ணன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்திலிருந்து அருள்புரிகிறார். தாயாருக்குச் சத்ய பாமா எனும் திருநாமம். தலத்தீர்த்தங்கள் : கோவர்த்தன தீர்த்தம், இந்திர தீர்த்தம், யமுனா நதி. விமானம் : கோவர்த்தன விமானமாகும்.

டெல்லியிலிருந்து ஆக்ரா போகும் பாதையில் இரயிலிலோ பஸ்ஸிலோ சென்றால் இத்தலத்தையடையலாம். பஸ்ஸில் சென்றால் நேராகக் கோயில் அருகே செல்லலாம். இரயிலில் சென்றால் மதுரா சந்திப்பிலிருந்து சுமார் 8 கி. மீ. தூரத்தில் இத்தலம் உள்ளது. இத்தலத்தில் தங்கப் போதிய வசதிகள் இல்லையாதலால் டில்லியிலிருந்து போய் வருவதுதான் நல்லது. டில்லியிலிருந்து தாஜ்மகால் செல்லும் டூரிஸ்டு பஸ்கள் அனைத்தும் இத்தலத்துக்கும் யாத்திரிகளைக் கொண்டுபோகின்றன. அப்படியில்லாமல், தங்கிப் பகவானை வழிபட வேண்டுமென்றால் சுமார் 10 கி. மீ. தொலைவிலுள்ள பிருந்தாவனம் எனும் ஊரில் தங்கியிருந்து போய் வரலாம். தற்போது இவ்வூரில் ஆழ்வார்களால் பாடப் பட்ட கோயில்களும் மூர்த்திகளும் இல்லை. துவாரக் நாத்ஜி

Koviloor Digital Library

மதுரா நாத்ஜி எனும் பிற்காலத்தில் கட்டப்பட்ட் கோயில் களே உள்ளன.

வடமதுரை எனும் திவ்ய தேசம் உண்மையில் மதுரா, பிருந்தாவனம், கோவர்த்தனம் எனும் மூன்று இடங்கள் சேர்ந்ததாகும். மதுரா கோயிலிருந்து 3 கி. மீ. தொலைவில் ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்ததாகக் கூறப்படும் ஜன்ம பூமியில் புதிய தாக ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது. அதன் அருகிலேயே பகவான் பிறந்த இடமாகப் கருதப்படும் சிறைச்சாலை இருக்கிறது. அங்கிருந்து 12 கி.மீ. தொலைவில் கோவர்த்தன கிரி இருக்கிறது.

பிருந்தாவனத்தில் தென்னாட்டுப்பாணியில் தமிழ்நாட்டு வைணவ அர்ச்சகர்கள் பூஜை செய்யும் ரங்கமந்திர் எனும் தெய்வாம்சம் பொருந்திய கோயில் உள்ளது. அங்கே தங்கு வதற்கும் சாப்பிடுவதற்கும் ஏற்பாடுகள் செய்துதருகிறார்கள். அக்கோயிலில் ஆண்டாள், கருடாழ்வார், வெங்கடாசலபதி, உடையவர் ஆகியோருக்கும் சந்நிதிகள் உள்ளன.

ஒரு சமயம் மது நகரத்தின் அசுர மன்னனான லவணா சூரனது கொடுமைகளைப் பொறுக்க முடியாது முனிவர்கள் ஸ்ரீ ராமபிரானிடம் முறையிட அவர் தமது தம்பியான சத்ருக்னனிடம் மதுகைடபர்களைக் கொல்வதற்கு உபயோ கித்த பாணத்தைக் கொடுத்தனுப்ப, சத்ருக்னனும் அந்த அசுரனைக் கொன்று மாடமாளிகை கூட கோபுரங்கள் கொண்ட அழகிய மதுரா நகரத்தை நிர்மாணித்ததாகவும் சத்ருக்னனது வம்சத்துக்குப் பிறகு யாதவர்கள் ஆட்சி புரிந்ததாகவும் கூறப்படுகிறது. யாதவ வம்சத்தில் வாசு தேவர் மகனாக ஸ்ரீ கிருஷ்ணர் இந்தப்பூமியில் அவதரித்தார். ஸ்ரீ கிருஷ்ண ஜன்ம பூமியான இங்கு ஒரே சமயத்தில் பல்லா யிரம் பேர் வழிபடுமளவுக்கு வசதிகள் உண்டு. கிருஷ்ண ஜன் மாஷ்டமி முதல் வாரத்தில் கண்ணன் வரலாறு நாடகமாக நடித்துக் காண்பிக்கப்படுகிறது. இதனைக் காணப்பல்லா

Koviloor Digital Library

யிரக் கணக்கான மக்கள் பலதிசைகளிலிருந்தும் வந்து கூடுகிறார்கள்.

திருவாயர்பாடி (கோகுல்-கோகுலம்)

''சிலையொன்று இறுத்தாய்! திரிவிக் கிரமா!
திருவாயர் பாடிப் பிரானே!
தலைநிலாப் போதே உன் காதைப் பெருக்காதே
விட்டிட்டேன் குற்றமே யன்றோ?''

எனப் பெரியாழ்வாரால் பாடப்பெற்ற தலமிது. திருமங்கை யாழ்வாரும் மங்களசாசனம் செய்துள்ளார்.

மூலவரான நவமோகன கிருஷ்ணன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்திலிருந்து அருள் புரிகிறார். தாயார் ருக்மணி, சத்தியபாமை பிராட்டிகளாவர். தலத்தீர்த்தம் : யமுனை நதி. விமானம் : ஹேம கூட விமானமாகும்.

மதுரா சந்திப்பிலிருந்து 13 கி. மீ. தூரத்தில் யமுனை நதி பாலத்தைக் கடந்து இத்தலத்தையடையலாம். பஸ் வசதிகளுண்டு. பிறவசதிகள் எதுவுமில்லை.

இங்கிருந்து $1\frac{1}{4}$ கி.மீ. தூரத்திலுள்ள புராணா கோகுல் எனும் பழைய கோகுலத்திலும் ஓர் ஆலயம் உள்ளது. யமுனை நதி ஓரத்திலுள்ள அக்கோயிலில் நந்த கோபர் யசோதை, பலராமர் ஆகியவர்களுக்கடியில் கிருஷ்ணர் குழந்தை வடிவில் ஒரு மரத் தொட்டிலில் எழுந்தருளியிருக் கிறார். இவ்விக்கிரகங்களெல்லாம் மரத்திலானவை. இவை இரண்டில் எது உண்மையான கோகுலம் என்பது தெரிய வில்லையாதலால் இரு கோயில்களிலும் வழிபாடுகளை மேற் கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள கோயில்கள் மற்றும் மூர்த்திகள் பிற்காலத் தில் கட்டப்பட்டவை. ஆழ்வார்கள் பாடியவை தற்போது இல்லை.

Koviloor Digital Library

துவாரகா-(துவாராபதீ-துவரை)

முக்தி தரும் ஏழு தலங்களுள் ஒன்றான இத்தலம் மோட்சத்துக்கு வழியாக இருப்பதால் இதற்குத் துவாரகை எனும் பெயர் ஏற்பட்டது. ஜரா சந்தன் கொடுத்த தொல்லைகளிலிருந்து மக்களை மீட்க எண்ணி, கிருஷ்ண பகவான் சமுத்திர ராஜனிடமிருந்து இடம் வாங்கி, விஸ்வகர்மாவைக் கொண்டு இத்தலத்தை உருவாக்கியதாகப் புராண வரலாறு கூறுகிறது.

மூலவரான கல்யாண நாராயணன், துவாரகதீசன் எனும் துவாரக்நாத்ஜி, மேற்கு நோக்கி நின்ற திருக் கோலத்திலிருந்து அருள் புரிகிறார். தாயார்கள் கல்யாண நாச்சியார் எனும் லக்ஷ்மிஸ்ரீ, ருக்மணி தேவி. தலத்தீர்த்தங்கள்: கோமதி நதி மற்றும் சமுத்திர சங்கமம். விமானம்: ஹேமகூட விமானமாகும்.

"ஆவ லன் புடை யார்தம், மனத் தன்றி
மேவ லன்விரை சூழ்துவ ராபதிக்
காவ லன்கன்று மேய்த்து, விளையாடும்
கோவ் லன்வரில் கூடிடு கூடலே!"

என ஆண்டாளால் பாடப்பெற்ற தலமிது. பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார் முதலியவர்களாலும் மங்கள சாசனம் செய்யப்பட்டது, இத் தலம்.

பம்பாயிலிருந்து ஆமதாபாத், ராஜ்கோட், ஜாம்நகர் வழியாக ஒகா துறைமுகம் செல்லும் இரயில் பாதையில் துவாரகா இரயில் நிலையம் உள்ளது ஒகா துறைமுகத்துக்கு 32 கி.மீ. தூரத்தில் இத்தலம் உள்ளது. துவாரகா இரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ. தூரத்திலுள்ள இந்தலத்திற்கு வண்டி மூலமாகச் செல்லலாம். ஆமதாபாத்திலிருந்து துவாரகா கோயிலுக்கே பஸ்கள் உண்டு. சகல வசதிகளும் இத்தலத்தில் உண்டு.

Koviloor Digital Library

கோயிலின் படிகள் வழியாக இறங்கிக் கோமதி நதி கடலுடன் சங்கமமாகும் இடத்திலிருந்து பஸ் மூலமாக நேரே துறைமுகம் சென்று விசைப்படகின் மூலமாகத் துவாரகா தீவுக்குச் செல்ல வேண்டும். அங்குதான் சுமார் ஆயிரத்து ஐநூறு அறைகள் கொண்ட கிருஷ்ணனின் திருமாளிகை உள்ளது. இங்குள்ள மூலவரான துவாரக் நாத்ஜி சங்குசக்ர தாரியாக எழுந்தருளியிருக்கிறார். தரிசன நேரங்கள் காலை ஐந்து மணி முதல் பகல் ஒருமணி வரையிலும், பின்னர் மாலை நான்கு மணி முதல் இரவு எட்டுமணி வரையிலுமாகும். பெருமாளுக்கு அலங்காரங்கள் முதலியன திரை போடாமலே செய்யப்படுகின்றன. பகவானின் திருமார்பில் லக்ஷ்மி எழுந்தருளியிருக்கிறார்: உற்சவத் தாயார் ருக்மணி. மேலும் கல்யாணராயர், திருவிக்ரம மூர்த்தி, தேவகி, ஜாம்பவதி, லக்ஷ்மிநாராயணன் ஆகியோருக்குச் சந்நிதிகள் உள்ளன. தினசரி பகவானுக்குக் குழந்தை போலவும் அரசன் போலவும், வைதிகோத்தமன் போலவும் அலங்காரங்கள் நடைபெறுவதுடன் திருமஞ்சனமும் நடைபெறுகிறது. கிருஷ்ணன் ருக்மணியைத் திருமணம் செய்து கொண்டதாகக் கருதப்படும் இடத்தில் ருக்மணிக்குத் தனிக்கோயில் உள்ளது.

இத்தலத்திலிருந்து திரும்பி வரும்போது அவசியமாகப் பார்க்க வேண்டிய தலங்கள் பல உள்ளன. விராவல் ஸ்டேஷனில் இறங்கினால் ப்ரபாஸ தீர்த்தம், சோமநாதர் ஆலயம், முதலியவற்றைத் தரிசிக்கலாம். கிருஷ்ணர் வைகுந்தம் போவதற்கு முன் அரசமரத்தடியில் சயனித்திருக்கும் திருக்கோலத்தை பாலகா ரெயில் நிலையத்தில் இறங்கித் தரிசிக்கலாம். ஜுனாகப் ஸ்டேஷனில் இறங்கினால் கிரிநார் என்ற ரைவத மலையையும் பல கோயில்கள் மற்றும் மடங்களையும் காணலாம்.

Koviloor Digital Library

திருப்பாற்கடல்

"வெள்ளை வெள்ளத்தின் மேல்ஒரு பாம்பை
மெத்தை யாக விரித்துஅதன் மேலே
கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்
காண லாங் கொல்என் றாசையி னாலே
உள்ளம் சோர உகந்துஎதிர் விம்மி
உரோமகூ பங்களாய்க் கண்ண நீங்கள்
உள்ளம் சோரத் துயிலணை கொள்ளேன்
சொல்லாய் யான்உன்னைத் தத்துறு மாறே!"

எனப் பெரியாழ்வாரால் பாடப்பெற்ற தலமிது. ஆண்டாள் குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் ஆகியோராலும் இத்தலம் பாடப்பெற்றுள்ளது.

மூலவரான க்ஷீராப்திநாதன் வியூக நிலையில் தெற்கு நோக்கி ஆதிசேஷன்மீது படுத்திருக்கிறார். அருகில் கடல் மகள் நாச்சியாரான ஸ்ரீதேவி மற்றும் பூதேவி அமர்ந்திருக் கின்றனர். தலதீர்த்தங்கள்: அமிருத தீர்த்தம் மற்றும் திருப்பாற்கடலாகும். விமானம்: அஷ்டாங்க விமானமாகும்.

மனித தேகத்துடன் இத்தலத்தை அடைய முடியாது. நில உலகிலிருந்து அதனைக் கண்ணால் காணவும் இய லாது. வேண்டுமானால் வட கடலுக்குச் சென்று அதன் கரையில் நின்று வரலாம் எனக் கருதப்படுகிறது. மேற் காணும் நூற்றி ஆறு திவ்ய திருப்பதிகளில் பெருமாளை வழி பட்டு அவரது அனுக்கிரகத்தால் அவராலே இங்கு அழைத் துச் செல்லப்பட்டு தரிசிக்க முடியும் எனும் நம்பிக்கை நிலவு கிறது.

திருப்பரமபதம் (திருவைகுந்தம்-திருநாடு-பரம்)

வைணவர்களின் இலட்சியமே இத்தலத்தை அடைவது தான். இது பூலோகத்திலே இல்லை. இங்குச் செல்லும்

Koviloor Digital Library

பாக்கியம் படைத்த ஜீவாத்மாக்கள் பகவானைப் போன்ற உருவத்தில் அவரை அவரருகிலிருந்தவாறு வழிபடுகிறார்கள். இங்குச் சென்றவர்கள் யாரும் திரும்புவதில்லை. நூற்றி ஆறு திருப்பதிகளுக்கும் சென்று பகவானை வழிபட்டு மோக்ஷ நிலையை அடையும் ஜீவாத்மாக்கள் இந்தப் பரம பதத்தை அடைகின்றனர். ஆழ்வார்களாலும் மற்ற பகவத் பாதாள்களாலும் நன்கு விவரிக்கப்பட்டுள்ள இந்தத் தலத்தை யடைவது வைணவரின் குறிக்கோளாகும்.

''மண்ணையிருந்து துழாவி
'வாமனன் மண்ணிது' வென்னும்,
விண்ணைத் தொழுதுஅவன் மேவு
'வைகுந்த' மென்று கை காட்டும்,
கண்ணைஉள் நீர்மல்க நின்று
'கடல்வண்ண' னென்னு மன்னே!என்
பெண்ணைப் பெருமயல் செய்தாற்கு
என்செய்கேன்? பெய் வளை யீரே!''

என நம்மாழ்வாரால் பாடப்பெற்ற திருப்பதி இது. பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார் ஆகியோராலும் இத்திருப்பதி பாடப் பெற்றுள்ளது.

இங்குள்ள பெருமாளுக்குப் பரமபத நாதன் எனும் திருநாமம். தெற்கு நோக்கி வீற்றிருந்த திருக்கோலத்தில் அருள் புரிகிறார். தாயார் பெரிய பிராட்டியாவார். தீர்த்தம்: விரஜா நதி மற்றும் அயிரமத புஷ்கரிணியாகும். விமானம்: அநாந்தாங்க விமானமாகும்.

Koviloor Digital Library

பாடல் பெறாத தலங்கள்

காசி (வாரணாசி)

முக்தி க்ஷேத்திரங்களிலே முதன்மையானதாகக் கருதப்படும் காசி க்ஷேத்திரம் சகல புராணங்களிலும் புகழ்ந்து கூறப்பட்டுள்ள முக்கியமான ஸ்தலமாகும். இந்துக்களுக்குக் காசியை விட முக்கியமான ஒரு திருத்தலம் வேறு எதுவுமேயில்லையென்று சொல்லி விடலாம். சைவர்கள், வைணவர்கள் இரு சாராரும் போற்றித் துதிக்கின்ற தலமிது. இந்திய நாட்டில் வெவ்வேறு மூலைகளிலிருந்தும் பக்தர்கள் வந்துகொண்டேயிருக்கும் தலம். இந்துவாகப் பிறந்தவர் தன் ஆயுட்காலத்தில் ஒருமுறையாவது காசிக்குச் சென்று தரிசிக்க வேண்டும் என்று விரும்புவது வழக்கம்.

இந்தத் தலம் உத்திரப் பிரதேசத்தில் அலகாபாதிற்கு அப்பால் உள்ளது. ஒருவன் பூர்வஜென்மங்களில் செய்த பாவங்களையெல்லாம் நசித்துப் போகச் செய்யும் 'வாரா' என்ற நதிக்கும், ஐம்புலன்களினால் செய்யும் பாவங்களை நாசம் செய்யக்கூடிய 'நாசி' என்ற நதிக்கும் இடையே இருப்பதால் இந்தத் தலத்திற்கு 'வாரணாசி' என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர்.

காசி சிவ க்ஷேத்திரமாகத்தான் புகழ்பெற்று விளங்குகின்றது. காசி விஸ்வநாதர் ஆலயமும் தாயார் அன்னபூரணியின் ஆலயமும் மிகச் சிறந்தவை. ஆனால், இங்கே மரணமடைபவர் காதில் சிவபெருமானே ராமநாமத்தை ஓதி முத்திபெறச் செய்வதாகக் கூறுகின்றனர். இந்து மதத்தில் சிவன் பெரியவரா? விஷ்ணு பெரியவரா? என்று அறியாமையினால் சச்சரவு செய்துகொள்ளும் மூட பக்தர்களின் கண்களைத் திறக்கும் வரலாறு.

Koviloor Digital Library

பிரம்மனின் ஐந்தாவது தலையைக் கிள்ளியதால் பிரம்மஹத்தி தோஷம் பிடித்த சிவபெருமான் காசி நகரில் நுழைந்தவுடன் பிரம்மஹத்தி தோஷம் நீங்கியதாகவும், அன்னபூரணேஸ்வரி பிச்சையிட்டவுடன் சிவனின் கையிலி ருந்து கபாலம் அகன்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன. பிரம்மஹத்தி நீங்கிய சிவபெருமான் விஷ்ணுவைப் பிரார்த்தித்துக் காசி மாநகரைத் தானமாகப் பெற்றுவிட்ட படியால் சிவ க்ஷேத்திரமாகப் பிரசித்தி அடைந்தது என்பர்.

காசியில் ஆற்றின் கரையோரமாக் அறுபத்தி நான்கு ஸ்நான கட்டங்கள் உள்ளன. விஸ்வநாதர் கட்டம், விசாலாட்சி கட்டம், அன்னபூரணா கட்டம், மணிகர்ணிகா கட்டம், கேதார் கட்டம், அனுமான் கட்டம், அரிச்சந்திர கட்டம் போன்றவை விசேஷமானவை. இறந்தவர்களின் அஸ்தியைக் கரைப்பதால் அவர்கள் மோட்சமடைகிறார்கள் என்ற நம்பிக்கையில் பல்வேறு ஊர்களிலிருந்தும் அஸ்தியைக் கொண்டுவந்து இங்குள்ள கங்கைநதியில் போடுகிறார்கள்.

காசியிலுள்ள பெருமாள் கோயிலில் உள்ள மூர்த்திக்குக் கேசவன் என்று பெயர். கிழக்கு நோக்கி நின்ற திருக் கோலத்தில் காட்சியளிக்கிறார். அபிமுத்த விமானத்துடன் கூடிய இந்த ஆலயமும் வடநாட்டு ஆலயங்களின் பாணியி லேயே அமைந்துள்ளது. தாயார் பெயர் லக்ஷ்மி. சிவ பெருமான் தரிசித்து வரம்பெற்ற பெருமையை உடையவர் இந்த ஆலயமூர்த்தி.

பிரயாகை (அலகாபாத்)

உத்தரப் பிரதேசத்தின் தலைநகரான அலகாபாத்தே புராணங்களால் புகழப்பெற்ற திரிவேணி சங்கமம் எனும் பிரயாகை க்ஷேத்திரம். இங்கே, புகழ்பெற்ற ஆலயம் எதுவும் கிடையாது. ஆயினும், க்ங்கை சிவ வடிவமாகவும், யமுனை விஷ்ணுவடிவமாகவும் கண்ணுக்குத் தெரியாத சரஸ்வதி நதி பிரம்ம வடிவமாகவும் தொழப்படுகிறார்கள்.

Koviloor Digital Library

மூன்று நதிகள் ஒன்று சேருமிடமாகையால் இதன் பெருமை வர்ணிக்க முடியாதது. கும்பமேளா நடைபெறுவது இவ்விடத்தில்தான். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை பல லட்சக்கணக்கான யாத்திரிகர்கள் திரிவேணி சங்கமத்தில் குளிப்பதற்காக வந்து கூடுகிறார்கள். ஆயினும், வருடம் பூராவும் பயணிகள் வந்து போய்க்கொண்டே இருக்கின்றனர். முக்கியமாகக் காசிசெல்லும் யாத்திரிகர்கள் (பீகார், மேற்கு வங்காளம் மாகாணங்களிலிருந்து வருகிறவர்களைத் தவிர) அலகாபாத்தைத் தாண்டித்தான் செல்ல வேண்டுமாகையால் கண்டிப்பாகத் திரிவேணி சங்கமத்தில் குளித்து விட்டுக் காசிக்குச் செல்வது வழக்கமாகிவிட்டது.

முதலில் கங்கை நதியில் குளித்துவிட்டு பிறகு படகில் சென்று ஆற்றின் நடுவில் கட்டப்பட்டிருக்கும் மூங்கில் மேடையிலிருந்து இறங்கி, சங்கல்பம் செய்துகொண்டு ஸ்நானம் செய்ய வேண்டும். பால், எலுமிச்சை, பணம் முதலியவற்றை அர்ப்பணம் செய்கிறார்கள். நதியில் போடும் எலுமிச்சம்பழம் மிதக்காமல் அமிழ்ந்து விடுவது அதிசயம்.

இத்தலத்தில் ப்ரணதி, பத்மாவதி என்ற வைஷ்ய தம்பதிகளும் தனுர்த்வஜன் என்பவனும் பிரத்யட்ச ரூபத்தில் பகவானைத் தரிசித்ததாகப் பத்ம புராணம் கூறுகிறது.

கயை

புத்தர்களுக்கு மிகவும் விசேஷமான புண்ணிய ஸ்தலமாகக்கருதப்படும் கயை, இந்துக்களுக்கும் சிறந்த புண்ணிய ஸ்தலமாகும். கயையில் ஒரு தடவை பித்ரு சிரார்த்தம் செய்தால் அதன் பயனாக அவன் முன்னோர் இருபத்தோரு தலைமுறைக்கும் நற்கதியடைந்து விடுகிறார்கள் என்று புராணம் கூறுகிறது. கயைக்குச் சென்று உத்தரபல்குனி நதியில் நீராடி அக்ஷய வடத்தில் சிரார்த்தம் செய்ய வேண்டும். அவ்வாறு சிரார்த்தம் செய்பவர்கள் தமது வாழ்நாளில் ஓர் இலை, ஒரு காய், ஒரு கனி ஆகியவற்றைப் பிறகு வாழ்

Koviloor Digital Library

நாள் உள்ளவரை உண்பதில்லை என்றவிரதம் மேற்கொள்ள வேண்டும் என்பது விதி.

காசியிலிருந்து கல்கத்தா போகும் மார்க்கத்தில் கயை உள்ளது. ரயில் நிலையத்திலிருந்து 3 கி. மீ. தூரத்திற்கு அப்பால் க்ஷேத்திரம் இருக்கிறது. இங்கு பகவான் வடக்கு நோக்கிக் கதாதரராக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். கோயில்மேலுள்ள விமானத்திற்கு வைகுண்ட விமானம் என்று பெயர். பகவானுக்கு கதாதரர் என்றே பெயர். தாயாருக்குத் தனிச்சன்னதி இல்லை. ஸ்தல விருட்சமாகிய அஸ்யவடம் என்ற ஆலமரம் மிகவும் பிரசித்தமானது.

இத்தலத்தில் சங்கரமடம், நாராயணாச்சார் ஆசிரமம் முதலியவை இருக்கின்றன. பகவான் கயாசூரன் என்ற அசுரனுக்குப் பிரத்யட்சமாகி வரமளித்ததாக வரலாறு.

கயா சூரன் என்பவன் விஷ்ணுவைக் குறித்துத்தவம் செய்து தனது சரீரம் பிரம்மா சிவன் முதலியவர்களின் சரீரங்களைவிடப் பரிசுத்தமானதாக இருக்க வேண்டுமென்று வரம் பெற்றுவிட்டான். அதனால் எவ்வளவு கொடிய பாவம் செய்தவர்களும் கயாசூரனைத் தொட்ட மாத்திரத்தில் பாவ விமோசனம் பெற்று நற்கதியடைந்து விட்டார்கள் என்பர்.

தேவர்கள் விஷ்ணுவைக் குறித்து பிரார்த்தனை செய்ய, விஷ்ணு, பிரம்மாவைக் கயாசூரன் முதுகின் மேல் யாகம் செய்யக் கட்டளையிட்டார். அந்த யாகத்திற்கு பிரம்மன், சிவன் எல்லோரும் வந்திருந்தார்கள். கயா சூரனுடைய தலை ஆடிக்கொண்டே இருந்ததால் விஷ்ணு தலையின் மேல் காலைவைத்து அழுத்த, தலையாடுவது நின்று யாகம் பூர்த்தியாயிற்று.

அசுரன் பிரார்த்தனைக் கிணங்க மும்மூர்த்திகளும் சகல தேவர்களும் கயையில் நித்ய வாசம் செய்கிறார்கள் என்பர்.

விஷ்ணு, கயா சூரன் தலைமேல் காலைவைத்து மிதித்த இடத்தில் பிண்டம் போடுகிறவர்கள் தங்களுடைய

Koviloor Digital Library

இருபத்தோரு தலைமுறை பித்ருக்களும் நற்கதியடையச் செய்கிறார்கள் என்று தல புராணம் கூறுகிறது.

ஹரித்துவார் (மாயாக்ஷேத்திரம்)

முக்தி க்ஷேத்திரங்கள் ஏழில் ஒன்று என்றும் மாயா க்ஷேத்திரமென்றும் புகழப்படும் ஹரித்துவார் டெல்லி யிலிருந்து சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்கிறது. கல்கத்தாவிலிருந்து டேராடுன் செல்லும் இரயில் மார்க்கத்தில் ஹரித்துவார் உள்ளது. இரயில் நிலையத்தி லிருந்து சுமார் 1½ கி.மீ. தூரத்தில் க்ஷேத்திரம் உள்ளது. மிகவும் சிறப்பு வாய்ந்த புண்ணிய ஸ்தலம் இது. இங்கும் கங்கை நதியில் ஸ்நானம் செய்வது மிகவும் விசேஷமான தாகக் கருதப் படுகிறது. விஷ்ணு தீர்த்தம், ரம்பா தீர்த்தம், கனகல தீர்த்தம் போன்ற தீர்த்தங்களும் உள்ளன.

மலைப் பிரதேசத்தில் பாய்ந்து வந்து கொண்டிருந்த கங்கை நதி தெளிந்த நீர்ப்பிரவாகமாகச் சமவெளியில் பாய் கின்ற இடம். கங்காநதி தீர்த்தத்தைச் செம்புகளில் அடைத்து வைத்து எடுத்துச் செல்கின்றனர்.

ஹரிபகவான் கோயில் கொண்டுள்ள இடத்திற்குச் செல் லும் வழியாக அமைந்திருப்பதால் ஹரித்துவார் என்று பெயர் பெற்றது. இவ்விடத்தில்தான் தக்ஷபிரஜாபதி யாகம் செய்த தாகக் கூறுகிறார்கள்.

புனிதமான கங்கை நதியில் ஒரு கால்வாய் வெட்டி நடுவி லுள்ள தீவில் கங்கா தேவியின் ஆலயம் அமைத்திருக்கிறார் கள். இரவு நேரத்தில் தொன்னைகளில் நெய் விளக்கேற்றி ஆற்றில் விடுகிறார்கள். தீபங்கள் கோயிலைச் சுற்றி வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

பகவான், அனந்த விமானம் (திருமலை கோயிலில் உள் ளதைப் போன்றது) அமைந்த கோயிலில் கிழக்கு நோக்கி நின்ற திருக் கோலத்தில் காட்சியளிக்கிறார். தாயார் பெயர் ஆதிலக்ஷ்மி.

Koviloor Digital Library

அவந்தி (உஜ்ஜயினி)

பம்பாயிலிருந்து டெல்லி செல்லும் வழியில் உஜ்ஜயினி இரயில் நிலையம் இருக்கிறது. இரயில் நிலையத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயம் உள்ளது. தாயார் பெயர் பத்மாவதி. இத்தலத்திற்கு அருகிலேயே சிப்ரா நதி என்ற ஆறு ஓடுகிறது. கோமதி தீர்த்தம் என்ற தீர்த்தமும் உள்ளது.

பலராம கிருஷ்ணர்கள் மதுரைக்கு வந்து கம்சனைக் கொன்றபின் வசுதேவர் அவர்களை முறைப்படியான கல்விப் பயிற்சி பெறுவதற்காக சாந்தீப முனிவர் என்பவரிடம் குருகுல வாசம் செய்ய அனுப்பி வைத்தார். குசேலரும் பலராம கிருஷ்ணர்களும் கல்வி கற்றார்கள்.

கல்விப் பயிற்சி முடிந்த பின் குருகாணிக்கையாக என்ன வேண்டுமென்று கேட்க, முனிவர் இறந்து போன தன் மகனைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டார். பலராம கிருஷ்ணர்கள், ரிஷி குமாரன் மூழ்கிப் போன கடற்கரைக்குச் சென்று அங்கிருந்து கடலுக்குள் வெகு தூரம் போய், சங்கு உருவமாகயிருந்த அரக்கனை வென்று, பிறகு யம லோகத்திற்குப் போய் ரிஷி குமாரனை மீட்டு வந்து கொடுத்ததாகப் புராணம் கூறுகிறது. அதனால், இத்தலத்தில் எழுந்தருளியுள்ள கிருஷ்ண பகவான் சாந்திப முனிவருக்குப் பிரத்யட்ச சேவை சாதித்தவராகக் கருதப் படுகிறார்.

கிருஷ்ணன் சம்பந்தப்பட்ட புராணங்களில் வரும் பல இடங்கள் இவ்விடத்திற்குச் சமீபமாக உள்ளன. பிரபாச தீர்த்தம் என்பது பம்பாய் ராஜ்கோட் மார்க்கத்தில் விராவல் என்ற இரயில் நிலையத்திற்கு அருகில் மேற்குக் கடற்கரையில் உள்ளது. யாதவர்கள் இரும்புக் கோரைகளினால் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு மாண்ட இடம் அது. கிருஷ்ணபரமாத்மா சரன் என்ற வேடனால் அடிக்கப்பட்டதைக் காரணமாகக் கொண்டு வைகுந்தத்திற்கு எழுந்தருளியது, இவ்விடத்தில்தான். பாலகா என்ற இடத்தில் கிருஷ்ணனுக்கும் வேடனுக்கும் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. தவிர பாகவதத்தில்

Koviloor Digital Library

வரும் ரைவத மலைகள் இவ்விடத்திற்கு அருகிலேயே உள்ளன.

நவக்கிரகங்களில் அங்காரகன் அவதரித்த ஸ்தலம் இதுவே. உலகப் புகழ்பெற்ற விக்கிரமாதித்தன் முப்பத்திரண்டு பதுமைகள் கொண்ட சிம்மாசனத்தில் அமர்ந்திருந்து ஆட்சி செய்த இடம் இதுவே.

இவை தவிர, இன்னொரு புராண வரலாறும் உண்டு. திரிபுரன் என்ற அசுரன் தான் பெற்ற வரங்களின் பலத்தால் தேவர்களைப் பலவாறு துன்புறுத்த தேவர்கள் அவந்திக்கு வந்து ருத்திரனைச் சரணடைந்தார்கள். ருத்திரன் பாசுபதாஸ்திரத்தால் அசுரனைக் கொன்று தேவர்களைக் காத்தார். இதனாலேயே இத்தலத்திற்கு உஜ்ஜயினி என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுவார்.

ஆஜ்மீர் (புஷ்கரம்)

பம்பாயிலிருந்து டெல்லி போகும் மார்க்கத்திலுள்ள புராதன நகரம் ஆஜ்மீர். ராஜபுத்திர சிற்றரசர்களின் ஆட்சிக்குக் கீழ் இருந்து ராஜஸ்தான் மாநிலத்திலும் இணைக்கப்பட்ட பெரிய நகரம் இது.

ஆஜ்மீரிலிருந்து பன்னிரண்டு மைல்களுக்கு அப்பால் வைகுண்ட நாதர் ஆலயம் உள்ளது. இங்கு பகவான் மங்கள விமானத்தைக் கொண்ட கோயிலில் பரம புருஷன் என்ற பெயரோடு கிழக்கு நோக்கி விற்றிருக்கிறார். தாயார் பெயர் புண்டரீகவல்லி பத்மசரஸ் என்ற தீர்த்தம் பிரசித்தமானது. பிரம்ம குண்டம், ரூப தீர்த்தம் என்ற தீர்த்தங்களும் உண்டு.

இங்கே பிரம்மாவிற்கு ஒரு தனிக்கோயில் இருப்பது ஒரு பெரும் சிறப்பு. பிரம்மகுண்டத்தில் நீராடிப் பிரம்மனுக்குப் பூஜை செய்தால் தலையெழுத்து மறைந்துவிடும் என்று நம்பப்படுகிறது. இங்கே உள்ள மூர்த்தி தானாகத் தோன்றியவர் என்று கூறப்படுகிறது.

Koviloor Digital Library

இவ்விடத்தில் பிரம்மா தவம் செய்தபொழுது நாரதர் செய்த கலகத்தால் பிரம்மதேவரின் மனைவியாகிய சாவித்ரி கோபம் கொண்டு யாகத்திற்கு வராமல் மறைந்துவிட்டார். மனைவியில்லாமல் யாகம் செய்யமுடியாதாகையால் பிரம்ம தேவர் ஒரு கோப ஜாதிப் பெண்ணை மணந்துகொண்டு யாகத்தைச் செய்தார். அதனால் கோபம் கொண்ட சாவித்திரி யாகத்தில் கலந்துகொண்ட மும்மூர்த்திகளுக்கும் தேவர்களுக்கும் சாபம் கொடுத்துவிட்டாள். அதனால், மும்மூர்த்திகள் அந்தக் கோப ஜாதிப் பெண்ணுக்குக் 'காயத்ரி' என்று பெயர் சூட்டி, அவளைப் பிரம்ம பத்தினி யாக அங்கீகரித்துவிட்டார்கள் என்று புராணம் கூறுகிறது.

சாவித்திரியின் சாபம் காரணமாகவே பிரம்மாவிற்கு வேறு எவ்விடத்திலும் ஆலயமில்லாமல் போனதாகவும் புராணம் கூறுகிறது. பிரம்மா வெட்டிய குளத்தில் ஒரு தாமரைப் பூ வந்து விழுந்ததால் பத்மசரஸ் என்று அத் திருக்குளத்திற்குப் பெயர் ஏற்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

குருக்ஷேத்திரம்

பாரதப் போர் நடந்த யுத்த பூமிக்குக் குருக்ஷேத்திரம் என்று பெயர். டெல்லிக்கு வடக்கில் அம்பாலா செல்லும் இரயில் மார்க்கத்தில் குருக்ஷேத்திரம் என்னும் இரயில் நிலையம் உள்ளது. அதனருகிலேயே ஜோதீஸ்வரர் ஆலய முள்ளது. இங்குள்ள லட்சுமி நாராயணர் கண்கண்ட தெய்வமாகக் கருதப்படுகிறார். திரௌபதிக்குப் பிரத்யட்ச தெய்வமாக விளங்கியதாகவும் அனுமானுக்கு ராமனாகவும் கிருஷ்ணனாகவும் காட்சியளித்ததாகவும் கூறுகிறார்கள்.

பாரதப் போர் நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டு பீஷ்மர் சரசேனத்தில் (அம்புப்படுக்கையில்) படுத்திருந்த இடம். பீஷ்மர் தருமருக்கு உபதேசம் செய்த இடம். தருமர் இரத்தக் குளத்தில் தர்ப்பணம் செய்து பித்ருக்கள் மோக்ஷம் அடைந்த இடம். இன்னும் பாரத யுத்தம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடமாக வர்ணிக்கப்படும் இடங்கள் பல உள்ளன. சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்

Koviloor Digital Library

களைப் போய்ப் பார்ப்பதுபோல் இந்துக்கள் குருக்ஷேத்திரத்தைப் போய்ப் பார்க்கிறார்கள்.

பண்டரீபுரம்

மகாராஷ்டிரத்தில் உள்ள புகழ்பெற்ற க்ஷேத்திரம் பண்டரிபுரம். சென்னையிலிருந்து பம்பாய் செல்லும் வழியில் குருதுவாடி என்ற சந்திப்பில் இறங்கி, குறுகிய மீட்டர் கேஜ் ரயில் மார்க்கமாகச் செல்ல வேண்டும். மிராஜிலிருந்தும் போகலாம். பாண்டுரங்கன் மராத்தியர்களுக்குப் பிரத்யட்ச தெய்வம். புரந்தரதாசர், பண்டரிபாய், ஜனாபாய், சக்குபாய், போன்ற எத்தனையோ பக்தர்கள் பாண்டுரங்கனை வழிபட்டு முக்தியடைந்திருக்கிறார்கள்.

பாண்டுரங்கன் கிழக்கே பார்த்து நின்ற திருக்கோலத்தில் இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு மற்ற பக்தர்களுடன் சேர்ந்து பஜனை செய்வது போல் அமர்ந்திருக்கும் அழகே அழகு. புண்டரீகன் என்ற பக்தனுக்கு அருள் செய்வதற்காகவே இங்கே பாண்டுரங்கன் எழுந்தருளினார் என்பது ஸ்தல புராணம்.

புண்டரீகன் சிறந்த பக்தன். ஆயினும் தன் தாய்தந்தையர்களுக்குப் பணிவிடை செய்வதே தன் தலையாய கடன் என்று நினைத்தான். அவனுடைய பக்தியைச் சோதிப்பதற்காகவே ஒருநாள் பகவான் அவன் தன் தாய் தந்தையருக்குச் சேவை செய்து கொண்டிருந்த நேரமாகப் பார்த்து வந்தார். புண்டரீகன் ஒரு செங்கல்லைத் தூக்கிப் போட்டு அதன்மேல் சிறிது நேரம் அமர்ந்திருக்கும்படிக் கூறிவிட்டுப் பித்ரு சேவையில் ஈடுபட்டான். பகவான் செங்கல்மீதமர்ந்ததும் அது இந்திரனாக மாறிவிட்டது. விருத்ராசுரனைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷத்தினால் இந்திரனே இந்தச் செங்கல்லாக இருந்தது பிறகுதான் தெரிந்தது.

இந்திரன் பகவானைத் துதிப்பதைக் கண்டபிறகும் கூடப் புண்டரீகன் தன் தாய் தந்தையருக்குச் சேவை செய்து முடித்த பிறகே எழுந்து வந்து பகவானைத்

Koviloor Digital Library

துதித்தான். புண்டரிகன் வேண்டுகோளுக்கிணங்க பகவான் அங்கேயே 'விட்டலன்', 'விட்டோபா' என்ற பெயரோடு எழுந்தருளியிருக்கிறார். புண்டரிகனுக்கு வரமளித்ததால் புண்டரிக வரதன் என்ற பெயரும் ஏற்பட்டது. க்ஷேத்திரத்திற்கும் (புண்டரிகபுரம்) என்ற பெயர் ஏற்பட்டது.

பத்ராசலம்

ஆந்திர மாநிலத்திலுள்ள புகழ்பெற்ற திருத்தலம். பக்த ராமதாசுக்குப் பகவான் பிரத்யட்சமான இடம். கோதாவரி நதிக்கரையில் அமைந்துள்ள இந்தத் தலம் மிகவும் புகழ் வாய்ந்தது. ஐதராபாத்—காஜிபேட்—விஜயவாடா மார்க்கத்தில் உள்ள ரயில் நிலையம். இங்கே ராமன் சீதா லட்சுமண சமேதராக நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். பக்த ராமதாசுக்கும் ஐதராபாத் நிஜாமிற்கும் பிரத்யட்சமாகக் காட்சியளித்த பகவான் இவர் எனக் கூறப்படுகிறது.

ஐதராபாத் நிஜாமிடம் அக்கண்ணா என்பவர் மந்திரியாய் வேலைபார்த்தார். அவருடைய மருமகன் கோபண்ணா. அவரும் நிஜாமிடம் தாசில்தாராக வேலை பார்த்தார்.

கோபண்ணா மிகச்சிறந்த ராமபக்தர். அவர் வரிப்பணம் வசூல் செய்து அதைக்கொண்டு பத்ராசலத்தில் ஸ்ரீ ராமனுக்கு ஆலயம் கட்டிவிட்டார். மேலும் வசூலான பணத்தைக் கொண்டு விக்ரகங்களுக்கு நகைகள் செய்தும் உற்சவங்கள் நடத்தியும் அன்னதானங்கள் செய்தும் செலவழித்துவிட்டார்.

நிஜாமுக்கு விஷயம் தெரிந்தவுடன் அரசாங்கம் பணத்தைக்கையாடிய குற்றத்திற்காக ராமதாஸைச் சிறையில் அடைத்து கசையடி கொடுக்கும்படி உத்தரவிட்டு விட்டார். ராமதாஸ் பலநாள் சிறையில் சித்ரவதைபட்டார். கடைசியாக ராமலட்சுமணர்கள் சேவகர்களாக வந்து ராமதாஸ் கையாடிய தொகையை நிஜாமிடம் திருப்பிக் கொடுத்து விட்டுச் சென்றார்கள். தம்மிடம் வந்தவர்கள் ராமலட்சுமணர்களே என்பதைத் தெரிந்துகொண்ட நிஜாம் திடுக்கிட்டுப்

Koviloor Digital Library

போனார். ராமதாஸைச் சிறையிலிருந்து விடுவித்துக் கௌர வித்தார். ராமதாஸ் நவாபின் ஆதரவுடன் மேலும் பகவா னுக்கு உற்சவங்கள் நடத்திக்கொண்டாடினார்.

பூரி (ஜெகந்நாதம்)

புருஷோத்தம க்ஷேத்திரம் என்று கூறப்படும் பூரி, ஒரிசாவிலுள்ள ஒரே பெரிய க்ஷேத்திரம் என்று கூறிவிடலாம். சென்னையிலிருந்து கல்கத்தா செல்லும் மார்க்கத்தில் புவனேஸ்வருக்கு முன்னதாக உள்ள குருதாரோட் சந்திப்பில் இறங்கி, வேறு இரயிலில் ஏறிச் செல்லவேண்டும். சென்னை யிலிருந்து பூரிக்குச் செல்ல நேரிணைப்புப் பெட்டிகளும் உள்ளன. இரயில் நிலையத்திலிருந்து சுமார் 1½ கி. மீ. தூரத் தில் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தில் ஜெகந்நாதராகிய கிருஷ்ணன் பலராமனோடும் தங்கை சுபத்ரையோடும் எழுந்தருளியிருக்கிறார். மூவரும் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார்கள்.

ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் இரத யாத்திரை மிக விசேஷமான திருவிழா. பல இலட்சக் கணக்கான மக்கள் கூடித் தனித்தனியாக தேர்களில் வரும் கிருஷ்ணனையும், பலராமனையும், சுபத்ரையையும் தரிசித்துப் பேரானந்தம் அடைவார்கள்.

இந்த க்ஷேத்திரத்தின் தனிச்சிறப்பு என்னவென்றால், இங்கே ஸ்தல விருட்சமாகிய ஆலமரத்திற்கே எல்லா பூஜை களும் நடைபெறுகின்றன. பகவானே அந்த மரமாக எழுந் தருளி இருப்பதாகப் பக்தர்கள் நினைக்கிறார்கள். பக்தர் கள் கடலில் ஸ்நானம் செய்துவிட்டு வருண தீர்த்தம், ரோகிணி தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, பிறகு பகவானைத் தரிசிக்கச் செல்வார்கள்.

இந்திரத்யும்னன் என்ற சக்ரவர்த்திக்குக் கனவில் தோன்றியபடி பகவானே கிழத்தச்சன் வேஷம் கொண்டு சமுத்திரத்திலிருந்து எடுத்துக்கொண்டு வந்து கதவைத்

Koviloor Digital Library

தாளிட்டுக் கொண்டு வாத்ய முழக்கம் செய்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். மன்னனும் மக்களும் அவ்விடத்தில் கூடிவிட்டனர். பதினைந்து நாள்வரை வாத்யகோஷம் நிற்கவில்லை. வானத்திலிருந்து பூமாரி விழுவதும் நிற்க வில்லை. இதற்குப் பிறகு கதவைத் திறந்து பார்த்த பிறகு தச்சனைக் காணவில்லை. கிருஷ்ணன், பலராமன், சுபத்ரை, சுதரிசன சக்ரம் ஆகிய நான்கு உருவங்கள் மட்டும் காணப்பட்டன.

நரசிம்மமூர்த்தியே தச்சனாக வந்து சிலைகளைச் செய்துவிட்டு மறைந்து விட்டதாவும், அந்தச் சிலைகளை பிரம்மா பிரதிஷ்டை செய்ததாகவும் புராண வரலாறு கூறுகிறது. இங்கே பகவானுக்கு நிவேதனம் செய்த பிரசாதத்தை யாராவது தொட்டார்களா? பார்த்தார்களா? கேட்டார்களா? என்றெல்லாம் கேள்வியே கேட்கக்கூடாது என்று சொல்கிறார்கள்.

சிம்மாசலம்

சென்னையிலிந்ருது கல்கத்தா போகும் மார்க்கத்தில் விசாகப்பட்டினம் சந்திப்பிலிருந்து ஏழு கி.மீ. தூரத்திலுள்ள புகழ்வாய்ந்த க்ஷேத்திரம். இரயில் நிலையத்திலிருந்து கோயிலுக்கு தேவஸ்தான பஸ் உண்டு.

இங்கே எழுந்தருளியுள்ள பெருமாள் வராக நரசிம்மர். பகவான் இரண்யனைக் கொன்ற வராக மூர்த்தியாகவும், இரண்யாக்ஷசனைக் கொன்ற நரசிம்ம மூர்த்தியாகவும் ஒரே சமயத்தில் தரிசனம் அளிப்பதாகக் கூறப்படுகிறது. பகவான் தூண் உருவமாகக் கிழக்கு நோக்கி நின்ற திருக் கோலத்தில் காட்சியளிக்கிறார். நரசிம்ம தாரை என்ற தீர்த்தம் கோயிலின் அருகிலேயே உள்ளது.

ஸ்ரீ கூர்மம்

விசாகப்பட்டினத்திலிருந்து கல்கத்தா செல்லும் மார்க் கத்தில் ஸ்ரீகா குளத்திலிருந்து 23 கி. மீ. தூரத்தில் இந்த க்ஷேத்திரம் உள்ளது. ஸ்ரீ கூர்மத்திற்குச் செல்லும் பஸ் பாதை

Koviloor Digital Library

யிலேயே ஸ்ரீராம க்ஷேத்திரம், ஸ்ரீபத்மநாபம் என்ற மிகப் புராதனமான வைணவ ஸ்தலங்களும் இருக்கின்றன.

ஸ்ரீ கூர்மத்தில் உள்ள கோயில் விமானம் ஸ்ரீகூர்ம விமானம் என்று கூறப்படுகிறது. வேறெங்கும் காணமுடியாத விசித்திரமான அமைப்புடையது. இங்கே எழுந்தருளியுள்ள பகவானுக்கு ஸ்ரீகூர்மநாதன் என்றே பெயர். கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். தாயாருக்கு ஸ்ரீ கூர்மநாயகி என்று பெயர்.

சக்ரதீர்த்தம், வம்சதாரை, சாங்கல்த்தீர்த்தம் என்ற தீர்த்தங்கள் உள்ளன. இங்கே எழுந்தருளியுள்ள மூர்த்தி சுவேத பூபாலன், சுசி சித்தன் என்ற அரசர்களுக்கும், வக்ராங்க மகரிஷிக்கும், திலோத்தமை என்கின்ற அப்சரஸிற்கும் அருள்புரிந்ததாக ஸ்தல புராணம் கூறுகிறது.

திரு நாராயணபுரம் (மேல் கோட்டை)

யாதவாத்ரி க்ஷேத்திரம் என்று சொல்லப்படும் இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள நாராயணனைப் பத்ரி நாராயணனாகவே நினைத்துப் பூஜை செய்யலாம். பத்ரி செல்ல முடியாதவர்கள் இங்கேயே பகவானைத் தரிசிப்பதால் பத்ரிகாசிரமம் சென்ற பலனை அடையலாம். இத்தலத்தில் சாண்டில்ய மகரிஷிக்கு பத்ரிகாசிரமப் பெருமாளாகக் காட்சி கொடுத்தபடியால் தட்சிண பத்ரிகாசிரமம் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுகிறார்கள்.

இத்தலப் பெருமானுக்கு மிகவிசேஷமான ஸ்தல புராணங்கள் உண்டு. பிரம்ம தேவரால் ஸ்ரீராமனுக்குக் கொடுக்கப்பட்ட விக்ரகம், ராமனுடைய குமாரனான குசனுடைய மகள் கனகமாலிகை என்பவளுக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்டு, யதுசேகர மகாராஜாவால் ஆராதிக்கப் பட்டு வந்ததாகவும், அவருடைய வம்சத்தில் பிறந்த வசுதேவராலும் பிறகு பலராமகிருஷ்ணர்களாலும் ஆராதிக்கப் பட்டதால் யாதவாச்சரிய க்ஷேத்திரம் என்ற பெயர் உண்டானதாகவும் ஒரு புராண வரலாறு கூறுகிறது. இன்னொரு வரலாறு:-

Koviloor Digital Library

பிரகலாதனுடைய குமாரனான விரோசனன் பாற்கடலில் பள்ளிகொண்டிருந்த பகவானின் கிரீடத்தை அபகரித்துக்கொண்டு ஓடினான். பகவான் அதை மீட்டு வரும்படி கருடனுக்கு உத்தரவிட்டார். கருடன் விரோசனனை ஜெயித்து கிரீடத்தை மீட்டுக்கொண்டு வைகுந்தத்திற்குப் போய்ப் பார்க்கும்போது அங்கே பகவான் காணப்படாததால் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் வந்து அவரிடம் கிரீடத்தைக்கொடுத்தான். கிருஷ்ணன் அதைத் தலையில் வைத்துப் பார்த்தபோது பொருத்தமாக இல்லாததாலும் ஸ்ரீ கிருஷ்ணன் தான் ஆராதித்து வந்த ஸ்ரீராமப்பிரிய விக்ரகத்திற்கு சூட்ட அது பொருத்தமாக இருந்ததாலும் கிரீடம் அந்த விக்ரகத்திற்கே சூட்டப்பட்டுவிட்டது. கருடன் கொண்டுவந்து சூட்டிய கிரீடம் என்ற பொருள்பட 'வைநகிரீடம்' என்ற பெயர் நாளாவட்டத்தில் 'வைர கிரீடம்' என்று மாறிவிட்டது. பங்குனி மாதத்தில் வைர முடிசேவை மிகப் பெரிய உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த க்ஷேத்திரம் பெங்களூர்—மைசூர் இரயில் பாதையில் பாண்டவாபுரம் என்ற இரயில் நிலையத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது. மலைமேலேயே பிரயாணம் செய்து க்ஷேத்திரத்தை அடையவேண்டும். உற்சாகமான யாத்திரை.

மூலவருக்குத் திருநாராயணன் என்று பெயர். மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். உற்சவருக்கு ராமப்பிரியர் என்றும் சம்பத்குமாரன் என்றும் பெயர். செல்லப்பிள்ளை என்ற பெயரும் வழங்குவது தமிழ் நாட்டுத் தொடர்பைக்காட்டுகிறது.

தாயாருக்கு யதுகிரி நாச்சியார் என்று பெயர். பெருமாளுடைய பாதத்தில் பூமாதேவியும், வரநந்தினி நாச்சியாரும் வாசம் செய்கிறார்கள்.

இத்தலம் தீர்த்த விசேஷமும் உடையது. கல்யாணி முதலான அஷ்ட தீர்த்தங்களும் தனுஷ்கோடி தீர்த்தம். வேதபுஷ்கரிணி தீர்த்தம் முதலானவையும் உள்ளன.

Koviloor Digital Library

மங்களகிரி

சென்னை-கல்கத்தா இரயில் பாதையில் விஜயவர்டா அல்லது பெஜவாடா எனும் சந்திப்பில் இறங்கி, அங்கிருந்து பஸ்ஸில் ஏறி 20 கி மீ. தொலைவிலுள்ள இத் தலத்தை அடைய வேண்டும்.

தலப் பெருமாளுக்குப் பாகை நரசிம்மர் எனவும், தாயாருக்கு மகாலக்ஷ்மி என்றும் திருநாமங்கள். மலைமீதுள்ளது இச்சந்நிதி. தலத் தீர்த்தம் கிருஷ்ணா நதியாகும். இத்தலத்திலுள்ள விசேஷமான அம்சம் பெருமாளுக்கு எவ்வளவு பானகம் வாயில் ஊற்றினாலும் பாதி மீந்து சமர்ப்பித்தவருக்கே திரும்பக் கிடைப்பதாகும்.

ஸ்ரீரங்கப்பட்டினம்

கர்நாடக மாநிலத்தில் இத்தலமுள்ளது. தலப் பெருமாளான ரங்கநாதர் சயனத் திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயாருக்கு ரங்கநாயகி எனும் திருநாமம். தலத்தீர்த்தம்: காவேரி நதியாகும். லக்ஷ்மி நரசிம்மருக்கு இங்குச் சந்நிதியுண்டு. இத்தலத்தின் சிறப்பான அம்சம் இதுவும் திருவரங்கத்தைப் போல காவிரி நதியின் மத்தியில் இருப்பதுதான்.

தொண்டனூர்

மைசூரிலிருந்து பெங்களூர் செல்லும் இரயில் பாதையில் பாண்டவபுரம் ஸ்டேஷனில் இறங்கி பஸ்ஸில் 20 கி. மீ. சென்றால் இத்தலத்தைபடையலாம்.

தலப்பெருமாள் நம்பி நாராயணர், பார்த்தசாரதி, கண்ணன் மற்றும் யோக நரசிம்மராவார். தாயார்கள் அரவிந்தவல்லி, ருக்மணி மற்றும் மஹாலக்ஷ்மி. தீர்த்தம்: பாஷ்யகாரர் ஏரி. இத்தலத்தில் நெடுங்காலம் ராமானுஜர் இருந்து சிறப்பித்தார் என்பர்.

சிவசமுத்திரம்

இத்தலம் மைசூர் மாநிலத்தில் உள்ளது. மைசூரிலிருந்தும் பெங்களூரிலிருந்தும் நிறைய பஸ் வசதிகள் உண்டு.

Koviloor Digital Library

தலப் பெருமாளான ரங்கநாதர் சயனத் திருக்கோலத்தி லிருந்து அருள்புரிகிறார். தாயாருக்கு ரங்கநாயகி எனும் திருநாமம். தலத்தீர்த்தம்: காவிரி நதி. இத்தலமும் காவிரி யின் மத்தியில் உள்ளது. இங்கு, சாப்பாட்டு வசதி மட்டும் உண்டு.

நரசிம்மபுரம்

கர்நாடக மாநிலத்திலுள்ள இத்தலத்துக்குச் செல்ல மைசூரிலிருந்து பஸ் வசதிகள் உண்டு. சகல வசதிகளும் கொண்ட பெரிய நகரம் இது. இங்குதான் பவானியும் காவிரியும் சங்கமமாகின்றன. தலப்பெருமாளின் திருநாமம் குஞ்சால நரசிம்மர்; தாயார் மகாலக்ஷ்மி.

உடுப்பி

கர்நாடக மாநிலத்திலுள்ள இத்தலத்துக்கு மங்களூரி லிருந்து செல்ல பஸ் வசதிகள் உண்டு. இங்குள்ள ஆலயம் அஷ்ட மடமாகும். பெருமாள் பாலகிருஷ்ணமூர்த்தி மிகவும் எழிலுடன் எழுந்தருளியிருக்கிறார். அஷ்டமட மடாதிபதிகள் மூன்று வருடத்துக்கு ஒருமுறை முறையாகப் பதவியேற்று கிருஷ்ணனை ஆராதிக்கிறார்கள். இங்குள்ள மடங்களில் சாப்பாட்டு வசதிகள் உண்டு.

மந்த்ராலயா

சென்னை-பம்பாய் இரயில் பாதையில் இது உள்ளது' பஸ் வசதிகளும் உண்டு. இங்குள்ள ஸ்ரீ ராகவேந்திர சுவாமி கள் மடம் மிகவும் பிரபலமானது. அங்கேயே சகல வசதி களும் கிடைக்கும். அருகிலேயே துங்கபத்ரா நதியும் ஓடுகிறது. ஸ்ரீ இராகவேந்திரர் பிருந்தாவனத்தில் அமர்ந்து தன் பக்தர்களுக்கு இன்றும் அருள்புரிந்து வருகிறார்.

சித்பூர்

மாத்ருதயா எனும் இத்தலம் டெல்லி-அகமதாபாத்-பம்பாய் இரயில் மார்க்கத்திலுள்ளது. இங்கு சரஸ்வதிக்ஓ

Koviloor Digital Library

கோயில் உள்ளது. சரஸ்வதி நதிதான் இத்தலத் தீர்த்தம். தாயாருக்குப் பிண்டம் போடும் இடமிது எனக் கூறப்படுகிறது. அலகாபாத் பிரயாக்கில் சரஸ்வதி சேருவதாக ஐதீகம். அங்கே நதி கண்ணுக்குப் புலப்படாது. ஆனால் இங்கே தெரியும்.

விஷ்ணுப்பிரயாக்

ஹரித்வாரிலிருந்து பத்ரிநாத் செல்லும் பஸ் பாதையில் 110 கி. மீ. தூரத்தில் சமுத்திர மட்டத்திலிருந்து சுமார் 4500 அடி உயரத்தில் இத்தலம் உள்ளது. தலப் பெருமாளான மகாவிஷ்ணு நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார். தாயார் : மஹாலக்ஷ்மி. தேவரிஷி நாதர் அஷ்டாக்ஷர மந்திரத்தால் விஷ்ணுவைப் பூஜித்த இத்தலத்தில் தான் தேவி கங்காவும் அலக்நந்தாவும் சங்கமமாகின்றன.

பாண்டுகேஸ்வர்

ஹரித்வாரிலிருந்து பத்ரிநாத் செல்லும் பஸ் பாதையில் சுமார் 200 கி. மீ. தூரத்தில் இத்தலமுள்ளது. தலப் பெருமாளான வாசுதேவர் நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகிறார். தாயார்கள் ருக்மிணியும் சத்யபாமாவும் ஆவர்.

பத்ரிநாத்தில் பனி மூடிய காலத்தில் உற்சவமூர்த்திகளை இங்குதான் எழுந்தருளச் செய்து பூஜை செய்வார்கள். இங்குதான் பாண்டு தவம் செய்ததாகவும் பஞ்சபாண்டவர்கள் அவதரித்ததாகவும் கூறப்படுகிறது.

முற்றியது

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. No. 15367
Q. 22
LIBRARY, KOVILOOR